
தமிழ்நி


வதா

# பூங்கா நகரம்

## தமிழ் நிவேதா

அருணோதயம்
5/3, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.

## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : பூங்கா நகரம் |
| ஆசிரியர் | : தமிழ் நிவேதா |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| மொழி | : தமிழ் |
| முதற் பதிப்பு | : ஏப்ரல், 2017 |
| தாள் | : 11.6 kg. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 316 |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : அருணோதயம்<br>5/3, கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை,<br>சென்னை - 600 014. |

**விலை: ரூ.150.00**

| | |
|---|---|
| கணினி அச்சு | : வேலன் லேசர் - 94441-01753 |
| அச்சிட்டோர் | : கே.வி.எஸ். ஆப்செட்,<br>சென்னை-14. |



# பூங்கா
# நகரம்

# பூங்கா நகரம்

## 1

காலை ஐந்து மணி என்றபோதும் இருள் இன்னும் போர்வை விலக்காமல் இருந்தது. செப்டம்பர் மாதத்தின் தொடக்கம்தான் என்றபோதும் பெங்களூரு நகரம் குளிர்ந்து போய் ஜில்லிட்டது. அந்தக் குளிரிலும், இருளிலும் 'சிட்டி இரயில்வே ஸ்டேஷன்' மசமசப்புடன் இயங்கிக் கொண்டிருந்தது. டிராலி சூட்கேஸ்கள் தட தடக்க கன்னடாவிலும், இந்தியிலும் பேசியபடி குரல்கள் கடந்து சென்றன.

தூக்கம் விலகாத கண்களுடன் குழந்தைகளும், குளிருக்கு பாதுகாப்பாய் அழுத்தமான லிப்ஸ்டிக் தீற்ற லுடன் பெண்களும், உடல் முழுக்க மூடிய ஸ்வெட் டரும், மப்ளருமாய் முதியவர்களும், பர்ஃப்யூம் மணக்கும்

ஆண்களும் இரயிலை பிடிக்க விரைந்து கொண்டிருந் தனர். இராஜஸ்தானிலிருந்து வரும் ஜெய்ப்பூர் எக்ஸ்பிரஸ் நான்காவது ப்ளாட்பாரத்தை வந்தடைந்து விட்டதாக அறிவிப்பாளரின் குரல் ஸ்பீக்கர்களில் ஒலிக்கவும், தன்வீர் புகைத்துக் கொண்டிருந்த சிகரெட்டை அணைத்து குப்பை கூடையில் வீசி விட்டு அவசரமாக நான்காவது ப்ளாட்பாரம் நோக்கி விரைந் தான். இரயிலிலிருந்து இறங்கிச் செல்லும் கும்பலுக்கு நடுவே லாவகமாக நகர்ந்து சென்று முதலாம் வகுப்பு ஏசி பெட்டியின் வாயிலருகே இறங்குபவர்களுக்கு வழி விட்ட வண்ணம் பார்வையிட்டான்.

அந்த பெட்டியில் கிட்டத்தட்ட எல்லோரும் இறங்கிய பிறகும் தான் தேடி வந்த நபரைக் காணாமல் ஏமாற்ற மடைந்தான். 'ஒருவேளை இன்று வரவில்லையோ என்னவோ! இரயிலை மிஸ் பண்ணியிருக்கலாம். அல்லது பாஸ் தேதியை தவறாக சொல்லியிருக்கலாம். தன்வீர் தன் செல்போனில் தேதியை சரி பார்த்தபோது அவனுக்கு நேர் பின்புறமிருந்து இனிமையான ஒரு குரல் கேட்டது.

''ஹலோ மிஸ்டர் தன்வீர்.''

''யெஸ்'' என்று திரும்பிய தன்வீர் ப்ளாட்பார்மின் மஞ்சள் நிற ஒளியில் ஓவியம் போல் நின்றிருந்த பெண் ணைப் பார்த்ததும் வியப்புடன் விழிகளை விரித்தான்.

''யு வார் நிலஞ்சனா ரைட்?''

''ரைட்.''

''நான் உங்களுக்காகத்தான் காத்துக் கொண்டிருக் கிறேன். என் கண்ணில் படாமல் எப்படி இறங்கினீர்கள்?''

''ஒரு கம்ப்பார்ட்மென்டிற்கு இரண்டு வாயில்கள் இருக்கின்றன இல்லையா! நான் அடுத்த வாயில் வழியாய் இறங்கினேன்.''

''ஹா... ஹா... வெரி பன்னி'' என்றான் தன்வீர் பெரிய சிரிப்புடன்.

வேடிக்கையாக இப்போது என்ன சொன்னோம் என்று நிலஞ்சனா யோசிக்கையில் தன்வீர் கேட்டான். ''என்னை எப்படிக் கண்டு பிடித்தீர்கள்?''

''தேடிக் கண்டு பிடிக்க வேண்டிய அவசியம் இல்லை. இராணுவ வீரர்களை பார்த்ததும் தெரிந்து கொள்ள முடியும். அதுவும் நானும் இதே குடும்பத்தைச் சேர்ந்தவள் என்கையில்.

''யு ஆர் ஸ்மார்ட்'' என்றான் தன்வீர் தோள்களைக் குலுக்கி.

''நான் எத்தனை ஸ்மார்ட்டாய் இருந்தாலும் இந்த குளிரில் வெகுநேரம் நிற்க முடியாது'' என்றாள் நிலஞ்சனா.

''இப்போதே கிளம்பலாம்'' என்ற தன்வீர் நிலஞ்சனா வின் பெரிய சூட்கேஸையும், தோள்பையையும் சுமந்தபடி வேகமாக நடந்தான்.

ஸ்டேஷன் வெளியே வந்ததும் ''ஒரு நிமிடம் காத்திருங்கள்'' என்றவன் பார்க்கிங்கிலிருந்த காரை எடுத்து வந்தான். முன்புறக் கதவை அவளுக்காகத் திறந்துவிட்டு, சரியாக லாக் ஆகியிருக்கிறதா என சரி பார்த்து, வசதியாக இருக்கிறதா என விசாரித்து, சுற்றி வந்து தன் இருக்கையில் அமர்ந்து, கிளம்பலாமா? என

அனுமதி பெற்று அவன் காரை ஸ்டார்ட் செய்ததும், இந்த நாசுக்கும், பெண்களிடம் கண்டிக்கும் அதீத கவனிப்பும் இவன் பணியின் நிமித்தம் உண்டானது என்றெண்ணினாள் நிலஞ்சனா. அவளது அப்பாவும் இப்படித்தான் இருப்பார். அவரது நிகழ்ச்சிகளும், பொழுது போக்குகளும் கூட அம்மாவை முன்னிலைப் படுத்தியே நடக்கும்.

அம்மா தனக்கு அளிக்கப்படும் பிரத்யேக அந்தஸ்தில் மிகுந்த பூரிப்புடன் வளைய வருவதை அவள் கவனத் திருக்கிறாள். அப்பா ஒரு முழுமையான இராணுவ நபராக இருந்தார். அவருடைய அப்பாவும் இராணுவ பணியில் இருந்தவர் என்பதில் அவருக்குள் எப்போதும் ஒரு பெருமிதம் இருந்தது. நிலஞ்சனாவின் அண்ணன் ஹரிஹரன் இராணுவ பரிட்சைகளில் தேறி மேஜர் பத விக்கு வந்தபோது அப்பாவுக்குள் சற்றே கர்வம் துளிர் விட்டது. ''என் அப்பா அவுல்தார். நான் கேப்டன் வரை வந்தேன். என் மகன் இருபத்தி எட்டு வயதிலேயே மேஜர்'' என்பார் அடிக்கடி.

''நிலஞ்சனா நாம் வந்து விட்டோம்'' என்ற தன்வீர் குரலைக் கேட்டதும் இராணுவ குடியிருப்புக்குள் கார் நின்றிருப்பதை உணர்ந்தாள் நிலஞ்சனா.

''தேங்க்யூ'' என்றபடி இறங்க முற்படுகையில் சுற்றி வந்து கார் கதவைத் திறந்து விட்ட தன்வீர் ''வெல்கம் ஹோம்'' எனறான் தலைதாழ்த்தி.

லேசான புன்னகையுடன் அவன் வரவேற்பை அங்கீ கரித்தவள் ''எந்த ப்ளாக்?'' என்றாள் ஹேண்ட்பேக்கை மாட்டியபடி.

''ஏ ப்ளாக். இடது பக்கம்.''

தன்வீர் முன்னே நடக்க, வெடவெடத்த குளிரைப் போக்க உள்ளங்கைகளை உரசி வெப்பம் உண்டாக்க முயன்றபடி நிலஞ்சனா பின் தொடர்ந்தாள்.

ஏ ப்ளாக்கின் இரண்டாவது தளத்தில் லிஃப்ட் நின்றதும் லிஃப்ட் அருகிலேயே நின்றிருந்த சுனிதா பெரிய ஆரவாரத்துடன் அவளை அணைத்துக் கொண்டாள். பாப் செய்யப்பட்ட முடி நாசூக்காய் புரள, லிப்ஸ்டிக்கும், ஐ லைனருமாய் அந்த அதிகாலையில் லேசான பர்ப்யூம் மணம் கமழ நின்றிருந்தவளிடம் ''அண்ணி யு லுக் ப்யூட்டிபுல் அஸ் யூஸ் வெ!ல்'' என்றாள் நிலஞ்சனா.

சின்ன முறுவலுடன் பாராட்டை ஏற்றுக் கொண்ட சுனிதா தன்வீரிடம் சொன்னாள். ''ஹரி ஊரில் இல்லாத சமயம் நிலஞ்சனாவை அழைத்து வர நீங்கள் போயி ருக்கா விட்டால் எனக்கு மிகவும் சிரமமாக இருந் திருக்கும். மிகவும் நன்றி.''

''நோ இஷ்யூஸ் தீதி. நமக்குள் புதிதாக இதெல்லாம் எதற்கு?'' என கிளம்பியவனிடம் ''எங்களுடன் ஒரு சாய் குடிக்கலாம் தன்வீர்'' என்றாள் சுனிதா.

''நிச்சயமாய். ஆனால் இப்போது விருந்தாளியை கவனியுங்கள். இன்னொரு நாள் லஞ்ச்சுக்கே வருவேன்.'' தன்வீர் போனதும் அண்ணியுடன் உள்ளே வந்த நிலஞ்சனா வீட்டை பார்வையிட்டாள். நீளமான ஹாலை அடுத்து டைனிங் அறை. கச்சிதமான சமையல் அறை. ஒரு பெரிய படுக்கை அறை. சிறிய குழந்தைகள் அறை. நடுத்தரமான விருந்தினர் அறை. வீட்டை ஒட்டி

பணியாட்கள் குடியிருக்க அறை என இராணுவ உயர் அதிகாரியின் குடியிருப்புக்கு உண்டான சகல லட்சணங் களுடன் அந்த வீடு இருந்தது. சோபாக்கள், டைனிங் டேபிள். கட்டில், மெத்தை என சகல பொருட்களுடன், அரசாங்கமே அந்த வீட்டை அளித்திருந்த போதும் சுனிதாவின் ரசனை மிக்க அலங்காரத்தில் அந்த வீடு தனித் தன்மையுடன் தெரிந்தது. கணவனுடன் மாற்றலாகிச் செல்லும் இடங்களில் எல்லாம் அந்த ஊர்களின் பாரம்பரிய பொருட்களை சேகரிக்கும் பழக்கம் உள்ளவள் என்பதால் தரையில் காஷ்மீர கம்பளங்களும், மணிப்பூரி பின்னல் கூடைகளும், இராஜஸ்தானின் மரவேலைப்பாடு மிக்க பிரேம்களும், பஞ்சாபின் குறுங்கட்டிலும், டெல்லியின் அகல தீவாலும் வீட்டை அழகாக்கின.

இரவு பகல் எந்த நேரமானாலும் தூசியோ, அழுக்கோ இன்றி வீட்டையும், தன்னையும் பராமரிக்கும் அண் ணியை நினைத்து வியந்தபடியே நிலஞ்சனா கெய்சரை ஆன் செய்தாள்.

டீ டாட்டில் சூடான டீயையும், கப் அன்ட் ஸாஸர் களையும் டேபிள் மீது வைத்துவிட்டு சுனிதா குரல் கொடுத்தாள்.

''நிலஞ்சனா உன் டீ ரெடி.''

அதற்கு பதில் வராமல் போகவே சுனிதா மறுபடி குரல் கொடுத்தபோது ''வருகிறோம்'' என்றன குரல்கள்.

''இனி நிலஞ்சனாவுக்கு டீயே மறந்து போய் விடும். சுனிதா புன்னகையுடன் தன்னுடைய டீயை பருகத் தொடங்கினாள்.

தூக்கத்திலிருந்து எழுப்பப்பட்டு, அவளை அடை யாளம் கண்டதும் கழுத்தைக் கட்டிக் கொண்ட அண் ணனின் குழந்தைகளுடன் பேசத் தொடங்கியதும் நிலஞ்சனாவுக்கு டீயுடன் சேர்ந்து உலகமே மறந்து போனது.

''அத்தை நீ எப்படி இங்கே வந்தாய்? எனக்குத் தெரி யவே தெரியாதே!'' என்றான் எட்டு வயது ப்ரதீப் வியப் புடன்.

''எனக்குத் தெரியுமே!'' என்றான் ஆறு வயது சந்தீப்.

''எப்படித் தெரியும்?''

''உன்னிடம் சொல்ல மாட்டேன்.''

''அத்தை நீ வரப் போவதை அவனுக்கு மட்டும் சொன்னாயா?'' என்றான் ப்ரதீப் முகத்தைத் தூக்கியபடி.

''அத்தை, நான் உன் டார்லிங் தானே! என்னிடம் தானே முதலில் சொல்லுவாய்!'' சந்தீப் செல்லம் கொஞ்சியபடி தன் உரிமையை நிலைநாட்டிக் கொள்ள முயற்சி செய்தான்.

நிலஞ்சனா சந்தீப்பின் குண்டு கன்னத்தில் முத்த மிட்டாள். ப்ரதீப்பை அவள் அணைக்க முயன்றபோது அவன் கோபத்துடன் விலகிப் போனான். ''எங்கிட்ட பேசாதே போ.''

''ப்ரதீப், மை ஸ்வீட் ஹார்ட். உனக்காக நான் கொஞ்ச நாட்கள் இங்கேயே இருக்கலாம் என்று வந்திருக்கிறேன். நீ இப்படி என்னுடன் பேசாமல் இருந்தால்...''

''அத்தை நீ சொல்வது உண்மையா?'' என்றான் ப்ரதீப் கோபத்தை மறந்து.

''உண்மை நிஜம். சத்தியம். போதுமா?''

''ஹே... ஜாலி... ஜாலி...'' ப்ரதீப் படுக்கையில் டைவ் அடிக்க, சந்தீப்பும் அவனுடன் சேர்ந்து கொள்ள சுனிதா ''ஸ்கூலுக்கு தயாராகுங்கள்'' என விரட்டும் வரை கூச்சலாய் இருந்தது அங்கே.

குளித்துத் தயாரானதும் யூனிபார்ம் மீது ஸ்வெட்டர் அணிந்து, ஆளுக்கொரு சான்ட்விச் டப்பாக்களுடன் ''பை அத்தை'' என முத்தமிட்டுவிட்டு சமர்த்தாய் செல்லும் குழந்தைகளை காண மனம் பூரித்தது நிலஞ்சனாவுக்கு.

குழந்தைகள் போனதும், ''குட்மார்னிங் மேடம்'' என்றபடி உள்ளே வந்த பணிப்பெண் நிலஞ்சனாவைப் பார்த்ததும் ''கெஸ்ட்டா? சாருடைய சிஸ்ட்டரா மேடம்?'' என்றாள்.

''எப்படித் தெரிந்தது உனக்கு?'' என்றாள் சுனிதா வியப்புடன்.

''புதுசா கண்டுபிடிக்கணுமா என்ன? ஜாடை தெரியுதே! என்னா ஸாரை விட நிறம் கூடுதல்'' என்றபடியே வீட்டைச் சுத்தம் செய்ய ஆரம்பித்தாள்.

ஒவ்வொரு வீட்டிலும் முகங்கள்தான் முகவரி. அப்பா, பெண், அம்மா, அக்கா என யாரும் சொல்லாமலேயே உறவுகளை அறிந்து கொள்ளக் கூடிய முகவரிகள். இன்னும் சில முகங்கள் தங்கள் மதத்தையும், மொழியை யும் கூட தெளிவாக காட்டி விடுகிறது. நிலஞ்சனாவுக்கு அண்ணாவின் ஜாடை என்பதைத் தவிர அவனுக்கும், அவளுக்கும் உள்ள ஒற்றுமைகளை நிலஞ்சனா

யோசிக்கத் தொடங்குகையில் சுனிதா சூடான டீயை அவள் கையில் கொடுத்தாள்.

''நீ குடிக்கத் தொடங்கு நிலஞ்சனா. நான் வேலைக் காரிக்கு மெனு சொல்லி விட்டு வருகிறேன்'' என சமையலறைக்குள் சென்றாள்.

நிலஞ்சனா பால்கனிக் கதவைத் திறந்தாள். அதற்கா கவே காத்திருந்தாற்போல் சிலுசிலுவென்ற காற்று உடலைத் தாக்கியது. பால்கனி பெரியதாய் இருந்தது. அந்த இடம் முழுக்க சுனிதா செடிகளால் நிறைத்திருந் தாள். இரவு முழுவதும் பனியில் குளித்திருந்த டேலியாக் களும், ட்யூலிப்பும் விடியலைப் பார்த்த மகிழ்ச்சியில் அழகாய் தலையசைத்தன. பால்கனி க்ரில்லை சுற்றி படர்ந்திருந்த மணிப்ளான்ட் அந்த இடத்தை மினி நந்தவனமாக்கி காட்டியது. பால்கனிக்கு வெளியே தோட்டத்தில் அடர்ந்து செழித்திருந்த மரங்களின் நடுவே ப்ரிகேடியர் ரோடு தென்பட்டது. புத்தக பையை தோளில் சுமந்தபடி பள்ளிப் பேருந்திற்காக காத்திருக்கும் குழந்தைகள்,

இரவு ஷிப்ட் முடிந்து அலுப்புடன் வீடு நோக்கிச் செல்லும் மருத்துவப் பணியாளர்கள், நிதானமாய் வாக்கிங் போகும் பென்சன்தாரர்கள், காலை டிபன் தயாரிப்பில் மும்முரமாய் உடுப்பி ஹோட்டல்கள் என நகரின் பரிமாண விடியலில் தெரிந்தது.

நிலஞ்சனாவின் தாத்தா இராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றதும் சொந்த ஊரான தஞ்சாவூருக்கு போய் விட்டார். சிறு வயதில் அண்ணனும் அவளும் பரிட்சை விடுமுறையின் போது அங்கு போவார்கள். தாத்தா

விடியற்காலையில் இருவரையும் எழுப்பி கோவிலுக்கு அழைத்துப் போவார். காலையில் பச்சை தண்ணீரில் குளிக்கையில் உடல் வெடவெடத்தாலும் கையில் ஜால்ராவுடன் ''கோவிந்தா.. ஹரே.. ஹரே.. ராதா.. ராதே கோவிந்தோ..'' என பஜனை பாடும் கும்பலுடன் சேர்ந்து கொள்கையில் உற்சாகமாகவே இருக்கும். பாவாடை சட்டை அணிந்த அவள் வயது பெண்களும், மேல் துண்டால் வெற்றுடலை மூடியபடி பையன்களும் உரத்த குரலில் பாடி திண்ணையில் அரைகுறை தூக்கத்தில் இருப்பவர்களை எழுப்பி விடுவார்கள்.

தெருவெங்கும் சாணமிட்டு விதவிதமாய் போடப் பட்டிருக்கும் கோலங்களை மிதித்து விடாமல் ஜாக்கிர தையாக நடப்பார்கள். ஒவ்வொரு தெருவாய் கடந்து போய் கோவிலில் ஸ்வாமியை தரிசனம் செய்து விட்டு நெய் வழியும் பொங்கலை சாப்பிட்ட பின் வீடு திரும்புவார்கள். வெறுங்காலில் நடந்த போதும் கல்லோ, முள்ளோ குத்திய நினைவில்லை. தாத்தா வீட்டில் அவரது கட்டிலும் நாற்காலியும் ஜன்னலைப் பார்த்தபடி இருக்கும். தாத்தா அந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டு புத்தகம் படிப்பார். டி.வி. பார்ப்பார்.

பாட்டியின் சமையலுக்கு உதவுவார். உறங்கவும் செய்வார். ''இந்த தெருதான் உன் தாத்தாவின் முதல் தோழி. அதைப் பார்க்காமல் அவரால் இருக்க முடியாது'' என பாட்டி கேலி பேசுகையில் ''உண்மைதான்'' என்பார் தாத்தா. ''சிறு வயதில் ஓடித் திரிந்த, ஒளிந்து விளை யாடிய எத்தனையோ நிகழ்ச்சிகளுக்கு இந்த தெருதான்

சாட்சி. உன்னை மணம் முடித்து வீட்டிற்குள் நுழையும் முன் இந்த தெருவில் தான் நின்றேன். என் அப்பாவும், அம்மாவும் இறந்து இந்த தெரு வழியே தான் ஊர்வலம் போனார்கள்.

''திண்ணையில் அமர்ந்து தெருவைப் பார்த்தபடி ஒரு வாழ்நாளையே கழித்து விடலாம் என்பார் தி.ஜானகி ராமன். தெருக்களுக்கும் மனிதர்களுக்கும் உள்ள உறவு ஆழமானது என தாத்தா விவரிக்கையில் நிலஞ்சனா வுக்கும் தெருவை ரசிப்பதில் சுவாரஸ்யம் ஏற்பட்டது. அப்பாவுடன் ஊர், ஊராகச் செல்லும் போதெல்லாம் சாலைகளை கவனிக்கத் தொடங்கினாள். நாகாலாந்தின் வளைவு, வளைவான மலைப் பாதைகளும் குளிர்கால காஷ்மீரின் பனி உறைந்த சாலைகளும், இராஜஸ்தானில் மணல் கப்பிய சாலைகளும், கோடையில் தார் உருகும் சென்னையின் சாலைகளுமாக ஒவ்வொரு பயணமும் ஒரு புவியியல் அமைப்பை அவளுக்கு அறிமுகம் செய்தது.

பாட்டி இறந்த பிறகு தாத்தா மும்பையில் இருக்கும் சித்தப்பாவுடன் வசிக்க நேர்ந்தது. மும்பையின் அழுக்கான சாலைகள் மீது தாத்தாவுக்கு அபிமானம் ஏற்படவில்லை. நிலஞ்சனா அவரைப் பார்க்க மும்பை போயிருந்தபோது அவருடன் தெருவில் நடக்கையில் எதிர் வரும் வண்டிகளையோ, இடித்துக் கொண்டு செல்லும் மனிதர்களையோ உணராதவராக நடந்து கொண்டிருந்தார். ''தாத்தா இப்படியே போகிறீர்கள்? உங்களுக்கு இந்த சத்தம் கேட்கவில்லையா?'' என்றாள் நிலஞ்சனா அவரிடம்.

தாத்தா ஒரு தீவிரத்துடன் 'இல்லை' என தலை யசைத்தார். ''நான் சுமந்து கொண்டு நடப்பது இந்த உடலை அல்ல. என் ஊரைத்தான். பின்னால் வரும் ஹார்ன் சத்தத்திற்கு விலகாமல் இருப்பதற்கு காரணம் காது கேளாமையால் அல்ல. மானசீகமாய் கிராமத்து தெரு ஒன்றில் நடந்து கொண்டிருப்பதால்தான்.''

இத்தனைக்கும் தாத்தா இராணுவத்தில் இருந்தவர். அவர் செல்லும் இடம் எல்லாம் தன் கிராமத்தை சுமந்து கொண்டே அலைந்திருக்கிறார். மும்பையிலேயே இறந்து போன அவரை அவரது ஆசைப்படி சொந்த மண்ணில் அடக்கம் செய்ய முடியாமல் போனதுதான் பெரிய சோகம்.

''நிலஞ்சனா'' என்றபடி அண்ணி வரவும், நிலஞ்சனா ஆறி விட்டிருந்த டீயை ஒரே வாயாகக் குடித்து விட்டு கீழே வைத்தாள். ''அண்ணி இந்த இடம் மிகவும் அழகாக இருக்கிறது. எனக்கு பசுமை சூழ்ந்த வீடுகளும், வீட்டை ஒட்டிய தெருக்களும் மிகவும் பிடிக்கும்'' என்றாள் நிலஞ்சனா.

சுனிதா உடனே பதில் பேசாமல் ஏதோ யோசனை யில் இருந்தாள். பின் ''நீ எப்படியிருக்கிறாய் நிலஞ் சனா? இந்த பெங்களூரு வாழ்க்கைக்கு உன்னை தயார் படுத்திக் கொண்டிருக்கிறாயா?'' என்றாள் மிருதுவான குரலில்.

அந்தக் குரலில் நெகிழ்ந்து போன நிலஞ்சனா தொண்டையை செருமி சரிப்படுத்திக் கொண்டாள். ''நீயும் அண்ணனும்கூட இருக்கையில் எனக்கு என்ன பிரச்சனை இருக்கப் போகிறது அண்ணி? இங்கே

நான் சமாளித்துக் கொள்வேன். கவலைப்படாதே'' என்றாள்.

''நீ ஒரு புத்திசாலிப் பெண் என்று எனக்குத் தெரியும். ஆனால்...''

''அண்ணி புத்திசாலிகளுக்கு மிகவும் பசிக்கும். அது உனக்குத் தெரியுமா?''

''தெரியும். தெரியும். சாப்பாடு தயார். வா சாப்பிட லாம்'' என்றாள் சுனிதா சிரித்தபடி.

''வெண்ணெயில் வாட்டிய பரோட்டாவும், ஆலு சப்ஜி, சாலட், சாதம், பருப்பு என உணவு வெகு சுவை யாக இருந்தது. அண்ணியை பாராட்டியபடி சாப்பிட்டு முடிக்கையில் நிலஞ்சனா கேட்டாள். ''அண்ணன் டேராடூனிலிருந்து எப்போது வருகிறான் அண்ணி?''

''நாளை வந்து விடுவார். கரண்தேசாயின் அப்பா எனக்கு போன் பண்ணியிருந்தார் நிலஞ்சனா.''

''எனக்கும்தான்.''

''நான் உன்னிடம் பேசி விட்டுச் சொல்வதாகச் சொல்லியிருக்கிறேன்.''

''எனக்குப் பேச எதுவும் இல்லை அண்ணி.''

''நிலஞ்சனா.''

''எனக்கு மூச்சு விடவாவது சந்தர்ப்பம் கொடுங்கள் அண்ணி.''

''ரிலாக்ஸ் நிலஞ்சனா. உன் வாழ்க்கை உன் கையில்தான் இருக்கிறது.''

''நிஜமாகவா?'' என்றாள் நிலஞ்சனா வியப்புடன்.

# 2

"சஞ்சு, ஆர் யு ரெடி?"

"யா அண்ணா. ஐயம் ரெடி."

தோளில் கிராஸாக சரிந்த ஒன்சைட் பேக்கை சரி செய்தபடி ஜீன்சும், காட்டன் குர்த்தாவுமாய் கிளம்பு கையில் நிலஞ்சனாவுக்கு மறுபடியும் பள்ளிப் பருவத் திற்கு திரும்பிப் போனாற்போல் மனம் துள்ளியது. ஹரிஹரன் ஊரிலிருந்து வந்ததும் தங்கையை அழைத்துப் போய் தயானந்த சாகர் கல்லூரியில் பட்ட மேற்படிப் பிற்கு சேர்த்து விட்டிருந்தான். நிலஞ்சனா பொலிட்டிக் கல் சயின்ஸை செலக்ட் செய்தபோது கேள்விக் குறி யுடன் பார்த்தவன் மேற்கொண்டு எதுவும் கேட்கவில்லை.

சுனிதாவிடம் விடைபெற்று இருவரும் கீழே வந்த போது ஹரிஹரன் கார் அருகே ஒல்லியாய், உயரமாய் ஒரு இளைஞன் நின்றிருந்தான். ஹரிஹரனைப் பார்த்ததும் விரைப்பான சல்யூட் ஒன்றை வைத்தவன், "ஹலோ மேம்" என்றான் நிலஞ்சனாவிடம்.

"இவன் உபேந்திரா. மை பட்டீ" என்றான் ஹரிஹரன்.

"அண்ணாவின் உதவிக்காக அரசால் நியமிக்கப்பட்ட ஜவான் என்பது புரிய நிலஞ்சனா புன்னகையுடன் தலையசைத்தாள்.

''சஞ்சு இன்று மட்டும் உபேந்திரா உன்னை அழைத்துப் போவான். நாளை வேறு ஏற்பாடு செய்து கொள்ளலாம்'' என்றான் ஹரிஹரன்.

நிலஞ்சனா தலையசைத்து விட்டு உபேந்திராவுடன் காரில் கிளம்ப, ஹரிஹரன் காத்திருந்த ட்ரக்கில் ஏறிச் சென்றான்.

தயானந்த சாகர் கல்லூரியின் உள்ளே நுழைகையில் முதல் நாள் போலவே இப்போதும் நிலஞ்சனாவுக்கு பிரமிப்பு ஏற்பட்டது. மண் தரை கண்ணுக்குத் தெரியாமல் விரிந்திருந்த புல்வெளிகளும், மலர் செடிகளும், வாயிலிலிருந்து மேலே செல்கையில் மெத்தென்று காலில் பதிந்த புற்கள் போர்த்திய படிகட்டுகளும், நவீன பாணி கண்ணாடி பதித்த கட்டிடங்களும், அவற்றின் நடுவே நீரை பொழியும் பவுண்ட்டன்களும், வெளிநாட்டு மாணவர்களுடன் இந்தியாவின் பிற பகுதிகளிலிருந்து வந்திருக்கும் மாணவர்களுமாய் ஐரோப்பிய கல்லூரி ஒன்றில் நுழைந்தாற் போன்ற பிரேமையை ஏற்படுத்தியது. குளிர் காற்றின் இடையே சூரியனின் வெப்பம் இதமாக இருக்க அதை ரசித்தபடி நின்றிருந்தவளை யாரோ அழைத்தார்கள்.

''எஸ்கியூஸ்மீ மேடம், இன்று பொலிடிக்கல் சயின்ஸ் க்ளாஸ் என்றாள் ஒரு பெண். அவளுடன் இன்னொரு பெண்ணும், மூன்று ஆண்களும் நின்றிருக்கவே, அவர்களைப் பார்த்தபடி ''நோ. அப்படி எதுவும் இல்லையே! எதற்குக் கேட்கிறீர்கள்?'' என்றாள் நிலஞ்சனா குழப்பத்துடன்.

''பிறகு ஏன் க்ளாசுக்கு போகாமல் இங்கே நிற்கிறாய்?'' தான் வேடிக்கை பார்த்தபடியே வழியில் நின்று

விட்டதை உணர்ந்த நிலஞ்சனா கூச்சத்துடன் புன் னகைத்தாள். ''இந்த இடம் எத்தனை அழகாய் இருக் கிறது! டார்ஜிலிங்க்குள் நுழைந்தது போலிருக்கிறது'' என்றாள் நிலஞ்சனா.

''நீ பெங்களூருக்கு புதிதாக வந்திருக்கிறாயா?''

''யெஸ்.''

''அப்படியானால் நீ எங்கே சென்றாலும் இப்படித்தான் நிற்பாய். இந்த நகரம் முழுக்க தோட்டங்களும், மரங்களும் இருப்பதால்தான் பெங்களூர் கார்டன் சிட்டி எனப்படுகிறது. பை தி பை நாங்கள் உன் க்ளாஸ்மேட்ஸ். நான் ஷீத்தல், இவள் பாக்கியா. இவன் விக்ரம் சர்மா, ரமேஷ் அன்ட் சார்ல்ஸ்.''

''க்ளாட் டு மீட் யூ ப்ரெண்ட்ஸ். நான் நிலஞ்சனா.''

''தெரியும்.''

''அப்படியா? நான் உங்களை பார்க்கவில்லையே!'' என்றாள் நிலஞ்சனா வியப்புடன்.

''பார்த்தால்தான் தெரியுமா என்ன? அழகான பெண்களுக்கு அறிமுகம் தேவையில்லை.''

''ஏய்! இது ஐஸ் இல்லை?'' எல்லோரும் சிரித்த படியே நடந்தார்கள்.

அன்று வகுப்பில் அவர்களது ஹெச்.ஓ.டி. நீலா குமார் மாணவர்களை அறிமுகம் செய்து கொண்டார். நிலஞ் சனா இராஜஸ்தான் யுனிவர்சிட்டியில் பயோடெக் னாலஜியில் யு.ஜி. முடித்திருப்பதாக சொன்னதும், ''நீ ஸையன்ஸ் ஸ்டூடண்டா?'' என்றார் வியப்புடன். ''பயோ டெக் முடித்த பிறகு ஏன் அரசியலை தேர்ந்தெடுத்தாய்?''

''ஏனென்றால் நாட்டின் குடிமக்கள் என்ற முறையில் நம் ஒவ்வொருவரின் வாழ்விலும் தெரிந்தோ, தெரியாமலோ அரசியல் ஊடுருவி இருப்பதால் நான் அதைப் பற்றி முழுதாகத் தெரிந்து கொள்ள விரும்பினேன்.''

''குட்'' என்ற நீலா குமார் புதிய மாணவர்களுக்கான வரவேற்பு, பாடங்கள், கல்லூரி பற்றிய பொதுவான அறிமுகத்துடன் அன்றைய வகுப்பை முடித்துக் கொண்டார். கலைந்து வெளியே வருகையில் நிலஞ்சனாவுக்கு திருப்தியாக இருந்தது.

''நிலஞ்சனா நீ எங்கே தங்கியிருக்கிறாய்?'' என்றாள் பாக்கியா.

''கபின் ரோட். என் அண்ணன், அண்ணியுடன் இருக்கிறேன்.''

''இப்போது எப்படிப் போவாய்?'' என்றான் ரமேஷ். அவனுக்கு பதில் சொல்வது போல் வெள்ளை நிற செவர்லெட் கார் ஒன்று அவர்கள் அருகில் வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய தன்வீர் ''ஹாய் நிலஞ்சனா. கெட் இன்'' என்றான் முன்பக்க கதவைத் திறந்து,

ஜீன்சிலும், இறுக்கமான டீ ஷர்ட்டிலும் முறுக்கேறிய உடல் அமைப்புடன் நின்றிருந்தவனை எல்லோரும் வியப்புடன் பார்க்க, ''நிலஞ்சனா உன்னை பிக்அப் பண்ண இப்படி ஒரு ஹேண்ட்ஸம் வருவதாக நீ சொல்லவே இல்லையே!'' என்றாள் பாக்கியா விஷமத்துடன்.

''என் அண்ணாவின் ஜூனியர்'' என்ற நிலஞ்சனா மேற்கொண்டு பேச்சை வளர்க்காமல் கிளம்பினாள்.

''நிலஞ்சனா கல்லூரி எப்படியிருக்கிறது?'' என்றான் தன்வீர்.

''பைன்.''

''நீ சிறுவயதிலிருந்து இராஜஸ்தானிலேயே இருந்து விட்டதாக கேள்விப்பட்டேன். ஜெய்ப்பூர் வெய்யிலுக்கு நேர் எதிர் பெங்களூர்.''

''உண்மைதான்.''

''உன்னுடைய பொழுதுபோக்கு என்ன? புத்தகம் படிப்பாயா? சினிமா பார்ப்பாயா? பிடித்த ஹீரோ, ஹீரோயின்?'' தன்வீர் கேள்விகளை அடுக்கிக் கொண்டு போக நிலஞ்சனாவுக்கு அலுப்பாக இருந்தது. எத்தனையோ தலைமுறைகளாய் ஆண்கள் பெண்களிடம் பேச இப்படித்தான் ஆரம்பிக்கிறார்கள் என்று தோன்றியது.

''நீங்கள் எத்தனை நாட்களாய் இங்கே இருக்கிறீர்கள் தன்வீர்?'' என்றாள் நிலஞ்சனா.

''சென்ற வருடம்தான் இங்கே போஸ்டிங் வந்தது. பெங்களூர் ஆர்மிக்கு தேர்ந்தெடுக்கும் ஆபீஸ்தான் என்பதால் நல்லவேளையாக குவார்ட்டர்ஸ் கிடைத்தது. இதுவே கேம்ப் என்றால் என்னை மாதிரி பேச்சிலர்களுக்கு குவார்ட்டர்ஸ் கிடைக்காது. இங்கு சீனியர் ஆபீஸர்கள் அதிகம் என்பதால் என்டர்டெய்ன்மென்ட் குறைவு என்பதைத் தவிர வேறு பிரச்சனை இல்லை. என் அண்ணா முசௌரி கேம்ப்பில் இருக்கிறான். மாமா நைனிடாலில் இருக்கிறார். அங்கெல்லாம் தினமும் பார்ட்டி பண்ணுவார்கள். ஈஸியாக பொழுது போகும்.''

''உங்கள் சமூகத்தில் வீட்டிற்கு ஒருவராவது இராணுவத்தில் இருக்கிறீர்கள் இல்லையா?''

''ஆமாம். எங்கள் வீட்டில் நான், அப்பா, அண்ணன் மூவருமே சர்வீஸில் இருக்கிறோம்'' என்கையில் தன்வீர் முகத்தில் மெல்லிய கர்வம் தோன்றி மறைந்தது.

இந்திய மக்கள் தொகையில் சீக்கியர்கள் இரண்டு சதவீதம் பேர்தான். ஆனால் முப்படைகளிலும் பத்து சதவீதத்திற்கும் அதிகமானவர்கள் இருக்கின்றனர். பல உயர் பொறுப்புகளை வகிக்கிறார்கள். முன்பு பிரிட்டீஷ் இராணுவத்தில் சீக்கிய படை பிரிவு தனியாக இருந்தது. இரண்டு உலக போர்களிலும் பிரிட்டனுக்காக இந்த படை வீரத்துடன் போரிட்டது. எனவே அவர்கள் மீது ஏற்பட்ட அபிமானத்தால் தற்போதும் பிரிட்டிஷ் இராணு வத்தில் சீக்கிய படை பிரிவு ஏற்படுத்தப் படுவது பற்றி அந்நாட்டு அரசு யோசித்து வருகிறது. இரண்டாயிரத்து ஏழாம் வருடத்திலிருந்து அந்நாட்டு நாடாளுமன்றத்தில் இந்த விஷயம் விவாதிக்கப்பட்டு வருவதாக அப்பா கூறியிருந்தது நிலஞ்சனாவுக்கு நினைவு வந்தது.

''தன்வீர், நீ எந்த ரெஜிமென்ட்?'' என்றாள் நிலஞ் சனா.

''கூர்கா ரெஜிமென்ட். எல்லையோர காவல் படை. எப்பவும் சென்சிட்டிவான இடங்களில் வேலை. வாகா எல்லையில் இருந்தபோது நானும் கரண் தேசாயும் ஒரே கேம்ப்பில்தான் இருந்தோம். ''இயல்பாக சொல்லிக் கொண்டு வந்த தன்வீர் நிதானித்தான். ''ஸாரி. நான் யோசனையில்லாமல் ஏதோ பேசிவிட்டேன்.''

''இதில் வருத்தப்பட்ட எதுவும் இல்லை தன்வீர். பேசுகிற ஒவ்வொரு வார்த்தைக்கும் யோசிக்க வேண்டும் எனில் யாரும் இயல்பாக பேச முடியாது. எனக்கு இந்த

நிமிஷம் தவிர வேறு நினைவுகள் இல்லை. நிகழ்காலத்தில் வாழ கற்றுக் கொண்டேன். எதிர்காலம் பற்றிய சிந்தனைகள் கூட வருவதில்லை.''

''குட்... குட்... இது ரொம்ப நல்ல விஷயம் நிலஞ்சனா. நீ ரொம்ப ஸ்மார்ட்'' என்றான் தன்வீர் பாராட்டுதலாய்.

''யெஸ். ஸ்மார்ட்டாய் இருப்பதைத் தவிர வேறு வழி இல்லை எனக்கு'' என்றாள் நிலஞ்சனா புன்னகையுடன்.

ஒரு நிமிடம் அவளையே பார்த்த தன்வீர் சொன்னான். ''நிலஞ்சனா நீ மிகவும் அழகாய் இருக்கிறாய்'' நிலஞ்சனா அவன் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளவோ புறக்கணிக்கவோ இல்லாத கவனத்துடன் சொன்னாள். ''எனக்கு பசிக்கிறது தன்வீர். சீக்கிரம் வீட்டிற்குப் போகலாம்.''

அவளுக்கு பதிலாய் கார் அரை வட்டமடித்து வந்த வழியே திரும்பியது.

''தன்வீர் எங்கே போகிறாய்?'' என்றாள் நிலஞ்சனா.

''இந்த டிராபிக்கில் நாம் போய் சேர வெகு நேரம் ஆகும். அதுரை ஏன் பசியோடு இருக்க வேண்டும்?'' என்றவன் ஒரு உணவகத்தின் முன்பு காரை நிறுத்தினான்.

''க்ரீன் வேலி'' என பெயரிடப்பபட்டிருநத அந்த உணவகம் உண்மையிலேயே பெயருக்கு ஏற்றாற்போல் இருந்தது. அடர்த்தியான குரோட்டன்ஸ் செடிகளால் காம்பவுண்ட் அமைந்திருந்தது. மேற்கூரையும், கதவுகளும், மூங்கிலால் வளைக்கப்பட்டு, மேற் கூரையின் மீது

போகன் வில்லாவும், பெயர் தெரியாத பூங்கொடிகளும் படர்ந்து பூத்துக் குலுங்கின. புல் தரையில் ஓடிய முயல் களின் மீது படாமல் நடந்து போய பிரம்பு நாற்காலியில் அமர்ந்தார்கள்.

''என்ன சாப்பிடுகிறாய்?'' என்றான் தன்வீர்.

''இந்த ஊர் ஸ்பெஷல் எதாவது.''

''மைசூர் மசாலா தோசை இங்கு மிகவும் பிரபலம். சொல்லட்டுமா?''

நிலஞ்சனா சரி என்றதும் தன்வீர் இரண்டு மசாலா தோசைகளும் ஸ்வீட்டும் ஆர்டர் செய்துவிட்டு வந்தான்.

''சர்வீஸ் செய்ய ஆட்கள் இல்லையா தன்வீர்?''

''நிறைய ஹோட்டல்களில் உட்கார நாற்காலிகளே இருக்காது. இங்கு. அவசர உலகம். வேகமான நகரம். ஆற அமர சாப்பிட யாருக்கும் நேரம் இல்லை.''

ஸ்பீக்கர்களில் கசிந்த புல்லாங்குழலின் ஓசை இனி மையாய் காதுகளை தழுவியது. நிலஞ்சனா கண்களை மூடி ரசிக்க ஆரம்பித்தாள். இசை பிரவாகமாய் பெருகி அதில் அவள் மூழ்கத் தொடங்குகையில் நாசியில் அருமையான மணம் உள்ளே நுழைந்தது. நிலஞ்சனா வின் கண்கள் தானாய் திறந்தன. நெய் மணக்கும் மசால் தோசை பொன்னிற முறுகலுடன் அவளுக்காக காத் திருந்தது. தோசையின் உட்புறம் மிளகாய்ப்பொடி தூவி, மசாலா ஸ்டப் செய்யப்பட்ட தோசை தொட்டதும் உடைந்தது. நெய்க் கென்று ஒரு மணம் உண்டு. அது சேர்க்கப்படும் பொருளை மணக்க வைக்குமே தவிர அதற்கென பிரத்யேக சுவை கிடையாது. அதே போல்

சூட்டுக்கென்று ஒரு சுவை உண்டு. சூடான பொருள் சுவைப்பது அதனால்தான். ஆனால் சூட்டுக்கு நிறமோ, மணமோ இருக்காது. நிலஞ்சனா நெய்யின் மணத்தையும், சூட்டின் சுவையையும் ஒருங்கே ருசித்து மசால் தோசையை சாப்பிடத் தொடங்கினாள்.

''எக்ஸலன்ட்'' என்றாள் தன்வீர்ரிடம்.

அவள் விரும்பி சாப்பிடவும் தன்வீர் அவளுக்காக இன்னொரு தோசை ஆர்டர் செய்து வாங்கி வந்தான்.

''நோ. எனக்கு வேண்டாம்'' என்றாள் நிலஞ்சனா.

''உனக்குப் பிடித்திருக்கிறது இல்லையா?''

''என்னதான் பிடித்திருந்தாலும் வயிறு நிரம்பிய பிறகு சாப்பிட முடியாது இல்லையா? நீ ஆர்டர் செய்வதற்கு முன்பு என்னைக் கேட்டிருக்கலாம்.''

''நோ. பிராப்ளம். நீ ஹேண்ட் வாஷ் செய்துவிட்டு வா. நான் பணம் செலுத்தி விட்டு காரை எடுக்கிறேன்'' நிலஞ்சனா டேபிள் மீது காத்திருந்த தோசையை ஒதுக்கி விட்டு எழுந்து கொள்ளவும் ''எஸ்கியூஸ்மீ'' என்றான் ஒரு இளைஞன்.

நல்ல நிறமும், உயரமும், கூர் விழிகளுமாய் நின்றிருந்தவனிடம் ''எஸ்'' என்றாள் நிலஞ்சனா.

''இங்கு உணவு பிடிக்கவில்லையா?'' என்றான் அவன்.

''அப்படி எல்லாம் இல்லை. சொல்லப் போனால் மிகவும் நன்றாக இருந்தது. ஏன் கேட்கிறீர்கள்?''

அவன் டேபிள் மீதிருந்த தோசையை காண்பித்தான்.

''இதை சாப்பிடாமலேயே எழுந்து போகிறீர்கள்.''

''எனக்கு வயிறு நிரம்பி விட்டது. அதனால் சாப்பிட முடியவில்லை.''

''பிறகு எதற்காக ஆர்டர் செய்ய வேண்டும்?''

நிலஞ்சனாவின் புருவம் சுருங்கியது. ''நான் ஹோட்டலில் என்ன சாப்பிடலாம். எவ்வளவு சாப்பிடலாம் என்பதற்கெல்லாம் உங்களுக்கு விளக்கம் கொடுக்க வேண்டுமா? யார் சார் நீங்கள்? என்ன வேண்டும் உங்களுக்கு?''

''எனக்கு என்ன வேண்டும் என்பதை விட உங்களுக்கு என்ன வேண்டும் என்பதைத் தெரிந்து கொண்டு முதலில் சாப்பிடத் தொடங்குங்கள்'' என்றவன் யாரோ அவன் அருகில் வந்து நிற்கவும் அவர்களிடம் பேசியபடியே நடந்து போனான். அவனது வேகமான நடையையும், கரகரப்பான குரலையும், கடின முகத்தையும் பார்த்தபடியே நின்றிருந்தவள், 'இவன் யார், இவன் கோபப்படும்படியாய் என்ன செய்தோம்' என்ற யோசனையில் ஆழ்ந்தாள். செல்போனில் தன்வீர் அழைப்பைப் பார்த்த பிறகே நினைவு வந்தவளாக கை கழுவ விரைந்தாள்.

நிலஞ்சனா தன்வீருக்கு நன்றி சொல்லி விட்டு வீட்டிற்கு சென்றபோது சுனிதா ஒரு பெண்மணியுடன் தீவிரமாகப் பேசிக் கொண்டிருந்தாள். நிலஞ்சனாவைப் பார்த்ததும் வரவேற்பாய் தலையசைத்தவள், அந்தப் பெண்ணை அறிமுகம் செய்து வைத்தாள். ''இவள் பத்மஜா. ஹரியின் பேட்ச் மேட் மிஸ்டர் கிருஷ்ணா ராவ்வின் மனைவி.''

பத்மஜா மாநிறத்துடன் நல்ல களையாய் இருந்தாள். மஞ்சள் நிறத்தில் கட்டமிட்ட கோட்டா புடவையும், கருமணியுமாய் அண்ணியை விட சில வருடங்கள் மூத்தவளாகத் தெரிந்தாள். முகத்தில் ஒரு அப்பாவித் தனமும், மிரட்சியும் தெரிந்தது. நிலஞ்சனாவின் வணக்கத்திற்கு சற்றே தயக்கத்துடன் பத்மஜா பதில் சொன்னாள். ''உங்கள் நாத்தனாரா. ரொம்ப அழகாய் இருக்கிறாள். படிக்கிறாளா?'' என்றாள் சுனிதாவிடம்.

''ஆமாம். இங்கு கல்லூரியில் சேர்ந்திருக்கிறாள்.''

''நல்ல காரியம் செய்தீர்கள். அப்பாவோ, அண்ணனோ கூட இருந்தால்தான் வயசு பிள்ளைகளை கவனிக்க முடியும். என்னைப் பாருங்கள். எப்பவும் சுகாஷ் பற்றிய கவலைதான் எனக்கு.''

''நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை பத்மஜா. சுகாஷ் டீன் ஏஜ்க்குரிய குறும்புத் தனங்களோடு இருக்கிறான். சில வருடங்களில் அப்பா மாதிரி ஹேன்ட்ஸம் ஆர்மி மேன்னாகப் போகிறான் பாருங்கள்.''

''வேண்டாம் சுனிதா'' என்றாள் பத்மஜா பதட்டத்துடன். இந்த பட்டாளத்து வேலை இவரோடு போகட்டும். நெல்லூரில் என் மாமனார் நிலம் கொஞ்சம் இருக்கிறது. இவர் ரிட்டையர்ட் ஆனதும் அதில் விவசாயம் பார்க்கப் போய் விடலாம் என்றிருக்கிறேன்.''

சுனிதா, பத்மஜாவுக்கு சமாதானமாய் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்த பின் பத்மஜா விடைபெற்றுப் போனாள்.

''இன்று நீ வெல்பேர் சென்டருக்கு போகவில்லையா அண்ணி?'' என்றாள் நிலஞ்சனா.

"ஆமாம். நாளை சி.ஓ. மேடம் ஒரு பார்ட்டி ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அது பற்றி அவர்களுடன் பேசிக் கொண்டிருந்ததில் வெல்பேர் சென்டருக்குப் போக முடியாமல் போயிற்று. பத்மஜா என்னைத் தேடிக் கொண்டு வந்து விட்டாள். ஆனாலும் பாவம்தான். இந்தியாவின் ஏதோ ஒரு மூலையிலிருந்து கணவனின் அரசாங்க வேலையையும் அது தரும் வசதி, வாய்ப்பு களையும் நம்பி குடும்பம் நடத்த வரும் பத்மஜா மாதிரி பெண்கள் இங்குள்ள வித்தியாசமான சூழலுக்கு ஒத்துப் போக முடியாமல் அவதிப்படுகிறார்கள்."

"ஆனால் இராணுவத்தில் பணிபுரிபவர்களுக்கு திருமணத்திற்கு முன் அவர்களது மேலதிகாரிகள் இன்டர்வியூ கவுன்சிலிங் எல்லாம் இருக்கும் இல் லையா? நீ கூட இன்டர்வியூ போனது எனக்கு நினை விருக்கிறது."

ஆபீஸர் லெவலில் இருப்பவர்களுக்கு தான் இன்டர்வியூ இருக்கும். ஒரு உயர் அதிகாரியின் மனைவி தன் கணவரின் பேட்ச் மேட்களை அரவணைத்தும், சீனியர் அதிகாரியின் மனைவியை அனுசரித்தும் செல்ல வேண்டும். தங்களது ஜூனியர்களின் குடும்பத்தில் ஏற்படும் பிரச்சனைகளை முடிந்தால் சரி செய்யவும், கவுன்சிலிங் செய்யவும், அவர்களுக்கு தொழிற்கல்வி கற்க ஏற்பாடு செய்யவும் வேண்டும். புதிய இடங் களுக்கு மாறிக் கொண்டே இருக்கையில் அந்தந்த சூழ்நிலைக்கு எளிதாக தன்னையும், குழந்தைகளையும் பழக்கப் படுத்திக் கொள்ள வேண்டும் என இராணுவம் எதிர்பார்க்கிறது. அதனால் தான் ஆபீஸர்களுக்கு

ப்ரமோஷன் அளிக்கும்போது வெல் பேர் நடவடிக்கை களில் அவர்களின் மனைவியின் பங்கு என்ன என்பதை கருத்தில் கொண்டுதான் மதிப்பெண் அளிக்கப்படு கிறது. மனைவி இது போன்ற நடவடிக்கைகளில் கண வனுக்கு ஒத்துழைக்காத பட்சத்தில் ப்ரமோஷன் தள்ளிப் போகும்.''

''சரிதான்'' என்ற நிலஞ்சனா ஜெய்ப்பூரிலிருந்து என் ஸ்கூட்டரை அனுப்பி வைக்கும்படி அப்பாவிடம் சொல்லியிருந்தேன். இந்த வாரத்தில் வந்து விடும்'' என்றாள்.

"நம் கார் இருக்கையில் உனக்கு ஸ்கூட்டி எதற்கு சஞ்சு?"

''கல்லூரி முடிந்து நான் லைப்ரரிக்கோ, கடை களுக்கோ போக வேண்டியிருக்கும். தினமும் தன்வீரை சிரமப்படுத்துவது சரியல்ல.''

''தன்வீர் மிகவும் நல்லவன் சஞ்சு. அவனுக்கு சிரமம் என்றால் உன்னை அழைத்து வரும் வேலையை ஏற்றுக் கொண்டிருக்கவே மாட்டான்.''

''அப்படியானால் நல்லவர்களை வேலை வாங்குவது கொஞ்சமும் சரியல்ல'' என்றாள் நிலஞ்சனா சிரித்தபடி.

அன்று இரவு சந்தீப்பும், ப்ரதீப்பும் நிலஞ்சனாவிடம் நிறைய விசாரித்தார்கள். உன் க்ளாஸ் எப்படியிருக்கும்? மிஸ்ஸிடம் திட்டு வாங்கினாயா? ப்ரெண்ட்ஸ் யார்? விளையாட பெரிய கிரவுண்ட் இருக்கிறதா?''

அவர்களுக்கு பதில் அளித்த நிலஞ்சனா அன்று முழுவதும் இருவரும் என்ன செய்தார்கள் என்பதை கேட்டாள். ஹோம் ஒர்க் முடித்ததற்கு மிஸ் ஸ்டார்

போட்டதையும் ரிலே ரேஸில் முதலாவதாக வந்ததையும், பரண்ட் தந்த பர்த்டே சாக்லேட் பற்றியும், பக்கத்து கிளாஸ் பெண் கிள்ளிவிட்டு ஓடி விட்டதையும் போட்டி போட்டுக் கொண்டு சொன்னார்கள். உண்மையில் குழந்தைகளின் உலகம் சுவாரஸ்யமானது என்று தோன்றியது. தினமும் அவர்கள் சந்திக்கும் சந்தோஷங்களும் பிரச்சனைகளும் கூட புதிதானவை. தங்களது அன்றாட நிகழ்வுகளை பகிர்ந்து கொண்டு அதைப் பற்றி நிறையக் கேள்வி கேட்டு உலகைப் புரிந்து கொள்ள முயல்கிறார்கள். கேள்விகள் இல்லாமல், தானாகப் புரிந்து கொள்ளும் நிலை வரும் போது வாழ்க்கையின் சுவாரஸ்யம் குறைந்து போகிறது. நிலஞ்சனா அவர்களில் சின்ன உலகத்தில் இருக்கையில் சுனிதா இருவரையும் தூங்க அழைத்தாள்.

இருவரும் நிலஞ்சனாவுக்கு முத்தமிட்டு ''குட்நைட்'' சொல்கையில், நிலஞ்சனா சொன்னாள். ''இவர்கள் இன்று இங்கேயே தூங்கட்டுமே அண்ணி!''

''இருவரும் ப்ரெஷ் செய்துவிட்டு தூங்கப் போங்கள்'' என்று குழந்தைகளை அனுப்பிவிட்டு ஹரிஹரன் சொன்னான். ''மிகவும் பாதுகாப்பாய் வளர்ப்பது குழந்தைகளின் தனித்தன்மையை பாதிக்கும் சஞ்சு. தனியான அறையில் உறங்கவும், தங்கள் பொருட்களை பாதுகாப்பாய் வைத்திருந்து கவனமாய் கையாளவும் அவர்கள் பழக வேண்டும்.

...........

''அது மட்டுமில்லாமல் உனக்கும் ஒரு பர்சனல் டைம் வேண்டும். யாருடைய தலையீடும் இன்றி உன் நேரத்தை உனக்கே செலவழிக்க வேண்டும். சார்ந்திருக்க கற்றுக் கொண்டால் சுதந்திரம் போய் விடும்.''

பதில் பேசாது தலையசைத்த நிலஞ்சனாவுக்கு அப்பாவும் இதே போல் பேசிய நினைவு வந்தது. எப்போதும் ஆபத்தை முதுகில் சுமந்து கொண்டு திரிபவர்கள் என்பதால் தங்களை சார்ந்தவர்களை ஆரம்பம் முதலே சுதந்திரமாக வாழ பழக்குகிறார்கள் போலும்.

சலவை செய்து அடுக்கப்பட்ட உடைகளில் கணவனுக்கு இரவு உடையை தேடுகையில் ஹரிஹரன் சொன்னான். ''நிலஞ்சனாவை சற்று தனித்திருக்க விடு சுனிதா. தனிமை மிக கொடுமையானது. கொடுமையான சமயங்களில் தனக்கான துணையை தேடுவது மிக இயல்பான விஷயம். உனக்குப் புரியும் என்று நினைக்கிறேன்.''

''புரிகிறது'' என்றாள் சுனிதா.

* * *

அன்று லோக்கல் பெஸ்டிவல் என்பதால் இரண்டாம் பீரியட்டுடன் கல்லூரி முடிந்து விட்டதாக மிஸஸ் நீலாகுமார் அறிவித்ததும் வகுப்பறையில் உற்சாகக் கூச்சல் எழுந்தது.

''டுடே இஸ் அவர் டே என்ன செய்யலாம்?'' என்றாள் ஷீத்தல்.

''எங்காவது வெளியே போகலாம் யார்'' என்றான் விக்ரம் சர்மா.

''போரம் போகலாமா? எதாவது சினிமா பார்க்கலாம்'' என்றான்.

சார்ல்ஸ்.

''சமீபத்தில் நல்ல படம் எதுவும் வரவில்லை. ஏற்கனவே வந்த படம் எல்லாம் பார்த்தாயிற்று'' என்றாள் பாக்கியா.

''எம்.ஜி. ரோட் போய் சிஸ்லர்ஸ் சாப்பிடலாம்'' என்றான் ரமேஷ்.

''வாட் அபௌட் புல் டெம்பிள்?'' என்றாள் நிலஞ்சனா.

''யு மீன் நந்தி கோவில் போக வேண்டுமா?'' என்றாள் ஷீத்தல் வியப்புடன்.

''யெஸ். இன்று பெஸ்டிவல் நடக்கிறது இல்லையா?''

''ம் கடலைக்காய் திருவிழா நடக்கிறது.''

''ஐநூறு ஆண்டுகள் பழமையான விழா என்று கேள்விப்பட்டேன். இன்று மத்திய அமைச்சரும், கர்நாடகா விவசாய துறை அமைச்சரும் திருவிழாவைத் தொடங்கி வைப்பதாக செய்திகளில் பார்த்தேன்.''

சற்று யோசனைக்குப் பிறகு 'நம் விருந்தாளிக்காக போகலாம்'' என்றபடி கிளம்பினார்கள். அவர்கள் பசவனகுடி போய் சேர்ந்தபோது ஏரியா முழுக்க கூட்டம் அலைமோதியது. திரும்பிய பக்கமெல்லாம் கடலைக் காய் மூட்டைகள். அவித்த கடலை. வறுத்த கடலை. விதவிதமான மசாலாக்களும், இனிப்பும் கலந்த கடலை, கடலை மிட்டாய்கள் என கடலையில் தயாரான வித விதமான உணவுப் பொருட்கள் விற்பனைக்கு வைக்கப் பட்டிருந்தன. சாலையின் இருபுறமும் தமிழகம் மற்றும் பிற மாநில வியாபாரிகளும், உள்ளூர் விவசாயிகளும் கடைகள் அமைத்து விற்பனை செய்தனர். கோவிலின் உள்ளே மிகப் பெரிய நந்தி சிலைக்கு கடலைக்காய் அபிசேகம் நடந்து கொண்டே இருந்தது.

''இதென்ன ஒரே நிலக்கடலையாக இருக்கிறதே!'' என்றாள் நிலஞ்சனா வியப்புடன்.

''முன்பு பசவன்குடியைச் சுற்றியுள்ள தோட்டங்களில் அறுவடை செய்து குவிக்கப்பட்ட நிலக்கடலையை அங்குள்ள கோவில் காளை தினமும் இரவில் வந்து தின்று விடுமாம். இதனால் விவசாயிகள் நந்தி கோவிலுக்கு சென்று 'இனி நாங்கள் அறுவடை செய்யும் முதல் கடலையை உனக்குப் படைக்கிறோம். கடலையும், பயிரையும் நாசம் செய்ய வேண்டாம்' என்று வேண்டிக் கொண்டார்களாம். உடனே அந்த காளை கடவுளாக மாறி விட்டதாம். அந்த அடிப்படையில்தான் இந்த திருவிழா கொண்டாடப் படுகிறது'' என்றான் ரமேஷ்.

அவர்கள் ஒரு மசாலா கடலையை கொறித்தபடி கோவிலைச் சுற்றி வந்தார்கள்.

''மேடம் இல்லி பன்னி மேடம்.''

''கல்லேக்காய் தும்ப சென்ன கீதே பொர்.''

கன்னடத்தில் குரல்கள் பொருட்களை வாங்க அழைத்தன. ''எனக்குத் தாகமாக இருக்கிறது. குடிக்க எதாவது வேண்டும்'' என்றாள் பாக்கியா.

''கீழே நிறைய கடைகள் இருக்கிறது. கூல்ட்ரிங் குடிக்கலாம்'' அவர்கள் பேசியபடியே படியிறங்கினார்கள்.

''என் அண்ணன் குழந்தைகளுக்கு எதாவது வாங்க வேண்டும்'' என்றாள் நிலஞ்சனா.

''சீக்கிரம் வாங்கு. வெயிட் செய்கிறோம்'' என்றான் சார்ல்ஸ்.

''டூ வீலர்களை பார்க்கிங்கிலிருந்து எடுக்க வேண்டும். அங்கே கூட்டமாய் இருக்கிறது'' என்றான் விக்ரம் சர்மா.

''கூல்ட்ரிங் கடையிலும் கூட்டம் அதிகம்தான். மூன்று பேர் பார்க்கிங் போய் வண்டியை எடுத்து வரலாம். இரண்டு பேர் கூல்ட்ரிங் ஆர்டர் செய்யுங்கள். நிலஞ்சனா நீ வேண்டியதை வாங்கிக் கொண்டிரு. நாங்கள் வந்து விடுகிறோம்'' என அவர்கள் பிரிந்து சென்றார்கள். நிலஞ்சனா அருகிலிருந்த கடைக்குள் நுழைந்தாள். அங்கிருந்த் பொருட்களை பார்வையிட் டவள், ''எனக்கு ஒரு பாட்டில் வேர்கடலை ஜாம், இட்லி பொடி, வேர்கடலை மிட்டாய் வேண்டும்'' என்றாள் விற்பனையாளரிடம்.

கடையில் நிறைந்திருந்த கூட்டத்தின் நடுவே பம் பரமாய் சுழன்று கொண்டிருந்த விற்பனையாள் ''எஷ்ட பேக்கு மேடம்?'' என்றான் தன் போக்கில்.

நிலஞ்சனா ஆங்கிலத்தில் திரும்பக் கேட்டதைப் புரிந்த கொள்ள முடியாமலோ, அல்லது கவனிக்க முடி யாமலோ தன் எதிரே நீண்ட கைகளிலிருந்து பணத்தை பெற்றுக் கொண்டு, பொருட்களை கொடுத்துக் கொண் டிருந்தான். அவனுக்கு உதவி செய்ய யாரும் இருப்ப தாகவும் தெரியவில்லை. சில நிமிஷங்கள் காத்திருந்த பின் நிலஞ்சனா வேறு கடையில் பார்க்கலாம் என அங்கிருந்து நகர முற்பட்டாள். அப்போது அறுபது வயது மதிக்கத்தக்க ஒருவரும், ஒரு இளைஞனும் கடைக்குள் நுழைந்தனர். நிலஞ்சனா தனியே நின்றிருப்பதைப் பார்த்த அந்த இளைஞன் ''நான் உங்களுக்கு உதவ லாமா?'' என்றான் ஆங்கிலத்தில்.

''நன்றி. இங்கு கூட்டம் அதிகமாக இருக்கிறது. வெளியே என் நண்பர்கள் எனக்காக காத்திருப்பார்கள். நான் கிளம்புகிறேன்'' என்றாள் நிலஞ்சனா.

''உங்களுக்கு என்ன வேண்டும் என்பதை மட்டும் சொல்லுங்கள்'' என்றான் அவன்.

நிலஞ்சனா சொன்னதும், அவன் பெரியவரிடம் கன்னடத்தில் ஏதோ சொல்லி விட்டு கடைக்குள் சென் றான்.

நிலஞ்சனா கேட்ட பொருட்களுடன் சில நிமிடங் களில் திரும்பி வந்தான்.

''இது எங்கள் அன்பளிப்பு. வேர்கடலை அல்வா. பசவன்குடி ஸ்பெஷல். சாப்பிட்டுப் பாருங்கள். வீணாக் காமல்'' என்றவனை கவனித்த நிலஞ்சனா ''உங்களை இதற்கு முன்பு எங்கோ பார்த்திருக்கிறேன்'' என்றாள் அவனிடம்.

அவன் புன்னகைத்தான். கரிய மீசைக்கு கீழே இரத்த சிவப்பில் இதழ்கள் விரிந்து பற்கள் பளீரிட்டன. ''எனக்கு நினைவிருக்கிறது.''

''ஓ! யெஸ். எப்படி நினைவில்லாமல் போகும்? சாப்பிட வந்த இடத்தில் சம்பந்தமே இல்லாமல் சண்டை போட்டது எப்படி மறந்து போகும்?'' என்றாள் நிலஞ் சனா குற்றம் சாட்டும் குரலில்.

''நான் சண்டை போட காரணம் இருந்தது மிஸ்'' என்றான் தீவிரமான குரலில்.

''நிலஞ்சனா'' என்றாள் தன்னையறியாமல்.

''குட் நிலஞ்சனா. நான் சொல்வது ஒருவேளை நாடகத்தனமாய் தெரியலாம். ஆனால் மூணு வேளையும் முழுதாய் உண்ண உணவின்றி வறுமை கோட்டிற்கு கீழே இருப்போர் அதிகம் உள்ள நாட்டில் உணவை வீணடிப்பது பெரிய குற்றம் இல்லையா?''

''ஓகே'' என்றாள் நிலஞ்சனா வேகமாக தலைய சைத்து, ''நான் அன்று அந்த இரண்டாவது தோசையை முழுவதும் சாப்பிட்டிருந்தால் நாட்டில் எல்லோருக்கும் உணவு கிடைத்து விடுமா?''

''இது விதண்டாவாதம்'' என்றான் அவன். ''வெரி சிம்பிள் லாஜிக். நமக்கு தேவையானதை மட்டும் நாம் உபயோகிக்கப் பழகினால் எஞ்சியிருப்பவை தானாய் பற்றாகுறை உள்ளவர்களிடம் போய் சேர்ந்து விடும். அது மட்டுமல்ல. நாம் வீணாக்கும் ஒவ்வொரு துளி உணவையும், விதைத்து, பயிராக்கி, அறுவடை முடிந்து நம் கைக்கு வந்து சேர்வதற்கு ஒரு விவசாயி தன் வாழ்நாளையே அர்ப்பணிக்கிறான். நகரத்திலேயே வாழ்ந்து பழகியவர்களுக்கு இது புரியாது.''

''அப்படியானால் இங்கு காணிக்கை என்ற பெயரில் கோவில் முழுக்க உணவுப் பொருளை ஏன் வீணாக்கு கிறீர்கள்?'' என்றாள் நிலஞ்சனா அவனையே பார்த்த படி.

அவன் முகத்தில் ஒரு தயக்கம் தெரிந்தது. நிலஞ்சனா கேலியாகப் புன்னகைத்தாள். ''எல்லா விஷயத்திற்கும் லாஜிக் பார்க்க முடியாது சார். புரிகிறதா?''

அவன் எதையோ சொல்ல வந்து அமைதியானான். நிலஞ்சனா அவன் பதிலுக்காக காத்திருக்கையில் 'ஜெயின்.' என்று அவனை பெரியவர் அழைத்தார். அவனை யாருக்கோ அறிமுகம் செய்து வைத்தார். 'இவன் ஜெயின் அப்துல்லா. என மூத்த மகன். இளை யவன் உமர் அப்துல்லா, பெண்.''

நிலஞ்சனாவை ஒரு பார்வை பார்த்த பின்னர் ஜெயின் தந்தை அறிமுகப்படுத்தியவரிடம் பேசத் தொடங்கினான்.

''சலாம் அலேக்கும். எப்படியிருக்கிறீர்கள்?''

நிலஞ்சனாவுக்கு அவன் ஏன் தன் கேள்விக்கு பதில் சொல்லவில்லை என்பது புரிந்தது. புரிந்து கொண்ட பதில் முரண்பாடாய் மனதை உறுத்தியது. தன்னைத் தேடி வந்த ஷீத்தலுடன் கூல்ட்ரிங் கடையை நோக்கி நடக்கையில் மனம் ஏதா சிந்தனையில் உழன்றது.

''பையா சீக்கிரம் வா'' என்றான் ப்ரதீப் உபேந்திராவின் தோள்களைப் பற்றி உலுக்கி.

''இரண்டு நிமிடத்தில் வருகிறேன்'' என்றான் உபேந்திரா தன் வேலையில் கவனமாய்.

''லேட்டானால் என் ப்ரெண்ட்ஸ் எல்லோரும் போய் விடுவார்கள்'' ப்ரதீப் அவசரப்படுத்தினான்.

''நாம் க்ரவுண்டுக்குப் போய் விளையாட ஆரம்பித் ததும் போனவர்கள் எல்லோரும் வந்து விடுவார்கள் பாரேன்!''

''அதெல்லாம் வரமாட்டார்கள். வீட்டிற்குப் போனதும் ஹோம் ஒர்க் செய்யத் தொடங்கி விடுவார்கள்.''

''சந்தீப் ரெடியா என்று பார். கிளம்பலாம்.''

''அவன் அப்பவே ரெடி பையா.''

''கிரிக்கெட் பேட் எடுத்துக் கொண்டாயா?''

''இதோ பேட்.''

''நீ போய் அம்மாவிடம் சொல்லிக் கொண்டு வா. கிளம்பலாம்.''

''அம்மா, அப்பா, அத்தை எல்லோரிடமும் சொல்லி விட்டேன். நீ வருகிறாயா இல்லையா?'' ப்ரதீப் கால்களை உதைத்துக் கொண்டு அழத் தொடங்கவும் நிலஞ்சனாவுக்கு சிரிப்பு வந்தது. ப்ரதீப் கிட்டதட்ட அரை மணி நேரமாய் உபேந்திராவை விளையாட கூப்பிட்டுக் கொண்டிருக்கிறான். உபேந்திரா அவனுக்கு ஏதோ பதில் சொல்லியபடி ஹரிஹரனின் ஷூக்களுக்கு பாலீஷ் போட்டுக் கொண்டிருந்தான். வெள்ளி பாத் திரத்தை மெருகேற்றும் நேர்த்தியுடன் ஷூக்களை பளபளப்பாக்கியவன் ''பஹூத் அச்சா'' என்றான் முடிவில் திருப்தியுடன்.

உபேந்திரா எந்த வேலையையும் நேர்த்தியாக செய்தான். இராணுவ சிப்பாய்கள் பணியில் சேர்ந்த முதல் இரண்டு வருடங்கள் உயர் அதிகாரிகளுக்கு பணி செய்ய வேண்டும். அந்த அதிகாரிகளின் மனைவிகள் தரும் நன்னடத்தை சான்று ப்ரமோஷனுக்கு உதவும் என்பதால் பெரும்பாலும் சிப்பாய்கள் அதிகாரிகள் வீட்டு அடிமைகளாக மாறிப் போவார்கள்.

விதிவிலக்காக சிப்பாய்களை உதவியாளராக மதித்து நடத்தும் சில குடும்பங்களில் ஹரிஹரன் குடும்பமும் ஒன்று என்பதால் உபேந்திரா அவர்களிடம் உண்மையி லேயே பிரியமாக இருந்தான். தானாகவே வேலைகளை இழுத்துப் போட்டு செய்தான்.

''உபேந்திரா இங்கே வா'' என்றாள் நிலஞ்சனா.

''யெஸ் *தீதீ*'' என்று வந்தவன் கைகளில் கடலை மிட்டாய் பாக்கெட்டுகளை வைத்தாள். கைகளை திருப்பி

மணிக்கட்டில் சிவப்பு கயிறைக் கட்டவும் ''கோவிலுக்குப் போய் இருந்தீர்களா தீதீ?'' என்றான் உபேந்திரா.

''ம் நந்தி கோவில் போயிருந்தேன்.''

''அப்படியா? என் மனைவிக்கு நல்லபடியாக பிரசவம் நடந்தால் நானும் வருவதாக வேண்டிக் கொள்கிறேன்'' என்றான் உபேந்திரா.

''உன் மனைவி பிரசவித்ததும் நீ போகிற நூற்றி ஆறாவது கோவில் இதுவாக இருக்கும்'' என்றாள் நிலஞ்சனா கேலியாக.

''நான் அருகில் இல்லாத சமயம் வேறு என்ன செய்ய முடியும் தீதி?''

உபேந்திரா திருமணமான சில மாதங்களிலேயே மனைவியைப் பிரிந்து வந்து விட்டவன். அவள் கரு வுற்றதைக் கூட தொலைபேசி வழியே அறிந்து கொண் டான். வருட இறுதியில் கிடைக்கப் போகும் விடுமுறைக்கு இப்போதிருந்தே காத்திருக்கிறான். உபேந்திரா ப்ரதீப் புடன் விளையாடப் போய்விட, ஹரிஹரன் நிலஞ்ச னாவை அழைத்தான். நிலஞ்சனா போனபோது ஹரிஹர னுடன் நின்றிருந்த தன்வீர் ''ஹலோ'' என்றான் பெரிய சிரிப்புடன்.

''உங்களிடம் ஒரு கம்ப்ளைன்ட் செய்ய வந்திருக் கிறேன்'' என்றான் தீவிரமான குரலில்.

''யாரைப் பற்றி?'' என்றாள் நிலஞ்சனா வியப்புடன்.

''உன் டூ வீலர் பற்றி.''

''யார் மீதாவது மோதி விட்டதா என்ன? எனக்கு நினைவில்லையே!''

''மோதி இருந்தால் கூட பரவாயில்லை. இது அதை விட பெரிய விஷயம்.''

''என்ன விஷயம்?'' என்றாள் நிலஞ்சனா புரியாமல்.

''யெஸ் நிலஞ்சனா. இந்த ஸ்கூட்டர் வந்ததிலிருந்து உன்னைப் பார்க்கவே முடிவதில்லை.''

ஹரிஹரன் பெரிய சிரிப்புடன் தன்வீர்ரின் தோளைத் தட்டினான். ''திஸ் இஸ் யுவர் ஹோம் மை பாய். நீ எப்போது வேண்டுமானாலும் இங்கே வரலாம். எந்த கம்ப்ளைன்ட்டும் இல்லாமல்.''

''தேங்க்யூ'' என்றான் தன்வீர் தலை தாழ்த்தி.

''சஞ்சு எங்கள் இருவருக்கும் டின்னர் ஏற்பாடு செய்'' என்றான் ஹரிஹரன் தங்கையிடம்.

சுனிதா பிஸியாக இருக்கும் சமயங்களில் வேலையாட்களே சமையலையும் கவனித்துக் கொள்வார்கள் என்பதால் சாப்பாடு தயாராக இருந்தது. ஹாட் பேக்கிலிருந்த உணவுகளை பீங்கான் பாத்திரங்களில் எடுத்துக் கொண்ட நிலஞ்சனா அயர்ன் செய்த மேட்டை டேபிள் மீது விரித்தாள். கார்டனில் பிறந்த பூக்களையும் இலைகளையும் பூக்குவளையில் அழகாய் அடுக்கி டைனிங் டேபிள் நடுவே வைத்தாள் ட்ரை ப்ரூட். ஒரே மாதிரி நறுக்கப்பட்ட பழங்களை தனித்தனி கிண்ணங்களில் எடுத்து வைத்தவள் ப்ரீஸரிலிருந்த ஐஸ் க்யூப்களை ஐஸ் பாக்ஸில் எடுத்து வைத்தாள். விண்டோ ஷெல்ப்பிலிருந்த ட்ரிங்கை எடுத்து வைக்கையில் யோசித்தாள்.

காக்டெய்லுக்கு எந்த ட்ரிங்கை எதனுடன் சேர்க்க வேண்டும் சோடா எவ்வளவு மிக்ஸ் பண்ண வேண்டும்

என்பது புரியாமல் விழித்தாள். சுனிதா மிக நேர்த்தியா உணவு பரிமாறுவதை அவள் பலமுறை பார்த்திருக் கிறாள். உணவு என்பது பசிக்காக மட்டுமல்ல. இங்கு உணவு அருந்துவது ஒரு கலாச்சாரமாகவே கடைபிடிக் கப்படுகிறது. ஒரு சுமாரான உணவை கூட கலை உணர்வுடன் பரிமாறி, இதமாக உபசரித்து அதை மறைக்க முடியாத அனுபவமாக மாற்றிக் காட்டும் திறமை விருந்தளிப்பவர்களுக்கு இருக்க வேண்டும். அண்ணனிடம் கேட்கலாம் என்ற நிலஞ்சனா நினைக் கையில் ஹரிஹரனே உள்ளே வந்தான்.

''ட்ரிங்கை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். நீ மற்றதை கவனி சஞ்சு'' என்றான்.

காதை உறுத்தாத மெல்லிய இசையை ஸபீக்கர்களில் வழிய விட்டு நிலஞ்சனா விருந்துண்ண அழைத்தாள். நாப்கினை மடியில் விரித்துக் கொண்டு அமர்ந்த தன்வீர் ''எல்லாம் பக்காவாக தயார் செய்திருக்கிறாய்'' என்றான் வியப்புடன்.

நிலஞ்சனா இனிப்பை பரிமாற முற்பட்ட போது ''நீயும் எங்களுடன் கலந்து கொள்'' என்றார்கள் இரு வரும் ஒரே குரலில். வீட்டு பெண்களை ஸ்டூவர்டடாக்கி விட்டு தாங்கள் மட்டும் அமர்ந்து சாப்பிடும் பழக்கம் அங்கு இல்லை என்பதுடன் எந்த வீட்டிற்குச் சென் றாலும் வீட்டினருடன் சேர்ந்து உணவு அருந்துவதுதான் சம்பிரதாயம் என்பதால் நிலஞ்சனாவும் அவர்களுடன் அமர்ந்தாள். மூவரும் அளவாக சாப்பிட்டார்கள். அதிகம் பேசினார்கள். நிலஞ்சனாவையும் தங்கள் பேச்சிற்குள்

இழுக்க முயன்றார்கள். வெகுநேரம் நீண்ட அந்த இரவு உணவிலிருந்து எப்படி எழுந்து செல்வது என நிலஞ்சனா யோசிக்கையில் சுனிதா வந்து சேர்ந்தாள்.

''ஹாய் அண்ணி'' என்றபடி நிலஞ்சனா எழுந்து கொள்ள

''ஹாய்'' என்றாள் சுனிதா பொதுவாக.

''இந்த டின்னரை இனிதே முடித்து வைக்க எங்களுடன் ஷேர் பண்ணுங்கள்'' என்ற தன்வீர்ரின் வேண்டுகோளுக்கிணங்க அவன் பரிமாறிய ட்ரிங்கை ஒரு வாய் சுவைத்தவள் ''குட் காம்பினேஷன்'' என்றாள் பாராட்டாய்.

தன்வீர் எழுந்து நின்று அந்த பாராட்டிற்கும், டின் னருக்கும் முறைப்படி நன்றி தெரிவித்து விடைபெற் றான்.

நிலஞ்சனா தன் அறைக்கு வந்ததும் இன்னும் அஸைன் மெண்ட் முடிக்கவில்லை என்பது நினைவுக்கு வந்தது. லேப்டாப்பை ஆன் செய்கையில் கைகளில் ஒட்டிய வெல்ல பாகின் பிசுபிசுப்பு நந்தி கோவிலில் சந்தித்த ஜெயின் அப்துல்லாவை நினைவு படுத்தியது. ஒரு இந்து கோவிலின் வாயிலில் வியாபாரம் செய்யும் இஸ்லாமியன் அவர்களது மத நம்பிக்கைகளைப் பற்றிக் கருத்துக் கூற தயங்குவது இயல்பானதுதான். இன்று இந்தியர்களின் எல்லா சிந்தனைகளும், செயல்களும் பின்னால் மதம் ஒரு திரையாய் நிற்பதாகத் தோன்ற, நிலஞ்சனா ஒரு பெருமூச்சுடன் தன் வேலையைத் தொடர்ந்தாள்.

# 3

பகல் உணவு முடிந்து பிற்பகல் வேளையின் லேசான கிறக்கத்திலிருந்த பஷீர் அப்துல்லா வஹிதாவின் குரல் கேட்டு கண்களைத் திறந்தார்.

''டீ ஆறிப் போகுதுப்பா. டீ போட சொல்லிட்டு எடுத்துட்டு வர்றதுக்குள்ள இப்படித் தூங்கினால் எப்படி?''

''உன் அப்பாவுக்கு எந்தக் கவலையும் இல்லை. பெண்ணே அதனால்தான் எல்லா நேரமும் தூக்கம் வருகிறது'' என்றபடி உள்ளே வந்தவரைப் பார்த்ததும் பஷீர் உற்சாகமானார்.

''திம்மப்பா வா. வா. உன்னைப் பார்த்து நாளாயிற்றே!'' என்றார் ஆரவாரமாக.

''வாங்க மாமா. உங்களுக்கு டீ எடுத்து வருகிறேன்'' என வஹிதா சமையலறைக்குச் செல்லவும், ''டீயுடன் டிபனும் எடுத்து வா'' என குரல் கொடுத்தார் பஷீர்.

''வேண்டாம் வஹிதா. கௌரம்மா புருஷன் வந்திருக்கிறான். அதனால் உன் அத்தை பலமாக விருந்து சமைத்திருக்கிறாள். உன் அப்பாவுக்குப் பிடித்த மைசூர் போண்டாவும், ஜெயினுக்கு பிஸிபேலாபாத்தும் கொண்டு வந்திருக்கிறேன்'' திம்மப்பா கையிலிருந்த பாத்திரங்களை வஹிதாவிடம் கொடுக்கவும் அவள் முகத்தைத் திருப்பினாள்.

''எல்லாம் உங்க நண்பருக்கும் மருமகனுக்கும்தானே! எனக்கு எதுவுமில்லையே! பிறகு ஏன் என்னிடம் தரு கிறீர்கள்? நீங்களே அவர்களிடம் கொடுத்து விடுங்கள்.''

திம்மப்பா வாய் விட்டு சிரித்தார். ''உன்னை மறப் பேனா அம்மா? சிறு வயதில் நீ என் கையைப் பிடித்துக் கொண்டு போய் வாங்கித் தரச் சொல்லி அடம் பிடித்தது எனக்கு நன்றாய் நினைவிருக்கிறது. அதை உனக்காக வாங்கி வந்திருக்கிறேன்'' சுருட்டி வைத்திருந்த கவரை அவளிடம் கொடுத்தார் திம்மப்பா.

ஆர்வத்துடன் வாங்கிப் பிரித்த வஹிதா உள்ளே இருந்த லாலிபாப் மிட்டாய்களை பார்த்ததும் சிணுங்கி னாள்.

''மாமா நான் இன்னும் குழந்தை இல்லை தெரியுமா? ப்ளஸ் ஒன் படிக்கிறேன்.''

''நீ என்ன படித்தாலும் எனக்கு இன்னும் குழந்தை தான்'' என்றார் திம்மப்பா வாஞ்சையுடன்.

மடிவாலாவில் ஒரே தெருவில் வசித்த திம்மப்பாவும், பஷீர் அப்துல்லாவும் சிறு வயது முதலே நண்பர்கள். பஷீர் மனைவி ஷாகீரா வீட்டை விட்டு வெளியே சென்று பழக்கம் இல்லாதவள். கட்டுப்பாடான இஸ் லாமிய குடும்பத்தில் பிறந்து புர்க்காவுக்குள் வாழ்க் கையை குறுக்கிக் கொண்டவள். திம்மப்பாவினுடையது. பெரிய கூட்டுக் குடும்பம். அவர் மனைவி. எள்ளம்மா விற்கு நிற்க நேரமில்லாமல் வேலை இருந்து கொண்டே இருக்கும். எனவே இருவரின் மனைவிமார்களும் அதிகம் சந்தித்துக் கொள்வதில்லை என்றாலும் இரு வீட்டுக் குழந்தைகளும் தந்தையரின் நட்புக்கு பாலமாய்

இருந்தார்கள். திம்மப்பாவின் பெண் கௌரம்மா, மகன் கெம்பய்யா பஷீரின் பிள்ளைகள் ஜெயின், உமர், வஹிதா எல்லோரும் சிறு வயதிலிருந்து ஒனறாகவே விளையாடுவார்கள். வஹிதா எல்லோரையும் விட சிறியவர்கள் என்பதால் செல்லப் பெண் எல்லோருக்கும்.

மணக்க மணக்க மசாலா டீயுடன் வந்த ஷாகீரா ''வணக்கம் அண்ணா'' என்றபடி டீயைக் கொடுத்தாள்.

''நன்றாக இருக்கிறாயா அம்மா? ஹம்பி போய் இருந்தாய் என்று கேள்விப்பட்டேன். பீவிம்மா எப்படி இருக்கிறார்கள்?'' என்றார் திம்மப்பா.

''பீவிம்மாவுக்கு உடம்பு சுகமில்லைதான். இருந்தாலும் அங்கேயே இருக்கத்தான் விரும்புகிறார்கள்.''

''முடிகிறவரை இருக்கட்டும். அவர்களை வற்புறுத்த வேண்டாம்'' என்ற திம்மப்பா ஜெயினின் ரெஸ்டடாரண்ட் வேலை எல்லாம் எப்படிப் போகிறது?'' எனறார் பஷீரிடம்.

''நன்றாக போவதாகத்தான் சொல்கிறான். உனக்குத் தான் தெரியுமே. ஜெயின் அவ்வளவு சீக்கிரம் எதையும் வெளியில சொல்ல மாட்டான்.''

''நம் ஜெய்யின்னின் திறமையும், குணமும் யாருக்கு வரும்? அவனைப் பற்றி நீ கவலைப்படவே தேவையில்லை'' என்றார் திம்மப்பா.

''நீங்கள் சொல்வதுதான் சரி'' என்றாள் ஷாகீரா முகம மலர்ந்து மகனைப் பற்றி புகழ்ந்து பேசி விட்டாய் அல்லவா? இனி ஷாகீராவுக்கு வேறு எதுவும் தேவையில்லை'' என்றார் பஷீர் கேலியாக.

''தகுதியிருப்பதால் புகழ்கிறார்கள். இதில் உங்களுக்கு என்ன பிரச்சனை?'' என்றாள் ஷாகீரா.

''அதானே, உனக்கென்ன பிரச்சனை? ஒருவேளை பொறாமையாய் இருக்கும்'' என திம்மப்பாவும் சேர்ந்து கொள்ள,

''அண்ணனும் தங்கையும் தயவு செய்து என்னை விட்டு விடுங்கள்'' என்றார் பஷீர் பயந்தவராக.

கலகலத்த சிரிப்பிற்குப் பின் திம்மப்பா எழுந்து நின்றார்.

''நாம வாக்கிங் போய் ஒரு வாரம் ஆகிறது. உனக்கு இப்போது வேலை இருக்கிறதா பஷீர்?'' என்றார் பஷீர் அப்துல்லாவிடம்.

''வேலையாவது நீ எப்போது கூப்பிடுவாய் என்று காத்திருக்கிறேன்'' என்ற பஷீர் வஹிதாவிடம் கதவைத் தாழிடச் சொல்லிவிட்டு தெருவில் இறங்கி நடந்தார். நடக்க ஆரம்பித்ததும் குளிர் காற்று உடலைத் தழுவியது. இத்தனை மக்கள் பெருக்கத்திற்கும், வாகன புகைக்கும் மின் உபயோகப் பொருட்கள் உமிழும் வெப்பத்திற்கும் இடையே கூட நகரின் தட்ப வெப்பம் மிதமாய் இருப்பதில் பஷீர் அப்துல்லாவுக்கு எப்போதும் ஒரு பெருமிதம் உண்டு. அந்த பெருமிதத்துடன் மடிவாலா ஏரியை சுற்றி நடக்கையில் பார்க்கிற இடமெல்லாம் இளைஞர்களாய் இருந்தார்கள். டிராயரும் பனியனும் அணிந்த இளம் பெண்கள் தெருவோர தேநீர் விடுதிகளில் சிகரெட்டை புகைத்தபடி தங்கள் நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்தனர்.

''முதியவர்களின் சொர்க்கம் என்று முன்பு அழைக்கப்பட்ட நகரம் இன்று இளைஞர்களின் கூடாரமாகவே மாறிப் போய் விட்டது. பார்த்தாயா திம்மப்பா?'' என்றார் பஷீர்.

''அது மட்டுமல்ல. எங்கு பார்த்தாலும் மால்கள, க்ளப்கள், பார்கள் கூடி குடிப்பதும், கும்மாளம் போடுவதும் தேடி சாப்பிடுவதுமே இன்று பெங்களூருவின் கலாச்சாரமாக மாறி விட்டது'' என்றார் திம்மப்பா வருத்தத்துடன்.

''பெங்களூருவில் 800 க்ளப்கள் இருப்பதாகவும், பப்களின் தலைநகரம் என அழைக்கப்படுவதாகவும் உமர் சொன்னான்.''

''இதே பெங்களூரு தூய்மைக்காகவும், பசுமைக்காகவும் இந்திரா பிரியதர்ஷினி விருக்ஷ மித்ரா அவார்ட் வாங்கியிருக்கிறது. உனக்கு நினைவிருக்கிறதா பஷீர்?''

''ஏன் இல்லாமல்? நன்றாக நினைவிருக்கிறது. ஆனால் இன்று தகவல் தொழில் நுட்ப துறையில் நம் நகரம் மடமடவென வளர்ந்து நிற்கிறது. மொத்த இந்தியாவில் முப்பத்தி ஐந்து சதவீதம் ஐ.டி. கம்பெனிகள் இங்குதான் இருக்கின்றன. கர்நாடகாவின் தலைநகரில் இன்று கன்னடியர்கள் அதிகம் இல்லை. ஒரு நகரம் வளர்ச்சியடையும்போது கிடைக்கும் நன்மைகளை அனுபவிப்பது போல இதையும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்'' என்றார் பஷீர்.

ஏரியைச் சுற்றிலும் அமைத்து சீராக பராமரிக்கப் பட்டிருக்கும் தோட்டத்தில் நடக்கையில் இவர்களுக்கு பழக்கமான சிலர் பார்த்ததும் புன்னகைத்தார்கள்.

''சென்ற மாதம் என் அக்கா நபீஸா வீட்டிற்கு கொல் கட்டா போயிருந்தேன். நினைவிருக்கிறதா திம்மப்பா?'' என்றார் பஷீர் அப்துல்லா.

''நீ கொல்கத்தா போனதை மறந்தாலும் வாங்கி வந்த ரசகுல்லாவை மறக்க முடியுமா?'' என்றார் திம்மப்பா சிரித்தபடி.

''கொல்கத்தா முழுக்க ஒரே குப்பை. அழுக்கு. ஜன நெருக்கம். தெருவெல்லாம் பிச்சைக்காரர்கள். என்னால் அங்கே இருக்கவே முடியவில்லை. எப்போது திரும்பி வருவோம் என்று தவித்துப் போனேன். நபீஸா கூட கோபித்துக் கொண்டாள். என்ன இருந்தாலும் நம் ஊரைப் போல வருமா?'' என்றார் பஷீர் பிரியமாக.

''உண்மைதான். வளர்ச்சி அடைந்த நகரங்களுக்கு போட்டியாக அதிகரித்து வரும் குப்பை இங்கு இல்லை. தெருவில் குப்பையைக் கொட்டாமல் வீடுகளில் சேகரித்து வைப்பதை வீட்டிலேயே வந்து எடுத்துச் செல்வதால் தெரு சுத்தமாக இருக்கிறது. முக்கியமாய் இங்கு சேரிகள் அதிகம் இல்லை. மொத்த நகரத்தில் 10% தான் சேரிகள் என்றாலும் அவை சுததமாகவே இருக் கின்றன.''

அவர்கள் இருவரும் பேசியபடியே வீடு திரும்பிய போது திம்மப்பாவின் மனைவி எள்ளம்மா வீட்டு வாயிலில் நின்றிருந்தாள். என்னவென்று விசாரிக்கும் முன்பே படபடத்தாள். ''ஓசூர் ரோடு பக்கமாய் ஏதோ கலாட்டாவாம். கௌரம்மாவின் கணவர் அந்த பக்கம் ஏதோ வேலையாய் போய் இருக்கிறார். கௌரி பயந்து கொண்டிருக்கிறாள்.''

"என்ன கலாட்டா?" என்றார் பஷீர் அப்துல்லா.

"இங்கு என்ன நடக்கும்? எல்லாம் காவிரி நீர் பிரச்சனையாய் இருக்கும். மாநில தலைநகரில் அமர்ந்து கொண்டு அரசியல்வாதிகளால் சும்மா பொழுதை போக்க முடியுமா?" என்றார் திம்மப்பா.

"நீ மாப்பிள்ளையின் நம்பருக்கு போன் செய்தாயா எள்ளம்மா?" என்றார் பஷீர்.

"செய்தோம் அண்ணா. ரிங் போகிறது. அவர் போனை எடுக்கவில்லை."

"ஒருவேளை அவர் வண்டி ஓட்டிக் கொண்டிருக் கலாம். அல்லது சைலன்ட் மோடில் வைத்திருக்கலாம். நீ கவலைப்படாதே. உமரை அனுப்பி வைக்கலாம்" என்றார் பஷீர் அப்துல்லா. உமரை அழைத்து கௌர விம்மாவின் கணவனைப் பார்த்து வரும்படி அனுப்பி விட்டு நண்பர் குடும்பத்துக்கு சமாதானம் சொல்லத் தொடங்கினார்.

அந்த ஹாலில் எழுந்த கூக்குரல் அதிர வைக்கும் ம்யூஸிக்கை மீறி காதைக் கிழித்தது. திடீரென அணைந்து பளீரென்று எரிந்த விளக்குகள் கண்களை கூச வைத்தன. நிலஞ்சனா தன் வகுப்பு தோழர்கள் அனைவரும். அந்த உற்சாகத்தில் கரைந்து போய் விட்டதை கவனித்தாள். பாக்கியா தன் பிறந்த நாள் கொண்டாட்டத்திற்காக எல்லோரையும் அழைத்திருந்தாள். மதியம் தொடங்கிய பார்ட்டி மாலை வரை நீண்டது. குடிப்பதும், சிரிப்பதும், டான்ஸ் ஆடுவதுமாய் எல்லோரும் இருக்க நிலஞ்சனா வுக்கு போர் அடித்தது. சொல்லிக் கொண்டு கிளம்பலாம்

என்று பாக்கியாவை தேடுகையில் அவள் யாருடனோ பந்தயம் வைத்து மது அருந்திக் கொண்டிருந்தாள். இப்போது பார்க்கையில் இவள் பாக்கியாதானா என்று வியப்பாக இருந்தது. ஏனென்றால் நிலஞ்சனா பாக்கியாவின் வீட்டிற்கு போய் இருக்கிறாள். ஹரிஹரன் மைசூரைச் சுற்றிப் பார்ப்பதற்காக சுனிதாவையும், நிலஞ்சனாவையும் குழந்தைகளுடன் காரில் அனுப்பி வைத்திருந்தான். சாமுண்டேஸ்வரி கோவிலையும், அரண்மனையையும், லலித் மஹாலையும், டேம்மையும், விசாலமான சாலைகளையும், மரியாதை ஜனங்களையும் பார்க்கையில் மைசூர் இன்னும் தன் புராதனத்திலிருந்து மாறவில்லை என்பது புரிந்தது.

மதிய உணவிற்கு பாக்கியாவின் அழைப்பின் பேரில் அவர்கள் அவள் வீட்டிற்குப் போனார்கள். மைசூருவுக்கு ஏற்றாற்போல் பாக்கியாவின் வீடும் வாசலில் செம்மண் கரை கோலத்துடன், கொல்லையில் கொய்யா, தென்னை மரங்களும் கீரை பாத்திகளுமாய் பழமை மாறாமல் இருந்தது. அவள் அப்பாவும், அப்பாவும் மிகவும் மரி யாதையாய் உபசரித்தார்கள். பாக்கியாவின் அம்மா கன்னட கடவுள் படங்களில் வரும் பெண்களைப் போலி ருந்தாள். பாந்தமாய் காட்டன் புடவையும், குங்குமம் துலங்கும் முகமும், சுடர் விடும் வைர மூக்குத்தியுமாய் இருந்தவளிடம் ''ஆன்டி நீங்கள் மிகவும் அழகாய் இருக்கிறீர்கள்'' என்றாள் நிலஞ்சனா.

புரிந்து கொண்ட சிரிப்புடன் ''எனக்கு கன்னடம் தெரியாது'' என்றாள் அவள் அம்மா கன்னடத்தில்.

''அதனால் என்ன, உங்களுக்கு அருமையாக சமைக்கத் தெரிகிறதே!'' என்றபடி நெய்மணக்கும் ஹோஸிகேவை

அண்ணியும் அவளும் ஒரு பிடி பிடித்தார்கள். கிளம்புகையில் பாக்கியாவின் அம்மா அண்ணிக்கும் அவளுக்கும் மஞ்சள் குங்குமத்துடன் இரவிக்கை துண்டை பரிசளித்தாள். அடிக்கடி வர வேண்டும் என்ற கோரிக்கையுடன் அவள் அப்பா கார் வரை வந்து வழியனுப்பினார்.

இப்போது பாக்கியாவை அவள் பெற்றோர்கள் பார்க்க நேர்ந்தால் அவர்களுக்கு எத்தகைய அதிர்ச்சி ஏற்படக் கூடும்?'' நீ மைசூர் பெண்ணா என்று சந்தேகமாக இருக்கிறது'' என அவள் ஒருமுறை சொன்னபோது பாக்கியம் சொன்னாள், ''உன்னைப் பார்க்கும்போதும் நீ வடக்கிலேயே வளர்ந்த பெண் என்று நம்ப முடிய வில்லை. ஆர்மி கேம்பஸில் வளர்ந்த பெண்ணா என்று சந்தேகமாக இருக்கிறது'' என்றாள்.

''கேம்பஸ்சில் வளர்ந்த பெண்கள் இப்படி எல்லாம் இருப்பார்கள் என்று உனக்கு யார் சொன்னார்கள்?''

''யாரும் சொல்லவில்லை. பொதுவாக உங்கள் குடும்பங்களில் பெண்களை சுதந்திரமாக வளர்ப்பதைப் பார்த்திருக்கிறேன்.''

''சுதந்திரமாக வளர்க்கப் படுவதன் காரணம் எங்கள் பெற்றோரின் பணி நிமித்தமாய் கடுமையான சூழலில வசிக்க நேரிடும் போது ஏற்படும் இடர்ப்பாடுகளை எதிர்கொள்வதற்காகத்தான் டீன் ஏஜ்ஜிலேயே சிலர் பார்ட்டி பண்ண பழகிக் கொள்வதும் உண்டுதான். ஆர்மி தவிர வேறு ஆட்களே இல்லாத இடத்தில், பனி பொழி யும் மலைப் பகுதிகளிலும், வெயில் சுட்டெரிக்கும் இடங்களிலும், டி.வி. கூட இல்லாமல் வசிக்க

நேரும்போது அவர்கள் பொழுதை கழிக்க என்னதான் செய்ய முடியும்? ஆண்களை, பொறுத்தவரை இராணு வத்தில் ஒவ்வொரு ரெஜிமென்ட்டும் ஒரு குடும்பம் போலத்தான். தலைமை பொறுப்பில் இருக்கும் ஒருவர் தன் டீமில் கடைசி நிலையில் இருப்பவர் வரை தெரிந்து கொள்ளவும், அவர்களை உற்சாகப் படுத்தவும் பார்ட்டி அவசியமானது. பிரிட்டிஷ் காலத்திலிருந்து பின்பற்றப் படும் இராணுவ கலாச்சாரம் இது'' என்றாள் நிலஞ்சனா.

இப்போது பார்க்கையில் சிவிலியன்களின் வாழ்க்கை மிக இலகுவானதாக தோன்றுகிறது. எந்த நேரமும் தலைக்கு மேல் மரணத்தை சுமந்து கொண்டு ஓட வேண்டியதில்லை. நெருக்கமான நண்பர்கள் இல் லாமல், வீட்டு ஆண்கள் எல்லையில் இருக்கையில் தினமும் கடவுளை வேண்டிக் கொண்டு ஒருவேளை அவர்களுக்கு எதாவது நேர்ந்தாலும் துக்கத்தை அடக்கிக் கொண்டு நாட்டுக்காக உயிர் கொடுத்தோம் என்ற போலி கர்வத்துடன் குழந்தைகளின் பாரம் சுமந்து, எஞ்சி யுள்ள வாழ்நாளை வெறுமையுடன் கழிக்க வேண்டிய தில்லை. மேலும்... நிலஞ்சனா தலையை உலுக்கிக் கொண்டாள். 'என்னவாயிற்று எனக்கு? இவர்களின் உற்சாகத்தைப் பார்த்து நான் ஏன் இவ்வளவு கலவரப்பட வேண்டும்?'

நிலஞ்சனா பாக்கியாவை உலுக்கி அவளிடம் சொல் லிக் கொண்டு வெளியே வந்து பார்க்கிங் பகுதியி லிருந்து ஸ்கூட்டரை வெளியே எடுத்தாள். பாக்கியா வின் பிறந்த நாள் பார்ட்டிக்கு போக வேண்டும் என்ற போது ''காரிலேயே போ. தன்வீர் ப்ரீயாக இருக்கிறானா என்று கேட்கிறேன்'' என்றாள்.

''தன்வீர் நம் டிரைவர் இல்லை அண்ணி. எதற்காகவும் ஏன் அவரை தொல்லைப்படுத்த வேண்டும்?'' என அண்ணியிடம் மறுத்துவிட்டு கிளம்பியிருந்தாள். கூகுள் மேப்பை ஆன் செய்து வண்டியை செலுத்திச் செல் கையில் சற்று தூரத்தில் ஒரு கும்பல் அவள் ஸ்கூட்டியை நிறுத்தியது. அவர்கள் கையிலிருந்த கொடியில் ஜிலேபி பிழிந்தாற்பேல் கன்னட எழுத்துகள் தெரிந்தன. ஏதே னும் அரசியல் கட்சியாக இருக்கக் கூடும். டொனேஷன் கேட்கிறார்கள் போலும் என்ற எண்ணத்தில் நிலஞ்சனா ஸ்கூட்டரிலிருந்து ஒரு காலை நிலத்தில் ஊன்றினாள்.

''உங்களுக்கு என்ன வேண்டும்? டொனேஷனா?'' என்றாள் ஆங்கிலத்தில்.

''தோடா. நிறைய பணம் இருக்கும் போலிருக்கே! சரி ஒரு பத்து லட்சம் கொடு'' என்றான் ஒருவன் கன் னடத்தில்.

''என்ன?'' என்றாள் நிலஞ்சனா புரியாமல்.

''நீனு எல்லி ஹேரத்தியா? நிம்ம ஊரு யாவுது?'' என் றார்கள் தொடர்ந்து.

நிலஞ்சனா விழிக்கவும். ''கன்னட தல்லி மாத்த னாடு'' என்றான் ஒருவன்.

நிலஞ்சனா ஏதோ கேட்க வாயைத் திறக்க, ''நிலா, இங்கே என்ன செய்கிறாய்? உனக்காக அங்கே வெகு நேரமாய் காத்துக் கொண்டிருக்கிறேன்'' என கன்ன டத்தில் அவளிடம் பேசியபடியே ஜெயின் அவர்கள் அருகில் வந்தான். நிலஞ்சனா அசையாமல் அவனையே பார்த்தபடி நிற்க, ''உனக்கு இவளைத் தெரியுமா?'' என்றான் ஒருவன்.

''ம். என் அப்பா வழியில் சொந்தம். ஊரிலிருந்து வந்திருக்கிறாள்'' என்றவன் ''வா போகலாம்'' என்றான்.

அவளிடம் சகஜமாக.

அதற்குள் ஒரு போர்டு கார் அவர்களை கடக்கவே கும்பலில் ஒருவன் கத்தினான். ''தமிழ்நாடு ரிஜிஸ்ட்ரேஷன்!'' கும்பல் சரசரவென்று காரை சுற்றி வளைத்தது. காரின் கண்ணாடி ஜன்னல்கள் உடைபட்டன. டிரைவர் சீட்டில் இருந்தவன் இறங்கி ஓட கார் அடித்து நொறுக்கப்பட்டது. நிலஞ்சனா வேகமாக ஸ்கூட்டரைக் கிளப்ப முயற்சித்தாள். பதட்டத்தில் கை கால்கள் ஒத்துழைக்க மறுத்தன.

''நீ பின்னால் அமர்ந்து கொள்'' என்ற ஜெயின் அவளிடம் சாவியை வாங்கி வண்டியைக் கிளப்பினான். அவர்கள் செல்லும் வழியில் தமிழ் பெயர் கொண்ட கடைகளும், வண்டிகளும் அடித்து நொறுக்கப்பட்டிருந்தன. ஐ.டி. கம்பெனிகளின் கண்ணாடி சுவர்கள் தார்பாயால் மூடப்பட்டிருந்தன. தமிழ்நாட்டிலிருந்த வந்த பஸ்கள் பாதி வழியில் நிறுத்தப்பட்டதால் கை குழந்தைகளுடன் பெண்களும், பெரியவர்களும், பெரிய மூட்டைகளுடன் ஆண்களும் பரிதவித்தபடி கூட்டமாய் நின்றிருந்தார்கள்.

''என்ன நடக்கிறது இங்கே?'' என்றாள் நிலஞ்சனா வியப்புடன்.

''எப்போதும் நடப்பதுதான். ஒரு நதியால் நிலவும் கலவரங்கள். காவிரியின் குறுக்கே அணை கட்டியே தீருவேன் என்று கர்நாடகாவும், கட்டக்கூடாது என்று தமிழ்நாடும் சண்டை போட்டுக் கொள்கின்றன.''

''கர்நாடகா ஏன் தன் உபரி நீரை அடுத்த மாநிலத்துடன் பகிர்ந்து கொள்ளக் கூடாது.''

''காவிரி என்பது வற்றாத ஜீவநதி அல்ல. மழை காலத்தில் பெருக்கெடுக்கும். கோடையில் குறையத் தொடங்கும். கர்நாடகா என்பது பெங்களூரு மட்டுமல்ல. நீர் பற்றாக்குறையால் விவசாயம் பொய்த்துப் போய் விவசாயிகள் தற்கொலை செய்து கொண்ட கூம்கூர் மாதிரியான நிறைய கிராமங்கள் இங்கு உண்டு. தங்கள் மாநிலத்தில் உற்பத்தியான நீரின் அளவு தங்களுக்கே போறாத போது மற்ற மாநிலங்களுக்கு எப்படித் தர முடியும் என்பது ஒரு சராசரி விவசாயியின் வாதம்.''

''ஆனால் ஒரு மாநிலத்தில் உற்பத்தியாகி அதே மாநிலத்தில் கடலில் கலக்கும் ஆறு அந்த மாநிலத்துக்கு தான் சொந்தம். இரு மாநிலங்களுக்கு இடையே ஓடும் ஆற்றின் மீது மத்திய அரசுக்குதான் உரிமை உண்டு என்று படித்திருக்கிறேன். மேற்கு வங்கத்தில் கங்கை நதி இரண்டாகப் பிரிந்து பங்களாதேஷுக்கும், கொல்கத்தாவிற்கும் செல்கிறது. சிந்து, ஜீலம், செனாப் ஆகிய மூன்று நதிகளும் இந்திய பகுதியில் உற்பத்தியாகி ஒப்பந்த அடிப்படையில் பாகிஸ்தானுக்கு செல்கிறது. பக்கத்து நாடுகளே பிரச்சனை இன்றி நீரை பகிர்ந்து கொள்ளும்போது சொந்த நாட்டிற்குள் நாம் ஏன் அடித்துக் கொள்ள வேண்டும்?''

''நாடுகள் மனிதனால் உருவாக்கப்பட்டவை. நதிகள் இயற்கையால் படைக்கப்பட்டவை. இயற்கை என்பது தேசம், மொழி எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டது என்று மனிதர்கள் உணர வேண்டும்.''

பேச்சு சுவாரஸ்யத்தில் மூழ்கிப் போன நிலஞ்சனா கிரீன் வேலி ரெஸ்டாரண்ட்டின் முன் வண்டி நின்றதும்,

''இது உன்னுடைய ரெஸ்டாரண்ட் இல்லையா. இங்கே ஏன் வந்திருக்கிறாய்?''

''ஏனென்றால் உன் வீடு எனக்குத் தெரியாது.''

''நீ ஏன் கேட்கவில்லை?''

''நீ ஏன் சொல்லவில்லை?''

எப்படி மறந்தேன் என அவள் யோசிக்கையில் ''உள்ளே வா நிலஞ்சனா. ஒரு காபி குடித்த பின் போகலாம்'' என்றான் ஜெயின்.

நிலஞ்சனா தயங்கவும் ''ரொம்ப யோசிக்காதே. உன்னையும், உன் ஸ்கூட்டரையும் முழுதாய் காப்பாற்றி இருக்கிறேன். அதற்காக நீ ஒரு ட்ரீட்டே தரலாம்'' என்றான் ஜெயின் புன்னகையுடன்.

''ரொம்ப அலட்டாதே. எப்படியும் என் ஸ்கூட்டர் ஜெய்ப்பூர் ரெஜிஸ்ட்ரேஷன்.''

''ஆனால் நீ தமிழ் ஆயிற்றே!''

''அது அவர்களுக்கு தெரியாதே!''

''நீ பேசிய ஆங்கிலம் அவர்களுக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் பேசிய கன்னடம் உனக்குப் புரியவில்லை. எனவே சில நிமிடங்களில் இயல்பாக தமிழுக்குத் தாவியிருப்பாய் நான் மட்டும் வராமல் இருந்தால்...''

''அடேயப்பா! எவ்வளவு பெரிய உதவி? இதற்காகவே நூறு காபி குடிக்கலாம்.''

''நூறு காபி ப்ரீயாக கொடுக்க என்னால் முடியாது. மரியாதைக்கு ஒரு காபி. அவ்வளவுதான்.''

''ஒரு பெண்ணுக்கு ப்ரீயாக கொடுக்க யோசிக்கும் முதல் ஆண் நீயாகத்தான் இருப்பாய்.''

நிலஞ்சனா சிரித்தபடியே உள்ளே சென்று டேபிளில் அமர்ந்தாள். ஜெயின் பணியாளரிடம் காபிக்கு சொல்லி விட்டு வந்தான்.

''இந்த இடம் மிகவும் அழகாக இருக்கிறது. முதன் முறை பார்த்ததுமே எனக்குப் பிடித்துப் போனது'' என்றாள். நிலஞ்சனா தங்களைச் சுற்றி விரிந்திருக்கும் பசுமையிலிருந்து கண்களை விலக்காமல்.

நிலஞ்சனா அப்போது. ஒரு சாயம் போன டெனிம் பேன்ட்டும், ஸ்லீவ்லெஸ் டாப்பும் அணிந்திருந்தாள். அலை அலையாய் புரண்ட முடி காற்றில் பறந்து முகத்தில் மோதியது. நாசூக்காய் அதை விலக்கியபடி ரோஜா நிற இதழ்கள் விரிந்து புன்னகைக்கையில் இவள் சராசரி பெண் இல்லை என்று தோன்றியது. ஜெயின் னுக்கு. பெங்களூருவின் தெருக்களில் தினமும் பார்க்கும் அழகான பெண்களில் ஒருத்தி இல்லை இவள். சம்திங் ஸ்பெஷல்.

நிலஞ்சனாவின் போன் ஒலித்தது. ''நான் பாதுகாப் பாய் இருக்கிறேன் அண்ணா. இன்னும் அரை மணியில் வீட்டில் இருப்பேன்'' என்றவள் டேபிள் மீதிருந்த தோசையைப் பார்த்ததும் ''மைகாட்'' என்றாள். ''காபிக்கு அழைத்தால் காபி மட்டும்தான் தருவாயா? எனக்கு மிகவும் பசிக்கிறது. அதுவுமில்லாமல் இங்குள்ள மசால் தோசைக்கு நான் பேன் ஆகிவிட்டேன். அதை சாப் பிடாமல் நான் போகப் போவதில்லை.''

''நீ பார்ட்டியில் சாப்பிட்டிருப்பாய் என்று நினைத்தேன்'' என்ற ஜெயின் தோசையை வரவழைத்துக் கொடுத்தான்.

''ம்... வாவ்... சூப்பர்ப்...'' என அவள் சாப்பிடுவது பார்க்க சுவாரஸ்யமாக இருந்தது. டேபிள் மீது கைகளை ஊன்றியபடி அவன் தன்னைப் பார்ப்பதை கவனித்தவள் சொன்னாள். ''உன் மனதில் என்ன நினைக்கிறாய் என்று எனக்குத் தெரியும் ஜெயின்.''

''என்ன தெரியும்?'' என்றான் ஜெயின் வியப்புடன்.

''ஒரு காபி ப்ரீன்னு சொன்னால் இவ டிபனே ப்ரீயா சாப்பிடறான்னுதானே!''

''ஓ! நீ இத்தனை புத்திசாலி என்று நான் நினைக்கவே இல்லை. என் மனதிலிருப்பதை அப்படியே சொல்லி விட்டாய். எதற்கும் ஜாக்கிரதையாய் இரு நிலஞ்சனா. இது போன்ற அறிவாளிகளை எங்கள் ஊரால் தாங்க முடியாது'' என்றான் கவலையுடன்.

''ஹா... ஹா... பெரிய ஜோக்'' நிலஞ்சனா சிரிக்க முயற்சிக்க புரை ஏறியது.

ஜெயின் வலிக்காமல் அவள் தலையில் தட்டினான். ''இதற்காகத்தான் சாப்பிடும் போது பேசக் கூடாது என்பார்கள். அட்லீஸ்ட் உண்மையையாவது பேச வேண்டும்'' அவனை முறைத்தபடி காபியை குடித்து முடிக்கையில் நினைவு வந்தவளாகக் கேட்டாள். ''கலவரம் நடந்த இடத்திற்கு நீ எப்படி வந்தாய்?''

ஜெயின் சிரித்தான். ''ஆக்சுவலாய் என்னைப் பார்த்ததும் நீ முதலில் இந்த கேள்வியைத்தான் கேட்டிருக்க வேண்டும்.''

உண்மைதான். ஜெயினை பார்த்ததும் பல நாள் பழகிய தோரணையில் எந்தக் கேள்வியும் கேட்காமல் அவன் பின்னே அமர்ந்து கொண்டு சகஜமாக பேசியபடி பயணித்ததை இப்போது யோசிக்கையில் வியப்பாக இருந்தது.

''ஒரு நண்பனுடன் அந்த வழியாய் பைக்கில் வந்து கொண்டிருந்தேன். உன்னைப் பார்த்ததும் அவனைப் போகச் சொல்லிவிட்டு உன்னிடம் வந்தேன். ஆமாம், பார்ட்டிக்கு உன்னுடன் யாரும் வரவில்லையா? தனி யாகவா போனாய்?'' என்றான் ஜெயின்.

''எங்கள் வகுப்பில் எல்லோரும் போனோம். பார்ட்டி தொடங்கியதும் யாரையும் யாருக்கும் தெரியவில்லை. என்னால் ரொம்ப நேரம் இருக்க முடியவில்லை. கிளம்பி விட்டேன்.''

''பெங்களூரு பார்ட்டி நகரம். இங்கு அறுபது ஆயிரம் பெரும் செல்வந்தர்கள் இருக்கிறார்கள். இந்தியாவின் நான்காவது பெரிய துரித நுகர்வு பொருள் சந்தையாக பெங்களூரு இருக்கிறது. பெரிய சொத்துக்கள் கொண்ட தனிநபர் எண்ணிக்கையில் இந்தியாவில் மூன்றாவது இடத்தில் இருக்கிறது.''

''இருக்கலாம். பெங்களூரு செல்வம் கொழிக்கும் அழகான நகரமாக இருக்கலாம். இராஜஸ்தான் இதற்கு நேர்மாறானது. பாலைவனப் பகுதி என்பதால் அனல் வீசும் கடுங் குளிர் இருக்கும். மழையின்மை, குடிநீர் பற்றாகுறை அதனால் ஏற்படும் சமூக ஏற்றத்தாழ்வுகள் எல்லாமும் இருந்தாலும் அது உயிரோட்டமுள்ள ஒரு நகரம், மன்னர் காலத்து கோட்டைகளும்

அரண்மனைகளுமாய் பழமையிலிருந்து முழுவதும் மாறாத உயிர்துடிப்புடன் இருக்கும்.

ஒரு சம்பிரதாயமான இராஜஸ்தானிய உணவில் குறைந்தது இருபது ஐட்டங்களாவது இருக்கும். கண்ணை பறிக்கும் நிறங்களில் உடையணிந்த மக்களும், ரசனை மிகுந்த அவர்களின் கை வேலைப்பாடு நிறைந்த பொருட்களும் மிக அழகானவை. ஐ லவ் இராஜஸ்தான்.''

''யெஸ். நான் இராஜஸ்தானில் சுற்றி இருக்கிறேன்'' என்ற ஜெயின் கேட்டான். ''இப்போதாவது உன் வீடு எங்கே இருக்கிறது என்று சொல்கிறாயா? அல்லது அடுத்தவேளை உணவுக்கு ஆர்டர் கொடுக்கட்டுமா?''

விளையாட்டாகக் கேட்கப்பட்டாலும் அந்தக் கேள்வி நிலஞ்சனாவைக் குத்தியது. ''இங்கிருந்து என் வீட்டிற்குப் போக எனக்கு வழி தெரியும். இது என்னுடைய உணவிற்காக என பர்ஸிசிலிருந்த பணத்தை எண்ணிப் பாராமல் டேபிளில் வைத்து விட்டு எழுந்தாள்.

''உன் வீட்டிற்குப் போக உனக்கு வழி தெரியும் தான். ஆனால் இன்று நிலைமை வழக்கம் போல இல்லை'' என்றான் ஜெயின்.

''அதைப் பற்றி நீ கவலைப்படத் தேவையில்லை. உதவி தேவை என்றால் இருக்கும் இடத்திற்கே வர வழைத்துக் கொள்ள எனக்குத் தெரியும்.''

இன்னும் சற்று நேரத்தில் வீடு போய் சேரவில்லை எனில் அண்ணன் அவளைத் தேடி கிளம்பி விடக் கூடும் என அவள் யோசிக்கையில் ஜெயின் சொன்னான்.

''உன் பாய்ப்ரண்ட்டை நான் மறந்து போனேன். இன்று ஏன் அவன் உன்னுடன் வரவில்லை?''

''அதை உன்னிடம் சொல்ல வேண்டிய அவசிய மில்லை'' நிலஞ்சனா வேகமாய் நடந்து போய் ஸ்கூட் டரை எடுக்க முயன்றாள். ஜெயின் சடாரென அவள் கையிலிருந்த பர்ஸை பிடுங்கினான்.

''ஜெயின் என் பர்ஸை கொடு.''

''முடியாது.''

''நீ செய்வது கொஞ்சமும் சரியல்ல.''

''அதைப் பற்றி நீ எனக்குச் சொல்ல வேண்டிய தில்லை.''

''பர்ஸ் இல்லாமல் என்னால் போக முடியாது.''

''போகாதே!''

ஜெயின் பர்ஸைத் திறக்கவும், நிலஞ்சனா அவன் கையிலிருந்த பர்ஸை பிடுங்க முயன்றாள். பர்ஸ் அவள் கைக்குக் கிடைக்காமல் பின்னால் நகர்ந்த ஜெயின் பர்ஸை திறந்த அவள் டேபிள் மீது வைத்திருந்த பணத்தை அதற்குள் திணித்தான். பின் அவளிடம் திருப்பிக் கொடுத்தவன் சொன்னான். ''வழியில் பார்ப் பவர்களை எல்லாம் அழைத்து வந்து உணவு பரிமாறி பணம் சம்பாதிக்கும் நிலையில் இந்த ரெஸ்டாரண்ட் இல்லை. உன்னை அழைத்து வந்தது நான்தான். எனவே உன் பில் தொகையை நீயே வைத்துக் கொள்'' என்றவன் அவள் பதிலை எதிர்பாராது திரும்பி நடந்தான்.

இரவு அண்ணனும், அண்ணியும் டி.வி.யில் மூழ்கி யிருக்க, அதில் கலந்து கொள்ளாமல் நிலஞ்சனா ஒரு வாரப் பத்திரிகையை புரட்டினாள். சற்று நேரத்தில் ஹாலில் இருந்த போன் ஒலிக்கவே ஹரிஹரன் போனை

எடுத்தான். போனில் பேசியவன் திரும்பி வந்து நிலஞ்சனாவிடம் ''அம்மாதான் பேசினார்கள் சஞ்சு'' என்றான்.

பேசாமல் தலையசைத்தவளிடம் ''நீ அவர்களுடன் சரியாகப் பேசுவதே இல்லை போலிருக்கிறதே!'' என்றான் குற்றம் சாட்டும் குரலில்.

''வாரத்தில் ஒரு நாள் அப்பாவிடமும், அம்மா விடமும் நலம் விசாரிக்கத்தான் செய்கிறேன் அண்ணா.''

''பெற்றோரிடம் பேச நலம் விசாரிப்பைத் தவிர உனக்கு எதுவுமே இல்லையா சஞ்சு?''

''இல்லை'' என்றாள் நிலஞ்சனா தீர்மானமாக. ''பரஸ் பரம் நன்றாக இருக்கிறோம் என்பதைத் தவிர தெரிந்து கொள்ளவும், தெரிவிக்கவும் என்னிடம் எதுவும் இல்லை.''

''சஞ்சு, இன்று நமக்கு பெரிதாகத் தெரியும். எதுவுமே காலப் போக்கில் மங்கி மறைந்து விடுவதுதான் இயல்பு. ஏமாற்றமும், துக்கமும், வருத்தமும் எல்லோர் வாழ் விலும் ஏதோ ஒரு உருவில் வந்தே தீரும். அதற்காக யாரும் தேங்கி நிற்பதில்லை.''

.............

''அப்பாவும், அம்மாவும் எப்போதும் உன்னைப் பற்றியே நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் சஞ்சனா.''

டி.வி.யை அணைத்துவிட்டு விட்டு வந்த சுனிதா விடம் ''அண்ணி நீ என்னிடம் எதாவது சொல்ல வேண் டுமா?'' என்றாள் நிலஞ்சனா.

''எதற்காக கேட்கிறாய்?'' என்றாள் சுனிதா புரியாமல்.

''நீ சொல்ல வேண்டியதையும் இப்போதே சொல்லி விட்டால் நான் தூங்கப் போய் விடுவேன். திரும்ப நிற்க வைத்து லெக்சர் கொடுக்க வேண்டாம் இல்லையா?''

ஹரிஹரனின் முகம் இறுக்கமானது. ''ஒருவர் பேசகையில் அதை அலட்சியப் படுத்துவது அவர்களை அவமானப் படுத்துவதற்குச் சமம். நம் பெற்றோர் இதை நமக்குக் கற்றுத் தரவில்லை சஞ்சனா'' என்றான் கடினமான குரலில்.

ஒரு நிமிட அமைதிக்குப் பின் நிலஞ்சனா சொன்னாள். ''உன்னை அவமானம் செய்வதும் என்னை நானே அவமதித்துக் கொள்வதும் ஒன்றுதான் அண்ணா. உன்மையில் இன்று எனக்கு மிகவும் களைப்பாக இருக்கிறது.''

தங்கையின் முகத்தைப் பார்த்த ஹரிஹரன் ''உனக்கு உடம்புக்கு ஒன்றுமில்லையே?'' என்றான் கவலையுடன். நிலஞ்சனா 'இல்லை' என தலையசைத்தாள். ''இன்று பார்ட்டி முடிந்து வரும்போது கலவரம் என்று சுற்றி அலைந்து வந்ததால் இருக்கும் என்று நினைக்கிறேன்'' என்றவள் அவர்கள் மேற்கொண்டு பேசுமுன் அங்கிருந்து நகர்ந்தாள்.

காலையில் எழுந்து கொள்கையிலேயே அன்று பள்ளி கல்லூரிகள் விடுமுறை என்ற தகவல் வந்தது. கர்நாடகா முழுக்க பந்த் என்றாள் சுனிதா. ''ஹே ஜாலி'' என குழந்தைகள் குதிக்க ''போர்'' என்றாள் நிலஞ்சனா.

ஹைட் அன்ட் சீக் விளையாட நிலஞ்சனாவை அழைத்தான் சந்தீப்.

''எதிர்வீட்டு பிங்கி, கோமல் இருவரையும் அழைத்து வாருங்கள். சேர்ந்து விளையாடலாம்'' என்றாள் நிலஞ்சனா.

''பத்மஜா ஆன்ட்டி வீட்டு பப்புவையும் அழைத்து வருகிறோம்'' என இருவரும் கிளம்பிப் போனார்கள்.

''சஞ்சு இன்று இரவு சினிமா போகலாமா?'' என்றாள் சுனிதா.

''இன்று பந்த் இல்லையா அண்ணி?''

''பந்த் மாலை வரைதான். இரவு ஷோ உண்டாம். நான் தியேட்டரில் போய் படம் பார்த்து வெகு நாட்கள் ஆகி விட்டது.''

நிலஞ்சனாவுக்கு அண்ணியைப் பார்க்க பாவமாக இருந்தது. இராணுவத்தில் இரண்டு வருடங்கள் பீல்ட் ஒர்க் எனப்படும் சென்சிட்டிவான பகுதிகளிலும், இரண்டு வருடங்கள் பீஸ் ஸ்டேஷன் எனப்படும் அதிகம் ஆபத்தில்லாத பதிகளிலும் மாறி மாறி பணிபுரிய வேண்டும். பீஸ் ஸ்டேஷனில் பணி செய்யும்போது மட்டுமே குடும்பத்துடன் தங்கி இருக்க முடியும். அதிலும் ஊரை விட்டு தள்ளி இருக்கும் கேம்ப்களில் வசிக்கும்போது எந்த பொழுது போக்கும் இருக்காது. எனவே ''அண்ணி இந்த இரண்டு வருடமும் நீ லக்கி தான்'' என்றாள் நிலஞ்சனா. ''நிறைய படம் பார்க்கலாம். நிறைய ஷாப்பிங் செய்யலாம். நன்றாக ஊர் சுற்றலாம். அண்ணனிடம் நிறைய திட்டு வாங்கலாம்.''

''ஆமாம். இதை எல்லாம் நாம் இருவரும் சேர்ந்தே செய்யலாம்'' என்றாள் சுனிதா.

ஹரிஹரனின் மனைவியானதிலிருந்து சுனிதா தன் முழு அர்ப்பணிப்பையும் கணவனின் வேலைக்கு, குடும்பத்திற்கும் அளித்திருக்கிறாள் என்ற நினைவில் மனம் நெகிழ, ''சரி அண்ணி'' என்றாள் நிலஞ்சனா.

சந்தீப்பும், ப்ரதீப்பும் கேம்பஸ்சிலிருந்த குழந்தை களை எல்லாம் விளையாட அழைத்து வந்து விட்டார்கள். பப்புவின் கைகளைப் பிடித்தபடி கூடவே வந்த பத்மஜா ''ஜாக்கிரதையாக விளையாடுங்கள். உங்கள் விளை யாட்டு முடியும் வரை நான் இங்கேயே காத்திருக் கிறேன்'' என்றாள் மகனிடம்.

''ஆன்ட்டி பப்பு இங்கே பத்திரமாக இருப்பான். நீங்கள் ஏன் இத்தனை கவலைப்படுகிறீர்கள்?'' என்றாள் நிலஞ்சனா.

''நான் கவலைப்பட்டுதான் ஆக வேண்டும் நிலஞ்சனா. பெரியவன் சுகாஷ் என் பேச்சைக் கேட்பதே இல்லை. இவனையாவது கவனமாக வளர்க்க வேண் டும். இல்லை என்றால் ஊரில் எல்லோரும் என் வளர்ப்பு முறையைத்தான் தப்பாகப் பேசுவார்கள்.''

பத்மஜா பேசிக் கொண்டே போக ஆறு வயது குழந்தையைப் பற்றி இத்தனை யோசிப்பது அதீதமாகப் பட்டது.

''பெரிதாக யோசித்து திட்டமிட்டு எல்லாம் குழந்தைகளை வளர்க்க முடியாது ஆன்ட்டி. அவர்கள் தானாக வளருவார்கள். தானாக முடிவெடுப்பார்கள். தவறு செய்வார்கள். அந்த தவறிலிருந்து பாடம் கற்றுக் கொள்வார்கள். எப்போதும் உன்னுடன் இருக்கிறேன் என்ற மனோபலத்தை அவர்களுக்கு கொடுப்பதுதான் பெற்றோரின் கடமை. அவனை அவன் போக்கில் விடுங் கள் ஆன்ட்டி. உங்கள் கவலைகளையும் பயங்களையும் அவன் மீது திணிக்க முயலாதீர்கள். நாளடைவில் அதுவே உங்களுக்குள் இடைவெளியை ஏற்படுத்தி விடக்கூடும்'' என்றாள் நிலஞ்சனா.

"ஏற்கனவே பெரிய இடைவெளி ஏற்பட்டு விட்டது நிலஞ்சனா. சுகாஷ் என்னை மதிப்பதே இல்லை. என் பேச்சிற்கு நேர்மாறாய் நடந்து கொள்கிறான். அவன் அப்பாவின் சுபாவம் இவனுக்கும் வந்து விட்டது. அவர் எங்களைக் கவனிப்பதே இல்லை."

நிலஞ்சனா பத்மஜாவை சமாதானப் படுத்த முயற்சித்தாள். "உங்கள் கணவர் பொறுப்பான, பிஸியான வேலையில் இருக்கையில் உங்களிடம் எப்படி பிரத்யேக கவனம் செலுத்த முடியும் சொல்லுங்கள்! ஒரு இராணுவ வீரரின் மனைவி சீருடை அணியாத சிப்பாயாக இருக்க வேண்டும். என் அணியைப் பாருங்கள். அண்ணா இருந்தாலும், இல்லாவிட்டாலும் குடும்பத்தை ஒரே சீராக நிர்வாகம் செய்கிறாள்."

"உன் அண்ணியின் சாமர்த்தியம் எனக்கு வராதும்மா. என் அம்மாவும், அப்பாவும் கல்லூரிக்குக் கூட தனியாக அனுப்பியதில்லை."

பத்மஜா தன் தரப்பு நியாயங்களையே விடாமல் பேசிக் கொண்டிருக்க, நிலஞ்சனா இவளுக்கு எப்படிப் புரிய வைப்பதென புரியாமல் அண்ணியைப் பார்த்தாள். சுனிதா உதட்டைப் பிதுக்கி தலையை அசைத்தாள். "விட்டுவிடு சஞ்சு. நான் பலமுறை முயற்சித்து விட்டேன்."

அன்று பகல் முழுக்க ஓடி விளையாடிய களைப்பில் குழந்தைகள் இரவில் சீக்கிரம் உறங்கி விடவே உபேந்திராவை குழந்தைகளுடன் இருக்க செய்து விட்டு மூவரும் சினிமா போனார்கள். அது வயதானவர்களைப் பற்றிய படம் என்றாலும் இளைஞர் கூட்டம் அதிகம் இருந்தது.

படம் தொடங்க இன்னும் பத்து நிமிடங்கள் இருந்தது. ''ஒரு ஐஸ்க்ரீம் சாப்பிடலாம்'' என்றாள் சுனிதா.

''சஞ்சனா நீ வாங்கி வருகிறாயா?'' என்றான் ஹரி ஹரன்.

அவள் மறுக்காமல் பில்கவுண்டரை நோக்கிச் செல்லவும்,

''சஞ்சு நார்மலாகிக் கொண்டு வருகிறாள் கவனித் தாயா?'' என்றான் ஹரிஹரன் மனைவியிடம்.

''புதிய இடத்தையும், புதிய நண்பர்களையும் அறிந்து கொள்ளும் ஆர்வத்தில் தன்னை மறந்திருக்கிறாள். விரைவில் பழைய நிலஞ்சனாவாகி விடுவாள்'' என்றாள் சுனிதா நம்பிக்கையுடன்.

நிலஞ்சனா ஐஸ்க்ரீமிற்காக காத்திருந்த வரிசையில் பொறுமையாக நின்றிருந்தாள். கண்ணாடி பெட்டிக் குள்ளிருந்த கலாட்டாவும், சாக்லேட்டும், வெனிலாவும் வேக வேகமாய் காலியாகின. ''மூன்று சாக்லேட் கோன்'' என்று குரல் கொடுத்த நிலஞ்சனாவிடம் ''ஸாரி மேடம். இதுதான் கடைசி கோன். காலியாகி விட்டது'' என்றபடி நிலஞ்சனாவுக்கு முன்னால் நின்றிருந்தவனிடம் கோன் களை கொடுத்தான் ஐஸ்க்ரீம் கவுண்டரில் இருந்தவன். இரண்டு கைகளிலும் கோன்களுடன் திரும்பியவனைப் பார்த்ததும் ''ஹாய் ஜெமின்'' என்றாள் நிலஞ்சனா. அங்கே அவனை எதிர்பாராத வியப்புடன்.

புன்னகையுடன் அவன் தன் கைகளிலிருந்த ஐஸ்க்ரீமை முன்புறம் நீட்டினான். ''நோ தேங்க்ஸ் நான்...'' நிலஞ்சனா முடிக்கும் முன் அவளுக்குப் பின்புறமிருந்து

நீண்ட கைகள் ஜெயின் கையிலிருந்த கோனைப் பற்றின. நிலஞ்சனா திகைப்புடன் திரும்பிப் பார்த்தாள். கிட்டத்தட்ட நிலஞ்சனா வயதில் ஒரு பெண்ணும் அவள் அருகே பள்ளி இறுதிகளில் இருக்கக் கூடிய தோற்றத்துடன் ஒரு பெண்ணும் நின்றிருந்தார்கள்.

''பையா படம் தொடங்கி விடும். வா உள்ளே போகலாம்'' என்றாள் வயதில் சிறியவள்.

''ம் போகலாம்'' என்ற ஜெயின் நிலஞ்சனாவை திரும்பியும் பாராமல் அவர்களுடன் சென்று சேர்ந்து கொண்டான். அவர்கள் ஏதோ பேசியபடியே ஆங்கிலப் படம் திரையிட்டிருக்கும் ஸ்கீரினுக்குள் செல்வதைப் பார்த்தபடி நின்றிருந்தவளிடம்,

''உங்களுக்கு என்ன வேண்டும் மேடம்?'' என்றான் விற்பனையாளன்.

மூன்று சாக்கோபார்களுடன் சென்று அவர்கள் தியேட்டருக்குள் அமர்ந்தபோது ஜெயின் ஏன் தன்னிடம் அறிமுகம் இல்லாதவனைப் போல் நடந்து கொண்டான் என்ற கேள்வி மனதை உறுத்தியது. அவன் உடன் வந்தவர்கள் யாராக இருப்பினும் தெரிந்தவர்களை பார்க்கையில் இயல்பாக எழும் புன்னகையைக் கூட அவன் ஏன் காட்டவில்லை?

சற்று நேரத்தில் விளக்குகள் அணைந்து படம் தொடங்கியதும் நிலஞ்சனா அதில் மூழ்கிப் போனாள்.

இயல்பான கதையிலிருந்து அமிதாப்பை பிரித்துப் பார்க்க முடியவில்லை. முதுமையில் ஏற்படும் பாதுகாப் பின்மையை அவர் உடல்மொழி உணர்த்த, தீபிகா

படுகோனின் யதார்த்த நடிப்பில் ஆழ்ந்து போய் நிலஞ்சனா ஜெயினை மறந்து போனாள்.

# 4

''உமர் அத்தையை அழைத்து வர யார் ஏர்போர்ட் போகிறீர்கள்?'' என்றார் பஷீர் அப்துல்லா பேஸ்ட்டை ப்ரஷ்ஷின் மீது தடவியபடி.

''ஜெயின் அண்ணா விடியற்காலையிலேயே போய் விட்டான்'' என்றான் உமர்.

''யா அல்லா! கொல்கத்தா பளைட் எட்டு மணிக் குத்தானே வரும்?''

''ஒருவேளை உங்கள் அக்காவிற்காகவும், அவரது செல்ல பிள்ளைக்காகவும் இன்று நேரத்திலேயே வந்தாலும் வரலாம்'' என்றான் உமர் கேலியாக.

''ப்ளைட் வந்து வீடு வர எவ்வளவு நேரமாகுமோ! இந்த பிள்ளை ஒரு சாய் கூட குடிக்காமல் போய் விட் டானே!'' என்ற ஷாகீரா அக்காவை ''டாக்டரிடம் எப் போது அழைத்துப் போக வேண்டும்?'' என்றாள் கணவனிடம்,

''ஜெயின் ஏர்போர்ட்டிலிருந்து அப்படியே மருத்துவ மனைக்கு போய் விட்டு அங்கிருந்து போன் செய்வதாகச் சொன்னான்'' என்றான் உமர்.

''நல்ல காரியம் செய்தான்'' என்ற பஷீர் ''அக்காவுக்கு குணமாகி விட்டால் எவ்வளவோ நன்றாக இருக்கும்.''

உடல் முழுக்க ஒயர்கள் சுற்றியிருக்க, தன்னைப் பரிசோதித்துக் கொண்டிருந்த டாக்டரை நபீஸா மிரட்சி யுடன் பார்த்தாள். அந்த மருத்துவர் ஜெயினிடம் ஆங்கிலத்தில் ஏதோ சொல்ல, ஜெயின் தலையசைத்து கேட்டுக் கொண்டிருந்தான். பிறகு நபீஸாவிடம் ''எல்லாம் சரியாகி விடும் பாட்டி. கவலைப்படாதீர்கள்'' என கன்னடத்தில் சொல்லி விட்டு அடுத்த நோயா ளியைப் பார்க்கப் போனான்.

''புப்பூ (அத்தை) நான் அப்பாவுக்கு போன் செய்து விட்டு வருகிறேன். வீட்டில் எல்லோரும் உங்களைப் பார்க்கும் ஆர்வத்துடன் காத்திருக்கிறார்கள். சாச்சா திடீரென போன் செய்து நீங்கள் இங்கு வர விரும்புவ தாகவும், உங்களுக்கு உடல்நிலை சரியில்லை என்றும், நண்பர் குடும்பத்துடன் அனுப்பி வைப்பதாகவும் சொன்னதும் முதலில் எங்களுக்கு எதுவுமே புரியவில்லை. ஏர்போர்ட் வரும்போது முதலில் உங்களுக்கு சிகிச்சை அளிப்பதுதான் முக்கியம் என்று தோன்றியது. டாக்டர்கள் டெஸ்ட் எடுத்திருக்கிறார்கள். மாலைக்குள் ரிசல்ட் வந்து விடும். பார்த்துக் கொண்டு போகலாம்'' என்றான் ஜெயின்.

நபீஸா தீவிரமாக தலையசைத்தார். ''இதுவரை நான் ஜுரம் என்று கூட மருத்துவமனை பக்கம் ஒதுங்கிய தில்லை. கடைசி வரை அப்படியே இருந்து விடுகிறேன். என்னை வீட்டிற்கு அழைத்துப் போ ஜெயின். உங்களை எல்லாம் பார்ப்பதற்காகத்தான் அவ்வளவு தொலைவி

லிருந்து வந்தேன். நாலு சுவர்களுக்குள் என்னை அடைத்து வைத்தால் மூச்சு முட்டியே செத்துப் போவேன்.''

''ஆனால் புப்பூ.''

''ஜெயின் என் செல்லம் இல்லையா? நான் சொல் வதைக் கேள்!'' என்றார் நபீஸா கெஞ்சும் குரலில்.

''சரி புப்பூ'' என்றான் ஜெயின் வேறு வழியின்றி. அப்பாவுக்கு போன் செய்தபோது ''புப்பூ சொல்கிற படியே செய்'' என்றார் பெருமூச்சுடன்.

ஜெயின் புப்பூவை அழைத்துக் கொண்டு வீட்டிற்கு போன போது திம்மப்பாவின் குடும்பமும் அங்கே இருந்தது. நபீஸா தன் தடுமாற்றத்தையும் மீறி சிறு பெண்ணைப் போல் காரிலிருந்து குதித்து இறங்கினாள். ''புப்பூ...'' என ஓடி வந்த உமரையும், வஹிதாவையும் அணைத்து முத்தமிட்டாள். திம்மப்பா உன் கைவலி எப்படியிருக்கிறது? நீயும் பஷீரும் இன்னமும் மடிவாலா லேக்கிற்கு வாக்கிங் போகிறீர்களமா? ஷாகீரா நீ ஏன் இப்படி இளைத்துப் போய் விட்டாய்? கெம்பய்யா உன் தொழில் எப்படிப் போகிறது? கௌரம்மா இது எத்தனை யாவது மாதம்? சத்தாக சாப்பிடுகிறாயா? எள்ளம்மா இந்த...'' மேல பேச முடியாமல் மூச்சு வாங்கியவளை ஜெயின் ஆசுவாசப்படுத்தினான். ''நிதானமாகப் பேச லாம் புப்பூ. எல்லோரும் இங்கேதான் இருக்கப் போகி றார்கள். நீங்கள் சற்று ஓய்வெடுங்கள்.''

''ஆமாம் பாஜி. உன் அறை தயாராக இருக்கிறது'' என்றார் பஷீர்.

''உங்களுடன் இருந்தாலே என் களைப்பெல்லாம் காணாமல் போய் விடும்'' என்ற நபீஸா அன்று முழுக்க வாய் ஓயாமல் பேசிக் கொண்டே இருந்தார். ஒரு வழியாய் எல்லோரும் கிளம்பிப் போன பிறகே தயிர் சாதம் சாப்பிட்டு விட்டு உறங்கப் போனார்.

''ஜெயின் டாக்டர் என்ன சொன்னார்?'' என்றார் பஷீர் மெதுவான குரலில்.

ஜெயின் உதட்டைப் பிதுக்கி தலையை அசைத்தான்.

''லங் கேன்சர். சிகிச்சை அளித்தால் நாட்களை தள்ளிப் போடலாம். ஆனால் சிகிச்சைக்கு புப்பூ ஒத்துக் கொள்ளவில்லை. வலி மிகுந்த தொடர் சிகிச்சை தேவை என்பதால் நோயாளிகள் முழு மனத்துடன் ஒத்துழைத் தால் மட்டுமே செய்ய முடியும் என்கிறார்கள் டாக்டர்கள்.''

''நான் புப்பூவிடம் பேசுகிறேன்'' என்றான் உமர்.

''புப்பூவின் செல்லப் பையனான ஜெயின் பேச்சையே கேட்காதபோது நாம் சொல்வதை எப்படிக் கேட்பார்கள்?'' என்றார் பஷீர் அப்துல்லா.

''நான் சிகிச்சைக்காக வற்புறுத்துகையில் புப்பூ சொன்னார்கள். ''ஒரு மனிதன் இருநூறு வருடமோ, முந் நூறு வருடமோ வாழ சாத்தியமில்லாதபோது எழுபதில் போனாலும் எழுபத்தி ஐந்தில் போனாலும் ஒன்றுதான். இந்த வாழ்க்கை ஐந்து வருடங்கள் நீடிப்பதால் நான் புதிதாக என்ன பலன் அடைந்து விடப் போகிறேன்? பண விரயமும். உடல் வேதனையுமாய் அந்த சில வருட கூடுதல் வாழ்க்கை எனக்கு நரகமாகத்தான் இருக்கும் என்றார்'' என்றான் ஜெயின்.

''அக்கா சொல்வது உண்மைதான் என்றாலும் அவரது ஒரு பெண்ணிற்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. அக்காவின் கணவரும் இல்லாத நிலையில் அக்கா அந்த பெண்ணிற்காகவாவது சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டும்'' என்றாள் ஷாகீரா.

''பெண்ணை நாமெல்லாம் பார்த்துக் கொள்வோம் என்று புப்பூ நினைத்திருக்கலாம்'' என்றான் உமர்.

ஈஸி சேரில் கால்நீட்டி அமர்ந்து முகத்துடன் சேர்த்து கண்களையும் துடைத்த பஷீரின் அருகில் வந்தான் ஜெயின். ''ப்பாஜி நீங்களே இப்படி கலங்கினால் புப்பூவை கவனித்துக் கொள்வது எப்படி? அவர் மிச்சமிருக்கும் நாட்களை நம்முடன் மகிழ்ச்சியாக கழிக்க வந்திருக்கிறார். நீங்களும் வருந்தி, அவரையும் வருத்தப் போகிறீர்களா?''

''என்னால் தாங்க முடியவில்லை ஜெயின். என் அக்கா எத்தனை அற்புதமானவள் தெரியுமா?'' என்றார் பஷீர்.

''தெரியும். என்னை விட வேறு யாருக்கு நன்றாக தெரிய முடியும்?''

ஜெயின் குரலில் தெரிந்த சோகத்தில் பஷீர் கரைந்து போனார். ''பேட்டா!'' என அவனை இறுக அணைத்துக் கொண்டவரின் முதுகு குலுங்கியது. யாரும் பேசாத நீண்ட அமைதிக்குப் பிறகு ஜெயின் அவரிடமிருந்து விடுபட்டு வெளியே வந்தான்.

''அத்தை இந்த செடி மான்போல் இருக்கிறது பாரேன்.'' என்றான் சந்தீப்.

மிருகங்களின் வடிவில் வெட்டப்பட்டிருந்த குத்துச் செடிகளை ''இது டைகர், இது கேமல், லயன் என

இருவரும் சரியாக அடையாளம் சொல்லவும் ''குட்'' என்றாள் நிலஞ்சனா.

அன்று விடுமுறை நாள் என்பதால் ''லால்பாக்'கில் கூட்டம் அதிகம் இருந்தது. சுனிதாவுக்கு செடிகள் வாங்க வேண்டும் என்பதால் அவளுடன் மூவரும் லால்பார்க் வந்திருந்தார்கள். அனலில் வாட்டிய சோளத்தை கொறித்தபடி க்ளாஸ் ஹவுஸ்சை பார்வையிட்டார்கள்.

''இந்த க்ளாஸ் ஹவுஸ் லண்டனின் கிறிஸ்டல் பேலஸ் மாடலில் கட்டப்பட்டது'' என்றாள் சுனிதா.

''ஆனால் ஹைதர் அலி லால்பாக்கை உருவாக்கினார் என்றும் லால்பாக் என்பதற்கு சிவப்பு கார்டன் என்று பொருள் என நான் படித்திருக்கிறேன்'' என்றாள் நிலஞ்சனா.

''ஹைதர் அலி தொடங்கி அவர் மகன் திப்பு சுல்தானால் முழுமையாக வடிவமைக்கப்பட்டது. திப்பு சுல்தான் ஆப்கானிஸ்தான், ப்ரான்ஸ், பெர்ஸிய போன்ற பல நாடுகளிலிருந்து செடிகளையும், மரங்களைக் கொண்டு வந்து நட்டார். இங்குள்ள பல மரங்கள் நூற்றுக் கணக்கான வருடங்கள் பழமையானவை. தோட்ட வேலையில் பெயர் பெற்ற திகலா இன மக்களின் கடின உழைப்பால் உருப்பெற்ற இந்த கார்டனில் ஒவ்வொரு ஆட்சியிலும் விரிவாக்கப் பணிகள் நடந்து கொண்டே இருந்தன.''

''க்ளாஸ் ஹவுஸில் நடைபெறும் ரிபப்ளிக்டே கொண்டாட்டங்களையும், ப்ளவர் ஷோக்களையும் இந்த வருடம் நேரிலேயே பார்க்கலாம்'' என்றாள் நிலஞ்சனா

ஏரியைச் சுற்றி வந்து கீழே இறங்குகையில் ப்ரதீப் கால் வலிக்கிறது என்றான். நிலஞ்சனா அவனைத் தூக்கிக் கொள்ள. நர்சரிக்குள் சென்றார்கள். பட்டர்ப்ளை பிடிக்கப் போகிறேன்'' என சந்தீப் ஓடவும் அவை துரத்திக் கொண்டு ப்ரதீப்பும் இறங்கி ஓடினான்

''நான் இருவரையும் அழைத்து வருகிறேன்'' என சுனிதா போனதை கவனியாமல் ''இங்கு மேரி கோல்ட் ஒய்ட் செடி இருக்கிறதா?'' என்றாள். நிலஞ்சனா அங்கிருந்த பணியாளிடம்.

பதிலுக்கு அவன் பேசிய வேகமான கன்னடம் புரியாமல் ''அண்ணி'' என்றழைத்தபடி திரும்பிய நிலஞ்சனா சுனிதாவை காணாமல் திகைத்தாள்

''நீங்கள் கேட்ட செடி இங்கே இல்லை. ஆனால் விதைப் பண்ணையில் விதை கிடைக்கும். வாங்கிக் கொள்ளுங்கள் என்கிறார். நிலஞ்சனாவின் அருகிலிருந்த பெண்மணி உடைந்த ஆங்கிலத்தில் விளக்கினாள்.

''நன்றி ஆன்ட்டி. நிதானமாகப் பேசினால் ஓரளவு புரிந்து கொள்வேன். கன்னடம் வேகமாகப் பேசிக் கொண்டு போனால் புரிவதில்லை'' என்றாள் நிலஞ்சனா.

''புதிதாக ஒரு மொழியை அறிந்து கொள்கையில் ஏற்படும் சிக்கல் இது. சில நாட்களில் நீயே வேகமாக கன்னடத்தில் பேசத் தொடங்கி விடுவாய் பார்'' என்றார் அந்தப் பெண்மணி.

''உண்மைதான் ஆன்ட்டி'' என்ற நிலஞ்சனா சுனிதா எங்கே போனாள் என்று யோசிக்கையில் அந்த பெண் மணியே சொன்னார். ''உன்னுடன் இருந்த பெண்ணைத்

தேடுகிறாயா? குழந்தைகளின் பின்னே போனாள். இடதுபுறமாக போய் பார்.''

மீண்டும் நன்றி சொல்லிவிட்டு சுனிதாவைத் தேடிப் போகையில் ''இந்த பெண்மணிக்கு சிரிக்காமல் எதுவும் பேசத் தெரியாதோ! என்று தோன்றியது நிலஞ்சனா வுக்கு. இயல்பிலேயே புன்னகைக்கும் முகம். அழும் போது கூட இவர் இதழ்கள் விரியக் கூடும்.

''சஞ்சனா செடிகள் வாங்கி விட்டாயா?'' என்றாள் சுனிதா அவளைப் பார்த்ததும்.

''இல்லை அண்ணி விதைதான் இருக்கிறதாம்.''

''சரி விதையாகவே வாங்கிக் கொள்ளலாம். இவர்கள் விளையாடுகிறார்கள். நான் கூட இருக்கிறேன். நீ வாங்கி வருகிறாயா?

நிலஞ்சனா திரும்ப நர்ஸரிக்குள் வந்தபோது அந்த பெண்மணி ரோஜா பாத்தியில் நின்றிருந்தார். இவளைப் பார்த்ததும் ''உன் அக்காவைப் பார்த்து விட்டயா?'' என்றார் அதே சிரிப்புடன். புடவை தலைப்பால் தலை மூடப்பட்டிருக்க முகத்தில் தெரிந்த கனிவைக் கண்டு வியந்தபடி ''ம்'' என நிலஞ்சனா தலையசைத்தாள். ''என் அண்ணியைப் பாத்துவிட்டேன். சில செடிகளும், விதை யும் வாங்க வேண்டும். உங்களுக்கு எதுவும் வாங்க வேண்டுமா?''

''ம்ஹூம். நான் தினமும் இங்கு வந்து இந்த மரங் களையும், செடிகளையும், பூக்களையும் பார்த்துச் செல் வேன். இவற்றை ஒன்றாகப் பார்க்கும்போது ஏற்படும் சந்தோஷம் தனியாக ஒரு செடியை மட்டும் வளர்ப்ப தால் ஏற்படுவதில்லை எனக்கு.''

''நீங்கள் சொல்வது உண்மைதான்'' என்றாள் நிலஞ்சனா. அவள் செடிகளைத் தேர்ந்தெடுக்கையில் அது எந்த வகையைச் சார்ந்தது. அதன் பராமரிப்பு, மருத்துவ பயன்கள் என அந்தப் பெண்மணி நிறைய சொன்னார்.

''பரவாயில்லையே ஆன்ட்டி. நீங்கள் நிறைய தெரிந்து வைத்திருக்கிறீர்களே!'' என்றாள் நிலஞ்சனா வியப்புடன்.

''என் மருமகன் பெரிய இயற்கை விவசாய பண்ணை வைத்திருக்கிறான். அவன்தான் நிறைய சொல்லித் தருவான்'' என்றவர் ''இதோ, அவனே வருகிறான்'' என்றார் வாயிலைப் பார்த்தபடி.

மலர்ந்த முகத்துடன் அவர்களை நோக்கி வந்த ஜெயின்னை நிலஞ்சனா ஆச்சரியமாகப் பார்க்கவும், அந்த பெண்மணி இருவரையும் அறிமுகம் செய்து வைத்தார்.

''உங்களைச் சந்தித்ததில் மிகவும் மகிழ்ச்சி'' ஜெயின் கைகளை நீட்டினான்.

''ஸேம் டூ யு'' நிலஞ்சனா அவன் கைகளை குலுக்கினாள்.

''என் அத்தை கொல்கத்தாவிலிருந்து வந்திருக்கிறார்கள். இங்கு வரும் போதெல்லாம் செடிகளையும், பூக்களையும் சுற்றி வருவதுதான் இவர்களின் முக்கிய வேலை'' என்றான் ஜெயின் பற்றிய கையை விடாமல்.

''இயற்கையை நேசிப்பவர்கள் எல்லோரையும் நேசிக்கத் தெரிந்தவர்களாய் இருக்க வேண்டும்'' என்றாள் நிலஞ்சனா. தன் கைகளை விடுவித்துக் கொள்ள முயன்றபடி.

''சரியாக சொன்னீர்கள். என் அத்தைக்கு ஒருவரிடம் அன்பு காட்ட அறிமுகம் தேவையில்லை. ஆனால் எனக்கு தேவை. உங்களைப் பற்றி சொல்லுங்கள்'' என்றான் சீரியஸாக.

ஜெயின் குரலில் தெரிந்த சீண்டலும், கண்களில் தெரிந்த குறும்பும் தியேட்டரில் கண்டு கொள்ளாமல் போனவன் இவன்தான் என்பதை மறக்கடித்தது. மனதின் இறுக்கம் தளர்வதை காட்டாமல் நிலஞ்சனா சொன்னாள். ''உங்கள் அன்பு எனக்குத் தேவையில்லை. அதனால் அறிமுகம் செய்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.''

''நீங்கள் இருவரும் சண்டை போடுகிறீர்களா என்ன?'' என்றார் நபீஸா வியப்புடன்.

''சண்டையா? நாங்களா? முன்பின் அறிமுகம் அற்றவர்களிடம் எப்படி சண்டை போட முடியும் புப்பூ'' என்றான் ஜெயின்.

''அதுதான் எனக்கும் புரியவில்லை'' என்றார் நபீஸா.

''ஆன்ட்டி உங்கள் மருமகன் மிகவும் நல்லவன். தெரியாதவர்களிடம் சண்டை போட மாட்டான். தெரிந்தவர்களைப் பார்த்தால் பேசாமல் போக மாட்டான். அதனால் நீங்கள் கவலையே படவேண்டாம்'' என்றாள் நிலஞ்சனா. தன் கைகளை உருவிக் கொண்டு.

கண்கள் பளீரிட ''உங்கள் வேலை முடிந்ததா?'' என்றான் ஜெயின் இருவருக்கும் பொதுவாக.

இரண்டு கைளிலும் செடிகளை எடுத்துக் கொண்டு ''வருகிறேன் ஆன்ட்டி. விதைகள் வாங்க வேண்டும்'' என்று கிளம்பினாள் நிலஞ்சனா.

''இந்த செடிகளை தூக்கிக் கொண்டு எப்படிப் போவாய்? ஜெயின் நீ உதவி செய்'' என்றார் நபீஸா.

''உங்களை இங்கே தனியாக விட்டுவிட்டு எப்படிப் போவது?'' என்றான் ஜெயின் யோசனையுடன்.

''இத்தனை நேரம் இருக்கவில்லையா நான்? விதைகள் வாங்கிக் கொடுத்து வழியனுப்பி விட்டு வருவதற்குள் என்ன நடந்து விடும்?'' என்றார் நபீஸா.

''ம்மாஜி வேறு எப்போது வருவீர்கள் என்று போன் செய்தார்.''

''ஷாகீராவிடம் நான் சொல்லிக் கொள்கிறேன் ஜெயின்.''

''மழை வேறு வரும் போலிருக்கிறது.''

''இங்கு ஷெட்டிற்குள் உட்கார்ந்திருக்கிறேன் ஜெயின். கவலைப்படாதே.''

''நீங்கள் இத்தனை தூரம் சொல்வதால் போகிறேன் புப்பூ'' என்றான் ஜெயின் வேறு வழியின்றி.

''நானே போய் கொள்வேன்'' என நிலஞ்சனா கதற, கதற காதில் வாங்காமல் அத்தையும், மருமகனும் பேசி முடிவெடுத்தும், ஜெயின் அவள் கையிலிருந்த செடி களை பிடுங்கிக் கொண்டு முன்னால் நடநதான்.

கடுப்புடன் திரும்பிப் பார்த்தவளிடம் ''போய் வா அம்மா. மறுபடி சந்திக்கலாம்'' என்றார் நபீஸா புன்னகை யுடன்.

பதிலுக்கு தலையசைத்து விட்டு ஜெயின் பின்னால் நடந்தாள் நிலஞ்சனா. பண்ணையில் விதைகள் வாங்

கியதும் ''இன்று எனக்குப் பெரிய உதவி செய்து விட்டாய். மிகவும் நன்றி'' என்றாள் நிலஞ்சனா. அவனிட மிருந்த செடிகளை பெற்றுக் கொள்ள அவள் நீட்டிய கைகளைப் பற்றி ஜெயின் அவளை உட்புற வாயில் அருகே அழைத்துப் போனான்.

''ஜெயின் எங்கே போகிறாய்?'' என்றாள் நிலஞ்சனா.

............

''என் அண்ணி எனக்காக காத்திருப்பார்கள். நான் போக வேண்டும் ஜெயின்.''

நிலஞ்சனா கூறியதை காதில் வாங்காமல் அவள் கைகளைப் பற்றியபடி லால்பாக்கின் இடதுபுறம் இருந்த பாறை மீது ஏறினான்.

''இங்கே எதற்கு போகிறோம்?''

பதில் பேசாமல் பாறையின் உச்சிக்குச் சென்றவன் ''கீழே பார்'' என்றான் அவளிடம்.

அங்கிருந்து பார்க்கையில் பெங்களூரு நகரம் தெரிந்தது. மூச்சு வாங்கப் பார்த்தவளிடம் ''இப்போது நாம் நின்றிருப்பது உலகின் மிகப் பழமையான குன்று. இதன் வயது மூவாயிரம் மில்லியன் வருடங்கள் என கணக்கிடப்பட்டிருக்கிறது'' என்றான்.

நிலஞ்சனா வியப்புடன் பாறையின் கற்களை தன் விரல்களால் ஸ்பரிசித்தாள். ''நம்மைப் போன்ற எத்தனையோ கோடி மனிதர்களையும், உயிரினங்களயையும், இயற்கை அற்புதங்களையும் இந்த பாறை பார்த்திருக்கும் இல்லையா? காலங்களைக் கடந்து நிற்கும் இயற்கை தான் உண்மையில் அற்புதமானது'' எனறாள் நிலஞ்சனா.

ஜெயின் ஆமோதிப்பதாக தலையசைக்கவும் நிலஞ்சனா நினைவு வந்தவளாகக் கேட்டாள். ''இதை காண்பிக்க ஏன் கட்டாயமாய் இழுத்து வர வேண்டும்'' சொல்லியிருந்தால் நானே வந்திருப்பேன்.''

''உனக்கு சர்ப்ரைஸ் தர வேண்டும் என்றுதான்...''

''நீயும் உன் சர்ப்ரைஸ்சும்!''

இருவரும் சிரித்து முடித்ததும் ''போகலாம் ஜெயின். அண்ணி காத்திருப்பார்கள்'' என நிலஞ்சனா இறங்க முற்பட்டாள்.

''இன்று 'ஜனபதா ஜாத்ரே' இருக்கிறது. பார்த்து விட்டுப் போ'' என்றான் ஜெயின்.

''அப்படி என்றால்?''

''கர்நாடக அரசு வாரத்தின் இரண்டாவது, நான்காவது வார விடுமுறை தினங்களில் 'ஜனபதா ஜாத்ரே'யை நடத்துகிறது. கன்னட கிராமிய நடனம், பாட்டு என கர்நாடகாவின் பல பகுதிகளிலிருந்து வரும் கிராமிய கலைஞர்களைக் கொண்டு கலை நிகழ்ச்சி நடத்தப் படுகிறது. இதில் பாரம்பரிய உடை, பாரம்பரிய இசைக் கருவிகள் பயன்படுத்தப் படும். கர்நாடகத்தின் பாரம் பரியத்தை பெங்களூரு போன்ற பன்முக கலாச்சாரம் கொண்ட நகரில் இருந்து கொண்டே அறிந்து வைத் திருக்க வேண்டும் என்றால் இதுதான் வழி.''

''சரிதான். கலாச்சாரத்தை கட்டிக் காப்பாற்றும் பொறுப்பு குடும்பங்கள் கையிலிருந்து இப்போது அர சாங்கத்திடம் போய் விட்டது போலும்!'' பேசியபடியே இறங்கிய நிலஞ்சனாவுக்கு வழியில் கவனம் இல்லாது

போக கால்கள் இடறின. சர்ரென்று முன்னால் சரிந்த வளை ஜெயின் எட்டிப் பிடித்தான். இறங்கும் பாதை என்பதால் சரிவாக இருந்தது. இருவரும் பிடிப்பின்றி தடுமாறினார்கள். நிலஞ்சனாவின் கையிலிருந்த செடிகள் இருவர் மீதும் விழுந்து தரையில் உருண்டன. விதைப் பாக்கெட்டுகள் தரையில் சிதறின. ஜெயின் பாறையில் கால்களை அழுந்த ஊன்றி நிலஞ்சனாவின் இடுப்பைப் பற்றி மேலே இழுத்தான். அவள் டீ ஷர்ட் சற்றே நெகிழ்ந்திருக்க, வழுவழுத்த இடையில் பதிந்த ஜெயினின் கரங்கள் அவள் அதை உணரும் முன்பாக விலகின. அவள் நேராக நிற்க உதவி செய்தவன் குனிந்து கீழே கிடந்த செடிகளை சேகரிக்கத் தொடங்கினான். சற்றே நசுங்கி இருந்தபோதும் பதியம் போட்டால் செடி கள் மீண்டும் துளிர்த்து விடக் கூடும் என்ற எண்ணத் தில் அவன் அவற்றை கவனமாக எடுத்துக் கொண்டு நிமிர்ந்தபோது, அங்கு யாரையும் காணாமல் திகைத்தான்.

* * *

"சஞ்சனா ஒன்றும் பிரச்சனை இல்லையே?" என் றாள் சுனிதா.

"அண்ணி நேற்றிலிருந்து இதே கேள்வியைத் தான் கேட்கிறாள் என்ற நினைவில் நிலஞ்சனா 'இல்லை' என தலையசைத்தாள்.

"ஆர் யு ஷ்யூர்?"

"பக்கா."

"பிறகு ஏன் நேற்று..."

"அண்ணி ப்ளீஸ். நேற்று விஷயம் நேற்றுடன் முடிந்தது. நான் நன்றாக இருக்கிறேன். இப்போது உனக்கு

என்ன உதவி வேண்டும் சொல். இன்று சமையலை நான் கவனித்துக் கொள்ளட்டுமா?''

பதில் பேசாது தன் கையிலிருந்த புட்டிங் கலவையை கண்ணாடிக் கிண்ணத்தில் ஊற்றி ப்ரிட்ஜில் வைத்தாள் சுனிதா.

லால் பாக்கில் செடிகள் வாங்கப் போனவள் உடை எல்லாம் மண்ணும், வெறுங்கையுமாய் வந்து நின்றால் அண்ணி பயந்து போகாமல் என்ன செய்வாள்? நல்லவேளை அண்ணனிடம் சொல்லவில்லை என்று எண்ணியபடி நிலஞ்சனா காய்களை கழுவி வெட்டத் தொடங்கினாள். சற்று நேரத்தில் அவள் அருகே வந்த சுனிதா ''நீ கிளம்பு சஞ்சனா நான் பார்த்துக் கொள் கிறேன்'' என்றதும் எழுந்து சென்று கல்லூரிக்குத் தயா ரானாள். அண்ணியிடம் சொல்லிக் கொண்டு வெளியே வரும்போது ''சஞ்சு இந்த உடை உனக்கு மிகவும் அழகாக இருக்கிறது'' என்றாள் சுனிதா.

''உங்கள் செலக்ஷன். வேறு எப்படி இருக்கும்?'' என சிரித்தபடி கீழே சென்றாள்.

நிலஞ்சனாவின் ஸ்கூட்டரை துடைத்துக் கொண் டிருந்த உபேந்திரா அவளைப் பார்த்ததும் ''குட் மார்னிங் தீதி'' என்றான்.

''உபேந்திரா, இந்த வேலை எல்லாம் செய்யத் தேவையில்லை என பலமுறை சொல்லியிருக்கிறேன். நீ அண்ணனுக்கு உதவி செய்யத்தான் இங்கே வந்திருக் கிறாய். எனக்கில்லை.''

''உண்மைதான் தீதி. மேஜர் சாஹேப்பிற்கு செய்யும் வேலைக்கு அரசாங்கம் சம்பளம் தருகிறது. ஆனால் ஒரு

சகோதரிக்கு பிரியத்துடன் செய்வதை எந்த கணக்கில் சேர்க்க முடியும்?''

''தேங்க்யூ உபேந்திரா. உன் உதவியை நான் எப் போதும் மறக்க மாட்டேன்'' என்றாள் நிலஞ்சனா கனி வுடன்.

நிலஞ்சனா அன்று கல்லூரிக்குப் போய் சேர்ந்ததும் ''எதாவது விசேஷமா?'' என்றார்கள் எல்லோரும் சொல்லி வைத்தாற்போல்.

''நத்திங். ஏன் இப்படிக் கேட்கிறீர்கள்?'' என்றதும் சம் திங் நியூ. சொல்லத் தெரியவில்லை'' என்றாள் ஷீத்தல்.

''இந்த உடைதான் நியூ. மற்றபடி வேறு எதுவும் இல்லை'' என்ற நிலஞ்சனா ''இன்றைய டிபேட்டிற்கு என்ன தயாரித்திருக்கிறீர்கள்?'' என்றதும் பேச்சு திசை மாறியது.

அன்றைய டிபேட்டிற்கு மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து மாணவர்கள் வந்திருந்தனர். கிரேக்க பேரரசை நிறுவிய பொலிஸ் (Polis)லிருந்துதான் பொலிட்டிகல் என்ற வார்த்தை உருவானது. இரண்டாயி ரத்து ஐநூறு வருடங்கள் பழமையான அரசியல் அறிவியலின் தொன்மையை சாணக்கியா, ப்ளாட்டோ, அரிஸ்டாட்டில் காலத்திலிருந்தே நாம் அறிந்து கொள்ள முடிகிறது'' என நிலஞ்சனா உரையைத் தொடங்கி வைத்தாள். அடுத்த இரண்டு மணி நேரம் பப்ளிக்லா, அட்மினிஸ்ட்ரேஷன், ஆந்ரோ பயாலஜி என சகல விஷ யங்களையும் தொட்டு அவர்கள் டிபேட்டை முடித்த போது ஆசரியர்கள் பக்கமிருந்து பலத்த கரவொலி எழுந்தது.

''வெல்டன் நிலஞ்சனா. எல்லாவற்றையும் அப்டேட் செய்து தெளிவாக எடுத்துச் சொன்னாய்'' என்றார் ஹெச்.ஓ.டி. நீலாகுமார்.

''தேங்க்யூ மேடம்'' என்றவளிடம் ''கிளம்புகையில் ஐந்து நிமிடம் டிபார்ட்மென்ட்டுக்கு வந்துவிட்டு போ'' என்றார் நீலாகுமார்.

சரியென தலையசைத்துவிட்டு நண்பர்களிடம் சென்றாள் நிலஞ்சனா.

''நன்றாக பேசினாய் நிலஞ்சனா'' சார்ல்ஸ் கைகளை குலுக்கினான்.

''ம் ரொம்ப நன்றாக'' என்றான் ரமேஷ்.

''வந்திருந்த மொத்த டீம்களிலும் நம்முடைய காலேஜ் தான் சூப்பர். அதுவும் நீ, சான்ஸே இல்லை. இதை நாம் கொண்டாட வேண்டும்'' என்றாள் பாக்யா.

''யெஸ் லெட்ஸ் கோ அவுட்.''

எல்லோரும் சேர்ந்து கொள்ள ''டன்'' என்றாள் நிலஞ்சனா. ''டிபார்ட்மென்ட் போய் நான் மிஸஸ் நீலாகுமாரை பார்த்துவிட்டு வருகிறேன். என்ட்ரன்சில் எனக்காகக் காத்திருங்கள், சரியா?''

''சரி'' என்றபடி அவர்கள் சென்றதும் நிலஞ்சனா டிபார்ட்மென்ட் போனாள். செல்போன் மிர்ரரைப் பார்த்தபடி லிப்ஸ்டிக் போட்டுக் கொண்டிருந்த நீலா குமார் நிலஞ்சனாவைப் பார்த்ததும் இதழ்கள் மின்ன புன்னகைத்தாள். ''ஹாய் டியர். நான் நாளை ஒரு கான் பரன்சுக்காக டெல்லி போகிறேன். ஒரு வாரத்திற்கான ஆக்டிவிட்டீஸ் இதில் குறித்து வைத்திருக்கிறேன்.

அடுத்த மாதம் க்ரைஸ்ட் யுனிவர்சிட்டியில் ஒரு செமினார் இருக்கிறது. அதற்கு நீ தயாராக வேண்டும்.''

''யெஸ் மேம்'' என்றாள் நிலஞ்சனா புன்னகையுடன்.

''அத்துடன் இந்த பென்ட்ரைவ்வை ஆந்ரோபயாலஜி ஸாரிடம் கொடுத்து விட வேண்டும்.''

''டன் மேம்.''

''இன்றைய டெஸ்ட் பேப்பர்களை...''

''ஃபைல் செய்து உங்கள் கேபின் டிராயரில் வைத்திருக்கிறேன். செக் செய்து கொள்ளலாம் நீங்கள்.''

''குட்'' என்றார் நீலாகுமார் மெஞ்சுதலாக.

''நிலஞ்சனா உன் பெற்றோர் என்ன செய்கிறார்கள்?'' என்றார் தொடர்ந்து.

நிலஞ்சனா சொன்னதும் ''இராணுவ குடும்பத்துப் பெண்ணா? ஆபீஸர் குடும்பத்துப் பெண்களுக்கு ஏறி வரும் விலைவாசி, வீட்டு வாடகை, ஆள் சம்பளம் என்ற அன்றாட நிகழ்வுகளைப் பற்றி கவலைப்படத் தேவை யில்லை. நிரந்தர வருவாய், பாதுகாப்பான வீட்டு சூழல் என்ற உத்திரவாதம் இருக்கும்.''

நீலாகுமாரிடம் தலையசைத்து விட்டு வெளியே வந்த நிலஞ்சனாவுக்கு சிரிப்பு வந்தது. உயிருக்கு உத்திரவாதம் இல்லாத பணியில் இருப்பவர்களுடைய வீட்டு சூழல் எப்படி பாதுகாப்பானதாக இருக்க முடியும்? நிலஞ்சனா பார்க்கிங்கை அடைந்து தன் ஸ்கூட்டியை நெருங்குகையில் ''என்ன ரொம்ப சந்தோஷமாய் இருக் கிறாற் போலிருக்கிறதே!'' என்ற குரலில் திடுக்கிட்டு திரும்பிப் பார்த்தாள்.

அவள் ஸ்கூட்டியின் மீது சாய்ந்தபடி ஜெயின் நின்று கொண்டிருந்தான். அவனை அங்கே எதிர்பாராத வியப்பில் விழிகள் விரிய, ''நீ இங்கே என்ன செய் கிறாய்?'' என்றாள் நிலஞ்சனா.

''கெஸ் பண்ணேன்!''

''இங்கே ஏதாவது கோர்ஸ் படிக்கப் போகிறாயா?''

''என்னைப் பார்த்தால் ஒரு ஸ்டூடண்ட் போலிருக் கிறதா நிலஞ்சனா?''

''இல்லைதான். ம்... இங்கு கேன்டீன் ஆரம்பிக்கிற எண்ணம் இருக்கிறதா?''

''ம்ஹூம்.''

''கடலை மிட்டாய் விற்க?''

''த்தூ.''

''இப்போது கண்டு பிடித்து விட்டேன். உன் ப்ரண்ட் யாரோ இங்கே படிக்கிறார்கள் அல்லது வேலை செய் கிறார்கள். அவர்களுடன் படம் பார்க்கத் திட்டமிட்டிருக் கிறாய்.''

''இதுவரை இல்லை. ஆனால் இப்போது உன்னைப் பார்த்ததும் உன்னுடன் ஒரு சினிமா பார்க்கலாம் என்று தோன்றுகிறது. பார்க்கலாமா?'' என்றான் ஜெயின். கண்களில் கேள்வியுடன்.

''பார்க்கலாம்தான். ஆனால் தியேட்டருக்குள் சென்றதும் உனக்கு என்னை மறந்து போய் விடுமே!''

''நீ அதை இன்னும் மறக்கவில்லை இல்லையா? ஆனால் நான் உன்னிடம் அப்படி நடந்து கொண்டதற்கு ஒரு காரணம் இருந்தது.''

''தெரியும். உன்னுடன் வந்திருந்த பெண்களுக்காகத் தான்.''

''உடன் வந்தது என் தங்கையும், எங்கள் குடும்ப நண்பர் திம்மப்பா அங்கிளின் பெண்ணும். அவர்களிடம் உன்னை அறிமுகம் செய்வதிலோ, அவர்கள் முன்பாக நாம் பேசிக் கொள்வதிலோ எனக்கு எந்தத் தயக்கமும் இல்லை. ஆனால் உனக்கு ஒரு விஷயத்தை உணர்த்த வேண்டும் என்று நினைத்தேன்.''

''என்ன விஷயம்?''

''யதார்த்தமான சந்திப்பையும், நட்பான உரையாட லையும் சம்பந்தப்பட்டவர்கள் கடுமையாக புறக்கணிக் கும்போது, எதிராளிக்கு ஏற்படும் உணர்வுகளை நீ புரிந்து கொள்ள வேண்டும் என்று எண்ணினேன்.''

நிலஞ்சனா திகைப்புடன் அவனைப் பார்த்தாள். ''அப்படியானால் நீ திட்டமிட்டுதான் எனனை தவிர்த்திருக்கிறாய்.''

''எஸ். உன்னை கலவரம் நடந்த இடத்திலிருந்து அழைத்து வந்து, உன் வீட்டில விட முயன்றபோது நீ முகம் திருப்பியது எனக்கும் வலித்தது நிலஞ்சனா.''

நிலஞ்சனா தலையை சரித்து அவனைப் பார்த்தாள். ''இது கொஞ்சம் வக்கிரமாக இல்லை? அதிகம் அறி முகம் இல்லாத ஆணிடம் பழக நேரும்போது ஏற்படும் தற்காப்பு உணர்ச்சிதான் அப்போது என மனதில் இருந்தது. அது உனக்கு அவமதிப்பையோ அவமானத் தையோ தரும் என்று நான் நினைக்கவே இல்லை. உன்னுடன் சகஜமாக பழக ஆரம்பித்த பின் எனக்கே உன்

மீது நம்பிக்கை ஏற்பட்டதும் அந்த புறக்கணிப்பு காணா மல் போய் இருக்கும். அதற்காக நீ இப்படி பழி வாங்குகிற விதத்தில் நடந்து கொண்டிருக்க வேண்டியதில்லை.''

''மை குட்னெஸ். உன்னை சீண்டுவதற்காக செய்தது தான். பழி என்ற பெரிய வார்த்தையை எல்லாம் உப யோகிக்காதே! எனக்கே கேட்க பயமாக இருக்கிறது'' என்றான் ஜெயின்.

அவன் முகத்தைப் பார்த்த நிலஞ்சனாவுக்கு தன்னை அறியாமல் சிரிப்பு வந்தது. அந்த சிரிப்பில் கலந்து கொண்ட ஜெயின் கேட்டான். ''போகலாமா?''

''எங்கே?''

''இப்போதுதானே பேசினோம். சினிமா பார்க்கப் போகலாம் என்று.''

''நான் உன்னுடன் படம் பார்க்க வருவதாக சொன் னேனா?''

''கிட்டத்தட்ட சொன்னாய்.''

நிலஞ்சனா முறைக்கவும் ஜெயின் சொன்னான்.

''இந்த முறை ஐஸ்க்ரீம் முதலில் உனக்குதான். ப்ராமிஸ்.''

''நீ இருக்கியே!''

''மண் வாசனையுடன் ஒரு படத்திற்கு அழைத்துப் போகிறேன் நிலா. ராஜ்குமார் நடித்த பழைய கன்னடப் படம் மீண்டும் திரைக்கு வந்திருக்கிறது. கன்னட திரை உலகை நீ அறிந்து கொள்ள நல்ல சான்ஸ்.''

''தேவையே இல்லை. என் முன்னால் விரிந்திருக்கும் உலகமே எனக்குப் போதும்'' என்றாள் நிலஞ்சனா.

''நல்ல சான்ஸை மிஸ் செய்கிறாய்...'' என்கையில் நிலஞ்சனாவின் போன் ஒலித்தது. ''நிலஞ்சனா நீ எங்கே இருக்கிறாய்?'' என்றாள் ஷீத்தல்.

''வந்து கொண்டே இருக்கிறேன்'' என போனை அணைத்த நிலஞ்சனா ஜெயினிடம் விடை பெற்றாள்.

''நான் எதற்காக வந்தேன் என்று தெரிந்து கொள் ளாமலே போகிறாயா?'' என்றான் ஜெயின்.

''ஓகே. என்னால் கெஸ் பண்ண முடியவில்லை. நீயே சொல்லி விடு'' என்றாள் நிலஞ்சனா.

''உனக்கு ஒன்றைத் தருவதற்காக வந்தேன்.''

''சரி தா'' நிலஞ்சனா கையை நீட்டினாள்.

''அது ஒற்றைக் கையில் தருகிற பொருள் இல்லை.''

''அப்படி என்ன கொண்டு வந்திருக்கிறாய்?''

''எதையுமே யோசிக்க மாட்டாயா நீ?''

''என் கற்பனைத் திறன் மிகவும் மோசம். நீயே சொல்லி விடு ஜெயின்.''

''செல்கிறேன். அதற்காகத்தானே வந்திருக்கிறேன்.'' என்றபடி ஜெயின் அவளை நெருங்கினான். நிலஞ்சனா தன்னையறியாமல் பின்னால் நகர்ந்தாள். கல்லூரி நேரம் முடிந்து விட்டபடியால் பார்க்கிங் ஏரியா ஏறக்குறைய காலியாக இருந்தது. பின்னால் நகர்ந்து கொண்டே சென்ற நிலஞ்சனா ஒரு பைக் இடித்ததும் நகர வழியின்றி நின்றாள். ஜெயினின் கரங்கள் அவளின் இருபுறமும் நீண்டு பின்னாலிருந்த பைக்கைப் பற்றின. வெளியேற வழியின்றி அவன் கரங்களுக்குள் சிறைப்பட்ட நிலஞ்சனா ''ப்ளீஸ்'' என்றாள் அவனிடம் கெஞ்சலாக.

பதிலாக அவன் ஒரு புன்னகையுடன் அவளை நோக்கிக் குனிந்தான். அவன் அருகாமை அவளை கலவரப் படுத்தியது. உணர்ச்சி வசத்தில் கரங்கள் நடுங்கின. நெற்றியில் மெல்லிய வியர்வை அரும்பியது. அங்கிருந்து சென்று விடும் பொருட்டு ஜெயின் நெஞ்சில் கை பதித்து அவனை பின்னால் தள்ளினாள்.

ஜெயின் தன் நெஞ்சில் பதிந்த விரல்களை இறுகப் பற்றினான். ''நம் ஒவ்வொரு சந்திப்பின் முடிவிலும் நீ என்னிடமிருந்து விலகி ஓடுகிறாய் நிலஞ்சனா.''

''உன்னிடம் பேச எனக்கு எதுவும் இல்லை. அதனால் தான்.''

''எனக்கென்னவோ உன்னிடமிருந்தே நீ விலகி ஓடுவதைப் போல் தோன்றுகிறதே, அது உண்மை இல்லையா?''

அங்கிருந்து செல்ல முயற்சித்த நிலஞ்சனா சில நொடிகள் அசைவின்றி நின்றாள். பிறகு ''ஜெயின் என் நண்பர்கள் எனக்காகக் காத்திருக்கிறார்கள்'' என்றாள் கரகரப்பான குரலில்.

''சரி நான் தருவதை வாங்கிக் கொண்டு போ.''

''எதுவும் தேவையில்லை.''

''உனக்குத் தேவையில்லாவிட்டாலும் எனக்குக் கொடுக்கிற கடமை இருக்கிறது'' ஜெயினின் கரங்கள் அவளுக்குப் பின்புறமிருந்த வண்டியை இழுக்க, நிலஞ்சனா அவன் நெஞ்சில் சாய்ந்தாள். விழுந்து விடாதிருக்கும் பொருட்டு அவள் கைகள் தன்னையறியாமல் ஜெயினின் முதுகைப் பற்றின. தன்னை அணைத்தபடி

நின்றிருந்தவளின் தோளைப் பற்றிய ஜெயின் ''நிலா'' என்றான் அவள் காதருகே.

காதில் உரசிய இதழ்களின் குறுகுறுப்பில் சற்றே அசைந்த நிலஞ்சனா ''நீ சொன்ன வார்த்தைக்கு தமிழில் ஒரு பொருள் இருக்கிறது தெரியுமா?'' என்றாள்.

ஜெயினின் கரங்கள் மிருதுவாக அவள் தலையை வருடின. ''எனக்குத் தெரியும். இத்தனை அழகான பெண்ணை குறிப்பதற்கு தகுதியாய் பூமியில் எதுவுமே இல்லை. அதனால்தான் நிலா என்றேன்.''

நிலஞ்சனாவுக்கு முன்னால் மாயத்திரை ஒன்று விரிந்தது. அதில் ஜெயினையும், அவளையும் தவிர எல்லோரும் மறைந்து போனார்கள். காதை உரசிய ஜெயினின் இதழ்கள் மெதுவாக நகர்ந்து நெற்றியில் பதிந்தன. நிலஞ்சனாவின் கண்களில் துளிர்த்த நீர் இமைகளின் விளிம்பில் இறங்கி நின்றது. இருவரும் பேச்சை மறந்து போன சில நிமிடங்களுக்குப் பிறகு தொலைவில் யாரோ வரும் ஓசை கேட்டது. ஜெயின் சடாரென அவளிடமிருந்து விலகினான். சுற்றியிருந்த திரை பளீரென விலகியது. நிலஞ்சனா நடந்தவற்றை நம்ப முடியாமல் திகைத்தாள்.

தொலைவில் கேட்ட குரல்கள் அருகே நெருங்கின. ''ஹாய்'' என்றான் நிலஞ்சனாவின் பக்கத்து வகுப்பில் படிக்கும் உமர்அப்துல்லா. ''நிலஞ்சனா உன் வகுப்பு முடிந்து வெகு நேரமாயிற்றே. இன்னும் கிளம்பவில்லையா?'' என்றான் அவளிடம்.

நிலஞ்சனாவின் மூளை வேலை செய்ய மறுத்தது. பதில் பேசாது நின்றிருந்தவளின் உதவிக்கு வந்தான்

ஜெயின். ''பள்ளி குழந்தைகள் மாதிரி வகுப்பு முடிந் ததும் ஓடிவிட முடியுமா? அவர்கள் லைப்ரரிக்கோ, நோட்ஸ் எழுதவோ செய்திருக்கலாம்.''

''இருக்கலாம். நான் அதை யோசிக்கவே இல்லை'' என்ற உமர் இருவரையும் அறிமுகம் செய்து வைத்தான். ஜெயினின் தம்பிதான் உமர் என்பது நிலஞ்சனாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. ''ஹலோ'' என்றான் ஜெயின் சம்பிரதாயமாக.

வெவ்வேறு சூழ்நிலையில் வேறுவேறு ஆட்கள் இவனை எனக்கு அறிமுகம் செய்து கொண்டே இருக்கிறார்கள். எதேச்சையான சம்பவங்கள் தொடர்ந்து நிகழ்வது சாத்தியமா என்ற யோசனையுடன் ''ஹலோ'' என்ற நிலஞ்சனாவுக்கு ஜெயினின் முகத்தைப் பார்க்க முடியாத தயக்கம் எழுந்தது.

ஜெயின் அவள் மனநிலையை உணர்ந்தவனாக ''பை நிலஞ்சனா. உங்களுக்கு நேரமாகி விட்டிருக்கும். ஜாக்கிரதையாக போய் சேருங்கள்'' என்றான் அவளிடம்.

இருவருக்கும் பொதுவாக தலையசைத்து விட்டுக் கிளம்பிய நிலஞ்சனா தனக்காக காத்திருந்த நண்பர்களை மறந்து போனாள்.

மனதில் அலையலையாய் எழுந்த எண்ணங்களுக் கும் குழப்பங்களுக்கும் இடையே கவனமாய் வண்டியை செலுத்தி கபின் ரோடின் இராணுவ குடியிருப்புக்குள் நுழைந்தாள். வண்டியை நிறுத்தி லாக் செய்யும்போது அங்கே வந்த தன்வீர் ''உன்னைப் பார்க்க வேண்டும் நினைத்துக் கொண்டே இருந்தேன். நீயே வந்து

நிற்கிறாய். வாட் எ கோ இன்ஸிடெண்ட்'' என்றான் அவளிடம்.

''உங்களுக்கு பார்க்கிங் ஏரியாவில் ட்யூட்டி போட்டிருக்கிறார்களா தன்வீர்?'' என்றாள் நிலஞ்சனா.

''இல்லையே. ஏன் கேட்கிறாய்?''

''நான் பார்க்கிற போதெல்லாம் நீங்கள் இங்கே நின்றுகொண்டிருக்கிறீர்கள். அல்லது யாரையாவது பிக்கப் அல்லது டிராப் செய்கிறீர்கள். நீங்கள் ஆபீஸ் போய் நான் பார்த்ததே இல்லை.''

''குட் ஜோக்'' தன்வீர் பெரிதாகச் சிரித்தான். ''என் வேலையைப் பற்றி மேஜர் சாரிடம் கேட்டுப் பார். தன்வீர் ட்யூட்டியில் எத்தனை சின்சியர் என்று தெரியும். அடுத்தது நான் வாழ்க்கையில் முதன் முதலாய் பிக்கப் செய்த பெண் நீ மட்டுமே.''

பேச்சை வளர்த்த விரும்பாத நிலஞ்சனா ''ஓகே தன்வீர் பிறகு பார்க்கலாம்'' என அங்கிருந்து கிளம்பினாள்.

''இதை மறந்து விட்டுப் போகிறாயே!'' தன்வீர் அவள் ஸ்கூட்டரின் கேரியரில் கட்டப்பட்டிருந்த அட்டைப் பெட்டியை எடுத்து அவளிடம் கொடுத்தான்.

பெட்டியினுள் இருந்த செடிகளைப் பார்த்த நிலஞ்சனா திகைத்தாள். 'இது எப்படி என் வண்டியில் வந்தது' நிலஞ்சனாவின் யோசனையைப் பார்த்த தன்வீர் ''நான் வேண்டுமானால் வீடுவரை கொண்டு வந்து தரட்டுமா?'' என்றான் அவளிடம்.

தன்வீரை மறுத்துவிட்டு பெட்டியைப் பெற்றுக் கொண்டு நிலஞ்சனா வீட்டிற்குச் சென்றாள். ''இன்று

லால்பாக் போயிருந்தாயா?'' என்றாள் சுனிதா அவளைப் பார்த்ததும்,

''ஏன் கேட்கிறாய்?''

''அன்று நாம் லால்பாக்கில் தவற விட்ட செடிகளை எடுத்து வந்திருக்கிறாயே என்று கேட்டேன். வாட்ச்மேன் எடுத்து வைத்திருந்தானா?''

''ஆமாம்'' என்று தலையசைத்த நிலஞ்சனாவுக்கு இது ஜெயினின் வேலைதான் என்று புரிந்து போனது. இதை தருவதற்காகத்தான் கல்லூரிக்கு வந்திருக்கிறான். நிலஞ்சனாவைப் பார்த்ததும் விளையாட்டாய் சீண்டப் போய் என்னவோ நடந்தது. நிலஞ்சனாவின் முகம் சூடானது. அண்ணி எதையோ கண்டுபிடித்து கேட்கப் போகிறாள் என்ற எண்ணத்தில் மனம் படபடத்தது.

இரவு சீக்கிரமே தூங்கப் போவதாகச் சொல்லிவிட்டு போய் படுத்த போதும் கண்களை மூட முடியாமல் மனம் கனத்தது. ஜெயினை சந்தித்த முதல் நாள் நினைவுக்கு வந்தது. அதன் பிறகான சந்திப்புகள். இவ்வளவு பெரிய ஊரில் இவனை மட்டும் ஏன் அடிக்கடி சந்தித்தேன்? அடிக்கடி சந்திக்க நேர்ந்தால் ஒருவர் மீது பிரியம் ஏற்படக் கூடுமா? தன்வீர் ஜெயினை விட அழகானவன். நாசூக்காகவும், மென்மையாகவும் நடந்து கொள்ளத் தெரிந்தவன். ஏறக்குறைய தினமும் ஏதோ ஒரு காரணத்திற்காக அவனைச் சந்திக்க நேர்கிறது. அண்ணனின் அபிமான ஜூனியர், குடும்ப நண்பன் என்ற நிலையில் இருப்பவன் என்றபோதும் அவன் பேச்சளவில் கூட நெருக்கம் காட்டத் துணிந்ததில்லை. ஜெயின் இன்று என்னிடம் உரிமையுடன் நெருங்கியதற்கு நான்தான் காரணம்.

என்னுடைய நடவடிக்கைகள் அவனுக்கு எதையோ உணர்த்தி இருக்க வேண்டும். நிலஞ்சனாவுக்கு துக்கம் ஏற்பட்டது. கடந்த கால நினைவுகளிலிருந்து விடுபடும் முயற்சியில் இங்கே வந்து எதிர்கால சிக்கல்களில் மாட்டிக் கொள்ளக் கூடாது. என் ஒவ்வொரு செயலும் வீட்டில் எல்லோருக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என்கையில் நான் இனி கவனமாக நடந்து கொள்ள வேண்டும். நிலஞ்சனா தனக்குள் ஒரு தீர்மானத்திற்கு வந்தாள்.

# 5

''சஞ்சனா ஹரியானாவுக்கு நீயும் வருகிறாய் இல்லையா? விடுமுறைக்கு சொல்லி விட்டாயா?'' என்றாள் சுனிதா.

''இல்லை அண்ணி விரைவில் எனக்கு செமஸ்டர் தேர்வுகள் தொடங்கப் போகின்றது. என்னால் வர முடியாது.''

''அப்படியானால்...'' என்று யோசித்த சுனிதா ''பிறகு போய்க் கொள்ளலாம்'' என்றாள் முடிவாக.

''அண்ணனுக்குப் பிறகு விடுமுறை கிடைக்காது. அதுவுமில்லாமல் உங்கள் பெற்றோர், அக்கா, அவர் களின் குழந்தைகள் எல்லோரும் உங்களுடன் கழிக்கப் போகும் இந்த விடுமுறைக்காக ஆறு மாதமாய்

காத்திருக்கிறார்கள். சந்தீப்பும் ப்ரதீப்பும் தினமும் இந்த ட்ரிப்பைப் பற்றிதான் பேசுகிறார்கள். என்னால் எல்லோரும் ஏமாற்றமடைவது கொஞ்சமும் சரியல்ல. நீங்கள் நால்வரும் இந்த முறை கண்டிப்பாக ஹரியானா போகத்தான் வேண்டும்.''

''குட் ஜோக். உன்னை. தனியாக விட்டுவிட்டு நாங்கள் போவதா?'' என்றாள் சுனிதா மறுப்புடன்.

''தனியாகவா?'' இப்போது நீதான் ஜோக் அடிக் கிறாய். நம் கேம்பஸ்ஸை விட பாதுகாப்பான இடம் எது? சமையலுக்கு ஆள், உதவிக்கு உபேந்திரா. என்ன பயம் எனக்கு?''

''இல்லை சஞ்சு, நான் ஒத்துக் கொண்டாலும் ஹரி இதற்கு சம்மதிக்க மாட்டார்.''

''நான் அண்ணாவிடம் பேசுகிறேன். நீ பயணத்திற்கு தயார் செய்'' என்றாள் நிலஞ்சனா.

ஓடிக் கொண்டிருந்த நிலஞ்சனாவுக்கு தாமதமாகத் தான் ஹரிஹரனுடன் பேச சமயம் கிடைத்தது. ''ஹரி யானா எங்கும் ஓடிவிடப் போவதில்லை. நேரம் கிடைக்கும் போது சேர்ந்து போகலாம். அல்லது சுனிதா குடும்பத்தை இங்கே வரவழைத்துக் கொள்ளலாம்'' என ஹரிஹரன் தொடக்கத்திலேயே முடித்து விட்டான்.

நிலஞ்சனா விடாமல் வற்புறுத்தியும் மறுப்புடன் தலையசைத்தவனிடம் இறுதியில் நிலஞ்சனா சொன் னாள். ''அண்ணி வருடத்துக்கு ஒருமுறை அவர்கள் ஊருக்குச் சென்று வருவதும் கூட இன்று என்னால் தடைபட்டுப் போனது என்ற குற்ற உணர்ச்சியை

என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இதே நிலை நீடித்தால் நான் இங்கே தங்கியிருப்பதைப் பற்றி யோசிக்க வேண்டி வரும்.''

அதன் பிறகே ஹரிஹரன் வழிக்கு வந்தான். அரை மனதாக ஊருக்குக் கிளம்பச் சம்மதித்தான். அண்ணியும், அவளும் ஷாப்பிங் போனார்கள். இந்திரா நகரின் அகல மான, சுத்தமான சாலைகளையும், நவீன பங்களாக் களையும், ப்ராண்டட் ஷோரூம்களையும், உணவு விடுதி களையும் ரசித்தபடியே குழந்தைகளுக்கு சட்டைகளும், ஜீன்ஸ்சும் வாங்கினார்கள். சிக்பெட் ஹோல் சேல் மார்க்கெட்டில் பரிசளிக்க புடவைகள் வாங்கிய பின் ப்ரிகேடியர் ரோட் போனார்கள். தெரு முழுக்க திருவிழா போல் குவிந்திருந்த இளைஞர் கூட்டத்தின் நடுவே கவனமாக நடந்து போய் 'டாய்ஸ் வேர்ல்ட்'டிற்குள் நுழைந்தார்க்ள். அண்ணியின் அக்கா குழந்தைகளுக்கு பொம்மைகள் வாங்கிக் கொண்டு திரும்புகையில் வழியெல்லாம் ஆண்களும் பெண்களும் ஜோடியாக அமர்ந்து அரட்டை அடித்தபடி சிகரெட்டையும், டீயையும் ஊதி தள்ளிக் கொண்டிருந்தனர். இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் பொறுக்கி எடுத்து வரப்பட்டது போலிருந்த அழகான பெண்கள் தெருவோரக் கடைகளில் கூலிங் க்ளாசும், ஸ்வெட்டரும், செருப்பும் பேரம் பேசிக் கொண்டிருந்தனர். நாட்டின் வேறு எந்த பகுதியிலாவது இத்தகைய கூட்டத்தைப் பார்க்க முடியுமா? என யோசித்தவாறே நிலஞ்சனா சுனிதா வுடன் நடந்தாள்.

நிலஞ்சனா அன்று காலையில் குளித்து தலையைத் துவட்டியபடி கண்ணாடி முன் நிற்கையில் எந்த

அலங்காரமும் இல்லாத முகமும், உடலும் பளிங்காய் மினுங்கியது. சுனிதா கூட சமீபத்தில் கணவனிடம் சொல்லிக் கொண்டிருந்தது நினைவுக்கு வந்தது. ''சஞ்சனா இங்கே வந்த பிறகு ரொம்பவும் அழகாகி விட்டாள் பார்த்தீர்களா? என் சமையல் திறமையை நீங்கள் பாராட்டியே ஆக வேண்டும்.''

''ஹா.. ஹா.. பெங்களூரின் இதமான தட்பவெப்பம் யாரையும் மாற்றி விடும்'' என்றான் ஹரிஹரன்.

''அப்படியானால் நீங்கள் ஏன் மாறவில்லை?''

''நான் அழகனாக உன் கண்களுக்குத் தெரியவில் லையா? எங்கே நன்றாக பார்த்துச் சொல்!'' ஹரிஹரன் தன் வேலைக்கே உரிய கம்பீரத்துடனும், கண்களில் காதலுடனும் நிமிர்ந்து நிற்க, சுனிதா மையலுடன் 'ஆமாம்' என தலையசைத்தாள்.

யோசித்தபடி நின்றிருந்த நிலஞ்சனாவின் செல்போன் ஒளிர்ந்து குறுஞ்செய்தி வந்திருப்பதை தெரியப்படுத் தியது. நிலஞ்சனா செய்தியைத் திறந்ததும் 'பூக்கள் நலமா?' - ஜெயின் என்ற வார்த்தைகள் விநோத உணர்வை ஏற்படுத்தின. அந்த செடிகளைக் கொண்டு வந்து வைத்த பிறகு பார்க்கவே இல்லை என்ற நினை வுடன் நிலஞ்சனா பால்கனிக்கு சென்றாள். தொட்டியில் புதிதாய் பூத்திருந்த பூக்கள் பனியில் நனைந்து காற்றில் தலையசைத்தன. பால்கனி முழுக்க பூக்கள் இருந்தாலும் ஒவ்வொரு முறை பூ மலரும் போதும் புதிதாய் ஒரு உயிர் ஜனித்து விட்ட பரவசம் ஏற்படத்தான் செய்கிறது. நிலஞ்சனா குனிந்து செடிக்கு வலிக்காமல் பூவை

வருடுகையில் அங்கே வந்த சுனிதா ''உன்னுடைய செடியில் புதிதாய் பூ பூத்திருக்கிறது போலிருக்கிறதே!'' என்றாள் மகிழ்ச்சியுடன்.

''ஆமாம் அண்ணி. எத்தனை அழகாய் இருக்கிறது பாரேன்'' என்றாள் நிலஞ்சனா உற்சாகத்துடன்.

''பூ என்றாலே அழகுதான். அதுவும் இது உன்னுடைய பூ. அதனால் நம் பால்கனியின் ராணி இதுதான். சரியா?'' என்றாள் சுனிதா கேலியுடன்.

பால்கனி கயிற்றிலிருந்த டவலை உருவிக் கொண்டு சுனிதா நகர்ந்துவிட, நிலஞ்சனாவின் கரங்கள் தன்னை யறியாமல் செல்போனின் எழுத்துக்களை தடவின.

''செடி மிக அழகாக பூத்திருக்கிறது. நன்றி.''

உடனே பதில் வந்தது. ''நான் நம்ப மாட்டேன்.''

''உண்மை.''

''சாத்தியமே இல்லை.''

''சத்தியம். நான் படம் பிடித்து அனுப்பவா?''

''உன்னை விட அழகான பூ ஒன்று இந்நகரில் இருக்கக் கூடும் என்பதை என்னால் கற்பனை செய்யக் கூட முடியவில்லை.''

''பெண்ணை பூவுடன் ஒப்பிடுவது போன தலை முறை பத்தாம் பசலித்தனம். ஒரு பூவும் மனிதனும் எப்படி ஒன்றாக முடியும்?''

''அழகான பெண்ணின் மீது ஏற்படும் பிரியத்தில் அழகியல் சார்ந்த எல்லாமும் அவளாகத் தெரிவது இயற்கை நிலா.''

ஜெயின் சொல்ல வந்த செய்தி அவளை கலவரப் படுத்தியது. ''அழியக் கூடிய அழகை கொண்டாடித் தீர்ப்பது முதிர்ச்சியற்ற செயல் ஜெயின்.''

''ஒருவரது பண்பால், நடத்தையால், மனசால் வெளிப் படும் அழகு நிச்சயம் கொண்டாடப்பட வேண்டியது நிலா.''

''என் மனசை, பண்பை நீ அதிகம் அறிந்திருக்க வாய்ப்பில்லாதபோது...'' நிலஞ்சனா வார்த்தைகளை கோர்க்கும் முன்னரே அவனிடமிருந்து பதில் வந்தது.

''இன்றும் நிறைய அறிந்து கொள்ளலாம். புரிந்து கொள்ளலாம். புரிந்ததைக் கொண்டாடலாம். ஆனால் அதை எல்லாம் செய்வதற்கு நாம் அடிக்கடி சந்திக்க வேண்டி இருக்கும்.''

'இவன் பொல்லாதவன்' என்ற நினைவில் நிலஞ்சனா வின் இதழ்களில் புன்னகை மலர்ந்தது.

''சஞ்சனா...'' சுனிதாவின் குரல் இரண்டாவது முறை யாக ஒலிக்கவும், நிலஞ்சனா போனை வைத்து விட்டு உள்ளே விரைந்தாள். ''இந்த பழங்களை வெட்டி புட் டிங்குடன் கலந்து வை'' என்ற சுனிதா ''இந்த காலையில் போனில் யார்?'' என்றாள் தன் போக்கில்.

''ஷீத்தல் அண்ணி. நோட்ஸ் வேண்டுமென்று கேட்டாள். பொய் சொல்லி பழக்கம் இல்லாததில் சொற்கள் திணறின. ''ஓகோ'' என்ற அண்ணியின் பதில் நம்பவில்லையோ என் படபடக்க வைத்தது. ''சஞ்சு உன் போன் பால்கனியில் கிடந்தது'' என அண்ணன் தந்த போனை பெற்றுக் கொள்கையில் கைகள் லேசாக

வெடவெடத்தன. அண்ணன் அநாகரீகமாய் நடந்து கொள்ள மாட்டான் என்பது தெரிந்தபோதும், போனை திறந்து பார்த்திருக்கக் கூடுமோ என்ற சந்தேகம் முதன் முறையாக எழுந்தது.

''சஞ்சு சொன்னதெல்லாம் நினைவிருக்கிறது இல் லையா? உனக்கு கொஞ்சம் அசௌகரியம் என்றாலும் போன் செய். நாங்கள் உடனே வந்து விடுவோம். எதற்கும் தயங்க வேண்டாம்'' என்றாள் சுனிதா பத் தாவது முறையாக.

''அத்தை நீயும் வந்தால்தான் போவோம்'' என்று கட்டிக் கொண்டார்கள் குழந்தைகள்.

ஹரிஹரன் கிளம்ப மனசே இன்றி நின்றிருந்தான். அண்ணனுக்கு ஆயிரம் சமாதானங்கள் சொல்லி, அண்ணி யிடம் ஜாக்கிரதையாக இருப்பதாக உறுதி அளித்து, குழந்தைகளைச் சமாளித்து அனுப்பி வைப்பதற்குள் நிலஞ்சனா திணறிப் போனாள்.

கார் கிளம்புகையில் ஹரிஹரன் சொன்னான். ''உன்னை தினமும் வந்து பார்த்து விட்டுப் போகும்படி தன்வீரிடம் சொல்லியிருக்கிறேன். எந்த உதவியானாலும் நீ தயங் காமல் அவனிடம் கேட்கலாம்.''

'சரி' என தலையசைத்த போதும் தன்வீரின் பாதுகாப் பில் அவள் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் அண்ணன் ஹரியானா போக சம்மதித்தானா என்ற எண்ணம் எழுந்தது.

எல்லோரும் கிளம்பிப் போனதும் வீட்டினுள் வந்து கதவைத் தாழிட்டாள். வெகு நாட்களுக்குப் பிறகு அந்த

நிசப்தம் மனதைத் தாக்கியது. வீட்டின் தனிமை நினைவுகளைத் தாக்க, மனம் பின்னோக்கிச் சென்றது. இராஸ்தானின் கடை வீதிகளில் பாந்தினி பாவாடையும், சட்டையுமாய் தன் பள்ளித் தோழன் கரண் தேசாயுடன் சுற்றி வந்தது நினைவுக்கு வந்தது. அவனுடன் சென்று வாங்கிய பட்டமும், கண்ணாடி பதித்த மண் வளை யல்களும், மரப்பாச்சி பொம்மைகளும் கண் முன் விரிந்தன.

ஜெய்ப்பூர் அருகே இருக்கும் கிராமத்திலிருந்து வந்து இவர்கள் வீட்டில் வேலை செய்யும் சோட்டுவுடன் சேர்ந்து கொண்டு திருவிழா பார்க்க அவன் கிராமத் திற்குப் போனது நினைவில் எழுந்தது. அப்பா ஜீப்பில் அனுப்பி வைப்பதாகச் சொன்னதை மறுத்து விட்டு ஒட்டகத்திலேயே பயணம் செய்து அந்தப் பாலைவன கிராமத்திற்குப் போனார்கள். வீட்டிற்கு வரும் விருந் தினர்களை தேவதைகளாக நினைத்து உபசரிக்கும் பண்பாடுள்ள இராஜஸ்தான் கிராம மக்கள் இவர்களைப் பார்த்துப், பார்த்து கவனித்தார்கள். கச்சோடியும், வெல்ல மும் பச்சை மிளகாயும் உறைக்கும் ஊறுகாயுடன் புல் காவும், ஜிலேபியும், பருப்பு கிச்சடியும், பாதாம்பாலும் வயிறு முட்ட சாப்பிட்டார்கள். ''உங்கள் வீட்டில் இத்தனை வகையாய் தினமும் சமைப்பார்களா?'' என வியப்புடன் இவர்கள் கேட்டதற்கு சோட்டு சிரித்தான்.

''இன்று பண்டிகை நாள் என்பதால் இப்படி இல்லை என்றால் தினமும் தணலில் வாட்டிய ரொட்டியும், மிர்ச்சி ஊறுகாயும் தான் இருக்கும்'' குடையாய் விரிந்த கலர் பாவாடைகளுடன் சோட்டுவின் தங்கையும், அவள்

தோழிகளும் இவர்களுடன் சேர்ந்து கொண்டு ரங்கராட்டினம் சுற்றினார்கள். முழங்கை வரை மருதாணி ஏறிய கரங்களில் குச்சி ஐசை பிடித்தபடி சர்பத்தில் நனைத்து உறிஞ்சுகையில் உடையெல்லாம் சர்பத்தும், ஐஸ்சும் வழிந்து பிசுபிசுக்கும். பிறகு ஆரஞ்சு, ஊதா, பிங்க் எனெ உறிஞ்சுகையில் நிறமேறிய உதடுகளை குவித்து கலர் பார்ப்பார்கள். களிமண்ணால் சுட்டு கண்ணாடி ஒட்டிய பேனா, சாவி வளையங்கள், சுருக்கு பைகள், யானை வர மர உண்டியல், ஜிகினா மினுக்கும் போட்டோ ப்ரேம்கள் என ஒவ்வொரு வருடமும் அவர்கள் வாங்கி வந்து குவித்த பொருட்கள் ஜெய்ப்பூரில் இன்னமும் மிச்சம் இருக்கிறது. சோட்டுவும் திருமணமாகி மனைவியுடன் ஜெய்ப்பூரிலேயே இருக்கிறான். கரண்தேசாயும், அவளும் தான் இல்லை. கரண் தேசாய் எத்தனை இனிமையானவன்! முகத்தில் எப்போதும் ஒரு சிரிப்பு இருந்து கொண்டே அடிபட்டு அவன் அழுதபோது கூட இதழ்கள் புன்னகைப்பது போலவே இருந்தது. அவன் யாரிடமும் கோபப்பட்டோ, சண்டை போட்டோ அவள் பார்த்ததே இல்லை. அவன் பெரியவனானதும் இராணுவத்தில் சேர்ந்த போது நிலஞ்சனாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. ''கோபமே இல்லாமல் வளர்ந்தவன் இராணுவத்தில் எப்படி சண்டையிடுவாய்?'' என்றாள் அவனிடம்.

கரண் தேசாய் சிரித்தான். ''இராணுவ வீரர்கள் கோபத்துடன் சண்டையிட்டால் நிதானம் இழப்பார்கள். சிந்திக்கும் அறிவும் இருக்காது. எனவே சிப்பாய்க்கு கோபம் இருக்காது நிலஞ்சனா. கடமை உணர்ச்சிதான் இருக்கும். சிப்பாய்கள் நாட்டை காக்கும் கடமைக்காகத்தான்

போரில் ஈடுபடுகிறார்கள். தங்கள் கோபத்தை தீர்த்துக் கொள்வதற்காக அல்ல. அண்டை நாட்டு இராணுவ வீரர்களும் நாங்களும் பண்டிகைகளுக்கு இனிப்பு பரிமாறிக் கொள்வோம். 'வாகா'வில் இருந்தபோது என் நண்பனின் மனைவி பாகிஸ்தானிய வீரர்களுக்கு ராக்கி கூட கட்டியிருக்கிறாள்.

எல்லையை தாண்டாமல் அன்பை பரிமாறிக் கொள் வோம். அதே சமயம் மேலிடத்திலிருந்து ஒரு கட்டளை வந்தால் போதும். நிலமை மாறி விடும். நண்பன் எதிரியாகி விடுவான். அது கோபத்தால் அல்ல. கடமை உணர்ச்சியால்.''

நிலஞ்சனாவுக்கு அவன் சுபாவம் ஆச்சரியமாக இருந்தபோதும் கரண் தேசாய் அப்படியேதான் இருந் தான். முரட்டுத் தனமாக இராணுவ பயிற்சியோ, கடுமை யான அனுபவங்களோ அவனிடம் எந்த பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. அவள் கடைசியாக அவனைப் பார்த்தபோது கூட தூக்கத்தில் புன்னகைப்பவனைப் போலிருந்தான். யாரையும் காயப் படுத்தக் கூடாது என்பதை கொள்கையாகவே வைத்திருந்தவனை ஏன் காயப்படுத்தினார்கள்? நல்லவர்கள் வாழ தகுதியற்று போய் விட்டதா நம் நாடு? நிலஞ்சனாவுக்கு துக்கமும், கோபமும் கிளர்ந்து எழவும், கதறி அழ ஆரம்பித்தாள்.

அண்ணனும், அண்ணியும் கிளம்பிப் போய் மூன்று நாட்கள் ஆயின. இன்னமும் மனம் சோர்வாக இருந்தது. கல்லூரி முடிந்து வீடு வந்ததும் சூழ்ந்திருக்கும் தனி மையில் நினைவுகளில் மூழ்கிப் போவதைத் தவிர்க்க முடியவில்லை. தன்வீர் சத்தியத்திற்கு கட்டுப்பட்டாற்

போல் தினமும் வந்து நலம் விசாரித்து விட்டுச் செல் கிறான். உபேந்திராவுக்கு ட்யூட்டி இல்லை என்றபோதும் அண்ணனின் கபோர்ட்களை தூசி தட்டி, படுக்கை விரிப்புகளை சரி செய்து விட்டுப் போகிறான். பத்மஜா அடிக்கடி எதையாவது சமைத்துக் கொடுத்தனுப்புகிறாள். என்றபோதும் ஆளில்லாத வீடு அமைதியாக இருந்தது. அடுத்து வந்த வார விடுமுறை நாட்களை என்ன செய்வது என்ற யோசனையில் நிலஞ்சனா இருந்தபோது விக்ரம் சர்மா போன் செய்தான்.

''நிலஞ்சனா சனிக்கிழமை மதியம் என் வீட்டிற்கு சாப்பிட வரவேண்டும். நம் ப்ரண்ட்சையும் அழைத்திருக் கிறேன். ஓகேவா?'' என்றான்.

''டபுள் ஓகே'' என்றாள் நிலஞ்சனா மகிழ்ச்சியுடன். சனிக்கிழமை அன்று முழங்காலுக்கும் கீழே இறங்கி நின்ற த்ரீபோர்த் பாவாடையும், க்ராப் டாப்பும் அணிந்து கண்ணாடியை பார்க்கையில், சிவப்பு நிற கட்டம் போட்ட பாவாடையும் வெள்ளை சட்டையுமாய் பள் ளிக்கு ஓடிய நிலஞ்சனா நினைவுக்கு வந்தாள். வய தாகிப் போனது மனதிற்கு மட்டும்தான். அனுபவங் களையும், வலிகளையும் தோற்றம் பிரதிபலிப்பதில்லை என்று தோன்றியது.

மடிவாலாவிலிருந்த விக்ரம் சர்மாவின் வீட்டிற்கு அவள் போனபோது அவர்களது கல்லூரித் தோழர் களுடன், வேறு சில நண்பர்களும் வந்திருந்தார்கள். ''இன்று ஏதேனும் விசேஷமா?'' என்றாள் நிலஞ்சனா பாக்கியாவிடம்.

''விக்ரம் பெற்றோரின் வெட்டிங் ஆன்வர்சரியாம்'' என்றாள் பாக்கியா.

''முன்பே சொல்லியிருக்க வேண்டாமா? நான் ஒரு கிப்ட் கூட வாங்கி வரவில்லை'' என்றாள் நிலஞ்சனா.

''நாங்களும் தான்'' என்றான் சார்ல்ஸ்.

விக்ரம் சர்மா கைகளைத் தட்டினான். ''டியர் ப்ரெண்ட்ஸ் என் பெற்றோருடன் உங்களுக்கும் சேர்த்து சர்ப்ரஸை பண்ணவே முன்கூட்டியே சொல்லவில்லை. இன்று நம்முடைய சந்தோஷத்தை மட்டும் பகிர்ந்து கொள்வோம்.

பரிசுகளை அல்ல என்றான் உரத்த குரலில். ஆர வாரமான கைத்தட்டல்களுக்கும், வாழ்த்துக்களுக்கும் இடையே விக்ரம் சர்மாவின் பெற்றோர் கேக் வெட்டி னார்கள். விருந்தினர்களுக்கு கண்கள் பனிக்க நன்றி கூறினார்கள். விக்ரமையும் அவன் தம்பியையும் அணைத்துக் கொண்டு முத்தமிட்டார்கள். சிரிப்பும், பேச்சுமான சில நிமிடங்களுக்கு பிறகு ஹோட்டலி லிருந்து வரவழைக்கப்பட்ட உணவை எல்லோரும் சாப்பிடத் தொடங்கினார்கள்.

''ஹலோ நிலஞ்சனா, நீ இங்கே வந்ததில் எனக்கு மிகவும் சந்தோஷம்'' என்றாள் நிலஞ்சனாவின் அருகில் வந்த விக்ரம் சர்மாவின் அம்மா.

''நான்தான் நிலஞ்சனா என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்றாள் நிலஞ்சனா வியப்புடன்.

''உங்கள் கல்லூரியிலேயே அழகான பெண் என்று சொல்லியிருந்தான். அதை வைத்துக் கண்டு பிடித்தேன்.''

''வாட் எ க்ரேட் இன்ஸல்ட்'' என்றாள் ஷீத்தல் கோபத்துடன்.

''நாங்களும் அதே கல்லூரியில் தான் படிக்கிறோம். நாங்கள் அழகாக இல்லையா? பாக்கியா, கிளம்பு போகலாம். இத்தனை அவமானத்திற்கு பிறகு நாம் இங்கே இருக்க வேண்டியதில்லை'' என்றாள் பாக்கியாவின் கைகளைப் பற்றி.

''கூல் பேபி. நிலஞ்சனா அழகு என்றால் நீ அழகில்லை என்று அர்த்தமா? அதுவும் உன் சிரிப்பைப் பார்த்த பிறகு உன்னை யாராவது அப்படிச் சொல்ல முடியுமா?'' என்றார் விக்ரம் சர்மாவின் அம்மா.

''சிரிப்பு மட்டுமா? இந்த தர்பூசணி சைஸ்சை விட்டு விட்டீர்களே!'' என்றான் அங்கு வந்த விக்ரம்சர்மா.

''நீ என்னைப் பற்றி எதுவும் சொல்ல வேண்டியதில்லை. உன் அபிப்பிராயம் இங்கு யாருக்கும் தேவையில்லை'' என்றாள் ஷீத்தல் அவனை முறைத்தபடி.

''சொல்லத்தான் சொல்லுவேன். ஏனென்றால் நீ என் ப்ரண்ட்.''

''இன்றிலிருந்து நீ என் எனிமி. ஆன்ட்டி இந்த விக்ரம் சர்மாவை இனி யார் என்றே தெரியாது எனக்கு.''

விக்ரம்சர்மாவின் அம்மா பிரியத்துடன் ஷீத்தலின் கன்னங்களைப் பற்றினாள். ''இத்தனை வளர்ந்த பிறகும் சின்னக் குழந்தைகள் போல் சண்டை போடலாமா ஷீத்தல்?'' இவனைப் பற்றி தெரியாதா உனக்கு?'' என்றார் மிருதுவான குரலில். விக்ரம் சர்மாவின் முதுகில் ஒன்று வைத்தவர்.

''வீட்டிற்கு வரும் விருந்தினர்களை உபசரிக்கக் கற்றுக் கொள் விக்ரம்'' என்றார்.

''விருந்தினர்களா யாரது?'' விக்ரம் சர்மா வியப்புடன் தேட, ''உங்களுக்காக பார்க்கிறேன் ஆன்ட்டி'' என ஷீத்தல் எகிற

அவன் அம்மா மீண்டும் கொஞ்சலாக சமாதானத்தை ஆரம்பித்தாள்.

''ஆன்ட்டி இஸ் வெரி ஸ்வீட்'' என்றாள் நிலஞ்சனா.

''யெஸ்'' என்றாள் பாக்கியா. ''ஆன்ட்டிக்கு விக்ரம் என்றால் உயிர். விக்ரமிற்கும் அப்படித்தான்'' என்றாள் குரலைத் தாழ்த்தி.

''இது இயற்கையான விஷயம் இல்லையா?''

''இல்லை. கணவனின் முதல் மனைவியின் பிள்ளையிடம் பிரியம் வைப்பது இயற்கையானதில்லை.''

''நீ என்ன சொல்கிறாய்?'' என்றாள் நிலஞ்சனா வியப்புடன். ''விக்ரம் சிறுவயதிலேயே அவன் அம்மா, அவன் அப்பாவை விட்டு போய் விட்டாள். ஆன்ட்டியின் கணவரும் இறந்து போய் கைக் குழந்தையுடன் தனியாக இருந்தார். இருவரும் வேலை காரணமாக அடிக்கடி சந்திக்க நேர்ந்ததில் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு மணந்து கொண்டார்கள். விக்ரமின் அம்மா இதே ஊரில் தான் வசிக்கிறாள். விக்ரமிற்கும் தெரியும். என்றாலும் அவனைப் பொறுத்தவரை இவர்கள் தான் அம்மா. இவன் தான் தம்பி.''

எப்போதும் இரட்டையர்களைப் போல சுற்றித் திரியும் விக்ரம் சர்மாவும் அவன் தம்பியும் உடன் பிறந்தவர்கள் இல்லை என்பது நம்பமுடியாததாக இருந்தது.

''இருவரும் என்ன இரகசியம் பேசுகிறீர்கள்?'' என ரமேஷ் சிரித்தபடி அவர்கள் அருகே வரவும், அடுத்தவர் அந்தரங்கத்தை நாகரீகமின்றி அலசினோம் என நிலஞ்சனாவுக்கு கூச்சம் ஏற்பட்டது. அதை மறைக்க முயற்சித்தவளாய் ''கிளம்பலாமா என்று பேசிக் கொண்டிருந்தோம்'' என்றாள்.

விக்ரம் குடும்பத்திடம் விடைபெற்று, தன்னோடு வீட்டிற்கு வர வேண்டும் என வற்புறுத்திய நண்பர்களை மறுத்து விட்டு நிலஞ்சனா ஸ்கூட்டியை எடுத்தாள். ஓட்ட ஆரம்பித்த சில நிமிடங்களில் ஸ்கூட்டியில் கடகடவென்று சத்தம் கேட்டது. வீட்டிற்கு போனதும் சர்வீஸ்சிற்கு விட வேண்டும் என்றெண்ணியபடி நிலஞ்சனா ஆக்ஸிலேட்டரை முறுக்கினாள். ஆனால் இரண்டு தெரு தாண்டுவதற்குள் ஸ்கூட்டர் 'தட்' என்ற சத்தத்துடன் நின்றது. நிலஞ்சனா இறங்கி நின்று கிக்கிரை உதைத்தாள். பெட்ரோல் செக் பண்ணினாள். அவளுக்கு தெரிந்த கைவைத்தியம் அனைத்தும் பார்த்தும் ஸ்கூட்டர் நகராமல் நின்றது. அருகில் மெக் கானிக் ஷெட் ஏதாவது இருக்கிறதா என்று பார்த்தாள். அந்த கடைவீதியில் அப்படி எதுவும் கண்ணில் படாமல் போகவே அருகிலிருந்த தள்ளுவண்டி கடையில் பழங்களை அடுக்கிக் கொண்டிருப்பவனிடம் ''இங்கே டூவீலர் சர்வீஸ் சென்டர் எதாவது இருக்கிறதா?'' என்றாள் நிலஞ்சனா.

''கொத்தில்லா'' அவன் தலையை அசைத்து விட்டு அப்போது வந்த கஸ்டமரை கவனிப்பதில் மும்மர மானான். சற்று யோசித்த நிலஞ்சனா விக்ரம் சர்மாவிற்கு

போன் செய்தாள். ''வீட்டில் எல்லோரும் சினிமாவுக்கு போகிறோம். நீ எங்கே இருக்கிறாய்?'' என்றான் விக்ரம் சர்மா. ஒரு நல்ல நாளின் உற்சாகத்தை குலைக்க மனமின்றி ''வீட்டிற்கு போய்க் கொண்டிருக்கிறேன்'' என்ற நிலஞ்சனா அடுத்து உபேந்திராவிற்கு போன் செய்தாள். அவன் போன் சுவிட்ச் ஆப் என்றதும் அடுத்து என்ன செய்வதென யோசித்தாள். வண்டியை தள்ளிக் கொண்டே சர்வீஸ் சென்டரை தேடுவது சிரமம். தன் வீரை அழைத்தால் உடனே வந்து விடுவான். வழக்க மாக அவன் உதவி செய்ய முன் வரும் போதெல்லாம் மறுத்து விட்டு தன் தேவைக்காகக் கூப்பிடுவதற்குத் தயக்கமாக இருந்தது. நிலஞ்சனா சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் பஜாரைப் பார்த்தபடி நின்றுக் கொண்டிருக்கையில் ''உனக்கு ஏதாவது தேவையா அம்மா?'' என்றார் அவள் அருகே பழம் வாங்கிக் கொண்டிருந்த பெரியவர். நீலகட்டமிட்ட லூங்கியும், வெண்ணிற குர்தாவும், மெல்லிய தாடியுமாய் நின் றிருந்த அவரை எங்கோ பார்த்த உணர்வில் நிலஞ்சனா தலையசைத்தாள். அவளுக்கு கன்னடம் புரியவில்லை போலும் என்றெண்ணிய அவர் அதையே ஆங்கிலத் தில் கேட்கவும், இந்த வண்டி ரிப்பேர் என்று நினைக் கிறேன் அங்கிள். இங்கே எங்காவது சரி செய்ய முடி யுமா?'' என்றாள் அவரிடம்.

''அடுத்த தெருவில் ஒரு மெக்கானிக் ஷாப் இருக் கிறது. இப்போது திறந்திருக்குமா என்று தெரிய வில்லை'' என்றார் பெரியவர்.

''அப்படியா? நான் போய்ப் பார்க்கிறேன். எப்படிப் போக வேண்டும்?''

''என் வீட்டிற்கு அருகில் தான். நான் இப்போது வீட்டிற்கு தான் போகிறேன். உனக்கு கடையை காண்பித்து விட்டுப் போகிறேன்'' என்றவர் அவளிடமிருந்த ஸ்கூட்டரை வாங்கி தள்ளிக் கொண்டே முன்னால் நடந்தார். இவரை எங்கே பார்த்தோம் என யோசித்தபடியே நிலஞ்சனா பின்தொடர்ந்தாள். எதிரே வந்த வாகனங்களுக்கு வழிவிட்டு மெதுவாக நடக்கையில் பெரியவர் சொன்னார். ''முன்பெல்லாம் நானும் என் நண்பன் திம்மப்பாவும் இதே தெருவில் சைக்கிள் ரேஸ் வைப்போம். திம்மப்பா தோற்றுப் போனால் நாலு நாளைக்கு யாருடனும் பேச மாட்டான். அவன் அப்பாவிடம் எனக்கு திட்டு விழும். இப்போது நடக்கக் கூட சிரமமாக இருக்கிறது. இதோ இந்த முனையில் ஒரு பெரிய கல் இருக்கும். என் மகன் சிறு வயதில் அதில் இடறி விழுந்து காயம்பட்டுக் கொண்டான். ஒரே அழுகை. எத்தனை சமாதானம் சொல்லியும் கேட்கவில்லை. கடைசியில் அந்தக் கல்லை தண்டித்த பிறகு தான் அமைதியானான்.''

''கல்லுக்குத் தண்டனையா? புதிதாக இருக்கிறதே!'' என்றாள் நிலஞ்சனா வியப்புடன்.

''ஆமாம்'' என்றார் பெரியவர் மர்ம சிரிப்புடன்.

''எப்படி அங்கிள்?''

''அந்தக் கல்லை தூக்கிக் கொண்டு போய் வீட்டு வாயிலில் வைத்து தினமும் அவன் அந்த கல்லை இடறி விடுவான்.''

''வாட் அன் ஐடியா! இப்படிக் கூடவா பழி தீர்ப்பார்கள்?'' என்றாள் நிலஞ்சனா சிரிப்புடன்.

''இல்லை'' என்றார் பெரியவர் பதட்டத்துடன். ''இது பழி இல்லை. சிறுவயதில் அவனை சமாதானப்படுத்த செய்தது. பிறகு அந்தக் கல்லும் எங்கள் வீட்டில் ஒரு நினைவுச் சின்னம் ஆகிப்போனது'' என்றவர் அமைதியானதும் ''அங்கிள் நான் ஏதோ விளையாட்டாய் சொன்னேன்'' என்றாள் நிலஞ்சனா சங்கடமாக.

''எனக்குப் புரிகிறது அம்மா. ஆனால் எதுவுமே விளையாட்டாய் இல்லை இப்போது'' என்றவர் தெரு திரும்பி சற்று தூரம் நடந்ததும் நின்றார். ''இதோ, இது தான் எங்கள் வீடு. எதிரே கடைசியில் இருப்பது மெக்கானிக் ஷாப். நீ என் வீட்டில் இருந்தால் நான் போய் மெக்கானிக்கிடம் காண்பித்து விட்டு வருகிறேன். அல்லது நீயே கூட வருவதானாலும் சரி. என்ன சொல்கிறாய்?'' என்றார்.

''யாரிடம் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்? அதுவும் தெருவில் நின்று?'' என்றபடியே வீட்டினுள் இருந்த உமரைக் கண்டதும் நிலஞ்சனாவுக்கு ஆச்சரியமாக இருந்தது. கூடவே பெரியவரை எங்கே பார்த்தோம் என்பதும் நினைவு வந்தது. நந்திகோவிலில் ஜெயின் னுடன் இருந்தவர். இவர் ஜெயினின் தந்தை. இது அவன் வீடு. காலச்சக்கரம் அவனை சுற்றியே நகர்வதாக தோன்ற ''ஹாய்'' என்றாள் நிலஞ்சனா.

''நிலஞ்சனா!'' என்ற உமர் ''அப்பா நிலஞ்சனாவை உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்றான் வியப்புடன்.

''நிலஞ்சனாவா யார் அது?'' புஷுர் அப்துல்லா. உமர் திகைப்புடன் பார்க்க, நிலஞ்சனா புன்னகைத்தாள்.

''அங்கிள் பேச்சு சுவாரஸ்யத்தில் என் பேரைக் கேட்க மறந்து போனார்.''

''ப்பா இது நிலஞ்சனா என் காலேஜ் மேட்'' உமர் அறிமுகம் செய்தான்.

.''சந்தோஷம் அம்மா'' என்றார் பஷீர் அப்துல்லா முகம் மலர.

''இன்று உன் நண்பனை காட்டவே இந்த வண்டி நின்றிருக்கிறது போலும். அல்லாவின் கருணை அள வில்லாதது. நீ உமருடன் உள்ளே போ. நான் வரு கிறேன்'' என ஸ்கூட்டர் மெக்கானிக்கைப் பார்க்க போனார்.

''நிலஞ்சனா ப்ளீஸ் கம்'' என்றான் உமர். கண்களில் மையும், பைஜாமாவுமாய் தலையில் தொப்பி அணிந்து உமர் வித்தியாசமாய் இருந்தான். இது தான் ஒரிஜினல் போலும். வெளியே சந்திக்கும் உமர் அப்துல்லா சமூகத்திற்காக மாற்றிக் கொண்டவன். கல்லூரிக்கென்று அவன் அணியும் ஜீன்ஸ்சுக்கும் கூலிங்க்ளாசுக்கும் அவனுக்கும் சம்பந்தமில்லை. அப்படியானால் ஒரி ஜினல் ஜெயின் எப்படியிருக்கக் கூடும். ஜெயினுக்குள் இருக்கும் உண்மையான, ஜெயினை பார்த்து வரும் ஆவலில் நிலஞ்சனா உள்ளே நுழைந்தாள்.

நுழைவாயில் மெக்காவின் பெரிய படம் வரவேற்றது. சந்தன நிற சுவர்களில் பச்சை நிற திரைசீலைகள் அசைந்தாடின. மிக விசாலமான அந்த வீட்டில் மிதந்து வந்த மசாலா வாசனையும், அத்தரின் மணமும் அது ஒரு இஸ்லாமிய வீடு என கட்டியம் கூறின. முற்றத்தில்

சாவகாசமாய் அமர்ந்து மீனை சுத்தம் செய்து கொண்டிருந்த பெண்மணியிடம் உமரின் சாயல் தெரிந்தது. வியப்புடன் நிலஞ்சனாவை பார்த்தவரிடம் உமர் அறிமுகம் செய்ததும் ''ஆஜாமா'' என்றாள் முகம் முழுக்க சிரிப்புடன். ''இங்கு உட்கார்ந்து கொள். உனக்கு சாப்பிட ஏதாவது கொண்டு வருகிறேன்'' என உள்ளே போக திரும்பியவளை தடுத்தாள் நிலஞ்சனா. ''இப்போது ஒரு விருந்திலிருந்து வருகிறேன் ஆன்டி. நிச்சயம் சாப்பிட முடியாது ப்ளீஸ்.''

''சரி அப்படியானால் குடிக்க ஏதாவது கொண்டு வருகிறேன்'' என ஷாகிரா கொண்டு வந்து கொடுத்த பானத்தை சுவைத்த நிரஞ்சனா ''க்ரேட்'' என்றாள் இரசித்து. ''இந்த ட்ரிங் மிகவும் வித்தியாசமாய் இருக்கிறதே! வீட்டிலேயே தயார் செய்தீர்களா ஆன்ட்டி?''

''ம். ஹரிஹரா என்று பெயர். தேங்காய் பாலும் பாதாமும் சேர்த்து எங்கள் குடும்பங்களில் பிரத்யேக மாக தயார் செய்வது வழக்கம். உனக்கு பிடித்திருக்கிறது இல்லையா? இனி தயார் செய்யும் போதெல்லாம் உனக்கு உமரிடம் கொடுத்தனுப்பகிறேன்'' என்றாள் ஷாகீரா பிரியத்துடன். அவளின் சாந்தமான முகத் தையும், கனிவு நிரம்பி கண்களையும் பார்க்கையில் ஜெயினின் அடாவடித்தனத்துடன் ஒத்துப் போகாமல் முரண்டியது.

ஷாகீரா பல நாள் பழகிய பாவத்துடன் பேசிக் கொண்டே போனாள் ''என் நாத்தனார் கொல்கத்தாவி லிருந்து வந்திருக்கிறார். தினமும் மீன் சாப்பிட்டு பழக்கம் அவர்களுக்கு. என் மாமியார் ஊருக்கு போயிருக்கிறார்.

என் கணவருக்கும் உமர், வஹிதாவுக்கும் கறி தான் பிடிக்கும். ஆனால் ஜெயின் இதில் எதையும் தொட மாட்டான்.''

''ஜெயின் யார் ஆன்டி?'' என்றாள் நிலஞ்சனா வியப்புடன். ''என் மூத்த மகன் நிலஞ்சனா. இன்னும் வரவில்லை. அவன் எப்பவும் சைவம் தான் சாப்பிடு வான். அசைவமே பிடிக்காது. பாய் வீட்டில் சைவ பிள்ளையா என எல்லோரும் ஆச்சரியமாய் கேட்பார்கள். அப்துல்கலாம் கூட சைவம் தான் என்பார் அவன் அப்பா. என்ன சாப்பிட்டாலும் அதை நேரத்தோடு சாப்பிட வேண்டும் என்பது தான் எனக்கு. ஜெயின் பயோடெக் னாலாஜி அப்புறம் எம்.பி.ஏ. என்று நிறைய படித்தான். சொந்தமாக ஒரு இயற்கை விவசாய பண்ணையும் ஹோட்டலும் வைத்திருக்கிறான். ஹம்பியில் எங்கள் உறவினர்கள் சிலர் நிலம் வைத்திருக்கின்றனர். அவர்கள் எல்லோரையும் இயற்கை விவசாயத்தில் ஈடுபட செய்ய கடுமையாக முயற்சி செய்து இப்போது அவர்களுக்கு இதில் ஆர்வம் வந்து விட்டது. இவனைப் போல ஆர்வமுள்ளவர்களை சேர்த்துக் கொண்டு மண்ணின் வளத்தை மேம்படுத்த முயற்சி மேற்கொண்டு வரு கிறான். எங்களிடம் இது பற்றிய நிறைய சொல்லுவான். 'அரசியலில் உணவு பிரிவு என்பது முதலில் இருந்தது. இப்போது உணவை வைத்தே அரசியல் நடக்கிறது' என்பான். ஒரு துளி உணவை வீணடித்தாலும் ரொம்பக் கோபம் வரும் அவனுக்கு.''

''அது எனக்கும் தெரியுமே!'' என்றாள் நிலஞ்சனா தன்னையறியாமல்.

''என்ன தெரியும்.'' என்றாள் ஷாகீரா வியப்புடன்.

''உணவு உற்பத்தியில் இத்தனை கவனம் செலுத்துபவர்களால் உணவை எப்படி வீணாக்க முடியும்'' என்றாள் சமாளிப்பாக.

''சரியாகச் சொன்னாய்'' என்றாள் ஷாகீரா மெச்சுதலாக.

''ஜெயின் அப்பாவின் கடையையும் அடிக்கடி போய் பார்த்துக் கொள்வான். எப்போதும் வேலை தான் அவனுக்கு. சரியாக பேச, சிரிக்க கூட நேரமில்லை என்றால் பாரேன்?''

அம்மாக்கள் அப்பாவிகள் எப்போதும் என்ற நினைவில் நிலஞ்சனா புன்னகைத்தாள்.

''மூத்த மகனைப் பற்றிப் பேச ஆரம்பித்தால் என் அம்மா வால் நிறுத்தவே முடியாது. என் வீட்டினரை அறிமுகம் செய்யக் கூட மறந்து போனார்கள்'' என்றபடியே அங்கே வந்த உமர் முற்றத்தை தாண்டி உள்ளே சென்று அழைத்து வந்த பெண்மணி நிலஞ்சனாவைப் பார்த்ததும் வியப்புடன் புன்னகைத்தார். ''நாங்கள் லால்பாக்கில் சந்தித்திருக்கிறோம்'' என்றாள் நிலஞ்சனா.

''நீ மறுபடி லால்பாக் வரவே இல்லையா நிலஞ்சனா. நான் போகும் போதெல்லாம் உன்னைத் தேடினேன்'' என்றார் நபீஸா.

அன்று லால்பாக்கில் ஜெயினுடன் செலவழித்த நிமிடங்களின் நினைவில் நிலஞ்சனா ''இல்லை'' என தலையசைத்தாள்.

''நிலஞ்சனா உன் வண்டியை மெக்கானிக் ஷாப்பில் செக் செய்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் பத்து நிமிடத்தில் என்ன ப்ராப்ளம் என்று போன் செய்வார்கள்'' என்றான் உமர்.

''அதுவரை அக்காவிடம் பேசிக் கொண்டிரு. நான் வந்து விடுகிறேன்'' என ஷாகீரா எழுந்து செல்லவும். நிலஞ்சனா நபீஸாவிடம் பேச ஆரம்பித்தாள். ''உங்கள் குழந்தைகள் எங்கே ஆன்டி? அவர்கள் உங்களுடன் வரவில்லையா?''

''இல்லை நிலஞ்சனா. எனக்கு மூன்று பெண்கள். இருவருக்கு திருமணமாகி விட்டது. கடைசி பெண் ப்ளஸ்டூ வரை படித்து விட்டு மதம் சம்பந்தமான படிப்பு படித்தாள். இப்போது கொல்கத்தாவில் இருக்கிறாள். அங்கு எங்களுடையது பெரிய கூட்டுக் குடும்பம். என் கணவர் இப்போது உயிருடன் இல்லை. எனக்கு கொஞ்சம் உடம்பு சரியில்லாததால் இங்கே இருக்க லாம் என்று வந்திருக்கிறேன்.''

''ஓ! சிகிச்சை எடுத்துக் கொள்கிறீர்களா ஆன்ட்டி?''

''அதற்கெல்லாம் அவசரமில்லை நிலஞ்சனா?''

''அப்படியானால்?''

நபீஸா கைகளை விரித்து சிரித்தாள். ''இது முடிந்த கேஸ். தேறாது.''

''காட். உங்களுக்கு என்ன உடம்புக்கு?'' என்றாள் நிலஞ்சனா திகைப்புடன்.

நபீஸா அலட்சியத்துடன் மேவாயை துடைத்தாள். ''கேன்சர் என்று சொல்கிறார்கள்.''

நிலஞ்சனா அனுதாபத்துடன் அவள் கைகளைப் பற்றினாள்.

''சரியாகி விடும் ஆன்டி. இப்போது நிறைய நவீன மருத்துவ சிகிச்சைகள் இருக்கின்றன. அதிகம் படித்த மருத்துவர்கள் இருக்கிறார்கள். இன்றைக்கு கேன்சரை கண்டு பயப்பட வேண்டிய நிலை மாறியிருக்கிறது.''

''எத்தனை சிறந்த மருத்துவராலும் போகிற உயிரை தடுத்து நிறுத்த முடியாது இல்லையா?''

''நீங்கள் ஏன் இப்படி அவநம்பிக்கையுடன் பேசுகிறீர்கள்?''

''இல்லை நிலஞ்சனா எனக்கு நிறைய நம்பிக்கை இருக்கிறது. இந்த உலகத்தின் மீதும், அதில் வாழும் மனிதர்கள் மீதும் அசாத்திய நம்பிக்கை எனக்கு. கோடையையும் குளிரையும் மாறி மாறி தரும் இயற்கை மீது, இன்பத்தையும், துன்பத்தையும் சேர்த்தே தரும். கடவுள் மீது தினமும் வாக்கிங் போகையில் பார்த்ததும் புன்னகைக்கும் நட்புகள் மீது, உன்னைப் போல் புதிதாய் கிடைக்கும் உறவுகள் மீது, இன்றும் பால்காரி ஹேமந், வீட்டு வேலை செய்யும் ஆஷா என எல்லாவற்றின் மீதும் எல்லோர் மீதும் அளவு கடந்த நம்பிக்கை எனக்கு. இப்போது பார்த்தாயே என் அண்ணி, அவர்களுக்கு அன்பைத் தவிர எதுவும் தெரியாது. அதுவும் ஜெயின்''.... என்கையில் நபீஸாவின் குரல் உடைந்தது. ''எங்கள் எல்லோருக்கும் பிரியமானவன் அவன். அவன் குணம் அபூர்வமானது நிலஞ்சனா. பழகியவர்களின் நிறை குறைகளோடு அவர்களை முழுதாய் ஏற்றுக் கொள்ளும்

மனசு எல்லோருக்கும் வாய்க்காது. ஜெயின் அப்படி ஒரு மனசுடையவன். எனது கடைசி நம்பிக்கை அவன் தான் நிலஞ்சனா. அவன் கையில் என் பெண்ணை ஒப்படைத்து விட்டால் நான் நிம்மதியாய் கண்ணை மூடுவேன்.''

ஜெயினின் அந்தக் குறும்புத்தனத்திற்கும், சிரிப்பிற்கும் பின்னால் உடல் நலமில்லாத அத்தையின் எதிர்பார்ப்புகளும் அதை நிறைவேற்ற வேண்டிய கடமையும் இருக்கக் கூடும் என்று நம்ப முடியாத வியப்புடன் நிலஞ்சனா சொன்னாள். ''உங்கள் விருப்பம் நிச்சயம் நிறைவேறும் ஆன்ட்டி. எதற்காகவும் நீங்கள் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை.''

''விருந்தாளிக்கு சாப்பிட ஏதாவது கொடுத்தீர்களா? அல்லது வெறும் அரட்டைதானா?'' என பஷீர் அவர்கள் அருகே வந்து அமரவும் பேச்சு மாறியது.

''உன் விருந்தாளி திரவ ஆகாரம் தவிர வேறு எதுவும் தொடவில்லை. நீ இத்தனை நேரம் எங்கே போயிருந் தாய்?'' என்றாள் நபீஸா.

''தொழுகைக்கு போயிருந்தேன்'' என்றார் பஷீர் அப்துல்லா. ''எத்தனை வேலைகளுக்கு இடையிலும் நீங்கள் தொழுகையை மிஸ் பண்ண மாட்டீர்கள் இல் லையா?'' என்றாள் நிலஞ்சனா.

''சிறுவயதிலிருந்து ஊறிப் போன பழக்கம் அம்மா. உண்வது, உறங்குவது போல தொழுகையும் இயற்கை யாகவே நடக்கும். ஒரு நாளைக்கு ஐந்து முறை தொழு வதின் மூலம் மனதில் தீயவற்றை அண்டவிடாமல் ஒரு

முகப்படுத்துபவன் அதே பழக்கத்தில் மீதியிருக்கும் நேரமும் தவறு செய்ய மாட்டான் என்பது இஸ்லாத்தின் நம்பிக்கை'' என்ற பஷுர் சிறிது மௌனத்திற்கு பின் சொன்னார். ''நம்பிக்கை என்பது நம்புபவர்களுக்கு மட்டும் தான் நிலஞ்சனா. நம்பிக்கை என்ற பெயரில் செய்யப்படும் அராஜகங்களுக்கு மதம் பொறுப்பாகாது.''

பஷுர் அப்துல்லாவின் குரலில் தெரிந்த கவலை மனதை தொட, ''அது எனக்குத் தெரியுமே!'' என்றாள் நிலஞ்சனா. ''என் தாத்தா எங்கள் சிறு வயதில் நிறைய வரலாற்று நிகழ்ச்சிகளை கதையாக சொல்லுவார். இந்து மதத்திலேயே சைவர்களும், வைணவர்களுக்கும் நடந்த சண்டைகளையும், சைவர்கள் வைணவர்களை தீயிட்டு எரித்ததையும், வைணவர்கள் சைவர்களை கழவேற்றி உடல் இரண்டாக பிளந்து தொங்க விட்டதாயும், பிற்காலத்தில் இருவரும் சேர்ந்து சமணர்களையும், பௌத்தர்களையும் விரட்டிய கதைகளை சொல்லி யிருக்கிறார். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை நாத்திகம் வளர ஆரம்பித்த பிறகு தான் சமயங்களுக்கு இடையே உள்ள வேறுபாடு ஒழிந்தது என்பார்.''

தன் பயிற்சி வகுப்பு முடித்து வீடு வந்த வஹிதா அப்பாவுடன் அமர்ந்து வரலாறு பேசிக் கொண்டிருந்த அழகிய பெண்ணைப் பார்த்ததும் ஆர்வத்துடன் அவர்கள் அருகில் சென்றாள். ''இவள் எங்கள் கடைசிப் பெண் வஹிதா'' பஷுர் அப்துல்லா அறிமுகம் செய்தார்.

''உங்கள் பெண் உங்களைப் போலவே இருக்கிறாள்'' என்றாள் நிலஞ்சனா.

''என்னைப் போலத்தான். ஆனால் வாய் மட்டும் சற்று நீளம்?'' என்றார் பஷீர் அப்துல்லா கேலியாக.

புது விருந்தாளி முன் அப்பா தன்னைக் கிண்டல் செய்யவும் வஹிதாவுக்கு கோபம் வந்தது. முகத்தை திருப்பிக் கொண்டு போக முயன்றவளைப் பார்த்த நிலஞ்சனா புன்னகைத்தாள். ''வஹிதா உன் விருந் தினரை நீ அறிமுகம் செய்து கொள்ள வேண்டாமா?'' என்றாள் அவளிடம்.

''ஆமாம் நீங்கள்...'' வஹிதா தயங்கவும் ''நான் நிலஞ்சனா. உமர்ரின் காலேஜ் மேட்'' என்றாள் நிலஞ்சனா.

''உமர் காலேஜ் மேட்டா? அவன் நண்பர்களை வீட்டிற்கு அழைத்து வருவது இது தான் முதல் முறை'' என்றாள் வஹிதா வியப்புடன்.

''இப்போதும் உமர் அழைத்து வரவில்லை. உன் அப்பா தான் அழைத்து வந்தார்.''

''அப்பாவா?'' என்றாள் வஹிதா யோசனையுடன்.

''ஆமாம். ஏன் என்று யோசித்து கண்டு பிடி பார்க்கலாம்'' என அவளை சஸ்பென்சில் இருக்க விட்டு ''நான் கிளம்புகிறேன் அங்கிள்'' என்றாள் நிலஞ்சனா.

''நான் உன் ஸ்கூட்டியை எடுத்து வருகிறேன்'' என பஷீர் முன்னே செல்லவும் பின் தொடர்ந்து நிலஞ்ச னாவிடம் ஒரு அட்டைப் பெட்டியை கொடுத்தாள் ஷாகீரா. அது சோப்புப் பெட்டியைப் போலிருக்கவே, ''இதென்ன ஆன்ட்டி?'' என்றாள் நிலஞ்சனா வியப் புடன்.

''கர்நாடகாவிற்கு புகழ் சேர்க்கும் இரண்டு விஷயங் களைப் பற்றி நீ தெரிந்து கொள்ள வேண்டும் இல் லையா? அதனால் தான்'' என்றாள் ஷாகிரா.

''மைசூர் சான்டல் சோப். மைசூர் சில்க் புடவைகள் உலகம் முழுக்க பிரபலம் ஆயிற்றே'' என்றாள் நிலஞ்சனா.

''இந்த சோப் மில்லினியம் என்ற பெயரில் கர்நாடக அரசு அறிமுகப் படுத்திய ஸ்பெஷல் சோப்?''

''நான் கேள்விப்பட்டிருக்கிறேன். 150 கிராம் சோப்பின் விலை எழுநூற்று ஐம்பது ரூபாய் என்று என் அண்ணாவின் சி.ஓ. சொன்னார்கள்.''

''வீட்டிற்கு வரும் முக்கிய விருந்தாளிகளுக்கு கொடுப்பதற்காக உன் அங்கிள் வாங்கி வைத்திருந்தார். சுத்தமான சந்தன எண்ணெய் கொண்டு தயாரிக்கப் படும் ஒரே சோப் இது மட்டுமே என்பதால் வெளி நாடுகளில் வசிக்கும் எங்கள் உறவினர்கள் விரும்பி கேட்பார்கள்.''

''நன்றி'' சொல்லி, ''இன்னொரு நாள் சாப்பிட வரவேண்டும்'' என்ற அழைப்பை ஏற்று வெளியே வருகையில் வீட்டு வாயிலில் பெரிய சத்தத்துடன் பைக் ஒன்று வந்து நின்றது.

''ஜெயின் பையா வந்து விட்டான்'' என்றாள் வஹிதா.

''இன்று சீக்கிரம் வந்து விட்டான் போலிருக்கிறதே!'' என்றாள் ஷாகிரா.

''ஆமாம். என்ன விஷயமாக இருக்கும்?'' என்றாள் நபீஸா.

''நான் பார்க்கிறேன்'' என பஷீர் அப்துல்லா முன்னால் செல்லவும் உமர் சிரித்தான். ''ஒரு மனிதன் தாமதமாக வந்தால் எத்தனையோ கேள்வி கேட்கலாம். சீக்கிரமாக வந்தால் கூடவா கேப்பீங்க?''

''வழக்கத்திற்கு மாறாக இருந்தால் கேட்கத்தான் தோன்றும்'' என்றார் நபீஸா.

''அவ்வளவு தான். நிலஞ்சனா இனி நாம் எல்லாம் இவர்கள் கண்களுக்கு தெரியமாட்டோம். உன்னைப் பார்த்து அம்மாவும் அத்தையும் யார் என்று கேட்பதற்கு முன் நீ கிளம்பி விடு'' என்றான் உமர்.

''போடா அரட்டை'' என்றாள் ஷாகிரா.

அவர்கள் பேசியபடியே வாயிலுக்கு வரவும், ''கடையில் புதிதாக இரண்டு பேர் வேலைக்கு சேர்ந்திருக்கிறார்கள்ப்பா. சொந்த ஊர் கேரளா பக்கமாம்'' என அப்பாவிடம் பேசியபடியே உள்ளே வர திரும்பிய ஜெயின் தன் குடும்பத்தினருடன் சகஜமாக சிரித்துப் பேசியபடி நின்றிருந்த நிலஞ்சனாவைப் பார்த்ததும் தன் கண்களையே நம்ப முடியாமல் திகைத்தான்.

ஜெயினின் பார்வையில் தெரிந்த ஆர்வம் லேசான கூச்சத்தை ஏற்படுத்தவும் அதை மறைக்கும் முயற்சியாய் ''ஹாய்'' என்றாள் நிலஞ்சனா.

ஜெயின் பார்வையை அகற்றாமல், பதில் பேசாமல் நிற்கவும் ஷாகீரா நிலஞ்சனாவை அவனுக்கு அறிமுகம் செய்தாள்.

''எனக்கு தெரியும் ம்மாஜி. நாங்கள் முன்பே சந்தித்திருக்கிறோம்'' என்றான் ஜெயின்.

''நபீஸா ஆன்ட்டியுடன் லால் பாக்கில் பார்த்திருக்கிறேன்'' என்றாள் நிலஞ்சனா அவசரமாக.

''ஆனால் வழியில் பார்க்கும் நிலா இன்று என் வீடு வரும் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை'' என்றான் ஜெயின் மெதுவான குரலில்.

ஜெயினின் மிருதுவான குரலையும், தன்னைப் பார்த்ததும் மலர்ந்து போன முகத்தையும், கண்களில் தெரிந்த உற்சாகத்தையும் தன் அருகே நின்றிருக்கும் நபீஸா கவனித்துக் கொண்டிருக்கக் கூடும் என்ற நினைவு நிலஞ்சனாவை சங்கடப்படுத்தியது. அவள் தலையசைத்து விட்டு கிளம்பவும், ''நிலஞ்சனாவை அவள் வீட்டில் விட யார் போகிறீர்கள்?'' என்றான் ஜெயின். இத்தனை நேரம் இதைப் பற்றி யோசிக்காமல் போனதற்கு தன்னையே கடிந்து கொண்ட பஷுர் ''நான் போகிறேன்'' என்றார்.

''எப்படிப் போவீர்கள்?''

''நிலஞ்சனாவின் ஸ்கூட்டர் தயாராகி விட்டது. அதில் இருவரும் போய்விட்டு திரும்பி வரும் போது நான் பஸ்சிலோ ஆட்டோவிலோ வந்து விடுவேன்.''

''அங்கு பஸ் ஸ்டாப் அருகில் இல்லை. ஆட்டோவும் இந்த நேரத்தில் அதிகமாக கேட்பார்கள். அதுவுமில்லாமல் நானும் உமர்ரும் வீட்டில் இருக்கையில் நீங்கள் ஏன் அலைய வேண்டும்?'' என்றான் ஜெயின்.

''ஜெயின் சொல்வது சரி தான். நீங்கள் வீட்டில் இருங்கள். உமர் நிலஞ்சனாவுடன் போகட்டும்'' என்றாள் ஷாகீரா.

''நிலஞ்சனா உன் ஸ்கூட்டியை எடு. நான் பின்னால் வருகிறேன்'' என உமர் கிளம்பவும் ''எனக்கு ஆடிட் டரைப் பார்க்கப் போக வேண்டும். என்னை வழியில் விட்டு விடு'' என்றான் ஜெயின்.

''இப்போது தானே வந்தாய். மறுபடி போக வேண் டுமா?'' என்றாள் நபீஸா.

''ஆடிட்டரிடம் வருவதாக சொல்லியிருக்கிறேன் புப்பூ. விரைவில் திரும்பி விடுவேன்'' என ஜெயின் சொல்லவும் ''எதற்கு இத்தனை பிரச்சனை? என் ஸ்கூட்டர் சாவியை கொடுத்தால் நானே போய் விடு வேன்'' என்றாள் நிலஞ்சனா சலிப்புடன்.

''போகலாம் ஆனால் மணி பத்தாகிறதே...'' என்று ஜெயின் யோசனையுடன் ஷாகீராவைப் பார்க்கவும், ''இரவு நேரத்தில் நாம் யாராவது கூடப் போவது தான் நல்லது. நம் வீட்டிற்கு வந்த பெண்ணை பாதுகாப்பின்றி அனுப்புவது சரியல்ல'' என்றாள் ஷாகீரா அவன் எதிர்பார்த்தபடியே!

''சரி போகலாம்'' என உமர் முன்னால் நடக்கவும், ''ஒருவரை டிராப் பண்ண மூவர் எதற்கு?'' என்றான் ஜெயின்.

உமர் புரியாமல் பார்க்கவும், ''நிலஞ்சனாவை நம்முடைய பைக்கிலேயே கொண்டு விடலாம். அவளது ஸ்கூட்டரை நாளை கொண்டு போய் கொடுத்து விட்டால் என்ன?''

ஜெயின் தயாரித்த டிராமாவில் எல்லோரும் ஒத்திகை இன்றி கச்சிதமாக நடிக்கிறார்கள் என்ற நினைவில் நிலஞ்சனாவுக்கு சிரிப்பு வந்தது.

''எனக்கு ஆடிட்டரை பார்க்கப் போக வேண்டும். உமர்க்கு எக்ஸாம் வேறு இருக்கிறது'' ஜெயின் உரக்க யோசித்தான்.

''எனக்கா, எக்ஸாமா?'' உமர் திகைக்கவும், ''செமஸ்டர் கூட இனிமேல் தானே வரும். இப்போது என்ன எக்ஸாம்?'' என்றார் பஷுர் அப்துல்லா.

''அரியர் எக்ஸாம் எதாவது இருக்கும்'' என்றான் ஜெயின்.

''எனக்கு அரியரே கிடையாது'' என உமர் சொல்லியதை காதில் வாங்காமல் ''கல்லூரி வாழ்க்கையில் அரியர் வருவதெல்லாம் சகஜம் தான் உமர். அடுத்த முறை கவனமாய் படிக்க வேண்டும் சரியா?'' என ஜெயின் ஆதரவாய் உமர் முதுகில் தட்டிக் கொடுக்கவும் உமர் வெகுண்டான்.

அவன் மேற்கொண்டு பேசும் முன் ''நான் எடுத்து சொல்லி விட்டேன் ப்பா. உமர் இனி ஒழுங்காக படித்து விடுவான்'' என்றான் ஜெயின் முடிவாக.

''இப்படி செய்தால் என்ன?'' என்றார் பஷுர் அப்துல்லா யோசனையுடன்.

''எப்படி?''

''ஜெயின் ஆடிட்டரை பார்க்க போகும் வழியில் நிலஞ்சனாவை வீட்டில் விட்டு விட்டுப் போகட்டும்.''

''நீங்கள் சொன்னால் சரி ப்பாஜி'' என்றான் ஜெயின் பணிவாக.

''அடப்பாவி'' என்றான் உமர் பொறுமலாக.

''நிலா ஆர் யு கம்பர்ட்டபிள்?'' என்றான் ஜெயின் பின்னால் திரும்பி.

''ம்'' என்றாள் நிலஞ்சனா பில்லியனின் சில்வர் வளையத்தை இறுக பிடித்தபடி.

''குளிர்கிறதா?''

''எஸ். ஆனால் பழகி விட்டது.''

''குட்.''

இரவு நேரமாகி விட்டபடியால் நிறைய கடைகள் மூடப்பட்டிருந்தன. ஜெயின் வீட்டில் பேசிக் கொண்டிருந்ததில் நேரம் போனதே தெரியவில்லை. பத்மஜாவோ, தன் வீரோ நான் இன்னும் வீடு வராததை கவனித்திருக்கலாம். அண்ணனும், அண்ணியும் ஊரில் இல்லாத சமயம் நான் ஊர் சுற்ற போய் விட்டதாக நினைத்திருக்கலாம்.

''நிலா.''

..........

ஜெயின் முன்னாலிருந்த மிர்ரரை கவனித்தான். ''நிலா தூக்கம் வருகிறதா?''

''நிலாவுக்கு தூக்கம் வந்தால் அமாவாசை வந்து விடாதா?''

''கடவுளே! இதற்கு நான் சிரிக்க வேண்டுமா?''

''தேவையில்லை. ஆனால் நிலாவை கூப்பிடாமல் விஷயத்தை சொல்.''

''பெயர் சொல்லாமல் எப்படி பேசுவது?''

''என் பெயர் நிலஞ்சனா?''

''சினிமா டைட்டில் மாதிரி இருக்கிறது. உனக்கு பொருத்தமான, சுருக்கமான பெயர் நிலா தான்.''

''எனக்கு அந்த பெயர் பிடிக்கவில்லை ஜெயின்.''

''எனக்கு பிடிக்கிறதே!''

''எனக்கு பிடிக்காத பெயர் சொல்லி என்னை எப்படி கூப்பிடலாம்?''

''பெயரிடுபவர்கள் அனுமதி கேட்பதில்லை நிலா. உன் பெற்றோர்கள் உன்னைக் கேட்டா பெயர் வைத்தார்கள்?''

''அவர்கள் என் பெற்றோர்கள்.''

''நான் உன் நண்பன் நிலா.''

அவன் குரலில் தெரிந்த நெருக்கம் அவளை பேச வாய் எழாமல் செய்தது.

சாலை விளக்குகள் பனியில் மங்கி தெரிந்தன. வெறிச்சோடிய சாலைகள் பனி சூழ்ந்த புது இடத்தில் இவர்கள் இருவர் மட்டும் போய் கொண்டே இருப்பதான பிரேமையை ஏற்படுத்தின. இன்று எதற்காக வீட்டிலிருந்து கிளம்பி வந்தோம் என்று அவள் நினைவுபடுத்திக் கொள்ள முற்படுகையில் ஜெயின் சொன்னான், ''கனவு போல் இருக்கிறது நிலா.''

''சிறு வயதிலிருந்து இந்த சாலைகளில் பயணித்துக் கொண்டிருக்கிறேன். இன்று என்னவோ இந்த பாதை புதிதாய் தெரிகிறது. இந்த நகரம் மிக அழகாகி விட்டது. உடலை குத்தும் குளிர் இதமாய் வருடி செல்கிறது இப்போது. பகல் நேரத்தில் உஷ்ணமான சூரியனிடமிருந்து இப்போதெல்லாம் பனித்துகள்கள் விழுகிறது.

என்னைச் சுற்றி எல்லாமே அழகாகி விட்டது. நீ என்னுடன் இருப்பதால்.''

''இல்லை உனக்கு பைத்தியம் பிடித்து விட்டதால்?''

''தீவிரமான அன்பு கூட ஒரு வகை பைத்தியம் தான்.'' ஜெயின் பின்புறம் கைகளை செலுத்தி பில்லியனை பிடித்திருந்த அவள் கரங்களை இறுக பற்றினான். அதை எதிர்பார்த்திராத நிலஞ்சனா யோசனையின்றி கைகளை உருவிக் கொள்ள முயலவும், பிடிமானம் இன்றி கீழே சரிந்தாள். ஒரே சமயத்தில் வண்டியை நிறுத்தவும், நிலஞ்சனாவை பிடிக்கவும் முயற்சித்த ஜெயின் இரண்டுமே முடியாமல் வண்டியுடன் கீழே விழுந்தான். மிக குறைவான வேகத்தில் சென்று கொண்டிருந்ததால் பெரிதாய் அடி எதுவும் படவில்லை. தன் மேல் விழுந்து கிடந்த பைக்கை நிறுத்தி ஸ்டாண்ட் போட்ட ஜெயின் நிலஞ்சனா எழுந்து கொள்ள கைகளை நீட்டினான்.

அவள் பேசாமலேயே அமர்ந்திருக்கவும் ''நிலா எங்காவது அடிப்பட்டிருக்கிறதா?'' என்றான் லேசான கவலையுடன். அவள் பதில் சொல்லாமல் உடலில் ஒட்டியிருந்த மண்ணை தட்டி விடவும், ''என்ன அவசரம் உனக்கு? எதற்காக வண்டியிலிருந்து விழுந்தாய்? சொன்னால் நானே பைக்கை நிறுத்தியிருப்பேன். அல்லது மயக்கமாய் எதாவது...'' ஜெயின் தான் அவளை பற்றியதை மறந்து போனவனாய் படபடக்கவும் நிலஞ்சனா முறைத்தாள்.

''என்ன நிலா?'' என்றான் புரியாமல்.

''நிலாவாவது, நட்சத்திரமாவது, ஒழுங்காக என் பெயர் சொல்லி கூப்பிடு.''

''அதற்காகவா கீழே விழுந்தாய்? சரியான முட்டாள் பெண் நீ?''

''ஜெயின் நீ என்னிடம் அடி வாங்கப் போகிறாய்'' என்றாள் நிலஞ்சனா எரிச்சலுடன்.

''ஸ்கூட்டர் ரிப்பேராகி வீட்டிற்கு போக சிரமபட்ட வளுக்கு உதவி செய்து அழைத்து வந்ததற்கு அடி, உதை எல்லாமும் தேவை தான் எனக்கு.''

''என் ஸ்கூட்டரை நானே ஒர்க்ஷாப்பில் கொடுத் திருந்தால் அரை மணிநேரத்தில் தயார் செய்து வீட்டிற்கு போய் இருப்பேன்.அல்லது எங்கள் கேம்பஸ்சில் யாரையாவது துணைக்கு அழைத்திருப்பேன். இப்போது கூட என்னை விட கிளம்பிய உமர்ருடன் வந்திருப் பேன்.''

''இதில் ஒன்றைக் கூட இப்போது நீ செய்யவில் லையே ஏன்?'' என்றான் ஜெயின் அவளையே பார்த்தபடி.

ஒரு நிமிடம் யோசித்த நிலஞ்சனா சொன்னாள், ''ஏனென்றால் உன் குடும்பத்தையும், அவர்களுடன் நேரம் செலவழித்ததும் எனக்கு பிடித்திருந்தது.''

''தேங்க்யு'' என்றான் ஜெயின் முகம் மலர்ந்து.

''உன் குடும்பத்தை தான் சொன்னேன். உன்னை அல்ல.''

''இரண்டும் ஒன்று தான். என் குடும்பமும் நானும் வேறு வேறு அல்ல'' என்றான் ஜெயின் உறுதியுடன்.

''வீட்டிற்கு செல்ல பிள்ளை நீ தான் என்பது யாரும் சொல்லாமலே தெரிகிறது'' என்றாள் நிலஞ்சனா.

''ஆமாம். அதில் எந்த சந்தேகமும் இல்லை'' என்றான் பெருமையுடன்.

''உன் அம்மாவின் வெகுளித்தனம் கலந்த அன்பில், அறிமுகமற்றவர்களுக்கும் தேடிப்போய் உதவும் உன் அப்பாவின் கருணையில், உன் அத்தையின் எதிர்பார்ப் பில்லாத பிரியத்தில், உன் தம்பி, தங்கையின் எதிர்பார்ப் பில்லாத பிரியத்தில் உன்னை பற்றியதொரு பிம்பம் தெரிகிறது. அந்த பிம்பமே வீடு முழுக்க நிறைந்து போனது. போன்ற பிரேமையே ஏற்படுத்துகிறது.''

நிலஞ்சனாவைப் பற்றியிருந்த ஜெயின் கரங்களில் மெல்லிய அதிர்வு ஏற்பட்டது. உடல் ஒரு முறை சிலிர்த்து அடங்கியது. ''என் வீட்டை பற்றி இத்தனை துல்லியமாய் யாராலும் புரிந்து கொள்ள முடியாது. ரியலி யுவார் க்ரேட்'' என்றான் ஜெயின்.

''இப்போது என்னை யாரோ முட்டாள்னு சொன்னது நினைவிருக்கிறதே!''

''வேலை வெட்டி இல்லாமல் நடு இரவில், நடுத்தெருவில் அமர்ந்து கதை பேசிக் கொண்டிருக்கும் எவனாவது சொல்லியிருப்பான்'' இருவரும் வாய்விட்டு சிரிக்கையில் போலீஸ் வாகன்ம் ஒன்று சைரனுடன் அவர்களைக் கடந்து சென்றது.

''வெகுநேரம் இப்படியே அமர்ந்திருப்பது சரியில்ல'' ஜெயின் தான் எழுந்து கொண்டு அவளையும் எழுப்பி விட்டான்.

அந்த இரவிலும் சாரிசாரியாய் கார்களும், பைக்கு களும் அவர்களை தாண்டிக் கொண்டு விரைந்தன.

ப்ரிகேடியர் ரோட்டிலும், எம்.ஜி ரோட்டிலும் சிறிய, பெரிய க்ளப்கள் ஜெகஜோதியாய் ஜொலித்தன. பகல் முழுக்க வேலை பார்த்த களைப்பில் பெங்களூர்வாசிகள் அவரவர் வீடுகளில் உறங்க தொடங்கியிருக்க, மற்றொரு பிரிவினர் அப்போது தான் விழித்திருந்தனர். பகலில் பரபரப்பாய் இயங்கும் நகரம் இரவில் புதிய முகத்துடன் ஒளிரவே,

''மதுரையைப் போல பெங்களூருவும் தூங்க நகரமா?'' என்றாள் நிலஞ்சனா வியப்புடன்.

''நிச்சயம் இல்லை. மதுரையைப் போல இரவு நேர வணிகமோ, உணவு கடையோ கிடையாது. இங்கு நைட் க்ளப்களும் பார்களும் மட்டுமே திறந்திருக்கும்'' என்றான் ஜெயின்.

''கூட்டமாய் போய் குடிப்பதைத் தவிர இங்கு பொழுதை கழிக்க வழியே இல்லை போலும்'' என்றாள் நிலஞ்சனா ஏளனமாக.

''வழி இருக்கிறதா இல்லையா என்று கேட்டுப் பார்த்தால் போயிற்று.''

''யாரிடம் கேட்கப் போகிறாய்?''

''எக்ஸ்க்யூஸ் மீ'' ஒரு கையில் சிகரெட்டையும், மறுகையில் தன் காதலியையும் பற்றியபடி நடந்து சென்ற ஒரு இளைஞனை ஜெயின் அழைத்தான்.

''எஸ்'' என்றான் அவன் கண்களை மூடி திறந்து.

''நீ எங்கேயிருந்து வந்திருக்கிறாய்?''

''குர்கான்.''

''இங்கே எப்படி நேரம் கழிகிறது உனக்கு?''

''எதற்காக கேட்கிறாய்?''

''ஒரு க்யூரியாஸிட்டி என்று வைத்துக் கொள்ளேன்!''

''ஹோ! எனக்கு பொழுதை கழிக்க நேரமே போத வில்லை. இந்த ஊரில் எல்லாமும் கிடைக்கிறது. நல்ல வேலை, சம்பளம், ட்ரிங்ஸ், வெரி குட் ம்யூசிக் பேண்ட், டான்ஸ், ராக்ஸ், வாவ்! இவளைப் போல ஒரு காதலி இருந்தால் இது சொர்க்கம்.''

''ஓகே. தேங்க்யு.''

''பை...'' ஜெயினிடம் விடைபெற்றவன் சொன்னான். ''பெண்களிடம் எப்போதும் வம்பு செய்யாதே! அங்கே பார் உன் காதலி உன்னை முறைத்தபடி நிற்பதை'' அவர்கள் இருவரும் சிரித்தபடியே சென்றதும் ''நீ என்ன செய்கிறாய்?'' என்றாள் நிலஞ்சனா.

''இங்கு இரவுப் பறவைகள் எப்படி பொழுதை கழிக் கிறார்கள் என்று நீ தான் தெரிந்து கொள்ள ஆசைப் பட்டாய்.''

''அதற்காக வழியில் போகிறவர்களை நிறுத்தி விசாரிப்பாயா?''

''அதுவும் சரி தான். நீ வண்டியில் ஏறு.''

''உன் பைக்கும் உன்னைப் போல கிறுக்கு தான். எப்போது கீழே தள்ளும் என்று தெரியாது. இங்கிருந்து என் வீடு பக்கம் தான். நடந்தே போய் விடலாம்.''

''நீ தூங்கி விழுந்ததற்கு என் வண்டியை குறை சொல்லாமல் வந்து உட்கார்.''

''முடியாது.''

ஒரு நிமிடம் யோசித்த ஜெயின் சொன்னான் ''உன் ஐடியா எனக்கு புரிந்து விட்டது.''

“என்ன ஐடியா? என்ன புரிந்தது?”

“நான் உன்னை கூப்பிட்டால் நீ ரொம்ப பிகு செய்வாய். கொஞ்ச நேரத்திற்கு பிறகு பொறுமை இழந்து நான் வந்து உன் கிட்ட வந்து...”

“வந்து?”

“கையை பிடித்து...”

“பிடித்து?”

“இடுப்பை வளைத்து...”

“ஏய்!”

“தூக்கி...”

“தொட்டுப் பார். கொலை விழும்.”

“வண்டியில் உட்கார உதவி செய்தால் கொலை செய்வாயா? நல்ல பெண் நீ!”

“நீ வண்டியில் உட்கார உதவி செய்யப் போகிறாயா?”

“ஆமாம். அதைப் பற்றி தான் சொல்லிக் கொண்டிருந்தேன். நீ என்ன நினைத்தாய்?”

அதற்கு எதற்காக தொட்டு தூக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நிலஞ்சனா பற்களை கடித்தாள். அவள் பதில் பேசாமல் நிற்பதைப் பார்த்த ஜெயின் “உதவி தேவை தான் இல்லையா?” என்றபடி அருகில் வரவும், நிலஞ்சனா வேகமாக பைக்கில் ஏறி அமர்ந்தாள். “இப்போது கிளம்பப் போகிறாயா இல்லையா?” “எஸ் யுவர் ஆனர்” என்றபடி பைக் சீறிக் கொண்டு கிளம்பியது. பைக் மணிப்பால் சென்டரை கடக்கையில்

''வலது புறம் போ ஜெயின்'' என்றாள் நிலஞ்சனா. ஜெயின் நேராக செல்லவும் ''வலது புறம் கபின்ரோட். பெயர் பலகையை பார்க்கவில்லையா நீ?'' என்றாள் நிலஞ்சனா.

''என் நகரத்தின் தெருக்களை எனக்கே அறிமுகம் செய்கிறாயா?''

''பிறகு ஏன் உள்ளே திரும்பவில்லை?''

''உள்ளே போய் என்ன செய்யப் போகிறாய்?''

''இந்த நேரத்தில் என்ன செய்வார்கள்? தூங்குவேன்.''

''அதைத்தான் தினமும் செய்கிறாயே! இன்று ஒரு நாளாவது தூங்காமல் இருந்து பார்.''

''தூங்காமல் இரவு முழுக்க என்ன செய்வது? இப்படியே சுற்ற முடியுமா என்ன?''

''எக்ஸாட்லி. நன்றாக சுற்றலாம்.''

''உன்னைப் பற்றி தெரிந்தும் உன்னுடன் வர ஒத்துக் கொண்டது என்னுடைய தவறு தான். அங்கிள்ளிடம் சொல்லி உமருடனே வந்திருக்கலாம்.''

ஜெயின் வேகம் குறைத்தான் ''ஏன் வரவில்லை?''

''அதுதான் சொன்னேனே, என்னுடைய தவறு'' என்று.

''வேறு எதுவும் இல்லை?''

''இல்லவே இல்லை'' என்றாள் நிலஞ்சனா உறுதி யுடன்.

ஜெயினின் பைக் விரைந்தது. சந்தடி அற்ற சாலைகள் பாதி இருளில் மூழ்கியிருந்தன. இருபுறமும் அடர்ந் திருந்த மரங்கள் இருளுக்கு அடர்த்தியை கொடுத்தன.

நிலஞ்சனாவுக்கு வெகு நாட்களாய் இதே போல இவனுடன் பயணம் செய்வது பழக்கம் என்று தோன்றத் தொடங்கிய போது பைக் நின்றது. 'டிரேட் சென்டர்' என்று மின்னிய கட்டிடத்தின் முன் வண்டியை நிறுத்தி இறங்க சொன்னவனிடம் ''இங்கே எதற்காக வந்திருக் கிறோம்? இந்த நேரத்திற்கு எதாவது எக்ஸ்பிஷன் நடக்கறதா என்ன?'' என்றாள் நிலஞ்சனா.

லம்டோகினி, பிஎம்டபிள்யூ, ரோல்ஸ்ராய்ஸ், பென்ஸ் என வரிசை கட்டி நின்றிருந்த கார்களுக்கு இடையே தன் பைக்கை சொருகி விட்டு நிலஞ்சனா வுடன் நடந்தான். ''ஹை அல்ட்ரா லான்ஜ்'' எனப்படும் அந்த திறந்தவெளி க்ளப்பிற்குள் நுழைந்ததும் நிலஞ்சனாவின் கண் முன் புது உலகம் விரிந்தது. இதுவரை பார்த்திராத உலகம். எதற்காகவும் கவலைப் படாத, எதையும் சிந்திக்க தேவையில்லாத, யாருக்காவும் காத்திருக்காத உலகம். ட்யூப் டிரஸ், முட்டிக்கு மேலேறிய ப்ராக், என கவர்ச்சிகரமாய் உடையணிந்து, இரத்தமாய் பளபளக்கும் லிப்ஸ்டிக்கும், பர்ப்யூமாய், சிவப்பு, நீலம், பழுப்பு என விதவிதமான கலர் கூந்தல்களுடன் நடமாடும் பொம்மைகளாய் தெரிந்த பெண்களுக்கு இடையே தன் நலுங்கிய உடையையும், பயணத்தால் கலைந்த கூந்தலையும் பார்த்த நிலஞ்ச னாவுக்கு சிரிப்பு வந்தது. திரும்பி யாரிடமோ பேசிக் கொண்டிருந்த ஜெயினைப் பார்க்கையில் அவனது நலுங்கிய தோற்றமே ப்ரீக்கான ஸ்டைலைத் தர நிறைய பெண்களின் பார்வை அவன் மீது படிந்தது வியப்பாக இருந்தது. ரூப் டாப்பில் வெடவெடத்த குளிருக்கு

கைகளை உரசி வெப்பமேற்ற முயற்சித்தவளைப் பார்த்த ஜெயின் சொன்னான், ''பெங்களூருவிலேயே அதிக குளிரான இடம் இது தான்.''

''இத்தனை உயரத்தில் இருந்தால் குளிராமல் என்ன செய்யும்? ஆனால் இங்கிருப்பவர்களுக்கு குளிர் உறைக்கவில்லை போலிருக்கிறதே!'' என்றாள் நிலஞ்சனா.

''ஒரு பெக் அடித்தால் குளிர் போய் விடும். ட்ரை பண்ணுகிறாயா?'' என்றான் ஜெயின்.

''உன்னை அடித்தாலும் போய் விடும். ட்ரை பண்ணிட்டுமா?'' என்றாள் நிலஞ்சனா.

''அடித்தாலும், அணைத்தாலும் எனக்கு ஒன்று தான். அது நீ என்பதால்.''

''இதை எங்கே படித்தாய் ஜெயின்?'' என்றாள் கேலியாக.

''உன் கண்களில்'' என்றான் ஜெயின் ஸீரியசாக.

''ஹாய் ஜென்டில்மேன்'' என்றபடி அழகிய பெண் ஒருத்தி ஜெயினிடம் கைகளை நீட்ட, ஜெயின் அவள் கைகளைப் பற்றியபடி கூட்டத்தில் கலந்தான். இளமையும், ஆர்வமும் நிரம்பிய துடிப்பான இளைஞர் கூட்டம் அது. 'நாளையே உலகம் அழிந்து விடும். இன்றே அனுபவித்துக் கொள்' என யாரோ கட்டளை இட்டாற் போல் குடித்து தீர்த்தார்கள். ஆடி களைத் தார்கள். அதிரடி இசையும், மின்னி மறையும் ஒளியும் உற்சாகத்தை தூண்டின. ஜெயின் அந்த சூழலுக்கு பழக்கப்பட்டவன் போலிருந்தான். அவனது உற்சாகமான

டான்ஸ்சும், கலந்துரையாடுவதும் இயல்பாக இருந்தது. பொறுப்பானவனாகவும், சமயங்களில் கடுமையானவ னாகவும் தென்படும் ஜெயின் இப்போது ஒரு டீன் ஏஜ் பையனின் மனநிலையில் இருந்தது ஆச்சரியமாக இருந்தது.

''நீயும் வா'' என்றான் ஜெயின் அவளிடம்.

''வேண்டாம் ப்ளீஸ்.''

''இந்நகரத்தின் இரவு வாழ்க்கைக்கு ஒரு சம்ப்பிள் இந்த க்ளப். இதில் கலந்து கொள்ளாமல் முழுவதுமாக தெரிந்து கொள்ள முடியாது.''

நிலஞ்சனா பதில் சொல்லாமல் பெங்களூரு நகரத்தின் தோற்றத்தை பார்வையிட்டாள்.

''என்ன பார்க்கிறாய் நிலா?''

''இங்கிருந்து என் வீடு தெரிகிறதா என்று பார்க்கிறேன்.''

''தெரிந்ததா?''

''ம்ஹூம். விளக்குகள் தான் தெரிகின்றன.''

''நான் காண்பிக்கவா? இதோ இந்த இடது பக்கமாய் உற்று பார். ஒரு பெரிய கட்டிடம் தெரிகிறது இல் லையா? அது தான் விதான்சௌதா?''

''ம்.''

''கொஞ்சம் தள்ளி நேராய் தெரிவது சிவாஜி நகர். அப்புறம் கமர்ஷியல் ஸ்ட்ரீட், அங்கிருந்து எஸ்ஜிபி சர்க்கிள் சுற்றி வந்தால் சின்னசாமி ஸ்டேடியம், அருகே பீல்ட் மார்வுல் கரியப்பா பார்க் கபின்ரோட் பரேட்

க்ரவுண்ட், பீரங்கி பொருந்திய நுழைவாயில், பெரிய கேட்டின் அருகே செக்யூரிட்டி பலமாய் இருக்கிறது. ஜெயின் கண்களை குவித்துப் பார்த்தான். ஓ... இது உங்கள் குவாட்டர்ஸ்தான்... குட் காம்பவுண்ட்டிற்குள் உன் வீடு கூட தெரிகிறது நிலா."

"அப்படியா?"

"ஆமாம். வாயிலில் கைப்பின்னல் திரைச்சீலை, கதவை திறந்ததும் நடுத்தர ஹால், நடுவே கம்பள விரிப்பு, மரத்தில் ஃபர்ம் பொதிந்த சோபாக்கள், டைனிங் ஹாலின் நடுவே நான்கு நாற்காலிகளுடன் சதுர மேஜை. சிறிய சமையலறை, பெரிய படுக்கை அறை, நடுத்தர விருந்தினர் அறை, சிறிய குழந்தைகள் அறை, விசாலமான பால்கனி, வெளியே பணியாட்கள் அறை, சுற்றிலும் அடர்ந்த மரங்கள்..."

"வாவ்!" நிலஞ்சனா கைகளை தட்டினாள், "நீ என்ன தான் பிலிம் ஓட்டினாலும் சொன்னது உண்மை தான். இதற்கு முன்பு குவாட்டர்சிற்கு வந்திருக்கிறாயா?" ஜெயின் 'இல்லை' என தலையசைத்தான்.

"பிறகு எப்படி நேரில் பார்த்த மாதிரி சொல்கிறாய்?"

"மத்திய அரசு, ஆபீஸர்களின் குவார்ட்டர்சை தெரிந்து கொள்வது பெரிய இரகசியமா என்ன?"

"ஸ்மார்ட்" என்றாள் நிலஞ்சனா.

அன்றைய டி.ஜெ.ம்யூசிக் அற்புதமாக இருந்தது. நிலஞ்சனாவின் அருகில் அமர்ந்து கூல்ட்ரிங் ஆர்டர் செய்த ஜெயின்னின் விரல்கள் டேபிள் மீது மெலிதாய் தாளமிட்டன.

''எனக்கு ஒரு விஷயம் புரியவில்லை ஜெயின்'' என்றாள் நிலஞ்சனா.

''என்ன விஷயம்?''

''உனக்கு எப்படி ஒரு கூல்ட்ரிங்கில் இத்தனை போதை வருகிறது?''

''போதை தரும் பொருட்கள் நிறைய இருக்கின்றன நிலா. மனதுக்கு பிடித்தவர்களின் அருகாமையை தரும் போதையை எந்த இரசாயனத்தாலும் தர முடியாது.''

''ஆனால் எனக்கு இந்த லிக்கரும், பர்ப்யூமும் கலந்த வாசனை தலையை வலிக்கிறது.''

''சரி போகலாம்'' உடனே எழுந்து கொண்ட ஜெயின் சொன்னான் ''நீ சரியான பட்டிகாடு.''

''இருக்கலாம்'' என்றாள் நிலஞ்சனா உண்மையாக. ''பல விஷயங்களில் நான் கொஞ்சம் ஒல்டுபேஷன் என்பதை பெங்களூரு வந்த பிறகு புரிந்து கொண் டேன்.''

''அது தான் நல்லது, ஓல்ட் இஸ் கோல்ட்.''

''இது ரொம்ப பழைய வார்த்தை.''

''ஆனால் உண்மையான வார்த்தை.''

இருவரும் சிரித்தபடி கிளம்புகையில் ''பை ஸ்வீட் ஹார்ட். அடுத்த முறை சீக்கிரம் வந்து விடு'' என பெண்கள் அவனை அணைத்து விடை கொடுப்பதை நிலஞ்சனா வியப்புடன் கவனித்தாள்.

''நீ அடிக்கடி இங்கே வருவாயா ஜெயின்?''

''இல்லை. இது தான் முதல் முறை.''

''நம்ப முடியவில்லை'' என்றாள் நிலஞ்சனா மறுப்புடன்.

''நம்பித்தான் ஆக வேண்டும். ஏனெனில் நான் அல்ப விஷயங்களுக்கெல்லாம் பொய் சொல்வதில்லை.''

''நீ இங்கே மிக இயல்பாய் இருக்கிறாய். சொல்லப் போனால் உன் பர்சனாலிட்டியே மாறி விட்டது.''

''பார்ட்டிகளுக்கு செல்வதே அதற்காகத் தான். பழக அறிமுகம் தேவையில்லை. பிரிகையில் வருத்தமும் இல்லை. இந்த நிமிட சந்தோஷத்தை பகிர்ந்து கொள்ள விரும்பும் யாரும் நட்பாகலாம். ஆனால் 'ஹார்ட் பே' போன்ற ராக் ம்யூஸிக் க்ளப்களுக்கு நான் அடிக்கடி போவது வழக்கம். உலகின் தலைசிறந்த ராக்மியூஸிக் கச்சேரிகள் இங்கு நடக்கும். 'ஐர்ன்மெய்டன், த ரோலிங் ஸ்போன், பிரையன் ஆதம்ஸ், ஏதோ ஸ்மித், ஸ்ட்ரிங் என ஹெவிமெட்டல் ராக் பர்பாமன்ஸ் இங்கு நடக்கும். வாவ் வாட் எ க்ரேட் டைம்ஸ்!'' என்றான் ஜெயின் அனுபவித்து.

''தட்ஸ் க்ரேட். அடுத்த முறை ராக் பேண்ட் வரும் போது சொல்'' என்றாள் நிலஞ்சனா.

''நிச்சயம்'' என்றான் ஜெயின்.

திரும்பிச் செல்கையில் அவன் சாலையின் இருபுறமும் கவனித்தவாறு செல்லவும் ''என்ன விஷயம்?'' என்றாள் நிலஞ்சனா.

''எனக்குப் பசிக்கிறது.''

''இந்த நேரத்திலா?''

''ஏன் கேட்க மாட்டாய்? பசியோடு வீட்டிற்கு வந்தவனை சாப்பிடக் கூட விடாமல் உன்னுடன் துணைக்கு அனுப்பி விட்டார்கள் என் வீட்டில். இப்போது பசிக்கிறது எனக்கு.''

ஜெயின் பாதி ஷட்டர் மூடப்பட்டிருந்த ஒரு கடையின் முன் வண்டியை நிறுத்தினான். இறங்கிப் போய் ''ரேவண்ணா'' என்று குரல் கொடுத்தான்.

''எவரல்லி?''

''நானு ஜெயின்.''

''யாக்கே ஈசயதல்லி?'' வேகமாக ஷட்டரைத் திறந்து வெளிளயே வந்த அந்த இளைஞன் உடனிருந்த நிலஞ்சனாவை கண்டதும் நிதானித்தான்.

''என் ஸ்கூல்மேட். சிறு வயது நண்பன்'' என ஜெயின் அறிமுகம் செய்த அந்த இளைஞன் ஜெயினை விட சில வருடங்கள் மூத்தவனாய் தெரிந்தான். தலையின் முன்பக்க முடி உதிர்ந்து போயிருந்தது. அணிந்திருந்த வேஷ்டி சட்டைக்கு மேலே தொந்தி தெரிந்தது. இவன் ஜெயினுடன் எந்த வகுப்பில் படித்திருக்கக் கூடும் என்று அவள் பேசுகையில் அதை புரிந்து கொண்டாற் போல் ரேவண்ணா புன்னகைத்தான்.

''நானும் ஜெயின்னும் ஆறாம் வகுப்பிலிருந்து ஒன்றாய் படித்தோம். பனிரெண்டாம் வகுப்பு தாண்டவில்லை நான். ஜெயின் எப்போதும் நன்றாக படிப்பான் என்பதால் பத்து பைசா செலவில்லாமல் பி.ஈ.சீட் கிடைத்தது.''

''ஜெயின் இன்ஜினியரிங் படித்தானா?'' என்றாள் நிலஞ்சனா வியப்புடன்.

''ம். பி.ஈ முடித்ததும் எம்.பி.ஏ. முடித்து ஐ.பி.எம்.மில் வேலை கூட பார்த்தான்.''

''வெயிட்... வெயிட்... நீங்கள் ஜெயின் பற்றியா சொல்கிறீர்கள்?''

''ஆமாம். ஜெயின் சொல்லவில்லையா உங்களிடம்? வெளியே நின்று பேசுவானேன். உள்ளே வாருங்கள்'' ரேவண்ணா ஷட்டரை முழுக்க திறந்து அவர்களை உள்ளே அழைத்துப் போனான்.

''ஜெயின் ரேவண்ணா சொல்வது உண்மையா?'' என்றாள் நிலஞ்சனா.

''உண்மை தான். ஆனால் ஐ.பி.எம்.மில் அதிக நாள் வேலை பார்க்கவில்லை. ரெஸ்டாரண்ட், இயற்கை விவசாயம், நில சீரமைப்பு என வேறு திசையில் போய் விட்டேன்.''

''நீ செய்யும் இன்னொரு வேலையை விட்டு விட்டாயே!''

''என்னது?''

''ஆபத்தில் இருப்பவர்களை காப்பாற்றுவது. அவர்களுக்கு ஊர் சுற்றி காண்பிப்பது.''

''எக்ஸாட்லி'' என்றான் ஜெயின் பெரிய சிரிப்புடன். ரேவண்ணா ஆர்வத்துடன் அவர்களை பார்க்கவும். ''என் ப்ரண்ட் நிலஞ்சனா. இப்போது உன் கெஸ்ட். கெஸ்ட்டுக்கு பசிக்கிறது ரேவண்ணா'' என்றான் ஜெயின்.

''இதோ நிமிடத்தில் தயார் ஆகி விடும்'' என்ற ரேவண்ணா அவர்களிடம் பேசியபடியே உணவை தயார் செய்தான்.

ரேவண்ணாவின் அப்பா இந்த இடத்தில் டீ கடை வைத்திருந்ததாகவும், சிறுவயதிலேயே தானும் அப்பாவுடன் சேர்ந்து வேலை பார்க்கத் தொடங்கி இப்போது சிறிய உணவகமாக மாற்றியிருப்பதாகவும் சொன்னான். சாலை ஓரக்கடை என்ற போதும் சுத்தத்திலோ, சுவையிலோ எந்த சமரசமும் செய்து கொள்வதில்லை என்றான். அது உண்மை தான் என்பது சில நிமிடங்களில் அவன் பரிமாறிய சோளரொட்டி யிலும், மத்தூர் வடையிலும், இத்திக்கின் பேளேவிலும் தெரிந்தது. விடியத் தொடங்கி விட்ட சமயம் ஆவி பறக்கும் உணவை, தெரு ஓரத்தில் அமர்ந்து பேசிய படியே உண்பது சுவாரஸ்யமாக இருந்தது. ரேவண்ணா மிகவும் வெகுளியாக இருந்தான். அவர்கள் பள்ளி பருவத்தில் நடத்த வேடிக்கையான விஷயங்களையும், சமீபத்தில் பார்த்த சினிமாவையும், அவன் மனைவி யுடன் ஏற்பட்ட சிறு சண்டை பற்றியும் அவன் விவரித்த விதத்தில் நிலஞ்சனா வயிற்றை பிடித்துக் கொண்டு சிரிக்கத் தொடங்கினாள். வெகுநேரம் சிரித்ததால் அவள் கண் ஓரங்களில் துளிர்த்த நீரை தன் விரலால் சுண்டி விட்ட ஜெயின் ''கிளம்பலாம்'' என்றான் புன்னகையுடன்.

''நன்றி ரேவண்ணா. உங்களை சிரமப்படுத்தி விட்டோம் என்று நினைக்கிறேன். எனி வே அருமை யான சாப்பாடு. அதை விட அருமையான உபசரிப்பு. மிகவும் நன்றி'' என்றாள் நிலஞ்சனா மனப்பூர்வமாக.

''நிஜமாகவே எனக்கு நன்றி சொல்வதாய் இருந்தால் ஒரு உதவி செய்ய வேண்டும் சகோதரி'' என்றான் ரேவண்ணா.

''நிச்சயம் சொல்லுங்கள்!'' என்றாள் நிலஞ்சனா ஆர்வத்துடன்.

''உங்களுக்கு எப்போது பசிக்கிறதோ கொஞ்சமும் யோசியாமல் இங்க சாப்பிட வர வேண்டும். இதுவும் உங்கள் வீடு தான் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.'' நிலஞ்சனா மனம் நெகிழ 'சரி' யென தலையசைத்தாள்.

திரும்பிச் செல்கையில் உன் நண்பர்களும் வித்தியாசமானவர்கள் ஜெயின். உன்னைப் போலவே'' என்றாள் நிலஞ்சனா.

''ரேவண்ணா நல்லவன் நிலா. ஆனால் நான் அப்படி இல்லை.''

''எப்படிச் சொல்கிறாய்?''

''இரவு முழுக்க ஒரு பெண்ணுடன் ஊர் சுற்றும் ஒருவன் எப்படி நல்லவனாக இருக்க முடியும்?''

''உன்னை...'' நிலஞ்சனா ஜெயினை அடிக்க கைகளை ஓங்கவும், ஜெயின் வண்டியை நிறுத்தினான். ''உன் வீடு வந்தாச்சு.''

''அதனால் நீ தப்பித்தாய்'' அவனை எச்சரித்த நிலஞ்சனா வண்டியிலிருந்து இறங்கி அவனிடம் தலையசைத்து விட்டு உள்ளே சென்றாள்.

ப்ளாட்டை நோக்கி நடக்கையில் நிலஞ்சனாவின் நடையில் ஒரு துள்ளல் தெரிந்தது. லிஃப்ட்டிற்காக காத்திருக்கையில் அங்கே வந்த பத்மஜா ''இரவு எங்கே போய் இருந்தாய் நிலஞ்சனா? உன்னைக் காணாமல் ஒரே கவலையாகி விட்டது எனக்கு'' என்றாள் நிஜமான கவலையுடன்.

''எல்லாவற்றிற்கும் கவலைப் படாதீர்கள் ஆன்டி. பிறகு அதுவே வாழ்க்கையாகிப் போகும்'' நிலஞ்சனா பத்மஜாவின் தோள்களை அணைத்து சிரித்தாள். ''என் ப்ரெண்ட் வீட்டிற்கு போயிருந்தேன்.''

பத்மஜாவின் பார்வை விசித்திரமாய் அவள் முகத்தில் படிந்தது. ''இன்று ஏதாவது விசேஷமா நிலஞ்சனா?''

''இல்லையே ஏன் கேட்கிறீர்கள்?''

''நீ மகிழ்ச்சியாக தெரிகிறாயே என்று கேட்டேன்.'' பத்மஜாவிடம் பதில் சொல்வதை தவிர்த்து விட்டு உள்ளே சென்ற நிலஞ்சனா செல்போனை சார்ஜரில் போட்டதும் பெல் அடித்தது.

''ஜெயின்!'' என்றாள் நிலஞ்சனா ஆச்சரியத்துடன். ''அதற்குள் போய் சேர்ந்து விட்டாயா என்ன?''

''நோ?''

''எங்கே இருக்கிறாய்?''

''உன் கால்கள் விசுவாசமானவை. உன்னை வீட்டிற்கு அழைத்துப் போய் விட்டன. ஆனால் என் பைக் என் பேச்சைக் கேட்க மறுக்கிறது.''

''ரிப்பேர் ஆகிவிட்டதா?''

''இல்லை.''

''பிறகு?''

''அது தனியாக போக மாட்டேன் என்கிறது நிலா'' ஜெயினின் குரல் கொஞ்சியது.

அதில் இளகத் தொடங்கிய மனதை குரலில் காட்டாமல் சொன்னாள், ''உனக்கு ஒரு உதவி வேண்டுமானால் செய்ய முடியும் நான்.''

''குட். என்னுடன் வருகிறாயா?'' என்றான் ஜெயின் பரபரப்புடன்.

''கேம்பஸ் கேட் அருகே பாதுகாப்பிற்காக நிறைய மணல் மூட்டைகள் அடுக்கப்பட்டிருக்கும் ஜெயின். உபேந்திராவிடம் சொல்லி அதில் ஒரு மூட்டையை உன் பைக்கில் வைத்து கட்ட சொல்கிறேன். சரியா?''

''எத்தனை மூட்டைகளை வேண்டுமானாலும் கட்டச் சொல். அத்துடன் உன்னையும் சேர்த்து.''

...............

''நிலா ஐ மிஸ் யு.''

''நீ கிளம்பு ஜெயின்.''

''எனக்கு ஒரு விஷயம் புரியவில்லை நிலா.''

''என்னது?''

''இந்த ஒரு இரவு என்னுடைய இருபத்தி எட்டு ஆண்டின் மொத்த இரவுகளையும் மறக்க செய்து விட்டதே! அது எப்படி?''

தனக்கும் இது மறக்க முடியாத இரவு தான் என்ற நினைவுடன் நிலஞ்சனா சொன்னாள், ''நீ இன்னும் வீடு திரும்பவில்லை என்றால் உன் வீட்டில் எல்லோரும் கவலைப்படுவார்கள். நீ கிளம்பு ஜெயின்.''

''எனக்கு பதில் சொல்.''

ஜெயின் கேள்விக்கு பதிலாய் காலிங்பெல்லின் ஓசை கேட்டவே நிலஞ்சனா போனை அணைத்தாள்.

''குட் மார்னிங் நிலஞ்சனா'' என்றான் வெளியே நின்றிருந்த தன்வீர்.

''மார்னிங். என்ன விசயம் தன்வீர்?''

''அதை நீ தான் சொல்ல வேண்டும். இரவு நீ வீட்டில் இல்லை'' என்றான் தன்வீர் குற்றம் சாட்டும் குரலில்.

''ப்ரண்ட் வீட்டிற்கு போவதாக அண்ணாவிடம் சொல்லி இருந்தேன்.''

''என்னிடம் ஏன் சொல்லவில்லை?''

''எதற்காக சொல்ல வேண்டும்?''

''இரவு முழுக்க உன்னிடமிருந்து தகவல் இல்லை என்றதும் நான் தவித்துப் போனேன்? தன்வீரின் குரலும், முகமும் உணர்த்திய செய்தியில் நிலஞ்சனா திகைத் தாள்.

''தன்வீர் ஒரு பெண்ணின் மீது ஏற்படும் அன்பு எந்த வீரனையும் கோழையாக்கி விடும். நீ கோழையாகக் கூடாது தன்வீர். என் அண்ணனின் ஜூனியர் மட்டுமல்ல எங்கள் குடும்பம் முழுமைக்கும் நண்பன் நீ. எப்போதும் இப்படியே இருக்க வேண்டும் என்பது என் ஆசை. தேவையற்ற எண்ணங்களும் எதிர்பார்ப்புகளும் நமக்குள் வேண்டாம் தன்வீர்.''

தன்வீர் முகம் ஒரு நொடி மங்கிப் போனது. தலையை குனிந்தபடி ஏதோ யோசனையில் இருந்தவன். பிறகு அவள் முகத்தைப் பார்த்து புன்னகைத்தான். ''நீ சொல்வது சரி தான் நிலஞ்சனா. இந்த சலனம் என்னை சற்று பலவீனமாக்கி விட்டது. இனி இப்படி நடக்காது. நாம் எப்போதும் நண்பர்கள் தான் ஓகே?''

''டபுள் ஓகே'' என்றாள் நிலஞ்சனா நிம்மதியுடன்.

# 6

"பையா உனக்கு போன்" என்றாள் வஹிதா உரத்த குரலில்.

"வருகிறேன்" என்றான் உமர் அப்துல்லா.

"உனக்கில்லை. பையா (அண்ணா) என்றேனே கவனிக்க வில்லையா?"

"நானும் பையா தான் உனக்கு. நினைவில்லையா?"

"நீ மனுஷனே இல்லை. இதில் உறவு வேறா?"

உமர் கோபத்துடன் அவள் முடியைப் பற்றினான்.

"விடுடா குரங்கே!"

"குரங்கு என்ன செய்யும் தெரியுமா?"

"இப்போது விடாவிட்டால் அப்பாவிடம் சொல்லி விடுவேன்."

"அவர் கொடுக்கிற இடம் தான் உனக்கு. நான் அத்தையிடம் சொல்கிறேன் வா."

"விடுடா."

"முடியாது. அண்ணா என்று சொல்."

"இங்கே என்ன சத்தம்?" என்ற பஷுர் அப்துல்லாவின் குரல் கேட்டதும். வஹிதாவின் முடியைப் பற்றியிருந்த உமரின் கரங்கள் தானாய் தளர்ந்தன.

''ஜெயின் அண்ணாவின்-போன் அடித்தது ப்பா'' என்றாள் வஹிதா வெற்றி பெற்ற சிரிப்புடன்.

''ஜெயின் போனை மறந்து விட்டு போய் விட்டானா?''

''இல்லை ப்பா. பையா இன்று கடைக்கு போகவில்லை.''

''அப்படியா? காலையிலிருந்து என் கண்ணில் படவே இல்லையே!'' என்றார் பஷீர் வியப்புடன்.

''தூங்கிக் கொண்டிருப்பவன் எப்படி கண்ணில் படுவான்?'' என்றாள் அங்கு வந்த ஷாகீரா.

''ஜெயின் இன்னமும் தூங்குகிறானா? உடல் நலமில்லையா என்ன?'' என்றார் பஷீர் அப்துல்லா கவலையுடன்.

''அடடா, தினமும் நிற்க நேரமில்லாமல் ஓடிக் கொண்டிருப்பவன் ஒரு நாள் களைத்து தூங்கினால் உடனே நோயாளியாக்கி விடுவீர்களா?'' என்றாள் ஷாகீரா.

''நிலஞ்சனாவை விட்டுவிட்டு வர போனவன் காலையில் தான் வந்தான்?'' என்றாள் நபீஸா.

''கடைக்கு போயிருப்பான் புப்பூ. சில சமயம் இரவில் கணக்குகளை சரி பார்த்து விட்டு, ஸ்டாக் செக் செய்து மறுநாளைக்கு ஆர்டர் குறித்து சப்ளையர்களுக்கு மெயில் அனுப்பி விட்டு வீட்டிற்கு வர விடிந்து விடும்'' என்றான் உமர்.

''என்னுடைய தலை உருளுகிறது போலிருக்கிறதே!'' என ஈரமுகத்தை டவலால் துடைத்தபடி அங்கே வந்த

ஜெயின். நபீஸாவைப் பார்த்ததும் கடிந்து கொண்டான், ''நீங்கள் சற்று ஓய்வெடுக்க வேண்டும் புப்பூ. டாக்டர்கள் சொன்னதை மறந்து விட்டீர்களா?''

''ஓய்வு மட்டுமே என்னை குணமாக்கி விடுமா ஜெயின்?''

''இங்கு நடக்கக் கூடாதாது என்று எதுவுமே இல்லை. யாருடைய வாழ்க்கையும் நிரந்தரம் இல்லை. இதற்கு உதாரணமாய் நான் உங்கள் எதிரில் நிற்கையில்...''

ஷாகீரா அவசரமாக குறுக்கிட்டாள். ''இத்தனை நேரம் தூங்கி எழுந்து எதுவும் சாப்பிடாமல் வெறும் வயிற்றில் என்ன பேச்சு இது?''

ஜெயின் ஷாகீராவின் விரல்களைப் பற்றி தன் விரல்களுடன் கோர்த்துக் கொண்டான். ''ம்மா, இந்த கரங்கள் ஒரு நிமிடம் கூட என் பசியை மறந்ததில்லை. நீ மட்டும் என்னுடன் இல்லை என்றால் நான் ஜெயின் ஆக இருந்திருக்க மாட்டேன்.''

ஷாகீராவின் கண்களில் நீர் துளிர்த்தது. தன் விரல்களை பற்றியிருந்த ஜெயின் பத்து வயது சிறுவனாய் அவள் கண்களுக்குத் தெரிய, அவன் தலையை வருடி முத்தமிட்டாள். ''என் மகனை நான் பார்க்காமல் வேறு யார் கவனிப்பார்கள்? எழுந்து வா ஜெயின் சாப்பிடலாம்.''

''ம்மா, என்ன தான் மூத்த மகன் உசத்தி என்றாலும் எங்களையும் கொஞ்சம் கவனிக்கலாம்'' என்றான் உமர்.

''ஆமாம். எனக்கும் பசிக்கிறது'' என்றாள் வஹிதா. அவர்கள் இருவரும் சொல்வதை கவனியாமல்

ஜெயினுடன் ஏதோ பேசியபடியே உள்ளே சென்ற ஷாகீராவைப் பார்த்து நபீஸாவும், பஷீர்ரும் புன்னகைத்தனர்.

''புப்பூ நீங்களே சொல்லுங்கள். இது அநியாயம் இல்லையா? எங்களுக்கு பசிக்கிறதா என்று யாரும் கேட்க மாட்டீர்களா?'' என்றான் உமர் ஆதங்கத்துடன்.

''கேட்காவிட்டாலும் பரவாயில்லை. நேற்று அம்மா செய்த வாங்கி பாத், அக்கி ரொட்டி நன்றாக இருந்தது என்று கூட கேட்டதற்கு, 'ஜெயின் சாப்பிட்ட பிறகு தருகிறேன் என்கிறார்கள்'' என்றாள் வஹிதா குறையுடன்.

''நீ சாப்பிட ஆரம்பித்தால் யாருக்கும் மிச்சம் இருக்காதே என்று சொல்லி இருப்பார்கள்.''

''ஓ! அதனால் தான் அம்மா இப்போது உன்னை சாப்பிட கூப்பிட வில்லையா?''

''அதை நீ சொல்ல தேவையல்லை.''

''போதும் வஹிதா. எப்பவும் என்ன பேச்சு இது?'' என்றார் பஷீர் கண்டிப்புடன்.

'எல்லாம் இவனால் தான்' சத்தம் வராமல் முணுமுணுக்க உமர் அவளைப் பார்த்து கண்களை சிமிட்டினான். வஹிதாவுக்கு சொல்ல முடியாத ஆத்திரம் வந்தது. இந்த வீட்டில் அவளை கண்டுகொள்பவர்கள் யாரும் இல்லை. எப்பவும் பாசமாய் பேசும் அப்பா கூட சத்தம் வந்தால் முதலில் அவளைத் தான் கண்டிப்பார். உமர் தான் வம்பிழுத்தான் என்று சொன்னாலும் கூட பதிலுக்கு பதில் பேசினால் முக்கியமற்ற விஷயங்கள்

கூட முக்கியத்துவம் பெற்று விடும். அதனால் வம்பு செய்பவர்களிடம் ஒதுங்கிப் போக கற்றுக் கொள் என்பார். அத்தையும், அம்மாவும் ஒரு படி மேலே போய் தங்கள் காலத்தில் எப்படி வளர்ந்தோம் என்று பட்டியல் போட ஆரம்பித்து விடுவார்கள். உன்னை படிக்க தனியே அனுப்பி வைப்பதே பெரிய விஷயம் என்பார்கள். சே! அந்த நிலஞ்சனாவைப் போல் இருந்தால் எப்படியிருக்கும்? தன்னம்பிக்கையுடன், தைரியமாய் நினைத்த இடத்திற்கு போகலாம். கோபத்துடன் அமர்ந்திருந்த வஹிதாவுக்கு காராபாத் வாசனை மூக்கை துளைத்தது.

''இன்று கண்டிப்பாய் சாப்பிடக் கூடாது'' என்றாள் மனதினுள். காராபாத்தும், நீர் தோசையும், சட்னியும் நிறைந்த ப்ளேட் முன் நீளவும் ''எனக்கு வேண்டாம்'' என்றாள் முகத்தை திருப்பியபடி.

''வஹிதா இதென்ன குழந்தைத்தனமாய்? கோபத்தை உணவில் காட்டக் கூடாது'' என்றான் ஜெயின் உணவு தட்டை கையில் ஏந்தியபடி.

''இந்த வீட்டில் உனக்காவது என்னைப் பற்றிய நினைவு இருப்பது அதிசயம் தான்'' என்றாள் வஹிதா.

''வஹி, நான் வீட்டில் இருக்கும் நேரம் குறைவு என்பதால் அம்மா சற்று கூடுதல் கவனம் எடுத்து என்னைப் பார்த்து கொள்கிறார்கள். இதற்காக அவர்களின் அன்பை சந்தேகிக்கலாமா?'' என்றான் ஜெயின் தணிவாக.

அந்தக் குரலில் இறங்கிய வஹிதா சொன்னாள், ''நம் அம்மா அன்பின் உருவம். அப்பா பண்பின் சிகரம்.

அத்தை பாச திருமுகம் இதோ இந்த உமர் தியாகத்தின் மறு உருவம் போதுமா?''

ஜெயின் பெரிதாய் சிரித்தான். ''நீ விளையாட்டிற்கு சொன்னாலும் உண்மை அது தான்'' தோசையை பிய்த்து சட்னியில் தோய்த்து அவன் ஊட்டி விடவும் வஹிதா மறுப்புடன் தலையசைத்தாள்.

''வஹி அண்ணா சொல்வதை கேட்க மாட்டாயா?'' என்ற ஜெயின்னிடம் ''இல்லை பையா. எனக்கு முதலில் காராபாத் வேண்டும். பிறகு தோசை சாப்பிடுகிறேன்'' என்றாள் வஹிதா சிணுங்கியபடி.

அத்தனை பேரும் வேடிக்கை பார்த்துக் கொண் டிருந்தவர்கள் அடக்க மாட்டாமல் சிரிக்க, ''சரியான சோத்து மூட்டை'' என்றான் உமர் செல்லமாக.

''அக்கா, நான் திம்மப்பா வீடுவரை போய் வருகிறேன். நீ போய் சற்று ஓய்வெடு'' என்றார் பஷுர் அப்துல்லா.

''திம்மப்பா உன்னிடம் எதோ பணம் கேட்டாற் போலிருந்ததே. கொடுத்து விட்டாயா?'' என்றார் நபீஸா

''நாளை தருவதாக சொல்லியிருக்கிறேன்.''

''எதாவது அவசரமா ப்பா? கடை பணம் கூட வீட்டில் தான் இருக்கிறது'' என்றான் ஜெயின்.

''திம்மப்பாவுக்கு என்ன அவசரம் இருக்கப் போகிறது. என்ன பெரிய நோய் வந்தாலும் கஷாயம் குடித்து விட்டு தூங்குவான். கௌரம்மாவின் கணவன் கார் வாங்கப் போகிறானாம். அதற்கு பணம் வேண்டுமாம்'' என்றார் பஷுர் வெறுப்புடன்.

''போன முறை வந்த போது புதிதாக தொழில் தொடங்கவென்று பணம் வாங்கிப் போனார்கள். ஆறு மாதத்திற்கு ஒரு முறை எதையாவது சொல்லி பணம் பறிப்பதை வழக்கமாக வைத்திருக்கிறார்கள். இந்த முறை நிச்சயம் முடியாது என்று மாமாவிடம் சொல்ல சொல்லுங்கள்'' என்றான் ஜெயின் கோபமாக.

''பெண்ணை பெற்றவன். அவனால் எப்படி சொல்ல முடியும்?'' பஷுர் அப்துல்லாவின் குரல் வருத்தத்தில் தழுதழுத்தது.

''அவர் சொல்லவிட்டால் நாம் சொல்லலாம். இங்கு பணம் கொட்டுகின்ற மிஷின் எதுவும் இல்லை. அதனால் நீ விரும்பியபடி கொள்ளையடித்துப் போக முடியாது என்பதை அவனுக்கு புரிய வைக்கலாம்.''

''ஆமாம். ஜெயின் சொல்வது தான் சரி. சொல்பேச்சு கேட்காவிட்டால் இரண்டு தட்டுதட்டி வைப்போம்'' என்றான் உமர்.

''உமர் என்ன பேச்சு இது?'' பஷுர் அதட்டினார். அடுத்தவர் வீட்டு பிள்ளையை மிரட்டவும், கண்டிக்கவும் நாம் யார்?''

''அடுத்தவர் இல்லை ப்பா. நம்ம திம்மப்பா மாமாவின் பெண். சிறு வயதிலிருந்து எங்கள் கூடவே வளர்ந்தவள். அவளை முன் வைத்து அந்த வீட்டினரை கஷ்டப்படுத்துவதை நாம் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க முடியுமா?'' என்றான் ஜெயின்.

''பார்த்துக் கொண்டு வெறுமனே இருக்க முடியாமல் தான் கொஞ்சம் பணம் ஏற்பாடு செய்திருக்கிறேன்.''

''இந்த முறை சரி. அடுத்த முறை பணம் கேட்கும் போது என்ன செய்வீர்கள்?''

''முதலில் இன்றைய பிரச்சனையை பார்க்கலாம். கௌரம்மாவிற்காக நான் தினமும் ப்ராத்திக்கிறேன். அல்லா பார்த்துக் கொள்வார்?'' என்றார் பஷீர் பெரு மூச்சுடன்.

ஜெயினுக்கு சிறுவயது கௌரம்மா நினைவுக்கு வந்தாள். கொழு, கொழுவென்று பட்டு பாவாடையும் சட்டையுமாய், இரட்டை பின்னலுடன் வஹிதாவை தூக்கி இடுப்பில் வைத்துக் கொண்டு தெருவையே சுற்றி வருவாள். உமருடன் சேர்ந்து ஓடி பிடித்து விளையாடுவாள். ஜெயினை பார்த்தாமல் மட்டும் மிரட்சியுடன் விழிப்பாள். ஜெயின் விளையாட்டாக அதட்டுவான்.

''எப்பவும் விளையாட்டு தானா உனக்கு? இந்த பரிட்ச்சையில் என்ன மார்க் வாங்கியிருக்கிறாய்? நாளை உன் ஸ்கூலுக்கு வந்து மிஸ்ஸிடம் உன்னைப் பற்றி சொல்லப் போகிறேன்.'' கௌரம்மா பயத்துடன் கெஞ்சு வாள், ''ஜெயின் அண்ணா, இனி நன்றாக படிக்கிறேன். ஸ்கூலுக்கெல்லாம் வராதே ப்ளீஸ்...''

ஜெயின் சிரிப்புடன் அவள் குண்டு கன்னங்களை வலிக்க கிள்ளுவான். ''சரி ஓடு.''

கௌரம்மா அதற்காகவே காத்திருந்தாற் போல் ஓடிப் போவாள். ரேவண்ணா வந்தால் அவளை அழ வைக் காமல் விடமாட்டான். அவள் வைத்திருக்கும் மிட்டாய் களையும், கொய்யா காய்களையும் பிடுங்கி சாப்பிடு வான். போதாதற்கு நாளை வரும் போது யாருக்கும்

தெரியாமல் உன் வீட்டிலிருந்து ஒப்பிட்டு, முறுக்கு எல்லாம் எடுத்து வந்து தர வேண்டும் என்று மிரட்டுவான். அவன் கேட்டபடியே அவள் கொண்டு வரும் பலகாரங்களை சாப்பிட்டுவிட்டு அவள் பாவாடையிலேயே கைகளை துடைத்துக் கொள்வான். கௌரம்மா ஒரு முறை அவனைப் பற்றி தன் பெற்றோரிடம் சொல்லி விடப் போவதாக சொன்னதும், ரேவண்ணா தனக்கு மந்திர வித்தை எல்லாம் தெரியும் என்றும், தன் மந்திர சக்தியை பயன்படுத்தி நிறைய பேரை இரத்தம் கக்க வைத்திருப்பதாகவும் சொன்னான். வாயில் சிவப்பு மையை ஊற்றிக் கொண்டு உதட்டோரம் வழிய விட்டு சாம்பிள் காட்டினான். மிரண்டு போனவளிடம் இரண்டு நாலைந்து குட்டிச் சாத்தான்களை கௌரம்மா மீது ஏவி விடப் போவதாகவும், அவள் வீட்டில் உள்ளவர்களை இரத்தம் கக்க வைப்பதாகவும் சபதம் செய்தான். கண்களை உருட்டி, தலையை ஆட்டி, குரலை உயர்த்தி அவன் சூளுரைத்த விதத்தில் கௌரம்மா நடுங்கிப் போனாள். தன் தவறுக்கு மன்னிப்பு கேட்டாள். இனிமேல் வீட்டில் என்ன சமைத்தாலும் ரேவண்ணாவுக்கு முதலில் எடுத்து வந்து தருவதாய் சத்தியம் செய்தாள். சற்று கோபம் தணிந்த ரேவண்ணா "சரி... இந்த தவறை மறுமுறை செய்யாதே" என்றான் பெருந்தன்மையாக.

ஜெயினுக்கு இப்போது நினைக்கையில் கௌரம்மாவின் அந்த வெகுளித்தனம் தான் இந்த பிரச்சனைக்கெல்லாம் காரணம் என்று தோன்றியது.

"என்ன ஜெயின், தீவிர சிந்தனையில் இருக்கிறார் போலிருக்கிறதே!" என்றார் பஷுர் அப்துல்லா.

''உங்களுக்கு ரேவண்ணாவை நினைவிருக்கிறதா?'' என்றான் ஜெயின்.

''ஏன் இல்லாமல்? நம் ருத்ரய்யாவின் மகன் தானே! உன்னுடன் ஸ்கூல் பைனல் வரை படித்தான். தினமும் இருவரும் ஒன்றாகத்தானே ஸ்கூலுக்கு போவீர்கள்? அவனுக்கு கல்யாணம் ஆன பிறகு அதிகம் வருவ தில்லை. இப்போது என்ன செய்கிறான்?'' என்றார் பஷூர் ஆர்வத்துடன்.

''மல்லேஸ்வரத்தில் அவன் அப்பா நடத்திய கடையை தொடர்ந்து நடத்துகிறான். அங்கு இடவசதி குறைவு என்றாலும் இவனது ஸ்பெஷல் ஐட்டங்களை சுவைக்கவென்றே ப்ளாட்பார்ம்மில் க்யூ நிற்கிறது. பெரிய கடைகளுக்கு, நம் கடை உட்பட ஆர்டர் பெற்று ஸ்வீட் தயாரித்து அனுப்புகிறான். குடியிருக்கும் வீட்டை பெரிதாக்கி கட்டியிருக்கிறாள்.

பெல்லாரியிலிருந்து ஒரு ஏழை குடும்பத்து பெண்ணை இவனே பணம் செலவழித்து திருமணம் செய்து கொண்டிருக்கிறான். இருவரும் சந்தோஷமாக இருக்கிறார். நேற்று போயிருந்த போது உங்களைப் பற்றி ரொம்ப விசாரித்தான்'' என்றான் ஜெயின்.

''யா அல்லா'' என்றார் பஷூர் திருப்தியுடன்.

எல்லோருக்கும் ஜூஸ் தயாரித்து எடுத்து வந்த ஷாகிரா ''ரேவண்ணாவின் மனைவி எப்படியிருக் கிறாள்?'' என்றாள் ஆர்வத்துடன்.

''ஒரு நாள் நம் வீட்டிற்கு அழைத்து வருவதாக சொன்னான்'' என்றான் ஜெயின்.

''உன் வயது தான் அவனுக்கும். மனைவி, குடும்பம், என்று எப்படி பொறுப்பாக இருக்கிறான்! அவனைப் பார்த்தாவது புரிந்து கொள்ள வேண்டாமா நீ?''

''அடடா! இப்போது மனைவி இல்லாததால் நான் பொறுப்பின்றி போய் விட்டேனா ம்மாஜி?''

''ஷாகீரா சொல்வது சரி தான் ஜெயின். எதுவும் காலாகாலத்தில் நடக்க வேண்டும். பெரிதாய் எந்த காரணமும் இன்றி இன்னும் எத்தனை நாளைக்கு திருமணத்தை தள்ளிப் போடுவாய்?'' என்றார் நபீஸா.

''ஆமாம் பையா. எனக்கும் ஒரு அண்ணியுடன் இருக்க வேண்டுமென்று ஆசையாக இருக்கிறது'' என்றாள் வஹிதா. உமரும், பஷுரும் எதிர்பார்ப்புடன் அவனையே பார்க்க, ஜெயின் புன்னகைத்தான். ''நான் வீட்டில் இருந்தால் போதும். எல்லோரும் சேர்ந்து கல்யாணம் பேசத் தொடங்கி விடுகிறீர்கள்.''

''என்ன பேசினாலும் நீ பிடி கொடுக்க மாட்டேன் என்கிறாயே'' என்றாள் ஷாகீரா ஆதங்கத்துடன்.

''நான் இப்படியே இருந்துவிடப் போவதில்லைம்மா. கட்டாயம் திருமணம் செய்து கொள்ளத்தான் போகிறேன்.''

''எப்போது செய்து கொள்வாய்? இப்போதிருந்து அதற்கான ஏற்பாடுகளை ஆரம்பித்தால் தான் சரியாக இருக்கும்'' ஷாகீரா பரபரக்கவும் ஜெயின் அவள் தோளை அணைத்து புன்னகைத்தான். ''அவசரப்படாதீர்கள் ம்மா, விரைவில் நானே சொல்லுவேன். அதுவரை கல்யாணம் பற்றியே பேசாதீர்கள்'' என்றான் ஜெயின் தீர்மானமாக.

மகன் திருமணத்திற்கு சம்மதித்து விட்டதிலேயே மகிழ்ந்து போன ஷாகீரா மகளை விரட்டினாள். "எவ்வளவு நேரம் இப்படியே உட்கார்ந்திருப்பாய்? இவ்வளவு பெரிய பெண்ணுக்கு சாப்பாடு ஊட்ட வேண்டுமா? இந்த வீட்டில் உன்னை செல்லம் கொடுத்தே கெடுத்து வைத்திருக்கிறார்கள்."

"ம்மா, பையா கல்யாணத்திற்கு சம்மதித்திருக்கிறான். இன்னும் கல்யாணம் நடந்து விடவில்லை. அதுவரை உன் கால் தரையில் இருக்கட்டும்" என்றாள் வஹிதா கிண்டலாக.

அந்த வருட இறுதி தேர்வுக்கு தயாராகையில் நாம் பெங்களூரு வந்து ஒரு வருடம் கழிந்து விட்டது என்ற திகைப்பு ஏற்பட்டது நிலஞ்சனாவுக்கு. அண்ணியும் கூட அதே தான் சொன்னாள். "நீ இப்போது தான் வந்தது போலிருக்கிறது" ஸ்கூட்டியை கிளப்புகையில் நல்ல வேளை, அண்ணாவும், அண்ணியும் ஊரிலிருந்து வருவதற்குள் உமர் ஸ்கூட்டியை கல்லூரியில் சந்தித்து கொடுத்து விட்டான் என்று தோன்றியது. ஜெயின் தானே எடுத்து வரக் கூடும் என்ற எதிர்பார்ப்பில் அவள் போன் செய்து கூட விசாரிக்காமல் இருந்தாள். உமர் ஸ்கூட்டரை தந்த பிறகு ஜெயின் போன் செய்தான். "பெல்காம் வந்திருக்கிறேன் நிலா. அதனால் தான் வர முடியவில்லை."

"நான் உன்னை கூப்பிடவில்லை ஜெயின்."

"அதை உன் மனதிடம் சொல்."

அவன் குரலில் தெரிந்த நெருக்கமும், பிரியமும் சொல்ல அவசியம் இல்லை என்றது. ஜெயின்

அவளுக்கு அடிக்கடி போன் செய்தான். அல்லது தகவல் அனுப்பினான். வேலை அதிகம் என்றான். வெய்யில் சுடுகிறது என்றான். விரைவில் அவளை பார்க்க வருவதாக கூறி அவள் அவனுக்காக காத்திருப்பதான பிரேமையை ஏற்படுத்தினான்.

'இன்று கண் விழிக்கும் போதே இனிமையானதொரு இசையைக்கேட்டேன். உன் நினைவு வந்தது. அன்று மிக அழகானதொரு குழந்தையைப் பார்த்தேன். அது உன்னை நினைவு படுத்தியது. மதியம் என் அம்மா ஒரு ஸ்வீட் செய்திருந்தார்கள். அதன் ருசிக்கு ஈடான ஒரு பெங்காலி ஸ்வீட் பற்றி என் அத்தை சொன்னார். இல்லை இது தான் ருசி என்றார்கள் என் தங்கையும், தம்பியும், நான் நினைத்தேன் இதற்கு சரியான இணை நீ தான் என்று'

இது போல அவன் சொல்கையில் ''இதென்ன சற்றும் 'நியாயமற்ற ஒப்பீடு!'' என்பாள் வியப்புடன்.

''இவ்வுலகில் சிறந்தவை எல்லாமும் நீயாக தெரிவதில் நியாயமற்றவை என்று எதுவுமே இல்லை'' என்பான் ஜெயின்.

''என்னைப் புகழ வேண்டிய அவசியம் இல்லை ஜெயின்.''

''தெரியும். அதனால் தான் நான் உண்மையை சொல்கிறேன்.'' ஜெயின் விளையாட்டாக பேசுகிறான் என்பது தெரிந்த போதும். பேச்சு சுவாரஸ்யத்தில் ஈடுபட்டு வெகுநேரம் செல்போனில் கீ பட்டன்களை அழுத்திக் கொண்டு இருப்பதும் உண்டு. கல்லூரிக்கு

செல்லும் வழியில், சிக்னலில் எப்போதாவது ஜெயினைப் பார்க்க நேர்ந்தால் பளீரென புன்னகைத்து உற்சாகத்துடன் கை அசைப்பான். தன்னையறியாமல் ப்தில் சிரிப்பை உதிர்த்த படி கை அசைக்கையில் இவன் நமக்கு நெருக்கமான நண்பன் என்ற உணர்வு எழுந்தது அவளுக்கு.

அந்த செமஸ்டர் தேர்வுகள் முடிந்த உடன் அடுத்து வரும் விடுமுறையை எதிர்கொள்ள நிலஞ்சனாவுக்கு அலுப்பாக இருந்தது. அது பற்றிய பேச்சு எழுந்த போது அவர்கள் வகுப்பில் எல்லோரும் ஊருக்கு போவதாய் சொன்னார்கள். ஷீத்தல் மட்டும் ''வாட் எ சைல்டிஷ் யார்!'' என்றாள். ''ஸ்கூல் படிக்கும் சின்ன குழந்தைகள் மாதிரி விடுமுறை விட்டதும் ஊருக்கு போவீர்களா? நான் வேலை பார்க்கப் போகிறேன்.''

''வேலை இருக்கவே இருக்கிறது. பொறுப்புகள் இன்றி சுற்றும் சுகத்தை கல்லூரி நாட்களில் தான் அனு பவிக்க முடியும்'' என்றான் சார்ல்ஸ்.

''ஆமாம், படிப்பு முடிந்ததும் வீட்டில் இருக்கவே விடமாட்டார்கள்'' என்றான் விக்ரம்சர்மா.

''எனக்கு எப்படியும் அடுத்த வருடம் திருமணம் ஆகிவிடும். அதனால் இந்த வருட விடுமுறையை என் விருப்பப்படி செலவழிக்கப் போகிறேன்'' என்றாள் பாக்கியா.

''உன் பாய்ப்ரண்ட் வீட்டில் திருமணத்திற்கு சம் மதித்து விட்டார்களா?'' என்றாள் நிலஞ்சனா.

''அவர்கள் எதற்காக சம்மதிக்க வேண்டும்?''

''பிறகு எப்படி அவனை மணந்து கொள்வாய்?''

''நிலஞ்சனா யு ஸீ, அவன் என் பாய்ப்ரண்ட் மட்டும் தான். பியான்ஸி இல்லை.''

''இது அவனுக்குத் தெரியுமா?''

''நன்றாகத் தெரியும். சொல்லப் போனால் என் திருமணத்திற்கு வரன் தேர்ந்தெடுப்பதில் எனக்கு உதவுவதாகச் சொல்லி இருக்கிறான்.''

பாக்யா டேட்டிங் என்ற பெயரில் அவனுடன் ஒரு வாரம் கூர்க் சென்றிருந்தும், ப்ரீ ஹனிமூன் என தாங்கள் அவளை கேலி செய்ததும் நிலஞ்சனாவுக்கு அசந்தர்ப்ப மாக நினைவுக்கு வந்தது.

''நிலஞ்சனா நீ ஜெய்ப்பூர் போகிறாயா?'' என்றான் ரமேஷ்.

''இல்லை'' என்ற நிலஞ்சனா ''ஷீத்தல் நீ வேலை பார்க்க போகும் இடத்தில் எனக்கும் சொல்லி வை'' என்றாள் அவளிடம்.

அன்று இரவு உணவு சமையம் ஹரிஹரன் சொன்னான். ''அம்மாவும், அப்பாவும் நீ விடுமுறையில் ஜெய்ப்பூர் வருவாய் என்று எதிர்பார்க்கிறார்கள் சஞ்சனா. நீ இங்கே வந்த பிறகு போகவே இல்லை அல்லவா?''

..................

''ப்ரதீப், சந்தீப்பை வேண்டுமானால் கூட அழைத்துப் போ.''

''நான் கட்டாயம் போக வேண்டுமா அண்ணா?''

''அம்மாவின் ஆசைக்காக சொன்னேன். மற்றபடி உன் விருப்பம் தான் சஞ்சு.''

''ஷீத்தல் பார்ட் டைம் வேலை செய்யப் போவதாக சொன்னாள். அவளுடன் போகலாம் என்று யோசிக்கிறேன்.''

''குட். ஆனால் என்ன வேலை எந்த கம்பெனி என்று பார்த்து முடிவெடு'' என்றவனிடம் ''தன்வீர் ஊரில் இல்லையா ஹரி?'' என்றாள் சுனிதா.

''இங்கு தான் இருக்கிறான். அவன் அம்மா வந்திருக்கிறார்கள். வீட்டு சாப்பாடு கிடைக்கிறது இல்லையா? நம் வீட்டை மறந்திருப்பான்.''

''தன்வீர் அம்மாவை ஒருநாள் லன்ஞ்சுக்கு கூப்பிட வேண்டும்?'' என்றாள் சுனிதா.

''பாவம். ரொம்ப நாட்களுக்கு பிறகு தன்வீர் வீட்டு சாப்பாடு சாப்பிடுகிறார். நாம் அதை கெடுப்பானேன்'' என்றாள் நிலஞ்சனா.

ஹரிஹரன் பெரிதாய் சிரிக்க, ''என் சமையல் அத்தனை மோசமாகவா இருக்கிறது?'' என்றாள் சுனிதா முகத்தை சுருக்கியபடி.

''அத்தனை இல்லை கொஞ்சம்'' என வாய்விட்டு சிரித்த நிலஞ்சனையே பார்த்த இருவர் கண்களும் நெகிழ்ச்சியுடன் சந்தித்துக் கொண்டன.

## 7

''அக்கா இப்போது உடம்புக்கு எப்படியிருக்கிறது?'' என்றார் திம்மப்பா.

நபீஸா சோர்வுடன் புன்னகைத்தாள். ''உடம்புக் கென்ன நன்றாகத்தான் இருக்கிறது. உன் நண்பன் தான் இங்கே கொண்டு வந்து தள்ளி விட்டான்.''

''இங்கு வந்தது நல்லது தான் அண்ணி. கெம்பய்யா வுக்கு ஒரு முறை அடிபட்ட போது கூட இந்த மருத் துவமனையில் தான் சேர்ந்திருந்தோம். நீங்கள் சீக்கிரம் குணமாகி விடுவீர்கள் பாருங்கள்'' என்றாள் எள்ளம்மா.

''கெம்பய்யாவிற்கு பெண் பார்க்க போனீர்களே என்னவாயிற்று?'' என்றார் நபீஸா.

''பெண்ணை எங்கள் எல்லோருக்கும் பிடித்திருக் கிறது அண்ணி.''

''பிறகென்ன, உடனடியாக திருமணத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டியது தானே!''

''செய்ய வேண்டியது தான். ஆனால் கௌரம்மா மாப்பிள்ளை பெண்ணுக்கு நாம் நகை செய்யும் போது கௌரம்மாவிற்கு செய்ய வேண்டும் என்கிறார்.''

''இது என்ன கூத்து?'' என்றார் நபீஸா அங்கலாய்ப் பாக.

''கூத்தாகத்தான் போய் விட்டது என் பெண்ணின் வாழ்க்கை. அவள் ரொம்ப கஷ்டப்படுகிறாள் அண்ணி'' எள்ளம்மா குரல் கரகரத்தது.

திம்மப்பா அதட்டினார். ''இப்போது நீ வந்திருப்பது அக்காவைப் பார்க்க. வீட்டு கதை எல்லாம் சொல்லி அவர்களை இன்னும் வருத்தப்படுத்தாதே!''

''இருக்கட்டும் திம்மப்பா. அவளும் தான் யாரிடம் சொல்லுவாள்'' என்றார் நபீஸா வாஞ்சையாக.

எள்ளம்மாவும், திம்மப்பாவும் வெகுநேரம் இருந்து விட்டு ஜெயின் மருந்துகளுடன் வந்ததும் விடைபெற்று சென்றார்கள். ஜெயின் கொண்டு வந்த மருந்து பெட்டியில் தேடி ஒரு ஊசியை சலைன் பாட்டிலில் செலுத்தி விட்டு நர்ஸ் போனதும் நபீஸா சொன்னார். ''நீயாவது நான் சொல்வதை கேள் ஜெயின். நாம் வீட்டிற்கு போய் விடலாம்.''

''கொஞ்சம் தேறினால் கூட போதும். டாக்டரிடம் சொல்லி விட்டு அழைத்துப் போய் விடுகிறேன் சரியா? எள்ளம்மா அத்தை உங்களுக்காக சமைத்து கொண்டு வந்திருக்கிறார்கள். இப்போது கொஞ்சம் டேஸ்ட் பாருங்கள்'' என ஜெயின் ஊட்டி விட்ட உணவு நபீஸாவுக்கு உள்ளே செல்லாமல் வெளியே வழிந்தது. ஜெயின் அவர் முகத்தை துடைத்து விட்டு, சொட்டு சொட்டாக தண்ணீர் பருக வைத்தான். படுக்கையில் சாய்வாக வைத்து ''கண்களை மூடி தூங்குங்கள் புப்பூ'' என்றான்.

நபீஸா மறுப்புடன் தலையசைத்தார். ''இன்னும் எத்தனை நாள் இந்த உலகத்தைப் பார்ப்பேன் என்று தெரியாது. மறுபடி இதே குடும்பத்தில் பிறந்து, இந்த உறவுகளுடன் வாழ முடியுமா என்றும் தெரியாது. அதனால் இருக்கும் வரை விழித்திருக்கிறேன். உங்களை எல்லாம் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் எனக்கு.''

புப்பூ மனதளவில் விடைபெற தயாராகி விட்டார் என்பது ஜெயின்னுக்கு தாங்க முடியாததாக இருந்தது. ''அலட்டிக் கொள்ளாதீர்கள் புப்பூ. நான் இருக்கிறேன் இல்லையா?'' என்றான் அவர் தலையை வருடி.

''அந்த நம்பிக்கை தான் எனக்கு'' என்றார் நபீஸா. அவர் அருகிலேயே அமர்ந்திருந்த ஜெயின் நபீஸா உறங்கிய பின்னர் பஷுர் வந்ததும் வீட்டிற்கு கிளம்பி னான்.

புப்பூவின் மனசெல்லாம் வீட்டிலேயே இருந்தது. ''உமர் கடையில் பழகி விட்டானா? மாடியில் காயப் போட்ட மிளகாய் வற்றலை அரைக்க கொடுத்தாயிற்றா? ஷாகீராவின் கால் வலி தைலத்தை வஹிதாவிடம் சொல்லி தடவ சொல்'' என எதையாவது சொல்லிக் கொண்டிருப்பவள் தன் பெண்களைப் பற்றி விசாரிக் கவே இல்லை என்பது நினைவுக்கு வந்தது.

இரண்டு நாட்களுக்கு முன்பு புப்பூவுக்கு திடீரென உடம்பு மோசமாயிற்று. உமர் கல்லூரி விடுமுறை என்பதால் அப்பாவிற்கு உதவியாக கடையில் இருந் தான். அன்று அவர்கள் காலையிலேயே கிளம்பிப் போய் விட, ஜெயின் குளித்துக் கொண்டிருந்த போது வஹீதா வின் குரல் உரக்க கேட்டது. அத்துடன் அம்மாவின் குரலும் கேட்கவே அவசரமாய் தயாராகி வெளியே வந்து பார்த்த போது புப்பூ மயங்கி கிடந்தார். தலையணை முழுக்க இரத்தம் தெறித்திருந்தது. கெம்ப்ய்யாவின் உதவியுடன் ஜெயின் இங்கு கொண்டு வந்து சேர்த்தான். டாக்டர்கள் ''முயற்சிக்கிறோம்'' என்றார்கள் ஒரே வார்த்தையில், புப்பூ மயக்கம் தெளிந்து நன்றாக பேச ஆரம்பித்த போதும் மூச்சு விட சிரமப்பட்டார். அதாவது அற்புதம் நடந்தால் நன்றாக இருக்கும். கணவரும் இப்போது உயிருடன் இல்லாத நிலையில் புப்பூவின் கவலை தன் பெண்ணைப் பற்றியதாகத்தான் இருக்க

வேண்டும். ஆனால் அவர் அதைப் பற்றி பேசவே இல்லை. இவர்களாகத்தான் வரவழைக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

சுற்றுபுறம் மறந்து சிந்தனைகளில் ஆழ்ந்து நடந்து கொண்டிருந்த ஜெயின் யார் மீதோ மோதிக் கொள்ளப் போய் நொடியில் சுதாரித்து ''ஸாரி'' என்றான் அவர்களிடம்.

''என்ன ஸார் கண்களை மூடிக் கொண்டு நடக்கப் பழகுகிறீர்களா? எதிரில் வருவது யார் என்று கூட தெரியாமல்'' அந்த குரலைக் கேட்ட ஜெயின் எதிரில் இருந்தவளை சடாரென நிமிர்ந்து பார்த்தான். புடவையில் இருந்த நிலஞ்சனாவை புரிந்து கொள்ள சில நொடிகள் ஆகவும் ''ஜெயின் மறந்து விட்டாயா என்னை?'' என்றாள் நிலஞ்சனா சிரிப்புடன்.

''மறப்பதா? அது என்னையே மறக்கும் போது தான் சாத்தியம். எதிர்பாராத இடத்தில், புதிய தோற்றத்தில் பார்த்ததும் குழம்பி விட்டேன்'' என்றான் ஜெயின்.

''இங்கே யாரையாவது பார்க்க வந்தாயா ஜெயின்?''

''புப்பூவை அட்மிட் செய்திருக்கிறோம்.''

''என்னாவாயிற்று அவர்களுக்கு?'' என்றாள் நிலஞ்சனா கவலையுடன்.

''புதிதாக எதுவும் இல்லை. ஏற்கனவே உள்ளது தான்'' என்ற ஜெயின் முகத்தில் மெல்லிய சோகம் தெரிந்தது. களைத்து தெரிந்தான். அவனை முதன் முறை இப்படி பார்ப்பது வருத்தமாக இருந்தது.

''ஜெயின் நீ சாப்பிட்டாயா?'' என்றாள் நிலஞ்சனா.

''இல்லை.''

''சரி வா என்னுடன்'' என்ற நிலஞ்சன் மருத்துவமனை காரிடரின் ஓரமாய் இருந்த நீள பலகையில் அமர்ந்தாள். தன் ஹேண்ட் பேக்கை திறந்து டிபன்பாக்ஸை எடுத்தவள் ''சாப்பிடு ஜெயின்'' என்றாள் அவனிடம்.

''இங்கே கேண்டீன் இருக்கிறது நிலா. கேண்டீனில் எதாவது வாங்கி இத்துடன் பகிர்ந்து உண்ணலாம்'' என்றான் ஜெயின்.

''அங்கு வரிசையில் வர நேரமாகும். இதையே ஷேர் செய்யலாம். ஒரு நாள் சற்று குறைவாக சாப்பிடுவதால் உயிருக்கு ஆபத்து எதுவும் ஏற்பட போவதில்லை.''

''அது உண்மை தான்'' என்ற ஜெயின் மேற்கொண்டு பேசாமல் சாப்பிட ஆரம்பித்தான்.

'இன்று சமையல் நான் செய்தேன்' என்று சொல்ல வந்த நிலஞ்சனா அவன் சுவையை உணராமலேயே விழுங்குவது புரியவும் அமைதியானாள்.

சாப்பிட்டு முடிக்கையில் ஜெயின் நினைவு வந்தவனாக கேட்டான். ''நீ இங்கே எப்படி வந்தாய்?''

''கெஸ் பண்ணேன்.''

''இது பெரிய விஷயமா? மருத்துவமனைக்கு எதற்கு வருவார்கள்? நோயாளியாய், அல்லது நோயாளியைப் பார்க்க வருவார்கள். நீ ஆரோக்கியமாக இருப்பதாக பார்த்தாலே தெரிகிறது. சோ யாரையாவது பார்க்க வந்திருக்கலாம்.''

''இல்லை.''

''டாக்டர்கள், நர்ஸ் என்று நண்பர்கள் இருக்கலாம்.''

''நோ.''

''ஒரு வேளை இந்த மருத்துவமனையை விலைக்கு வாங்கப் போகிறாயா?''

''சகிக்கவில்லை.''

''ம்... ஐ காட் இட். நீ முன்னேற்பாடாக உணவு கொண்டு வந்திருப்பதைப் பார்த்தால் நான் பசியோடு இங்கே இருப்பதாக உன் உள்ளுணர்வு சொல்லியிருக்க வேண்டும். சரியா?''

நிலஞ்சனா வாய்விட்டு சிரித்தாள். ''ரொம்ப அபத்தமாக இருக்கிறது உன் கற்பனை.''

''சரி நீயே சொல்லி விடு.''

''நான் இங்கு வேலையில் சேர்ந்திருக்கிறேன்.''

''மைகாட். இது என் கற்பனையை விட அபத்தம்'' என்றான் ஜெயின்.

''ஆனால் நிஜம். என் உடையைப் பார்த்தாலே தெரியவில்லையா?''

''நீ எதற்காக வேலை செய்ய வேண்டும்? அதுவும் உன் படிப்பு கூட முடியாத போது.''

''விடுமுறை ரொம்ப போர். அதனால் ஷீத்தலும், நானும் இங்கு பார்ட்டைம்மாக சேர்ந்திருக்கிறோம். மெடிக்கல் அஸிஸ்டென்ட்.''

மருத்துவமனையில் புல்தரையில் இருவரும் பேசியபடியே நடந்தார்கள். பேச்சு எங்கெங்கோ சுற்றி

மீண்டும் புப்பூவிடமே வந்து நின்றது. ''கவலைப் படாதே ஜெயின். மருத்துவ துறை எவ்வளவோ முன்னேறியிருக்கிறது'' என்றாள் நிலஞ்சனா.

''மனிதனை முழுவதுமாக சாவிலிருந்து விடுவிக்க எந்த மருத்துவத்தாலும் முடியாது என்று தெரிந்தாலும் ஏற்றுக் கொள்ள சிரமமாகத்தான் இருக்கிறது நிலா. புப்பூ ஒரு அசாதாரண பெண்மணி. கடின உழைப்பாளி, கணவன் இறந்த பிறகும் அயராமல் நின்று குடும்பத்தை காத்தவர். ஆதரவற்றவர்களுக்கு பிரதிபலன் எதிர்பாராது உதவி செய்வார். எங்கள் மீது குறிப்பாக என் மீது உயிர். இறுதி நாட்களை எங்களுடன் கழிக்க வேண்டும் என்பதற்காக சொந்த குடும்பத்தை கூட விட்டு இங்கே வந்தார்கள்.''

''சொந்த குடும்பத்தை நீ பார்த்துக் கொள்வாய் என்று அவர்கள் எண்ணியிருக்கலாம்.''

''எனக்கு அந்த கடமை இருக்கிறது நிலா. எப்படியும் அவர்களை நான் விடமாட்டேன்.''

''புப்பூவின் ஆசையும் அது தான் ஜெயின்.''

''எது?''

''நீ அவர்கள் குடும்பத்துடன் கடைசி வரை இருக்க வேண்டும். அவரது பெண்ணை மணந்து கொள்ள வேண்டும் என்று புப்பூ ஆசைப்பட்டார்.''

''சேச்சே! வஹிதாவைப் போலத்தான் அந்த பெண் ணும். நீ ஏன் இப்படி நினைக்கிறாய்?'' ஜெயின் படபடத் தான்.

''நான் நினைக்கவில்லை ஜெயின். புப்பூதான் என்னிடம் சொன்னார்கள்.

"என்ன சொன்னார்கள் நிலா?"

"அவர்களது பெண்ணை நீ மணக்க வேண்டும் என்று ஆசைப்படுவதாக சொன்னார்கள். உன்னிடம் பேசப் போவதாகவும், நீ அந்தக் குடும்பத்தில் இணைந்திருக்க வேண்டும் என்றும்."

"ஓ நோ!" என்றான் ஜெயின் நம்பமுடியாமல், "இது பற்றி என்னிடம் யாரும் பேசியதில்லை. புப்பூ உன் னிடம் எப்போது சொன்னார்கள்?"

"உன் வீட்டிற்கு நான் வந்திருந்த சமயம் சொன் னார்கள்."

புப்பூவின் மனதிற்குள் இப்படி ஒரு யோசனை இருந்திருக்ககூடும் என்று ஜெயின் நினைத்ததே இல்லை. அவரும் மறைமுகமாகக் கூட உணர்த்திய தில்லை. ஜெயின் மறுக்க மாட்டான் என்ற நம்பிக்கை யில் இருந்திருக்கக் கூடும். அவரது பெண்ணைப் பற்றி அதிகம் கவலைப்படாததற்கும் இதுவே காரணமாக இருக்கக் கூடும். புப்பூ இப்போதிருக்கும் நிலையில் தன் விருப்பத்தை தெரியப் படுத்தினால் தன்னால் மறுக்க முடியுமா என்ற எண்ணம் பெரிய அதிர்ச்சியை அளித்தது. "காட்" என்றான் ஜெயின் தலையை பிடித்த படி. "என்னால் முடியாது. நிச்சயம் முடியாது."

"ஜெயின் ரிலாக்ஸ். இதில் அலட்டிக் கொள்ள எதுவும் இல்லை" என்றாள் நிலஞ்சனா.

"ஏன் இல்லை? புப்பூவின் நிலை எனக்கு பாதகமாகி விடும். என்னால் வாய் திறக்க முடியாமல் போய் விடும். இன்று அவர் இல்லை என்றால் நானும் இல்லை என்கையில் எப்படி மறுப்பேன்?"

''எதற்காக மறுக்க வேண்டும்?''

''நீ என்ன சொல்கிறாய் நிலா?''

''புப்பூவின் ஆசையை நிறைவேற்று.''

''சில மாதங்களுக்கு முன்பு சொல்லியிருந்தால் ஒரு வேளை நிறைவேற்றி இருப்பேன். இப்போது நீயே சொன்னாலும் முடியாது'' என்றான் ஜெயின்.

உன்னை விரும்புகிறேன் என்பதை இதை விட தெளிவாக யாராலும் சொல்ல முடியாது என்ற நினைவில் நிலஞ்சனாவின் கண்கள் பனித்தன.

அன்று இரவு புப்பூவின் பெண்கள் மூவரும் கொல்கத்தாவிலிருந்து வந்து விட்டார்கள். ''அம்மா இங்கே இருந்தால் இன்னும் கொஞ்ச நாள் சந்தோஷமாக இருப்பாள் என்று நினைத்தோம்'' என்றாள் பெரிய பெண் அழுதபடி.

''சித்தியும், சித்தப்பாவும் எங்களை நன்றாகத்தான் கவனித்துக் கொள்கிறார்கள். இருந்தாலும் அம்மா இல்லாத வாழ்வை நினைத்துப் பார்க்கவே முடியவில்லை'' என்றாள் கடைசிப் பெண் கண்களில் வழிந்த நீரை துடைத்தபடி. ஷாகீரா மூவரையும் அணைத்துக் கொண்டாள். ''அல்லா இருக்கிறார் கண்ணுகளா. அவர் பார்த்துக் கொள்வார்.''

ஜெயின் கண் முன் வரிசையாக படங்கள் நகர்ந்தன. 'தந்தையையும், தாயையும் இழந்து நிற்பது மிகப் பெரிய வலி. அரவணைக்க யாரும் இல்லாமல், தேவைகளை வெளிப்படுத்த முடியாமல், சொந்த வீட்டிலேயே உறவினர் என்ற மனநிலையில் வசிப்பது எத்தனை

பெரிய சோகம்! இரவெல்லாம் பெற்றோரின் அருகாமைக்கு மனம் ஏங்கும். பள்ளியில் நடந்ததையும், உடன் பிறப்புகளுடன் ஏற்படும் சண்டைகளையும் யாரிடம் சொல்வதென்று தெரியாத திகைப்பு ஏற்படும். இந்த பரந்த உலகில் தான் மட்டும் தனியாய் நிற்பதான பிரேமை ஏற்படும். புப்பூவின் பெண்ணுக்கு அந்த நிலமை ஏற்படுமாயின் அது அவருக்கு நான் செய்யும் துரோகம். துரோகிகளுக்கு எந்த கடவுளிடமும் மன்னிப்பு கிடையாது.

இரவெல்லாம் தூங்காத ஜெயின் காலையில் மருத்துவமனைக்கு போகும் போது ஒரு முடிவிற்கு வந்திருந்தான்.

தனக்கு இருபுறமும் நின்றிருந்த பெண்களைப் பார்த்ததும் புப்பூ முதன் முறையாக உணர்ச்சி வசப் பட்டார். கண்களிலிருந்து நீர் கோடாக இறங்கி உடையை நனைத்தது.

ஜெயின் அவர்களை தனியாக இருக்க விட்டு வெளியே வந்தான். அதிகாலை நேரம் என்பதால் மருத்துவமனை கூட்டமின்றி இருந்தது. காரிடாவில் நடந்து போய் முதல் நாள் நிலஞ்சனாவுடன் அமர்ந் திருந்த பலகையில் அமர்ந்தான். நேற்று அவன் முகத்தைப் பார்த்தே பசியோடு இருக்கிறான் என்பதை உணர்ந்து கொண்டாள். அம்மாவும் அப்படித்தான். விளையாடி வீட்டு வரும் போதே 'கை கால் கழுவிட்டு வாப்பா, சாதம் போடுகிறேன்' என்பாள்.

ஒருவன் மகிழ்ச்சியில் இருக்கையில் முகம் மலர்ந்து போகிறது. எல்லாவற்றிற்கும் சிரிக்க தோன்றுகிறது.

கோபப்படுகையில் முகம் கடினமாகிறது. வார்த்தைகள் சுள்ளென்று விழுகிறது. 'வருத்தமாய் இருக்கையில் முகம் தொய்ந்து போகிறது. ஆனால் பசியுடன் இருக்கையில் முகம் எதையுமே காட்டுவதில்லை. லேசான களைப்பைத் தவிர. ஆனால் முகத்தைப் பார்த்தே பசியால் வந்த களைப்பா? வேலையால் ஏற்பட்டதா என்று அறிந்து கொள்ள இருவரால் தான் முடியும். முதலில் தாய். பிறகு மனைவி. ஜெயின் கண்களில் நீர் துளிர்த்தது. நேற்று இதே இடத்தில் உன்னைப் பார்த்த பிறகு யாரையும் மணக்க மாட்டேன் என்று வசனம் பேசியது நினைவுக்கு வந்தது. நிலஞ்சனா நல்ல பெண். புத்திசாலி. என் உளறல்களை புரிந்து கொள்ளக் கூடும்.

ஜெயின் நபீஸா இருந்த அறைக்கு போன போது நால்வரும் பேசி முடித்து விட்டவர்களைப் போல் அமைதியாக இருந்தனர். கடைசிப் பெண் அம்மாவின் கைகளைப் பற்றிக் கொண்டிருந்தாள்.

ஜெயின் புப்பூவின் வார்த்தைகளுக்காக காத்திருந்தான். புப்பூ மெலிதாக புன்னகைத்தார்.

''புப்பூ இவளை நான் பார்த்துக் கொள்வேன். என் ஆயுசு வரை என் மீது நம்பிக்கை இருக்கிறது இல்லையா?'' ஜெயின் குரல் கரகரத்தது.

''உன்னை நம்பாமல் வேறு யாரை நம்புவேன் ஜெயின்? இங்கே வா'' நபீஸா கைகளை விரித்தார். ஜெயின் அவர் அருகே சென்றதும் அவன் கரங்களை பற்றிக் கொண்டு கண்களை இறுக மூடி திறந்தார். பழைய சினிமாவின் க்ளைமாக்ஸ் காட்சியை நேரில் பார்க்கிற நினைவில் ஜெயின் அசையாமல் நின்றான்.

நபீஸா தன் பெண்ணின் கரத்தை ஜெயின் கைகளில் ஒப்படைத்தார்.

''வஹிதாவுடன் சேர்ந்து இன்றிலிருந்து உனக்கு இரண்டு சகோதரிகள். இனி இவள் உன் பொறுப்பு. கவனமாகப் பார்த்துக் கொள்.''

ஜெயின் பேச வாயெழாமல் கல்லாய் சமைந்து போனான். புப்பூ அவனுக்கு எந்த கஷ்டத்தையும் கொடுக்கவில்லை. தியாகம் என்ற பெயரில் பிரதி பலனை எதிர்பார்க்கவில்லை அவர். புப்பூவின் கருணைக்கு முன் தான் பொடி பொடியாக கரைந்து போவதாக தோன்றியது. இத்தனை அன்புக்கு தான் தகுதியாவன் தானா என்ற எண்ணத்தில் அவர் கரங்களில் முகத்தைப் பதித்து அழுகையில் ஜெயின் தன் முகமூடி எல்லாம் கழண்டு போய் பத்து வயது சிறுவனாய் மாறிப் போனான்.

.............

நிலஞ்சனா சுனிதா கேட்ட சில பொருட்களை வாங்கிக் கொண்டு நீல்கிரீஸ் சிலிருந்து வெளியே வருகையில் சுகாஷ்சைப் பார்த்தாள். கிருஷ்ணா ராவ்வின் மகன். தன் நண்பர்களுடன் நின்றிருந்தான். எல்லோர் கைகளிலும் சிகரெட் புகைந்தது. கண்கள் சொரு அவர்கள் இருந்த விதம் அது வெறும் சிகரெட் மட்டும் இல்லை என்பதை உணர்த்தியது. பத்மஜா இவனைப் பற்றி கவலைப்பட்டதில் காரணம் இல்லாமல் இல்லை. சுகாஷ்சிற்கு இப்போது வயது பதினைந்து தான் என்ற நினைவில் நிலஞ்சனாவின் மனம் பதைத்தது.

நிலஞ்சனா வேகமாக அவன் அருகில் சென்று ''சுகாஷ் இங்கே என்ன செய்கிறாய்?'' என்றதும் எரிச்ச லுடன் திரும்பிப் பார்த்த சுகாஷ் ''என்ன வேண்டும் உங்களுக்கு?'' என்றான் அவளிடம்.

''இன்று நீ ஸ்கூல் போகவில்லையா?''

''நீங்கள் என் டீச்சர் இல்லை. மைன்ட்யுவர் ஓன் பிஸினெஸ்'' அவனிடம் பேசிப் பயனில்லை என்பது புரிய நிலஞ்சனா அங்கிருந்து நகர்ந்தாள்.

மிகுந்த யோசனைக்கு பின் கிருஷ்ணாராவ்விடம் போன் செய்து நாசூக்காக விஷயத்தை சொன்ன போது ''இந்தக் காலத்து பசங்களே இப்படித்தான்'' என்றார் அவர் அசட்டையாக.

''மிஸ்டர் ராவ், சிகரெட்டுடன் கூட போதைக்காக எதையோ உபயோகப் படுத்துகிறார்கள் என்று நினைக் கிறேன். நீங்கள் அவனிடம் அதிகம் கவனம் செலுத்த வேண்டும். உட்கார வைத்து பேச வேண்டும்.''

''நான் பார்க்கிறேன் நன்றி'' என்றார் கிருஷ்ணராவ்.

அவர் பார்க்கப் போவதில்லை என்பது குரலிலேயே தெரிய நிலஞ்சனாவுக்கு வருத்தமாக இருந்தது. இதற்கு ஏதாவது செய்தே ஆக வேண்டும் என்ற எண்ணத்துடன் மறுநாள் ஷீத்தலுடன் பேசிய போது அவள் கேட்டாள், ''வெரி டேஞ்சரஸ் நிலஞ்சனா இராணுவ கேம்ப்பஸ் சிற்குள் டிரக் எப்படி வந்தது என்று முதலில் யோசித் தாயா?''

''அது தான் எனக்கும் புரியவில்லை. கேம்ப்ஸ்சிற் குள்ளேயே தான் ஸ்கூலும் இருக்கிறது. அவனது

தோழர்கள் அவனைப் போலவே இராணுவ பள்ளியில் படிக்கும் இராணுவத்தினரின் குழந்தைகள் தான். குடியிருப்புக்குள் யாரும் எளிதாக வர முடியாது. அப்படி இருக்கையில் இவனுக்கு வெளி ஆட்களின் தொடர்பு எப்படி கிடைத்தது?''

''சுகாஷ்சை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும் நிலஞ்சனா. சப்ளை செய்பவனை பிடித்து விட்டால் பாதி பிரச்சனை தீர்ந்து விடும். சரக்கு கிடைக்காமல் சுகாஷ் ஒரு வாரம் ரகளை செய்யலாம். கன்சிலிங் செய்து மெதுவாக வழிக்கு கொண்டு வந்து விடலாம்.''

''ஆமாம். அதான் சரி'' என்ற நிலஞ்சனா கேட்டாள், ''நேற்று மதியம் ட்யூட்டியில் நான் உன்னை பார்க்கவே இல்லை. எங்கே போனாய்?''

ஷீத்தல் முகத்தில் மர்ம புன்னகை ஒன்று விரிந்தது. ''விக்ரம்மிற்கு அவசரமாக எதோ வாங்க வேண்டுமாம். அவனுடன் போயிருந்தேன்.''

''விக்ரம் சர்மா வந்திருந்தானா? என்னைப் பார்க்கவே இல்லையே.''

''உன்னை எதற்காகப் பார்க்க வேண்டும்? அவன் என்னைப் பார்க்க வந்திருந்தான்.''

ஷீத்தல் முகமும் குரலும் உணர்த்திய விஷயத்தை புரிந்து கொண்ட நிலஞ்சனா ''உண்மையாகவா?'' என்றாள் வியப்புடன்.

''ம். வி லவ் ஈச் அதர். எங்கள் வீடுகளிலும் தெரிவித்து சம்மதம் பெற்று விட்டோம். விக்ரம் தொழிலில் கால் ஊன்ற வேண்டும். நான் படிப்பை முடித்து நிரந்தரமாய் ஒரு வேலை தேடிக் கொள்ள வேண்டும்.''

''ஆ... அது தான் நல்லது. போத் மை ஸ்வீட் ஹார்ட்ஸ். எனக்கு ரொம்ப சந்தோஷமாக இருக்கிறது. வாழ்த்துக்கள்'' என்றாள் நிலஞ்சனா உண்மையான மகிழ்ச்சியுடன்.

அன்று அவர்களுக்கு வேலை நிறைய இருந்தது. இருந்த போதும் ஷீத்தல் கிடைத்த இடைவெளியில் எல்லாம் விக்ரம் சர்மா பற்றியே பேசிக் கொண்டிருந் தாள். திருமணம் பற்றி அவளுக்கு ஆயிரம் கனவுகள் இருந்தன. அதற்காக வருடக்கணக்கில் காத்திருக்க நேர்வது இனிய அலுப்பாக இருந்தது.

விக்ரம் சர்மாவிற்கும் அவளுக்கு இடையே நடந்த சீண்டல்களையும், செல்ல சண்டைகளையும் அவள் விவரித்த விதத்தில் நிலஞ்சனாவின் புத்தி தடுமாறியது, ''நிலஞ்சனா திருமணம் என்பது ஒரு சம்பிரதாய சடங்கு தான். ஆனால் காதல் ஒரு சுகம். எத்தனையோ வேற்றுமைகளை ஒற்றுமைகளாக்குவதும் தட்டித் தடுமாறும் திருமண வாழ்வை கடைசி வரை இழுத்துச் செல்வதும் காதல் தான். நிலஞ்சனா நீ காதலித்துப் பார். உலகமே அழகாகும்'' என்றாள் ஷீத்தல் பரவசத்துடன்.

''ஓ! என் காதல் தேவதையே இப்போது நம் வேலையைப் பார்க்கலாம். காதலை பிறகு பார்த்துக் கொள்ளலாம்'' என்றாள் நிலஞ்சனா சிரிப்புடன்.

மதிய உணவு இடைவேளையின் போது தனக்கு வேண்டியவர் இங்கு அட்மிட் ஆகியிருப்பதாகவும், அவர்களைப் பார்த்து விட்டு வந்து விடுவதாகவும் சொல்லி விட்டு நிலஞ்சனா புப்பூவைப் பார்க்கப் போனாள். அவள் போன போது புப்பூவின் அருகே

இரண்டு பெண்கள் நின்று கொண்டிருக்க, ஒருத்தி ஜூஸ் பிழிந்து கொண்டிருந்தாள். சுடிதாரின் துப்பட்டாவால் தலையுடன் பாதி முகத்தையும் அவர்கள் மூடியிருக்க, கிடைத்த இடைவெளியில் தெரிந்த சருமம் பால் நிறத்தில் பளபளத்தது. இந்த பெண்கள் மிக அழகான வர்கள் என அவள் எண்ணமிடுகையில் ''உங்களுக்கு ஏதாவது வேண்டுமா?'' என்றாள் அவர்களில் ஒருத்தி. அவள் பேசிய இந்தியில் வங்காளவாடை வீசியது.

நிலஞ்சனா சொன்னாள், ''நான் உங்கள் அம்மாவைப் பார்க்க வந்தேன்.''

நபீஸா பேச்சுக் குரல் கேட்டு கண் விழித்தார். நிலஞ்சனாவை உற்றுப் பார்த்தவர், திரும்பி தன் பெண் களைப் பார்த்தார். அவர் முகத்தில் குழப்பம் தெரியவே நிலஞ்சனா நெருங்கி அவர் அருகில் சென்றாள். ''நான் நிலஞ்சனா ஆன்ட்டி. மறந்து விட்டீர்களா என்னை?''

புப்பூவின் முகத்தில் தெரிந்து கொண்ட பாவம் வந்தது. ''நிலஞ்சனாவா? புடவையில் அடையாளம் தெரியவில்லை. மற்றபடி உன்னை மறக்க முடியுமா? நீ ஏன் பிறகு வீட்டிற்கு வரவே இல்லை?''

நிலஞ்சனா இதற்கு என்ன பதில் சொல்வதென்று யோசிக்கையில் ஜெயின் உள்ளே வந்தான். நிலஞ்ச னாவைப் பார்த்ததும் தலையசைத்தவன், ''அப்பா உங்களுக்காக வெளியே காத்திருக்கிறார்'' என்றான் புப்பூவின் பெண்களிடம். அவர்கள் புப்பூவிடமும், நிலஞ்சனாவிடமும் சொல்லிக் கொண்டு கிளம்பியதும், ''உங்களுக்கு உடம்பு எப்படியிருக்கிறது ஆன்ட்டி?'' என்றாள் நிலஞ்சனா.

''என் கதையை விடு நிலஞ்சனா, உன்னிடம் பேச வேண்டும் நான்.''

''சொல்லுங்கள் ஆன்டி.''

ஜெயினை அழைத்து அறைக் கதவை தாழிட செய்த பின் நபீஸா சொன்னார், ''என் கடைசி மூச்சு வீட்டில் தான் நிற்க வேண்டும் என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன் நிலஞ்சனா. அதனால் இன்று இரவிற்குள் இங்கிருந்து வீட்டிற்கு போய் விடுவோம்.''

''ஆனால் ஆன்ட்டி, உங்களுக்கு குணமாவதற்குள்...''

''சாத்தியமில்லாத விஷயங்களுக்கு போராடுவதில் பிரியம் இல்லை எனக்கு.''

......

''நிலஞ்சனா உனக்குத் தெரியும் ஜெயின் என்றால் எனக்கு உயிர். அண்ணியும், நாத்தனாருமாக நானும், ஷாகிராவும் சண்டை போட ஒரு விஷயம் இருந்த தென்றால் அது ஜெயின் தான். அவன் மீது பாசத்தை பொழிவதிலும், திருப்பி பெறுவதிலும் எங்களுக்குள் ஒரு போட்டியே நடக்கும். அந்த போட்டியில் ஒரு படி மேலே போய் ஜெயினை எப்போதும் எனக்கு நெருக்க மாய் வைத்துக் கொள்ள ஒரு திட்டமிட்டேன். எத்தனை சுயநலவாதி நான்!''

எதோ பேச முற்பட்ட ஜெயினிடம் அமைதியாய் இருக்கும் படி தலையசைத்த புப்பூ தொடர்ந்தார். ''ஜெயின் சிறு வயதிலேயே யாரும் சொல்லாமலேயே தொழிலுக்கு வந்து விட்டான் நிலஞ்சனா. கல்லூரியில் படிக்கும் போதே ரெஸ்டாரண்ட் தொடங்கினான்.

வேலை பார்க்கத் தொடங்கியதும் நாட்டு மாடுகளை வாங்கி பண்ணை, ஆயில் பேக்டரி இயற்கை விவசாயம் என இறங்கி விட்டான். எனவே பிறரால் மதிக்கப் படுகிறவனாக இருப்பதாலோ என்னவோ ஜெயினிடம் எப்போதும் ஒரு இறுக்கம் தெரியும். உணர்ச்சிகளை வெளிக்காட்டாத முகம் என்று நினைத்தேன். ஆனால் அது பொய் என்று உன்னைப் பார்த்த பிறகு தான் புரிந்து கொண்டேன்.

நிலஞ்சனா திகைப்புடன் பார்க்க, புப்பூ சொன்னாள். ‘‘லால்பாக்கில் நாங்கள் இருவரும் உன்னை சந்திக்க நேர்ந்த போதே ஜெயினிடம் ஒரு மாற்றம் தெரிந்தது. ஆனால் அப்போது எனக்குப் புரியவில்லை. பிறகு எங்கள் வீட்டில் உன்னைப் பார்த்ததும் அவன் கண்கள் மனதை வெளிச்சம் போட்டு காட்டின. உன்னைச் சந்தித்த பிறகு தான் ஜெயின் தன் வயதை உணர்ந்தான். சமீப காலமாய் பேச்சில் தெரியும் உற்சாகமும், முகத்தில் உறைந்து நிற்கும் புன்னகை, கண்களில் தென்படும் கனவு எல்லாவற்றிர்க்கும் காரணம் நீ தான் நிலஞ்சனா.’’

‘‘ஆன்ட்டி நான்...’’

நிலஞ்சனா சொல்ல வந்ததை காதில் வாங்காமல் நபீஸா பேசினார். ‘‘எனக்கு உன் தயக்கம் புரிகிறது நிலஞ்சனா. நம் இரு குடும்பங்களுக்குள்ளும் உணவு, உடை, வளர்ப்பு முறை என எவ்வளவோ வேற்றுமைகள் இருக்கின்றன. ஆனால் அன்பு மட்டும் இருந்தால் போதும் வேற்றுமைகளையும் ஒற்றுமையாக்கலாம். உன் பெற்றோரை நான் பார்க்க வேண்டும் நிலஞ்சனா, அவர்களிடம் பேச வேண்டும்.’’

நபீஸா மூச்சு வாங்க நிறுத்திய அவகாசத்தில் நிலஞ்சனா கேட்டாள், ''என் பெற்றோரிடம் என்ன பேச வேண்டும் ஆன்ட்டி?''

''உங்கள் பெண்ணை என் ஜெயின்னுக்கு திருமணம் செய்து கொடுங்கள் என்று கேட்பேன். ஒரு வேளை அவர்கள் மறுக்கக் கூடும். ஆனால் நான் எப்படியும் சம்மதிக்க வைத்து விடுவேன்.''

''அது முடியாது ஆன்ட்டி.''

''ஏன் முடியாது? எப்படியும் அவர்கள் பெண்ணுக்கு திருமணம் செய்து தான் ஆக வேண்டும். இத்தனை நாட்களாய் தான் தயங்கியும், மறைமுகமாகவும் சொல்லிக் கொண்டிருந்த விஷயத்தை புப்பூ இன்று எதிர் பாராமல் போட்டு உடைத்தது ஜெயினுக்கு திகைப் பாக இருந்தது. நிலஞ்சனாவிடம் தனக்குள்ள பிரியத்தை புரிந்து கொண்டதாலேயே புப்பூ தன்னிடம் எந்த வாக்குறுதியும் கேட்கவில்லை என்ற எண்ணம் பாரமாய் அழுத்த, ''புப்பூ இப்போது இதைப் பற்றி பேச வேண்டாம். நீங்கள் சற்று ஓய்வெடுங்கள்'' என்றான் ஜெயின்.

''இல்லை ஜெயின். இப்போதே பேச வேண்டும் எனக்கு'' என்ற புப்பூ கேட்டார். ''சொல் நிலஞ்சனா, உன் பெற்றோரிடம் கேட்கட்டுமா?''

வாழ்க்கையின் விளிம்பில் நின்று கொண்டு புப்பூ தன் மருமகனுக்காக வாதாடுவது சகிக்க முடியாததாக இருந்தது. நிலஞ்சனா என்ன செய்வதென்று புரியாத திகைப்பில் ஜெயினைப் பார்த்தாள். சம்மந்தப்பட்ட

இருவரும் காதலிப்பதாக வாய் திறந்து சொல்லிக் கொள்ளாத நிலையில் தன் வீட்டிலிருப்பவர்கள் திடுமென திருமணம் பேசினால் அது எத்தகைய அதிர்ச்சியை ஏற்படுத்தக்கூடும் என்பதை புரிந்து கொண்ட ஜெயின், ''புப்பூ நிலஞ்சனாவுக்கு நேரமாகிறது. மாலையில் ட்யூட்டி முடிந்து போகும் போது மறுபடி பேசலாம்'' என்றான் அவரிடம்.

புப்பூ தன் அருகில் நின்றிருந்த நிலஞ்சனாவின் கைகளை இறுக பற்றினார். ''மறுபடி பேச சமயம் இல்லை மகளே. எனக்கு பதில் சொல்!''

''என்னால் சொல்ல முடியாது ஆன்ட்டி.''

''என் ஜெயினை விட சிறந்த பையன் யாருக்கும் கிடைக்க மாட்டான் நிலஞ்சனா.''

''அது உண்மை என்றால் அவனுக்கேற்ற அருமை யான பெண்ணை திருமணம் செய்து வையுங்கள்.''

''நீயும் அருமையானவள் தான் நிலஞ்சனா.''

''இல்லை. ஏற்கனவே திருமணமான பெண் எப்படி அருமையானவளாக இருக்க முடியும்?''

''என்னது?'' நபீஸாவிற்கு தூக்கி வாரிப் போட்டது வெளிப்படையாகவே தெரிந்தது. ஜெயினின் பார்வை நம்ப முடியாத அதிர்ச்சியுடன் தன் மீது படிவதை உணர்ந்தும் நிலஞ்சனா அவன் புறம் திரும்பாமல் புப்பூவிடம் சொன்னாள், ''பதட்டப்படாதீர்கள் ஆன்டி?''

''நிலஞ்சனா நீ என்னிடம் விளையாட வில்லையே? உண்மையைத்தானே சொல்கிறாய்?''

''நான் எதற்காக பொய் சொல்ல வேண்டும் ஆன்டி? விளையாடுகிற மனநிலையில் நாம் இப்போது இல்லை எனும் போது.''

சற்று நேரத்திற்கு அந்த அறையில் ஏசியின் கிர்ரென்ற ஓசை தவிர வேறு சத்தமே இல்லை. மூவரும் ஆளுக்கொரு மனநிலையில் மௌனமாக மூச்சு விடும் சப்தம் கூட பேரோசையாய் கேட்டது.

நபீஸாவின் கலங்கிப் போன முகத்தைப் பார்த்த ஜெயின் சொன்னான், ''நீங்கள் இத்தனை கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை புப்பூ. இதனால் எதுவும் மாறப் போவதில்லை.''

நபீஸாவின் முகத்தில் ஆயாஸம் தெரிந்தது. கண்கள் தொலைவை வெறித்தன. ''நான் நினைக்கவே இல்லை'' என்றார் முணுமுணுப்பாக.

''வாழ்க்கை மிகவும் விசித்திரமானது ஆன்டி. அது எப்போதுமே நம் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்வ தில்லை'' என்றாள் நிலஞ்சனா.

நபீஸா கண்களை மூடி வெகுநேரம் படுக்கையில் சாய்ந்திருந்தார். ஜெயின் முகம் இறுக அசையாமல் நின்றிருந்தான். நபீஸா உறங்கி விட்டார் போலும் என்ற எண்ணத்தில் அவர் உறக்கம் கலையாமல் நிலஞ்சனா தன் கைகளை உருவிக் கொள்ள முற்படுகையில் நபீஸா கண்களை திறந்தார். ''உன் கணவன் எங்கே நிலஞ் சனா?'' என்றார் மெலிந்த குரலில்.

ஜெயின் பார்வை கூர்மையாக அவள் மீது படியவே நிலஞ்சனா புன்னகைத்தாள். ''நான் நிதானமாக ஒரு நாள்

உங்களுக்கு விளக்கம் சொல்லுகிறேன். நீங்கள் முதலில் உம்பை பார்த்துக் கொள்ளுங்கள்.''

''நில... ஞ்...ச...னா'' என்றழைத்த புப்பூவுக்கு வார்த்தைகள் தடுமாறின. வெண்மை நிற முகம் இரத் தத்தில் குளித்தாற் போல் சிவந்து போனது. ''ஆண்டி'' என்றாள் நிலஞ்சனா கலவரத்துடன்.

''புப்பூ சோர்ந்து போகிறார்கள் நிலஞ்சனா... அவர்களை அதிகம் பேச விட வேண்டாம். நீ கிளம்பு'' என்றான் ஜெயின் அவள் முகம் பாராமல்.

இருவருக்கும் பொதுவாக தலையசைத்து விட்டு வெளியே வந்த நிலஞ்சனாவின் மனம் பாரமாய் கனத்தது.

# 8

''அத்தை அங்கே பார். எவ்வளவு பெரிய லையன்?'' என்றான் சந்தீப் வியப்புடன் விழிகளை விரித்தது. காட்டு ராஜாவான சிங்கம் கர்ஜிக்கவும் பயந்து போன ப்ரதீப் சுனிதாவை அணைத்துக் கொண்டு மிரட்சியுடன் பார்த்தான். அவர்கள் பன்னார் கட்டா நேஷனல் பார்க்கில் இருந்தார்கள். சிங்கங்கள் இயற்கை யாய் வனத்தில் உலவுவதை கூண்டு வண்டியில் அமர்ந்தபடி கண்டு களிக்கும் லையன் சபாரியின் த்ரில்லிங்கான அனுபவத்தில் இருந்தார்கள். குழந்தை

களுக்கு பள்ளி விடுமுறை என்பதால் சுனிதாவும், நிலஞ்சனாவும் அவர்களை அழைத்துக் கொண்டு வந்திருந்தார்கள். இருநூற்றி அறுபத்தி ஐந்து கிலோ மீட்டர்கருக்கு மேல் விரிந்துள்ள பார்க்கில், பட்டர்ப்ளை பார்க், எல்லோர் மனதையும் கவர்ந்தது. பட்டர்ப்ளைகள் அமர்வதற்காக வளர்க்கப் படும் ரோஜா தோட்டம், பழம் கொண்ட மரங்கள், சிறு ஓடைகள், பச்சை மஞ்சள் நீலம் சிவப்பு என ஓவிய தீற்றலுடன் வண்ணத்துப் பூச்சிகள் மனதை கொள்ளை கொண்டன. தலையில், கையில் வண்ணத்து பூச்சிகள் அமரும் அனுபவத்தை இரசித்தபடி அத்வேரியம், பெட்ஸ் கார்னர், ஜீ என்ற சுற்றி வருகையில் நிலஞ்சனாவின் மனம் அதில் ஈடுபடாமல் தனியாக நின்றது.

நபீஸாவை பார்த்து விட்டு வந்த பிறகு நிலஞ்சனா மருத்துவமனை பக்கம் போகவே இல்லை. ஹரிஹரனின் சீனியர் ஆபீஸரின் மனைவி டெல்லியிருந்து பெங்களூருவை சுற்றிப் பார்க்க வந்திருந்தாள். சீனியர்களின் மனைவி மார்களை நல்ல மனநிலையில் வைத்துக் கொள்வது ஜூனியர்களின் எதிர்காலத்துக்கு நல்லது என்ற விதிப்படி நிலஞ்சனாவுக்கும், சுனிதாவிற்கும் சமைக்கவும் ஷாப்பிங் போகவும் நேரம் சரியாக இருந்தது. புப்பூவும், ஜெயினும் தன்னைப் பற்றி என்ன நினைத் திருக்கக் கூடும் என்ற கேள்வி மனதை உறுத்திக் கொண்டே இருந்தது. ஜெயினை சந்திக்க நேர்கையில் அவனது கேட்கப்படாத கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாத நிர்பந்தத்தில் நிலஞ்சனா தனக்குள் சுருண்டு போனாள்.

அன்று மாலை இராணுவக்ளப்பில் பார்ட்டி இருந்தது. ஹரிஹரனின் வற்புறுத்தலுக்கிணங்க புதிய விருந்தாளி யுடன் நிலஞ்சனாவும் கலந்து கொண்டாள். கறுப்பு நிற காட்டன் புடவையும், கையில்லாத சிவப்பு இரவிக்கையு மாய் தயாரான நிலஞ்சனாவைப் பார்த்ததும் ''ஓ யு லுக் கார்ஜியலஸ் டார்லிங்'' என்றாள் சீனியரின் மனைவி அவளை அணைத்துக் கொண்டு,

''தேங்க்யு'' என்றாள் நிலஞ்சனா.

''ஹரிஹரன் இத்தனை அழகும், இளமையும் கட்டிக் காப்பது சிரமம். விரைவில் நிலஞ்சனாவுக்கு திருமண ஏற்பாடு செய்யுங்கள்'' என்றாள் ஹரிஹரனிடம்.

ஹரிஹரனின் பார்வை உதட்டை கடித்தபடி நின் றிருந்த நிலஞ்சனாவின் மீது பதிந்தது.

''டோன்ட் பிகேஹ் ஒல்ட் பேஷன் யார்'' சீனியரின் மனைவி ஹரிஹரனுடன் பேசியபடி செல்ல, நிலஞ்ச னாவும் சுனிதாவும் பின்தொடர்ந்தார்கள்.

பார்ட்டியில் கேம்பஸ்சில் வசிப்பவர்கள் எல்லோரும் வந்திருந்தார்கள். கிருஷ்ணாராவ் கையில் விஸ்கியுடன் தனியாக நின்று கொண்டிருந்தார். ''பத்மஜா ஆண் டியை அழைத்து வரவில்லையா?'' என்றாள் நிலஞ்சனா அவரிடம்.

''அவளுக்கு இதெல்லாம் பழக்கம் இல்லை'' என்றார் அவர்.

''அதொன்றும் பெரிய விஷயமில்லை. வந்தால் பழகிக் கொள்ளலாம்.''

''அவளுக்கு ஆங்கிலம் தெரியாது. ஹைஹீல் அணிந்து நடக்க வராது. டான்ஸ் ஆட கூச்சப்படுவாள். பிறகு இங்கே வந்து என்ன செய்ய முடியும் சொல்!''

பத்மஜா வருவதில் இவருக்கே இஷ்டமில்லை என்று தோன்றியது நிலஞ்சனாவுக்கு. தன்வீரைப் பார்த்ததும் ''உங்கள் அம்மா ஊருக்கு போய் விட்டார்களா?'' என்றாள் நிலஞ்சனா.

தன்வீர் வியப்புடன் விழிகளை விரித்தான். ''நிலஞ்சனாவா இது? நான் யாரோ நடிகை என்றல்லவா நினைத்தேன்!''

''நடிகைகள் எல்லாம் இராணுவ க்ளப்பிற்கு எப்படி வருவார்கள் தன்வீர்?''

''வருவார்கள் நிலஞ்சனா. உனக்குத் தெரியாதா? லே, லாடாக் போன்ற இடங்களில் பணிபுரியும் போது அங்கிருக்கும் வீரர்கள் தொய்வடையாமல் இருக்க அடிக்கடி கலை நிகழ்ச்சிகள் நடக்கும். அரசாங்கமே ஏற்பாடு செய்யும். அதில் கலைந்து கொள்ள பாலிவுட் நடிகர், நடிகைகள் சில சமயம் வருவார்கள். அவர்களும் தேச சேவையாக நினைத்து நிகழ்ச்சிகளுக்கு பணம் பெறுவதில்லை என்று சொல்லப் படுகிறது.''

நிலஞ்சனாவும் தன்வீரும் சகஜமாக உரையாடுவதை ஹரிஹரன் வியப்புடன் கவனித்தான். சுனிதாவும் அவனும் மகிழ்ச்சியுடன் புன்னகைத்தனர்.

சம்பிரதாயப்படி பார்ட்டி தொடங்கியதும் ட்ரிங்கும் உணவும் பரிமாறப்பட்டது. எல்லோரும் நாகரீகமாக உணவருந்தினார்கள். நாசூக்காக குடித்தார்கள்.

பெண்களிடம் முதுகை வளைத்து கையை நீட்டி கண்ணியமாய் டான்ஸ் ஆட அழைத்தார்கள். ஆங்கில இசை பின்னணியில் ஒலிக்க பதவி வேறுபாடுகள் மறந்து எல்லோரும் எல்லோருடனும் ஆடினார்கள். முதல் நிலை ஆபீஸிலிருந்து, இறுதி நிலையில் இருப்பவர் வரை பேட்ச் மேட்கள் ஒரு இடம்பமாக கலந்து பழகுவதற்காகவே இவை நடத்தப்படும். நிலஞ்சனா ஒரு ஆரஞ்சு ஜூஸை பருகியபடி அவுல் தர்ரின் மனைவியுடன் பேசிக் கொண்டிருக்கையில் அவளது மொபைல் ஒளிர்ந்தது. சைலன்ட் மோடி ல் இருந்த மொபைலை உயிர்பித்து மெலெஜ் டாக்ஸை திறந்ததும், ''புப்பூ எக்ஸ்பையர்ட்'' என்ற தகவல் முகத்தில் அறைந்தது. ''மை காட்'' என்றாள் நிலஞ்சனா வாய்விட்டு.

என்னவென்று விசாரித்த அவுல்தரின் மனைவியிடம் ஏதோ சொல்லி சமாளித்து விட்டு பார்ட்டி ஹாலின் ஓரமாய் இருந்த சோபாவில் அமர்ந்தாள். இத்தனை சீக்கிரம் அவருக்கு இறப்பு நேர்ந்திருக்க வேண்டாம். ஜெயின் கைகளில் தன்னை ஒப்படைத்து விட்டு போக நினைத்தவரை தானும் சேர்ந்து ஏமாற்றிவிட்டதான குற்ற உணர்வு எழுந்தது. கடைசியாக தான் பிரியம் வைத்த ஜெயினின் விருப்பத்தையாவது நிறைவேற்ற முயற்சித்து தன்னிடம் பேசியதை நினைக்கையில் கண்கள் கலங்கின!

ஜெயின் மிகவும் உடைந்து போயிருப்பான். அவனால் முடிந்த வரை எவ்வளவோ முயற்சி செய்தான். ஜெயின், அம்மா, அப்பா, வஹிதா, உமர் எல்லோருக்கும் பெரிய

இழப்பு தான். அவர்களை எல்லாம் பார்க்க வேண்டும் போலிருக்க, நிலஞ்சனா யோசித்தாள். ஒரு முறை எதேச்சையாக போனது தவிர ஜெயின் குடும்பத்துடன் பழக்கம் இல்லை என்பதும், ஜெயினை நேருக்கு நேராய் சந்திப்பதில் ஏற்பட்ட தயக்கமும் அவளை கிளம்ப விடாமல் தடுத்தன.

நிலஞ்சனாவுக்கு விடுமுறை முடிந்து கல்லூரி திறந்ததும் நாட்கள் வேகமாக சென்றன. அவர்களுக்கு கல்லூரி இறுதி ஆண்டு என்பதால் எல்லோரும் எதிர் காலம் குறித்த சிந்தனைகளுடனே படித்தார்கள். ஷீத்தும் விக்ரம் சர்மாவும் இந்த சில மாதங்களில் இரண்டொரு வயது கூடிப் போனார்கள். யோசித்து காசை செவழித் தார்கள். வருங்கால வாழ்க்கைக்கு திட்டம் தயாரித்துக் கொண்டார்கள். இரு குடும்பத்து உறவுகளுடனும் சுமூகமான தொடர்பில் இருந்தார்கள். ஒருவரை ஒருவர் காயப்படுத்தாமல் சண்டை போட்டார்கள். எல்லை மீறாமல் காதல் செய்தார்கள். ''வாட் எ கப்பிள்!'' என்றாள் நிலஞ்சனா பெருமையுடன்.

''உண்மை தான். விக்ரம் சர்மா! ஒரு ப்ளேபாய் என்று நினைத்திருந்தேன். அவன் இப்படி மாறியிருப்பது ஆச்சரியமாக இருக்கிறது'' என்றான் ரமேஷ்.

''ப்ளேபாய் என்பது அவனாக ஏற்படுத்திக் கொண்ட இமேஜ், உண்மையில் அவன் ரொம்ப சாது'' என்றான் சார்ல்ஸ்.

''நீ என்ன செய்ய போகிறாய்?'' என்றாள் பாக்யா.

''யோசிக்க வேண்டும்'' என்றாள் நிலஞ்சனா யோசனையின்றி.

அந்த வார சனிக்கிழமை நிலஞ்சனா அண்ணன், அண்ணியுடன் இஸ்கான் கோவில் போயிருந்தாள். பளிங்கு சிற்பமாய் விரிந்த கோயிலையும், உள்ளங் காலில் ஜில்லிட்ட மார்பிளின் குளிர்ச்சியையும், தரையையின் சுத்தத்தையும், ஏகாந்தமான அமைதியை யும் ஒரு சேர அனுபவிக்கையில் சுனிதா ஏக்கமாய் பெருமூச்சு விட்டாள். ''இங்கே நாட்களை எண்ண வேண்டும் இனிமேல்.''

''எதற்காக?'' என்றாள் நிலஞ்சனா புரியாமல்.

''உன் அண்ணாவுக்கு டிரான்ஸ்பர் வந்து விட்டது நிலஞ்சனா ஜம்மு போக வேண்டும்.''

''அதற்குள் டிரான்ஸ்பரா? இன்னும் இரண்டு வருடங்கள் முடியவில்லையே!''

''முடியப் போகிறது சஞ்சனா. நீ தாமதமாகத்தான் இங்கே வந்தாய். நீ கல்லூரியில் சேருவதற்கு ஆறுமாதம் முன்பே நாங்கள் இங்கே வந்து விட்டோம். நினை விருக்கிறதா?''

நிலஞ்சனா ''ஆமாம்'' என்று தலையசைத்தாள்.

''சொல் சஞ்சனா, நீ எங்களுடன் ஜம்மு வரப் போகிறாயா? அம்மா, அப்பாவுடன் ஜெய்ப்பூர் போய் இருக்கப் போகிறாயா?'' என்றான் ஹரிஹரன்.

''ஜம்மு வந்து விடு. குழந்தைகள் உன்னை ரொம்ப மிஸ் பண்ணுவார்கள். எனக்கும் வருத்தமாய் இருக்கும்'' என்றாள் சுனிதா.

''எப்படியிருந்தாலும் ஜெய்ப்பூர் போய் பத்து நாட்களாவது இருந்து விட்டு வா. இல்லை என்றால்

அம்மாவை என்னால் சமாளிக்க முடியாது'' என்றான் ஹரிஹரன்.

''நான் எதற்காக ஜம்முவுக்கோ, ஜெய்ப்பூருக்கோ போக வேண்டும்? நான் இங்கேயே இருக்கப் போகிறேன்'' என்றாள் நிலஞ்சனா.

''இங்கே எப்படி இருக்க முடியும்? உன் கல்லூரி முடியும் வரை டைம் கேட்டிருக்கிறேன். பிறகு குவார்ட்டஸை காலி செய்து கொடுத்தாக வேண்டும்.''

''எனக்கு ஒரு வேலை தேடிக் கொண்டால் நான் வெளியே வீடு பார்த்துக் கொள்வேன்.''

''அதற்கான அவசியம் என்ன இருக்கிறது? இது நம் சொந்த ஊர் இல்லை'' என்றான் ஹரிஹரன் வியப்புடன்.

''எனக்கு இந்த நகரம் மிகவும் பிடித்திருக்கிறது'' என்றாள் நிலஞ்சனா சிறிய குரலில்.

''ஜம்மு இதை விட அழகாக இருக்கும் சஞ்சனா'' நிலஞ்சனா பதில் பேசாமல் இருக்கவே சுனிதா சொன்னாள்.

''முதலில் நிலஞ்சனாவின் படிப்பு முடியட்டும். பிறகு இதைப் பற்றி யோசிக்கலாம்.''

''யோசிக்க சான்ஸ் இல்லை. யூனிட் இருக்கும் இடத்திற்கு நான் போய்த்தான் ஆக வேண்டும். சஞ்சனா, கடமைகளையே வாழ்க்கையாக வாழப் பழகியவர்கள் நாம். எதுவுமே இங்கு நிரந்தரம் இல்லை. எனவே எதன் மீதும் அதீத பற்று கொள்ளாமல் இருக்க கற்றுக் கொள்ள வேண்டும்'' என்றான் ஹரிஹரன்.

அவர்கள் குடும்பத்தில் ஒருவருக்கொருவர் அன்பும், அக்கறையும், கொண்டிருந்தாலும் அநாவசிய சென்டிமென்ட்கள் இருந்ததில்லை. தாங்கள் உணர்ச்சிவசப் படுவது பணிக்கு செல்பவர்களை பலவீனப் படுத்தி விடும் என்பதால் சிறுவயதிலிருந்தே உணர்ச்சிகளை வெளிக்காட்டாமல் வாழப் பழகியவர்கள். அதனால் நிரஞ்சனா பெங்களூருவிலேயே இருக்கப் போவதாக சொன்னதை எளிதாக எடுத்துக் கொள்ள முடியாமல் ஹரிஹரன் யோசனையில் ஆழ்ந்தான்.

கற்கண்டு பிரசாதத்தைப் பெற்றுக் கொண்டு ராதா கிருஷ்ணனின் முன் கண்மூடி நின்ற நிலஞ்சனாவுக்கு பற்றுதல் இல்லாமல் இருப்பது எப்படி என்று யோசனை யாக இருந்தது. புப்பூ இறந்து நான்கு மாதங்களாகி விட்டது. ஜெயினை அவள் மறுபடி சந்திக்கவே இல்லை. அவனிடமிருந்து செய்திகளும் வருவதில்லை. கல்லூரியில் உமரின் கிளாஸ் வேறு பில்டிங்கிற்கு மாறி விட்டதால் அவனையும் பார்க்க முடியவில்லை.

கல்லூரிக்கு தினமும் அவனது ரெஸ்டாரண்ட் வழியாகத் தான் போகிறாள். வெளியே எங்காவது ஜெயின் தென்பட்டுகிறானா பல முறை தேடியிருக் கிறாள். ஆனால் அவனைத் தேடிப் போய் சந்திக்கத் தயக்கமாக இருந்தது. ஜெயின் ஒருவேளை இப்போது அவளை நினைக்காமல் இருக்க பழகியிருக்கலாம். அவனை காதலிக்காத, காதலை ஏற்றுக் கொள்ளாத திடுதிப்பென்று திருமணமானதாக அறிவிக்கும் ஒரு பெண்ணிடம் தொடர்ந்து எப்படி ஈடுபாடு கொள்ள முடியும்? ஜெயின் நல்லவன். கண்ணியமானவன்.

பெங்களூருவில் தனக்கு கிடைத்த அருமையான நண்பன். அவனுடைய நட்பைத் தொடர முடியாது போனது என்னுடைய துரதிஷ்டம். எப்படியிருந்தாலும் கிருஷ்ணா, ஜெயின் சந்தோஷமாக இருக்க வேண்டும். அவன் விரும்பியவை எல்லாம் அவனுக்கு கிடைக்க வேண்டும். நிலஞ்சனா மனமுருக ப்ரார்த்தித்தாள். திரும்பிச் செல்கையில் சுனிதா சொன்னாள், ''தன்வீருக்கு திருமணம் என்று கேள்விப்பட்டேன்.''

''நிஜமாகவா?'' என்றான் ஹரிஹரன் திகைப்புடன்.

''ம். ஜலந்தரில் அவனது உறவுப் பெண்ணாம். அவன் அம்மா பார்த்து முடிவு செய்தார்களாம். இங்கே மகன் தனியாய் சிரமப்படுவதை வந்து பார்த்ததும் உடனே பேசி முடித்து விட்டார்கள் போலிருக்கிறது.''

''தன்வீர் என்னிடம் சொல்லவே இல்லையே!''

''எல்லாம் முடிவான பிறகு சொல்லப் போவதாக சொன்னான்.''

''நான் வேறு மாதிரி நினைத்திருந்தேன்'' என்றான் ஹரிஹரன் தங்கள் முன்னால் படிகளில் இறங்கிக் கொண்டிருந்த நிலஞ்சனாவைப் பார்த்தபடி.

''அவனும் அப்படித்தான் நினைத்திருந்தான். இடையில் கடவுள் வேறு நினைத்து விட்டார் போலிருக் கிறது.''

''இருந்தாலும் அவன் என்னிடம் ஒரு வார்த்தை கேட்டிருக்கலாம்'' என்றான் ஹரிஹரன் சமாதான மாகாமல்.

''அதையே அவனும் எண்ணியிருக்கலாம்'' என்றாள் சுனிதா.

''நான் சமயம் வரட்டும் என்று காத்திருந்தேன்.''

''அந்த சமயம் தன்வீரின் கல்யாண சமயமாக இருந்திருக்கிறது.''

''சின்சியர் கை. நன்றாக இருக்கட்டும்'' என்றான் ஹரிஹரன். அவர்கள் நால்வரும் வீடு போய் சேர்ந்த போது தெருமுனையில் சுகாஷ் ஐஸ்க்ரீம் வண்டிக்கார னிடம் பேசிக் கொண்டிருப்பது கண்ணில் பட்டது. இந்த ஐஸ்க்ரீம் வண்டியை இதற்கு முன்பு இரண்டொரு முறை பார்த்திருப்பது நினைவுக்கு வந்தது. எங்கே பார்த்தோம் என்று யோசிக்கையில் சுனிதா சொன்னாள், ''இப்போது பத்மஜா பார்த்தால் புலம்பத் தொடங்கி விடுவாள், மகன் தினமும் ஐஸ்க்ரீம் சாப்பிடுவது தெரிந்தால் போதும்.'''

''சுகாஷ் தினமும் ஐஸ்க்ரீம் சாப்பிடுகிறானா?''

''தினமும் இதே வண்டியில் அவன் ஐஸ்க்ரீம் வாங்குவதை நான் பார்த்திருக்கிறேன். சில சமயம் சந்தீப் அல்லது ப்ரதீப்பிற்கு கூட வாங்கித் தருவான்?''

கடின் ரோட்டை சுற்றிலும் நல்ல ஐஸ்க்ரீம் பார்லர்கள் நிறைய இருக்கையில் இவன் ஏன் இந்த வண்டியில் மட்டும் வாங்க வேண்டும் என்ற கேள்வி நிலஞ்சனா வின் மனதை நெருடியது.

''ஜெயின் அப்துல்லா அல்லி நோடு'' என்றார் டாக்டர் சித்தய்யா.

''ஓ! யெஸ்'' ஜெயின் உற்சாகத்துடன் கைகளை உயர்த்தி ஆர்ப்பரித்தான். கண்ணுக்கெட்டிய வரை பச்சை விரித்திருந்த வயல்களுக்கு நடுவே அவர்கள் நின் றிருந்தார்கள். வயலுக்கு அருகில் பெரிய குளம்

ஒன்றிருந்தது. குளத்து நீரை வயலுக்கு பாய்ச்சவும், மழை நீர் குளத்திற்கு செல்லவும் சீரான கால்வாய்கள் வெட்டப்பட்டிருந்தன. கால்வாயின் ஓரமாய் வரிசை கட்டய பாத்திகளில் ரோஜாக்கள் பூத்து குலுங்கின. ஆனால் இருவரும் அதை எல்லாம் பார்க்காமல் வயலின் மீது பறந்த தட்டான் பூச்சிகளையும், குருவிகளையும், நாரைகளையும் சந்தோஷமாய் பார்த்துக் கொண்டிருந் தனர். வானம் லேசாய் இரண்டு அங்கொன்றும் இங்கொன்றுமாய் தூறல்கள் விழந்தன. தூறல் மண்ணில் பட்டதும் எழுந்த வாசனையை ஆழமாய் முகர்ந்த சித்தய்யாவின் கண்கள் கசிந்தன. ''இது தான் நம் மண்ணின் மணம். சிறுவயதில் நாங்கள் அனுபவித்த இந்த மண்ணின் வளங்கள் அடுத்த தலைமுறைக்கு கிடைக்காமல் போய் விடக் கூடும் என்ற பயம் இருந்தது. இப்போது அந்த பயம் இல்லை. ஜெயின் உன்னால் தான் இது சாத்தியமாயிற்று'' என்றார் டாக்டர் சித்தய்யா.

''நம் எல்லோராலும் தான்'' என்றான் ஜெயின் அவர் களைப் பார்த்ததும் வந்து சூழ்ந்து கொண்ட விவசாயி களிடம். ''மண் வளம் பெற்று விட்டது. தெரிகிறதா உங்களுக்கு? உயிரோட்டமுள்ள மண் மழையைக் கண்டதும் மணக்கிறது. உயிரில்லாத மண்ணில் மழை எந்த வாசனையையும் ஏற்படுத்துவதில்லை. இரசாயன உரங்களும், பூச்சி கொல்லிகளும் மண்ணின் நுண் உயிரிகளை அழித்து உயிரோட்டத்தையும் குலைத்து விடுகிறது. மருந்தில்லாத பயிர்களை நோக்கி தான் நல்ல பூச்சி இனங்களும் வரும். இந்த பச்சை வெட்டுக்கிளிகள்

செடிகளை அழிக்கும் பூச்சிகளின் முட்டைகளை உணவாக கொள்கிறது. தட்டான் பூச்சிகளின் நீர் நிலைகள் மீது பறந்து கொசுக்களை உண்ணும். இன்று கொசுவால் புதிய பெயர்களில் வியாதிகள் பெருகிக் கொண்டே போவதற்கு தட்டான்பூச்சி இனத்தை நாம் அழித்ததும் ஒரு காரணம் என்றான் ஜெயின்.

''உரங்களை கை விட்டு இயற்கை விவசாயத்தின் பக்கம் திரும்பும்படி நீங்கள் வற்புறுத்தியபோது இந்த காலத்தில் இதெல்லாம் சரி வருமா என்று எங்களுக்கு சந்தேகமாகவே இருந்தது. மகசூல் வேறு குறைவு என்பதால் நிறைய பேர் மறுத்தார்கள். டாக்டர் வயலில் பயிர் செய்ததை எல்லாம் பார்த்த பிறகு தான் ஒவ்வொருவராக மாறினார்கள்'' என்றார் ஊர் பெரியவர்.

''மகசூல் குறைவு என்றாலும் அதற்கு நல்ல விலை கிடைக்கவும், தகுந்த முறையில் சந்தைப் படுத்தவும் நாங்கள் ஏற்பாடு செய்கிறோம்'' என்றான் ஜெயின்.

ஜெயின் கடந்த ஆறு மாதங்களாக கர்நாடகத்தின் கிராமங்களில் தான் இருந்தான். மகதி, தேனவஹல்லில கனகபுரா, நீலமங்களா என ஊர் ஊராக சுற்றிக் கொண்டிருந்தான். பெங்களூருவில் புகழ் பெற்ற டாக்டரான சித்தய்யா அவனது நண்பனின் தந்தை. டாக்டர் சித்தய்யா விவசாய குடும்பத்திலிருந்து வந்தவர். பெங்களூருவில் இந்திரா நகரில் பெரிய வீடு இருந்தது என்றாலும் சனிக்கிழமையானால் கூம்கூர் வந்து விடுவார். அங்கு அவருக்கு நிறைய நிலங்களும், பழைய ஓட்டு வீடும் இருந்தது. இரசாயனங்களால் மலடாகிப் போன தன் நிலத்தையும், நீர் ஆதாரங்களை

மீட்டெடுக்க விரும்பி ஜெயினுடன் கை கோர்த்தார். பலனாய் வரண்ட நிலம் புத்துயிர் பெற்றது.

ஊர் ஒத்துழைப்புடன் ஏரி தூர்வாரப்பட்டு, கால்வாய் சீரமைத்து, கரை உயர்த்தியதால் அடுத்து வந்த மழையில் ஏரி நிரம்பி நின்றது. மற்ற கிராமங்களுக்கும் இத்திட்டத்தை செயல்படுத்தும் முயற்சியில் டாக்டரின் உதவியுடன் ஜெயின் ஈடுபட்டிருந்தான்.

''டாக்டர் ரெஸ்ட்டாரண்ட் பக்கம் போய் ரொம்ப நாட்கள் ஆகி விட்டது. நான் நாளை பெங்களூர் கிளம்பலாம் என்றிருக்கிறேன்'' என்றான் ஜெயின்.

''ஷ்யூர். உன் உதவியை நாங்கள் மறக்கமாட்டோம்'' என்றார் டாக்டர் சித்தய்யா.

''உண்மை தான் தம்பி. உடல் வருத்தம் பாராமல், காசு பணம் வாங்காமல் இங்கேயே கிடந்து செய்தீர்கள்'' என்றார்கள் ஊர்க்காரர்கள்.

''நான் இங்கே இருந்தது கொஞ்ச நாட்கள் தான். ஆனால் வாழ்நாள் முழுக்க உலகிற்கு உணவளிக்கும் உங்கள் பணிக்கு எதுவும் ஈடாகாது'' என்றான் ஜெயின்.

கூடியிருந்த முகங்களில் பெருமிதம் மலர, ஜெயின் அவர்களிடம் விடைபெற்று டாக்டருடன் நடந்தான். ஈரமான காற்று உடலை தழுவ வரப்பின் மீது நடந்து டாக்டருக்கு வெளிநாட்டில் வசிக்கும் தன் மகன்களின் நினைவு வந்தது. எல்லாம் இங்கிருக்க எதைத் தேடிப் போகிறார்கள் என்ற அலுப்புடன் ஜெயினை அழைத் தார். ''ஜெயின் இந்த முறை நீ எனக்குபதில் சொல்லித் தான் ஆக வேண்டும்.''

‘‘கொஞ்சம் ஈஸியான கேள்வியாக கேளுங்கள்’’ என்றான் ஜெயின்.

‘‘ரொம்ப ஈஸிதான். உன் திருமணம் எப்போது ஜெயின்?’’

‘‘ஹா... ஹா... இது பதில் இல்லாத கேள்வி.’’

‘‘ஏன் இல்லை? உன் வயது பையன்கள் தினமும் பெற்றோரை இந்த கேள்வி தான் கேட்கிறார்கள்.’’

..........

‘‘ஜெயின் நேரடியாகவே கேட்கிறேன். எந்த காரணமும் இன்றி ஏன் இன்னும் திருமணத்தை தள்ளிப் போடுகிறாய்?’’

‘‘திருமணம் செய்து கொள்ள நான் மட்டும் நினைத்தால் போதுமா? ஒரு பெண் வேண்டாமா?’’

‘‘இது கதை. ஜெயின் பின்னால் சுற்றும் பெண்களின் எண்ணிக்கையை என் மகன் சொல்லியிருக்கிறான்.’’

‘‘அதெல்லாம் சும்மா.’’

‘‘இருக்கலாம். ஆனால் உன் பெற்றோர் உன் திருமணத்தைப் பற்றி ரொம்பக் கவலைப் படுகிறார்கள். உனக்குப் பயந்து வெளிக்காட்டாமல் இருக்கிறார்கள்.’’

‘‘என்னிடம் பயமா?’’ என்றான் ஜெயின் வியப்புடன்.

‘‘பயம் அச்சத்தினால் மட்டுமல்ல. அன்பினாலும் வரும். உன் மீது அன்பு கொண்டவர்களுக்காக யோசி. அதுவும் நபீஸா கடைசி வரை உன்னைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தாள்.’’

புப்பூவின் நினைவில் ஜெயின் மனம் கனத்தது. அவர் இறந்த பிறகு அவரது பெண் எத்தனை வற்புறுத்தியும்

இங்கே தங்காமல் அக்கா, சித்தப்பாக்களுடன் இருக்க விரும்புவதாக கூறி கொல்கத்தா போய் விட்டாள். அவர்கள் கிளம்புகையில் சித்தப்பாக்களிடம் அவளுக்கு நல்ல வரனாக பார்க்கும் படியும் திருமண செலவுகளை தான் ஏற்றுக் கொள்வதாகவும் ஜெயின் சொன்னான். அவர்கள் நிம்மதியுடன் தலையசைத்து விட்டு போனார் கள். புப்பூ இல்லாத வீட்டின் வெறுமை முகத்தில் அறைய, அதை மறக்கும் பொருட்டு எல்லோரும் தீவிரமாக வேலை பார்க்க ஆரம்பித்தார்கள். ஜெயின் கிளம்பி 'குப்பி' க்கு வந்தவன் இன்னும் வீடு போய் சேரவில்லை. இரண்டு நாளைக்கு ஒரு வீட்டிற்கு போன் செய்கையில் ''சீக்கிரம் கிளம்பி வா ஜெயின். நீ இல்லாமல் வீடு வீடாகவே இல்லை'' என அம்மாவோ, அப்பாவோ சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். அவனை பெங்களூருவுக்கு செல்ல விடாமல் தடுப்பது எதுவென்று அவனுக்கே புரியவில்லை. எத்தனை தான் ஓடினாலும் உண்மை அசையாமல் எதிரே நிற்கத் தான் செய்கிறது. அதிலிருந்து எப்படி வெளியே வருவேன் என ஜெயின் யோசனையில் மூழ்குகையில் டாக்டர் அழைத்தார்.

''ஜெயின் எனக்கு நீ இன்னும் பதில் சொல்ல வில்லை.''

''என்னைப் பொறுத்தவரை திருமணம் என்பது தீவிரமான மெனக்கெடல் இல்லை. வாழ்வில் இயல் பாய் நடக்கும் எத்தனையோ விஷயங்களில் இதுவும் ஒன்று. அவ்வளவு தான்.''

அவர்கள் வரப்பை கடந்து மெயின் ரோட்டிற்கு வந்து விட்டிருந்தனர். அங்கிருந்து டாக்டரின் வீடு ஒரு கிலோ

மீட்டர் தொலைவு இருக்கும். மாலை வேளைகளில் இருவரும் பேசியபடியே வயலிலிருந்து வீடு வரை நடந்து செல்வது வழக்கம். இப்போதும் அதே போல் நடக்கையில் ஜெயின் பேச்சை நிறுத்தி விட்டு கூர்ந்து கவனித்தான் "டாக்டர் எதோ சத்தம் கேட்கிறார் போலில்லை?"

உற்று கேட்ட சித்தய்யா சொன்னார். "ஆமாம். எதோ முணுமுணுப்பாய் கேட்கிறது."

ஜெயின் தன் செல்போனிலிருந்து டார்ச்சை உயிர்ப் பித்தான். சுற்றிலும் தேடியபடியே இருவரும் நடந் தார்கள். நான்கடி தூரம் போனதும் சாலையின் இடது புறமாய் யாரோ விழுந்து கிடப்பது தெரிந்தது.

"ஆக்ஸிடென்ட் ஆக இருக்கும்" என்றான் ஜெயின் வேகமாக நடந்தபடி.

"அப்படித் தெரியவில்லை ஜெயின். அடிபட்ட வண்டி அருகில் இல்லையே!" என்றார் சித்தய்யா.

"யாராவது இடித்து விட்டு நிற்காமல் போயிருக் கலாம்."

"அப்படியானால் அடிபட்டது உள்ளூரகரர்களாய் இருக்கக் கூடும்" பேசியபடியே அந்த இடத்தை நெருங்கியவர்கள் தார்சாலையில் இரத்தம் உறைந்து கிடக்க, ஒரு பெண் உருண்டு கிடந்ததை கண்டு திகைத் தார்கள்.

"ஜெயின் லைட்டை உயர்த்திப் பிடி" என்றபடி டாக்டர் பரிசோதனையில் இறங்கினார். ஜெயின் லைட்டை உயர்த்த வேண்டிய அவசியமின்றி அப்போது

எதிரே வந்த ஒரு லாரியின் முகப்பு வெளிச்சத்தில் அந்த பெண்ணின் முகம் தெளிவாக தெரிந்தது. ஜெயின் கையிலிருந்த செல்போன் நழுவியது. ''நிலா...'' என்ற அவனது கதறல் அமைதியான சாலையில் எதிரொலித்தது. பாய்ந்து சென்று அவளை அள்ளிக் கொண்ட ஜெயின் ''நிலா... இங்கே பார். என்னைப் பார்...'' என பதட்டத்துடன் அவள் முகத்தை தட்டினான். அவன் உலுக்கியதில் அந்த பெண்ணின் தோள்பட்டையிலிருந்து இரத்தம் வழியவே, ''ஜெயின் கன்ட்ரோல் யுவர் செல்ப். முதலில் அந்த பெண்ணை கீழே விடு'' என்றார் சித்தய்யா அதட்டலுடன்.

அந்த பெண் ஜெயினுக்கு வேண்டியவள் என்பதை புரிந்து கொண்ட சித்தய்யா அவளை தன் வீட்டிற்கு அழைத்து செல்வதற்கான ஏற்பாடு செய்தார். வீட்டிற்கு போன் செய்து டிரைவரை அழைத்து காரை எடுத்து வரும் படி சொல்லி விட்டு அவர் திரும்பிப் பார்ப்பதற்குள் ஜெயின் அந்த பெண்ணை சுமந்தபடி ஓடத் தொடங்கியிருந்தான்.

நிலஞ்சனாவுக்கு தலை பாரமாய் இருந்தது. உடல் தீயாய் எரிந்தது. நினைவுகள் கோர்வை இன்றி நழுவின. எங்கோ நடந்து போகிறாள். சுகாஷ் முன்னால் போகிறான். அவனுடன் செல்பவர்கள் அவனை விட்டு விட்டு இவளை நெருங்குகிறார்கள். திடீரென சுகாஷ்சை காணோம். அவள் ஒரு காரில் கிடக்கிறாள். கார் எங்கோ நிற்கிறது. அவள் இறங்கி ஓடுகிறாள். பின்னாலிருந்து ஒரு கார் வேகமாக வருகிறது. அவள் ஒதுங்கிப் போகிறாள். ஆனாலும் கார் அவளை இடித்து தள்ளுகிறது.

பிறகு எதுவுமே தெரியவில்லை. ஒரே இருட்டாக இருக்கிறது. திடீரென யாரோ உலுக்குகிறார்கள். ''நிலா'' என்ற குரல் கேட்கிறது. அது... ஜெயின்... ஜெயின் தான் அப்படிக் கூப்பிடுவான். வேண்டாம் என்றாலும் கேட்க மாட்டான். அவனுக்கு பதில் சொல்ல முயற்சிக்கிறாள். ஆனால் குரல் தொண்டையை விட்டு வெளியே வரவில்லை. ஜெயின் ஏதோ பேசுவது கேட்டுக் கொண்டே இருக்கிறது. அவள் எங்காவது ஆபத்தில் சிக்கும் போதெல்லாம் ஜெயின் வந்து விடுகிறான். இருவருக்கும் இடையே பூர்வஜென்ம தொடர்பு ஏதேனும் இருக்கக் கூடும். ஜெயின் என்னை விட்டு விடு. என்னால் உனக்கு துன்பத்தைத் தவிர வேறு எதையும் தர முடியாது. நிலஞ்சனா உனக்கில்லை. அவள் யாருக்குமே இல்லை. நீ போய் மகிழ்ச்சியாய் இரு. புப்பூவின் பெண்ணை மணந்து கொள். அழகான குழந்தைகளை பெற்றுக் கொள். நீ கடின உழைப்பால் நிறைய சாதிப்பாய். உன் மனைவி முற்றத்தில் அமர்ந்து மாமியாருடன் பேசியபடியே மீனை சுத்தம் செய்வாள். மாமனாருக்கு சாய் போட்டு தந்து, வஹிதாவுக்கு தலை பின்னி விடுவாள். அடுக்களையில் சேர்த்து வைத்த சிறுவாட்டு காசை உமர் நண்பர்களுடன் செலவழிக்க கொடுப்பாள். மாலையில் நீ வரும் நேரம் தானம் தயாராகி வந்ததும் நீ தயாராக உதவி செய்து, அன்றைய கதைகளை ஒப்பித்து, குழந்தைகளின் குறும்புகளை ரசித்து... உன் வாழ்வை சொர்க்கமாக்குவாள். நில உனக்கு வேண்டாம் ஜெயின். மறந்து விடு.

''டாக்டர் ஜுரம் கொதிக்கிறது'' என்றான் ஜெயின் கவலையுடன்.

''அடிபட்டிருக்கிறது இல்லையா, ஜுரம் இருக்கத்தான் செய்யும். நல்லவேளை எலும்பு முறிவு எதுவும் ஏற்படவில்லை'' என்றார் டாக்டர் சித்தய்யா.

சற்று நேரத்திற்கு பின் நினைவு வந்தவராக கேட்டார். ''இந்த பெண் வீட்டிற்கு தகவல் சொல்லியாயிற்றா?'' ஜெயின் அப்போது தான் நினைவு வந்தவனாக திகைத்தான்.

''அவர்கள் வீட்டு நெம்பர் நிலஞ்சனாவின் போனில் இருக்கும். அடிபட்ட இடத்தில் போன் எதுவும் கிடந்ததா என்று பார்க்க வேண்டும்.''

''பார்த்து விட்டேன் ஜெயின். காலையில் வயலுக்கு போன போது அந்த வழி எல்லாம் பார்த்தேன். இப்படி ஒரு விபத்து நடந்ததற்கான அறிகுறியே இல்லை. அது சரி நிலஞ்சனா பெங்களூரு என்று சொன்னாய் அல்லவா? அந்த இரவில் தனியாக இங்கு எதற்கு வந்தாள்?''

''எனக்கு அதுதான் புரியவில்லை?'' என்றான் ஜெயின் குழப்பத்துடன்.

''அடிக்கடி உன் பெயரை சொல்லி புலம்புவதைப் பார்க்கையில் உன்னைப் பார்க்க வந்திருக்கலாம் என்று தோன்றுகிறது'' என்றார் சித்தய்யா.

''இம்பாஸிபில். நான் இங்கிருப்பது என் வீட்டவர்களுக்கே தெரியாது.''

''வீட்டவர்களுக்கு தெரியாத விஷயம் வேண்டியவர்களுக்கு தெரிந்திருக்கக் கூடும்.''

டாக்டருக்கு ஏதோ அனுமானம் ஏற்பட்டிருக்கக் கூடும் என்ற நினைவில் ஜெயின் சொன்னான்,

''விபத்தில் அரை மயக்க நிலையில் என்னைப் பார்த்தாள். இன்னும் முழுதாக நினைவு திரும்பாததால் அதையே சொல்லிக் கொண்டிருக்கிறாள்.''

''ஜெயின்...'' என்றபடியே நிலஞ்சனா புரண்டு படுத்தாள். ''என்னை மன்னித்து விடு. உன்னை இத்தனை நாள் சந்திக்கவே இல்லை'' மேலே சொல்ல அவள் ஏதோ சொல்ல, டாக்டர் சிரித்தார்.

''ஜெயின் சொன்னது ஒரு வேளை உண்மையாகக் கூட இருக்கக் கூடும்.''

ஜெயின் சங்கடத்துடன் மௌனமானான்.

அது டாக்டரின் கிராமத்து வீடு. டாக்டர் ஊருக்கு வரும் போதெல்லாம் வயலை பார்வையிட்ட நேரம் போக அவரை தேடி வருபவர்களுக்கு வைத்தியமும் பார்ப்பார். எனவே அத்தியாவசிய மருந்துகளுடன் ஒரு மினி டிஸ்பென்சரி அங்கிருந்தது. நிலஞ்சனாவை பரிசோதித்து, ஆபத்து இல்லை என்று அறிந்த பிறகு டாக்டர் அடிபட்ட இடத்தில் தையில் இட்டு காயத்திற்கும் வீக்கத்திற்கும் சரியாக சிகிச்சை அளித்தார். ஜெயின்னின் கவலை பாய்ந்த முகமும், நிலஞ்சனாவின் முனகல்களும் அவருக்கு எதையோ உணர்த்தியிருக்க வேண்டும். டாக்டர் சித்தய்யா ஜெயின் மீது மிகுந்த அன்பு கொண் டவர் தான். ஆபத்தில் உதவியவர் தான். என்றாலும் அவரிடம் நிலஞ்சனாவைப் பற்றி என்ன சொல்ல முடியும்? நான் உயிராய் காதலித்த பெண் ஏற்கனவே மணமானவள் என்றா? அதை அவளே சொன்ன பிறகும் அவளை மறக்க முடியாத தன் பலவீனத்தையா? இதில் எதை சொன்னாலும் அவன் அன்பு கேலிக்குள்ளாக்கப்

படும். அவன் கலாச்சார குற்றவாளியாக்கப் படுவான். அவன் குடும்பம் அவமானப்படும். இத்தனை வருடங்களில் வராத காதல் எனக்கு இப்போது ஏன் வந்தது? ஜெயின் வேதனையுடன் கண்களை மூடினான்.

இரண்டு நாள் சென்றதும் நிலஞ்சனாவின் ஜீரம் சரியானது. தோள்பட்டையில் காயமும், கையில் சிராய்ப்பு இருந்த போதும் டாக்டர் அளித்த மருந்துகளால் வலி குறைந்திருந்தது. அன்று காலை அவளை எழுப்பி சூப் குடிக்க வைத்த ஜெயினிடம் ''உன்னை இப்படி சந்திப்பேன் என்றுநான் நினைக்கவே இல்லை'' என்றாள் நிலஞ்சனா.

''நானும் தான்.''

''நீ இங்கே என்ன செய்கிறாய் ஜெயின்?''

''அது நான் கேட்க வேண்டிய கேள்வி?''

''நீ இங்கே இருப்பது தெரியாமல் பெங்களூருவில் உன்னை பார்க்க முடியவில்லையே என்று நினைத்துக் கொண்டிருந்தேன்.''

''நீ எதற்காக என்னைப் பார்க்க வேண்டும்?''

''இதென்ன கேள்வி? நீ என் நண்பன்?''

''ஸ்டாப் நான்சென்ஸ்'' என்றான் ஜெயின் உரத்த குரலில். நிலஞ்சனாவின் கையிலிருந்த சூப் தளும்பியது.

''நண்பன் என்பது ரொம்ப வசதியான வார்த்தை. இல்லையா நிலஞ்சனா? கல்லூரியில் சந்திப்பவனும் நண்பன் தான். காதலை சொல்பவனும் நண்பன் தான். உன் கணவனிடம் இந்த நண்பனைப் பற்றி சொல்லி யிருக்கிறாயா நிலஞ்சனா?''

..............

''சொல் நிலஞ்சனா. உன்னை நட்பு பாராட்ட இங்கே அனுப்பி விட்டு அவன் எங்கே இருக்கிறான்?''

''நாம் இதைப் பற்றி பேச வேண்டாம் ஜெயின்.''

''எனக்கு பேச வேண்டும் நிலஞ்சனா. பெங்களூரு வில் இருக்க வேண்டியவள் ஒரு கிராமத்தில் நடு இரவில் இரத்த காயங்களுடன் தெருவில் கிடக்கிறாய். உன்னை தனியே அனுப்பி விட்டு அவன் என்ன தான் செய் கிறான் என்று தெரிய வேண்டும் எனக்கு.''

நிலஞ்சனா தலையை பிடித்தபடி சாய்ந்து அமர்ந்தாள். அசதியில் கண்கள் கிறங்கின. தோள்பட்டை சுரீ லென்றது. அவளைப் பார்த்த ஜெயின் நிதானித்தான். இரண்டு நாள் முன்பு இவள் உயிர் பிழைத்தால் போதும் என தவித்தது நினைவுக்கு வரவும் தன்னையே கடிந்து கொண்டான்.

''நீ இப்போது ஓய்வெடு'' என்றபடி அவள் தலை யணையை சரி செய்து படுக்க உதவி செய்தான். வாகாக திரும்பிப் படுத்த நிலஞ்சனா தலையணையை பிடித் திருந்த ஜெயின் கரங்களைப் பற்றினாள்.

''ஜெயின் இந்த நிமிடத்தில் உன்னை விட நெருக்கமானவர்கள் எனக்கு இந்த உலகில் யாரும் இல்லை. இதை நீ நம்ப வேண்டும்'' என்றாள் இறைஞ் சுகிற குரலில்.

''நம்ப முயற்சிக்கிறேன்'' என்றான் ஜெயின் கம்மிய குரலில்.

அன்று இரவு டாக்டர் சித்தய்யா ''உன் வீட்டில் உன்னைத் தேடிக் கொண்டிருப்பார்கள் இல்லையா?'' என்றார் நிலஞ்சனாவிடம்.

''இல்லை என்றாள் நிலஞ்சனா. பாக்கியாவின் திருமண நிச்சயதார்த்தத்திற்கு மைசூர் போய் நண்பர்கள் எல்லாம் ஊர் சுற்றி பார்த்து விட்டு நாலைந்து நாள் கழித்து வருவதாகத்தான் ப்ளான். அதனால் இப்போது தேட மாட்டார்கள். நான் இன்று மதியம் போன் செய்து அண்ணியிடம் பேசினேன். இப்போது விஷயத்தை சொன்னால் பயந்து போவார்கள். நான் வீட்டிற்கு போனதும் சொல்லிக் கொள்வேன்.''

''மைசூருக்கு கிளம்பியவள் இங்கே எப்படி வந்தாய்?''

நிலஞ்சனாவுக்கு, சென்ற மாதத்தில் கல்லூரி முடிந்துவரும் போது சுகாஷ்சை ஐஸ்க்ரீம் வண்டியுடன் பார்த்தது நினைவுக்கு வந்தது. இந்த முறை அவர்கள் அருகில் சென்ற நிலஞ்சனா ''நீ இங்கே என்ன செய்கிறாய்?'' என்றாள் வண்டிக்காரனிடம் அதட்டலாக.

''பார்த்தால் தெரியவில்லையா? ஐஸ்க்ரீம் விற் கிறேன்'' என்றான் அவன் முறைப்பாக.

''உன்னைப் பார்த்தால் ஐஸ்க்ரீம் விற்பவனாகத் தெரியவில்லை. இனி ஒரு முறை இந்த பக்கம் உன்னை பார்க்கக் கூடாது நான்.''

''பார்த்தால் என்ன செய்வாய்?'' என்றான் அவன் நக்கலாக.

நிலஞ்சனா திரும்பி சுகாஷ்சின் கைகளைப் பற்றி னாள்.

''சுகாஷ் இப்போது நீ வகுப்பில் இருக்க வேண்டி யவன். இங்கே என்ன செய்கிறாய்? வா போகலாம்'' என அவனை இழுக்கவும் அவன் கையிலிருந்த பாக்கெட்

நழுவி கீழே விழுந்தது. அதிலிருந்து ப்ரௌன் நிற பொருளை பார்த்த நிலஞ்சனா அதிர்ச்சியுடன் குரல் கொடுத்தாள், ''கார்ட்ஸ் பிடியுங்கள் இவனை.''

வாயிலில் நின்றிருந்த செக்யூரிட்டி கார்ட்ஸ் ஓடி வருவதற்குள் வண்டிக்காரன் மின்னலாய் பறந்து போனான். ''மேடம் எனி ப்ராப்ளம்?'' என்றார்கள் கார்ட்ஸ்.

சுகாஷ்சின் முகம் க்ன்றிப் போனதைப் பார்த்த நிலஞ்சனா ''யாரோ பர்ஸை பறிக்க முயன்றார்கள்'' என்றாள் அவர்களிடம்.

செக்யூரிட்டிகள் காம்பவுன்டின் வெளிப்புறமாய் தேடத் துவங்க, நிலஞ்சனா சுகாஷின் பற்றிய கைளை விடாமல் உள்ளே சென்றாள். அந்த நேரத்தில் இருவரும் ஒன்றாக வீட்டிற்கு வரவே வியப்புடன் விசாரித்த பத்மஜாவிடம் ''சுகாஷ் களைப்பாக இருக்கிறான் ஆன்ட்டி. சுடுநீரில் குளிக்க வையுங்கள். நல்ல சாப்பாடு கொடுங்கள். நாம் பிறகு பார்க்கலாம்'' என விடை பெற்றாள்.

மறுநாள் நிலஞ்சனா சுகாஷைப் பார்த்த போது எதுவும் பேசாமல் ஒரு புன்னகையுடன் கடந்து போனாள். பத்மஜாவிடம் அவள் தன்னைப் பற்றி பேசவில்லை என்பது சுகாஷ்சிற்கு நிலஞ்சனா மீது நம்பிக்கையை ஏற்படுத்த மூன்றாம் நாள் சுகாஷ் லேசாக புன்னகைத் தான். நான்காம் நாள் அருகில் வந்து ''ஸாரி'' என்றான். சுகாஷ் வழிக்கு வருகிறான் என்பது புரியவும் நிலஞ்சனா அவனிடம் மிருதுவாக பேசினாள். அறிவுரை சொல் வதை விடுத்து அவனுக்கு பிடித்த விஷயங்களாக

பேசினாள். சினிமா பார்ட்டி, நண்பர்கள் என அவர்களது உலகத்திற்குள் நுழைந்தாள். கிருஷ்ணராவ்வின் விட்டேறியான போக்கும், பத்மஜாவின் புலம்பல்களும் அவனை வெறுமையாக்குவதை உணர்ந்தாள். சுகாஷ் சுடன் மற்ற குழந்தைகளையும் சேர்த்துக் கொண்டு கேரம், விளையாடினாள். விளையாட்டின் இடையே தவறான பழக்கங்களால் திசைமாறிப் போன தன் நண்பனின் கதையும், அதனால் அவன் குடும்பம் அனுபவித்த துன்பங்களையும் பகிர்ந்து கொண்டாள். சுரேஷ் சரியாகி விட்டான் என்று தோன்றியதும் நிலஞ்சனா பத்மஜாவிடம் பேசினாள். டீன்ஏஜ் பையன் களை கையாளுவதில் உள்ள சிரமத்தை விளக்கினாள். விட்டுப் பிடிக்கவில்லை எனில் ஓரேயடியாக விலகி விடுவான் என பயமுறுத்தினாள். அன்பை பயங்களாக காண்பிக்காமல் அக்கறையாக வெளிப்படுத்துவது எப்படி என்று சொல்லிக் கொடுத்தாள்.

பத்மஜாவின் சுபாவம் மாறத் தொடங்கியதும் சுகாஷ் முகத்தில் சிரிப்பு வந்தது. டென்னிஷ் விளையாட்டில் அவன் ஜெயித்த கப்பை கேம்பஸ் முழுக்க காண்பித்து ''என் மகனைப் போல வருமா?'' என பத்மஜா பெருமையடித்துக் கொண்ட போது சுனிதாவே அதி சயித்துப் போனாள்.

அந்த சமயத்தில் தான் பாக்கியாவின் திருமண நிச்சயதார்த்தம் வந்தது. பாக்யா வீட்டிற்கே வந்து அழைத்து விட்டுப் போனாள். நிச்சயதார்த்தம் குழந்தை களின் பரிட்சை சமயமாக இருந்தது. உபேந்திரா ஹரிஹரனுடன் வெளியூர் போய் இருந்தான். எனவே 'கல்யாணத்திற்கு போய் கொள்ளலாம்' என்றாள் சுனிதா.

''அவள் திருமண சமயம் நாம் இந்த ஊரில் இருக்கிறோமோ என்னவோ, இப்போது நிச்சயதார்த் தத்தை மிஸ் பண்ணக் கூடாது. என் ப்ரெண்ட்ஸ் எல்லோரும் நிச்சயம் முடிந்ததும் அங்கிருந்து ஒரு டூர் போய் வரவும் திட்டமிட்டிருக்கிறோம்'' என்றாள் நிலஞ்சனா.

''சரி கவனமாக போய் வா'' என சுனிதா ஒப்புதல் அளிக்கவும் நிலஞ்சனா நிச்சயத்திற்கு செல்ல தயாரானாள். நண்பர்கள் எல்லோரும் மைசூர் வந்து சேர்ந்து விடுவதாக சொல்லியிருந்ததால் நிலஞ்சனா தனக்கு டாக்ஸி புக் செய்திருந்தாள். டாக்ஸிக்காக வெளியே காத்திருந்த சமயம் அந்த ஐஸ்க்ரீம் வண்டிக் காரன் கண்ணில் பட்டான். இவன் இங்கே தான் சுற்றித் திரிகிறான் போலும். இவனால் இன்னும் எத்தனை குழந்தைகள் நாசமாகப் போகிறதோ! இன்று இவனை விட்டுவிடக் கூடாது. செக்யூரிட்டியை அழைத்து வந்து இவனை பிடித்து போலீஸில் ஒப்படைக்கலாம். அதுவரை இவன் இங்கேயே இருப்பானா? நிலஞ்சனா யோசனையுடன் செக்யூரிட்டியிடம் செல்கையிலேயே ஒரு ஜீப் ஒன்று வந்து நிற்க, வண்டிக்காரன் அதில் ஏறி அமர்ந்தான். காட்! அவனை எப்படியாவது பிடிக்க வேண்டும். நிலஞ்சனா பரபரத்த போது அவள் புக் செய்திருந்த டாக்ஸி அவளருகில் வந்து நின்றது. அதில் பாய்ந்து ஏறிக் கொண்ட நிலஞ்சனா ''அந்த ஜீப்பை பின் தொடருங்கள்'' என்றாள் டிரைவரிடம். ஜீப்பை பின் தொடர்ந்த சென்ற டாக்ஸி கோரமங்களாவை நான்கு முறையும், ஜெய்நகரை இரண்டு முறையும் சுற்றி வந்த

பின் ஒரு சிக்னலில் ஜீப்பைத் தவற விட்டது. ''ஓ ஷீட்'' என்றாள் நிலஞ்சனா விரல்களை மடக்கி. டாக்ஸி டிரைவர் வண்டியை நிறுத்தி இன்ஜினை அணைத்தான்.

''நீங்கள் மைசூர் போவதற்காகத்தான் டாக்ஸி புக் செய்தீர்கள் இல்லையா?''

''ஆமாம்... ஆனால்...''

''என்னால் எங்கும் வர முடியாது. நீங்கள் இங்கேயே இறங்கிக் கொள்ளுங்கள்'' என்றான் டிரைவர் கறாராக.

ட்ரிப்பை கான்சல் செய்து விட்டு டிரைவர் பணத் துக்காக காத்திருக்கவே நிலஞ்சனா வேறியவழியின்றி கீழே இறங்கினாள். இப்போது என்ன செய்வது? ஜீப் எங்கே போனதென்று தெரியவில்லை. எப்படியும் அவனைப் பிடிக்க முடியாது. திரும்ப இன்னொரு டாக்ஸி புக் செய்ய வேண்டும். அல்லது வீட்டிற்கு போய் விட்டு நாளை விடியற்காலையில் கிளம்ப வேண்டும். என அவள் யோசித்த போது ஒரு கார் அவள் அருகில் வந்தது. ''எங்கே போக வேண்டும் மேடம்? மீட்டர் காசு கொடுங்கள் போதும்'' என்றான் டிரைவர்.

''மைசூர் போக வேண்டும். வருகிறாயா?''

''வருகிறேன். கஸ்டமர் கூப்பிட்ட இடத்திற்கு போவது தானே என் வேலை! ஏறுங்கள் மேடம்'' டிரைவர் பின்பக்கக் கதவை திறந்து விட்டான்.

நிலஞ்சனா ஏறி அமர்ந்ததும் கார் கிளம்பியது. ''மேடம் திரும்பி வருவதற்கு கார் தேவைப்படுமா?'' என்றான் டிரைவர்.

''தேவையில்லை'' என்றாள் நிலஞ்சனா.

"வாடகை வேண்டுமானால் குறைத்துக் கொடுங்கள். வரும் போது எப்படியும் காலியாகத்தான் வரப் போகிறேன்."

"தேவைப்பட்டால் சொல்கிறேன்."

"மைசூரில் எங்கே போக வேண்டும் மேடம்?"

டிரைவர் அதிகம் பேசுபவனாக இருந்தான். நிலஞ்சனாவுக்கு பதில் சொல்ல அலுப்பாக இருந்தது. பேச்சை தவிர்க்க பின்னால் சாய்ந்து அமர்ந்து கண்ணை மூடிய நிலஞ்சனா சற்று நேரத்தில் அவளையும் அறியாது உறங்கிப் போனாள். வெகு நேரம் கழித்து ஏதோ பேச்சுக் குரல் கேட்டு கண் விழித்த போது முன்புறம் டிரைவர் அருகில் யாரோ அமர்ந்திருந்தார்கள். இருவரும் தாழ்ந்த குரலில் ஏதோ தீவிரமாக பேசுவதைக் கண்டதும் "யார் அது?" என்றாள் நிலஞ்சனா.

"என் தம்பி மேடம். பஸ்சை தவற விட்டு விட்டான். நாம் போகிற வழியில் இறங்கிக் கொள்வான்" என்றான் டிரைவர். நிலஞ்சனாவிற்கு அலாரம் அடித்தது. முன்னால் அமர்ந்திருந்தவனை உற்று கவனித்தாள். அதற்குள் அவர்கள் பேச்சை நிறுத்திக் கொள்ளவே காருக்குள் நிசப்தம் நிலவியது. அந்த நிசப்தம் லேசான கலக்கத்தை தர நிலஞ்சனா கார் செல்லும் பாதையை கவனித்தாள். அப்போது இருட்டத் தொடங்கி விட்ட தால் மனிதர்கள் நடமாட்டம் அதிகம் இல்லை. மைசூர் செல்லும் பாதையில் நேராக சென்று கொண்டிருந்த கார் தும்கூரைத் தாண்டியதும் உட்புறமாக திரும்பிச் செல்ல நிலஞ்சனா கவனமானாள். அந்த சாலையில் சிறிது தூரம்

செல்லவும் ''குப்பி'' என்ற பெயர் பலகை தென்பட்டது. நிலஞ்சனா எதையும் கண்டு கொள்ளாத பாவனையில் கண்களை மூடி சாய்ந்தாள். சற்று நேரத்தில் ஒரு டீக்கடை அருகே கார் நின்றது. ''மேடம் டீ வேணுமா?'' என்றான் டிரைவர். பின்சீட்டில் சரிந்து படுத்திருந்த நிலஞ்சனா தூக்கத்தில் இருப்பவளைப் போல தென்படவும், அவர்கள் இருவரும் ஏதோ பேசியபடி இறங்கிப் போனார்கள். கார் டீக்கடையைத் தாண்டி சற்று தொலைவிலேயே நிறுத்தப்பட்டிருந்தது. நிலஞ்சனா காரின் பின்புற கண்ணாடி வழியே பார்க்கையில் கார் டிரைவருடன் நடந்து செல்வது ஐஸ்க்ரீம் வண்டிக்காரன் என்பது புரிய அதிர்ச்சியில் உறைந்து போனாள். டிரைவர் இவனுடைய ஆளாக இருக்க வேண்டும். அவள் யாரென்று தெரிந்தே தான் வாடகை டாக்ஸி வேண்டுமா என்று கேட்டிருக்கிறான். நிலஞ்சனா தான் சற்றும் யோசிக்காமல் மாட்டிக் கொண்டாள். இப்போது அவர்கள் திரும்பி வருவதற்குள் இங்கிருந்து போயாக வேண்டும். நிலஞ்சனா அவசரமாக காரிலிருந்து இறங்கினாள். என்ன தான் மெதுவாக மூடியபோதும் கார் கதவு சத்தத்தில் டீ கடைக்கு போய்க் கொண்டிருந் தவர்கள் திரும்பிப் பார்த்தாள். நிலஞ்சனா தாமதிக்காமல் ஓடத் தொடங்கினாள். பின்னால் காலடி சத்தங்கள் கேட்டன. நிலஞ்சனா வெகு வேகமாக ஓடினாள். சிறிது நேரம் ஓடிய பிறகு பின்னால் சத்தம் எதுவும் கேட்க வில்லை என்பதை உறுதிப் படுத்திக் கொண்டு திரும்பிப் பார்த்தாள். அவர்களை காணோம். டீக்கடை யும் கண்ணுக்கு தெரியவில்லை. நிலஞ்சனா ஓடுவதை

நிறுத்தி விட்டு நடக்கத் தொடங்கினாள். இங்கு அருகில் ஏதாவது கிராமம் இருக்க வேண்டும். இது கிராமத்து மெயின் ரோடாக இருக்கலாம். ஓடுகிற வேகத்தில் போன் எங்கோ விழுந்து விட்டது. இங்கு ஏதாவது கடையோ, வீடோ இருந்தால் அங்கிருந்து போன் செய்யலாம். நிலஞ்சனா சுற்றிலும் பார்த்தபடியே நடந்தள். சாலையின் இருபுறமும் இருந்த வயல்களை இருளை அடர்த்தியாக்கின. முட்டாள்தனமாய் நடந்து கொண்டோம் என தன்னை நொந்தபடியே நடந்த நிலஞ்சனாவின் பின்னால் காரின் ஹெட் லைட் வெளிச்சம் தெரிந்தது. அவள் சுதாரித்து சாலையிலிருந்து விலகி வயலில் குதிக்க முற்படுவதற்குள் கார் அவளை இடித்துத் தள்ளி விட்டு நிற்காமல் பறந்தது.

''ஓ காட். திஸ் இஸ் டேஜ்ஜரஸ். ரியலி டேஜ்ஜரஸ்'' என்றார் டாக்டர் சித்தய்யா திகைப்புடன்.

''இப்படி ஒரு அசட்டுத் துணிச்சல் உனக்கு எப்படி வந்தது?'' என்றான் ஜெயின் கோபமாக, ''போதைப் பொருள் புழக்கம் அன்டர்க்ரவுண்ட் மாபியாக்கள் கையில் இருக்கிறது. தீவிரவாத செயல்களுக்கு பணம் திரட்டுவது போதைப் பொருள் விற்பனை மூலமாகத் தான். உலகளாவிய மிகப் பெரிய நெட் ஒர்க் அது. கொலைகளும், போட்டிகளும் நிறைந்த உலகம். இந்த ஐஸ்க்ரீம் விற்பவன் இதில் ஒரு தூசு. இவனை விட பெரிய ஆட்கள் பலர் இங்கே இருக்கின்றனர். சில சமயம் இரகசியமாகவும், பல சமயங்களில் பகிரங்கமாகவும் தொழில் நடக்கிறது. இதில் எந்த துணிச்சலில் நீ உள்ளே நுழைந்தாய்? அவர்கள் உன்னை பயமுறுத்த மட்டுமே

எண்ணியிருக்க வேண்டும். அதனால் தான் இடித்த தோடு விட்டிருக்கிறார்கள். நல்ல வேளை எங்கள் கண் ணில் பட்டாய்.''

ஏதோ யோசனையில் இருந்த நிலஞ்சனா தனக்குள் புன்னகைத்தாள்.

''நாங்கள் ஸீரியசாக பேசிக் கொண்டிருக்கிறோம். இது விளையாட்டில்லை'' என்றான் ஜெயின் கண்டிப்புடன்.

''எனக்குப் புரிகிறது ஜெயின். அடிபட்ட போது நடந்ததை நினைத்தேன். கார் இடித்ததும் தாங்க முடியாத வலியுடன் கீழே விழுகிறேன். இரத்தம் என் உடையை நனைப்பதை உணர முடிகிறது. அத்துடன் ஒரே இருட்டு. நான் செத்து விட்டேன். இதனால் தான் இருட்டாக இருக்கிறது என்று நினைக்கிறேன். திடீரென மெல்லிய ஒளி தெரிகிறது. சொர்க்கத்திற்கு செல்லும் வழி போலும். அந்த வழியை பின்பற்றி செல்ல வேண்டும் என்ற நினைக்கையில் அருகில் உன் முகம். ஓ! எனக்கு ஜெயின் வந்து விட்டான். இனி சொர்க்கத்திற்கு அவனே அழைத்து செல்வான் என்று நிம்மதியாக இருக்கிறது.''

''ஸ்டாப் இட். நீயும், உன் கற்பனையும் அபத்தமாக இருக்கிறது'' என்றான் ஜெயின்.

சித்தய்யா கடகடவென சிரித்தார். ''கற்பனையிலும் ஒரு ரியாலிட்டி இருக்கிறது ஜெயின்.''

''டாக்டர் அவள் ஏதோ உளறுகிறாள்.''

''சரி இருவரும் பேசி தெளிவாக்கிக் கொள்ளுங்கள். நான் பக்கத்து ஊர் வரை போக வேண்டும்'' என எழுந் தார் டாக்டர் சித்தய்யா. அவர் கிளம்பிப் போனதும்

மீண்டும் அவள் அருகில் வந்த ஜெயின் ''நாங்கள் இங்கே இருந்ததால் பிழைத்தாய். இனிமேல் இது போன்ற ஆபத்தான காரியங்களில் முன்யோசனையின்றி இறங்காதே'' என்றான் அறிவுறுத்தும் விதமாக.

''நீ இங்கே இருப்பாய் என்று தான் நான் துணிந்து இதில் இறங்கினேன்.''

''உண்மையாகவா? நான் இங்கிருப்பது உனக்கு எப்படித் தெரியும்?'' என்றான் ஜெயின் வியப்புடன்.

''நான் ஜெய்ப்பூரிலிருந்து இங்கே வருவதற்கு முதல் நாள் இரவு ஒரு கனவு கண்டேன்.''

''கனவா?'' என்றான் ஜெயின் புரியாமல்.

''ம். அந்த கனவில் ஒரு தேவதை வந்தது.''

''ஆச்சரியம்தான்.''

''எது?''

''தேவதைகளின் கனவிலும் தேவதை வருவது.''

''சொல்வதைக் கேள் ஜெயின்.''

''நீ இன்னும் என் கேள்விக்கு பதில் சொல்லவில்லை.''

''அதைத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். அந்த தேவதை சொன்னது, 'நீ பெங்களூரு போனதும் உனக்கு உதவி செய்ய ஒரு ஆபத்பாந்தவனை அனுப்பி வைக்கிறேன். அவன் பெயர் ஜெயின். நீ எந்த ஆபத்தில் சிக்கினாலும் அவன் வந்து உதவி செய்வான் என்றது.''

ஜெயின் பதில் சொல்லாது ஒரு வினாடி அவளை கூர்ந்து பார்த்தான். குறும்பு மிளிரும் கண்களையும்,

அசதியிலும் பூவாய் மலர்ந்த முகத்தையும் பார்த்தவன், கேட்டான் ''ஆபத்பாந்தவனுக்கு கூலி எதுவும் கிடையாதா?''

''ஏன் கிடையாது? எது வேண்டுமோ.... என்ற நிலஞ்சனா ''என்னால் முடிந்ததை மட்டும்'' என்றாள் ஜாக்கிரதையாக.

## 9

நிலஞ்சனாவுக்கு அந்த கிராமம் மிகவும் பிடித்திருந்தது. சுற்றிலும் பசேலென்ற வயல்களும், உயரமான ஓட்டு வீடும், ஏரிக்கரையும், ஆலமரமும், மந்தை ஆடுகளும், மாட்டுத் தொழுவமும் அவள் மனதை கவர்ந்தது. உடல் பலவீனம் குறைந்ததும் ஜெயின்னிடம் அந்த கிராமத்தைச் சுற்றிப் பார்க்க வேண்டும் என்றாள். ஜெயின் மறுக்காமல் அழைத்துச் சென்றான். பயிர்களை காண்பித்தவன் சொன்னான், ''விவசாயம் என்பது ஒரு தொழில் அல்ல நிலா வாழ்க்கை முறை. எத்தனை சிரமங்களும், நஷ்டமும் வந்தாலும் வாழ்க்கையிலிருந்து பின்வாங்க முடியாதில்லையா? அது போலத் தான் விவசாயிகளின் நிலையும். ஆனால் இன்று எல்லாவற்றையும் போல அதுவும் மாறி வருகிறது. இன்று இளைய தலைமுறை விவசாயத்தை விட்டு விலகி நிற்கிறது.''

''ஆனால் நீ எப்படி இதற்குள் வந்தாய்? உன் படிப்பிற்கும் பார்க்கும் வேலைக்கும் எங்கோ போயிருக்க முடியும்.''

''எங்கும் போயிருக்க மாட்டேன். நிலா யோசித்துப் பார். இன்று நாம் நமக்கு தேவையான எல்லாவற்றையும் வெளியே சென்று அடைய முயல்கிறோம். உண்மையில் அது மனநிறைவை தருவதற்கு பதிலாக நமக்கே தெரியாமல் ஒரு வித மன அழுத்ததை ஏற்படுத்துகிறது. நாம் செய்ய நினைக்கும் அனைத்து செயல்களுக்குமே பொருளாதாரம் தொடர்ந்து முன்நிறுத்தப்படுகிறது. நம் தேவைகளை பூர்த்தி செய்யும் காரணிகளான பணம், உழைப்பு, அறிவு எல்லாமும் முகம் தெரியாத பன்னாட்டு கம்பெனிகளை சென்றடைகிறது. நமக்கு வேண்டிய காய்கறிகளும், பழங்களும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. நாம் வாழ்ந்து வந்த தற்சார்பு வாழ்க்கை மறக்கப் பட்டு வருகிறது. அதை மீட்க வேண்டுமானால் இந்த மண்ணில்தான் அது முடியும்.''

உண்மையில் ஜெயின் போன்ற இளைஞர்கள் தான் இந்தியாவின் ஆணிவேர் என்று தோன்றியது நிலஞ்சனாவிற்கு.

அவர்கள் இருவரும் ஏரிக்கரையில் அமர்ந்திருந்தார்கள். சூரியன் இறங்கி சந்திக்கு வந்திருந்தான். பூமி வெம்மை தணிந்து தென்றலால் சிலுசிலுத்தது. பறவைகள் கூடு தேடி விரைந்தன. உழவு முடிந்த ஆட்கள் கண்மாயில் கை, கால் சுத்தம் செய்து கொண்டிருந்தனர். சுற்றுப்புற அசைவுகளில் மனம் லயித்தவர்களாய்

இருவரும் பேச்சற்று இருந்தார்கள். நிலஞ்சனாவின் மனம் நிர்மலமாக இருந்தது. யோசனைகளும், குழப் பங்களும் கரைந்து போய் சூழ்நிலையோடு ஒன்றிப் போனாள்.

வயிலில் வேலை செய்யும் பண்ணையாட்களின் குழந்தைகள் அவர்கள் அருகே மண்ணில் புரண்டு விளையாடிக் கொண்டிருந்தார்கள். அதில் ஒரு பெண் குழந்தை செய்யும் சேட்டைகளை எல்லாம் பொறுத்துக் கொண்டு, அடிப்பதை வாங்கிக் கொண்டு அந்த பையன் அவளையே சுற்றி வந்தான். அவளை கவனமாகப் பார்த்துக் கொண்டான்.

''நானும் சிறுவயதில் இப்படித்தான் இருப்பேன்'' என்றாள் நிலஞ்சனா தன் போக்கில் ''பயங்கர குறும்பு செய்வேன். ஒரு இடத்தில் நிற்க மாட்டேன். யார் பேச் சையும் கேட்க மாட்டேன். என் பக்கத்து வீட்டு குழந்தை களை என்னுடன் விளையாட அனுப்பவே யோசிப் பார்கள். ஆனால் கரண்தேசாய் மட்டும் என் கூடவே இருப்பான். எத்தனை தொல்லை கொடுத்தாலும் என்னை விட்டுப் போக மாட்டான்.''

''யார்?'' என்றான் ஜெயின் கேள்வியுடன்.

''கரண்தேசாய். என் சிறு வயது தோழன். என் கணவன்.'' ஜெயின் உடல் அனிச்சையாக நிமிர்ந்தது. அவள் சொல்வதை கவனமாக கேட்கத் தொடங்கினான்.

''கரண்தேசாயின் அப்பாவும் என் அப்பாவும் பேட்ச் மேட்ஸ். இருவரும் ஒரே குவார்ட்டர்ஸ் தான். ஒரே பள்ளியில் படித்தோம். குடும்பம் ஜெய்ப்பூரிலேயே

இருந்ததால் பள்ளி இறுதி வரை ஒன்றாகவே படித்தோம். பிறகு நான் பட்டப் படிப்பை ஜெய்ப்பூரிலேயே தொடர, கரண்தேசாய் இராணுவ ஆபீஸர் ஆக வேண்டி படிப்பிற்காக வெளியூர் போனான். அதன் பிறகு பல காரணங்களினால் நாங்கள் சில வருடங்கள் சந்திக்கவே இல்லை. அவன் ஆபீஸர் தேர்வில் வெற்றி பெற்று போஸ்டிங்குடன் வந்து நின்ற போது எனக்கு முதலில் அடையாளமே தெரியவில்லை. அண்ணாவின் நண்பர் யாரோ வந்திருப்பதாக நினைத்தேன். ஆனால் கரண்தேசாய் ஓடி வந்து என் கைகளைப் பற்றிக் கொண்டான்.

நான் திகைத்து பின்வாங்கிய போது ''நிலஞ்சனா என்னைத் தெரியவில்லையா? அதற்குள் மறந்து விட்டாயா?'' என்றான் பெரிய சிரிப்புடன்.

சிறுவயது சிரிப்பு மட்டும் மாறாமல் இருந்து அவனைக் காட்டிக் கொடுக்க, ''கரண் நீயா?'' என்றேன் வியப்புடன்.

''ஆமாம். இப்போதாவது உனக்கு நினைவு வந்ததா?'' என்றான் பெருமூச்சுடன்.

''ஒல்லிகுச்சியாய் வெடவெடவென்று இருந்தவன், வாட்டசாட்டமாய் பெரிய ஆண்பிள்ளையாய் மாறி விட்டால் எனக்கு எப்படித் தெரியும்?'' என்றேன் நான்.

''நீயும் தான். குண்டு கன்னமும், டாய்கட்டுமாக சைக்கிளில் ஊரை சுற்றி வருபவள் இப்போது கடைந்தெடுத்த சிலை போலிருக்கிறாய். நான் கண்டு கொள்ளவில்லையா?'' என்றான் கரண்தேசாய்.

''ஆண்களுக்கு எப்போதும் பெண்களின் பின்னால் சுற்றும் வழக்கம் இருப்பதால் நீ என்னை கண்டு கொண்டதில் ஆச்சரியம் இல்லை.''

''இது அநியாயம். நான் எந்த பெண்ணின் பின்னாலும் போனதில்லை.''

''நான் நம்ப மாட்டேன். உன் நண்பர்களின் நெம்பர் வேண்டும் எனக்கு.''

சிறுவயது நட்பை அன்று நாங்கள் மீண்டும் புதுப்பித்தோம். சிரிப்பும், பேச்சுமாக வீடே களை கட்டியது. ஒரு மாதத்தில் கரண் ட்யூட்டியில் சேர வேண்டும் என்பதால் அவனுக்கு திருமணத்தை முடித்து விட வேண்டும் என்பதில் அவன் அம்மா உறுதியாக இருந்தார்கள். கரண் இரண்டு வருடங்கள் பீல்டு ஒர்க் முடித்த பிறகு திருமணம் செய்து கொள்வதாக கூறினான். ஆனால் நல்ல விஷயத்தை தள்ளிப் போடக் கூடாது என அவன் பெற்றோர் தொடர்ந்து வற்புறுத்தவே ஒத்துக் கொண்டான். பெண்ணைப் பற்றிய பேச்சு எழுந்த போது அவன் என்னை கை காட்டினான். வெகு நாளைய நட்பு, சமமான அந்தஸ்து என இரண்டு குடும்பத்திற்கும் அது விருப்பமாகவே இருந்தது. கரண் தேசாயை நண்பனாக மட்டுமே எண்ணியிருந்த எனக்கு முதலில் தயக்கமாக இருந்தது. பிறகு யோசிக்கையில் யாரையோ திருமணம் செய்வதை விட அது நண்பனாக இருந்தால் வாழ்க்கை இலகுவாக இருக்கும் என்று தோன்றியது. எனவே நானும் மனப்பூர்வமாக சம்மதித்தேன். ஜெய்ப்பூரில் கரண்தேசாய் குடும்ப வழக்கப்படி எங்கள் திருமணம் நடைபெற்றது.

திருமணம் முடிந்து விருந்தும், சம்பிரதாய நிகழ்ச்சி களுமாக இருபது நாள் கழிந்த நிலையில் கரண் ட்யூட் டியில் சேருமாறு ஆர்டர் வந்தது. என் அப்பாவும், கரண் அப்பாவும் கூட புது மனைவியை பிரிந்து ட்யூட்டி பார்க்க சென்றவர்கள் தான் என்பதால் அந்த ஆர்டர் எங்கள் குடும்பத்தில் எந்த சலனத்தையும் ஏற்படுத்த வில்லை. கரண் கிளம்புகிற நாளன்று சிரித்து பேசிய படியே இருந்தான். என் அம்மாவின் உணவை ருசித்து சாப்பிட்டான். என் சல்வார் எனக்காகவே தயாரிக்கப் பட்டது போலிருப்பதாக சொன்னான். ஹேர் ஸ்டைல் பற்றி கூட ஏதோ சொன்னான். என் அண்ணா குண்டாகி விட்டதாக கேலி செய்தான். அவன் அம்மாவை கட்டிப் பிடித்து முத்தம் கொடுத்தான். அப்பாவுக்கு காக்டெய்ல் மிக்ஸ் செய்து கொடுத்தான். அவனுக்கு வருத்தம் இல்லை என்பதை எங்களை நம்ப வைக்க முயற்சித்தான். கடைசியாக காரில் ஏறும் வரை என் கைகளைப் பற்றியபடியே இருந்தான். டிரைவர் ஹார்ன் அடித்ததும் தன் விரல்களை விடுவித்துக் கொண்டு எல்லோருக்கும் கை அசைத்தான். நான் அப்போது தான் கடைசியாக அந்த விரல்களைப் பார்த்தேன்.''

நிலஞ்சனாவுக்கு உணர்ச்சி மேலீட்டால் குரல் நடுங்கியது. மூச்சு வேகமாக ஏறி இறங்கியது. எனினும் ஜெயின் குறுக்கிடாமல் அவள் பேசுவதை கேட்டிருந் தான். நிலஞ்சனா தொடர்ந்தாள். ''கரண் எங்களிடம் காஷ்மீர் போவதாக சொல்லியிருந்தான். காஷ்மீர் என்பது ஒரு குறியீடுதான். உண்மையில் ட்யூட்டி பார்க்கும் இடம் எங்கே என்பதை தெளிவாக சொல்ல மாட்டார்கள். அது

சியாச்சின் போன்ற ஆள் இல்லாத சிகரங்களாகவும் இருக்கலாம். பீல்டு டில் வேலை செய்பவர்களுடன் நேரடி போன் தொடர்பு கொள்ள முடியாது என்பதால் நாங்கள் சில மாதங்கள் கழித்து கரண் பேசப் போகும் போனுக்காக காத்திருந்தோம். திடீரென ஒரு நாள் ஹெட்குவார்ட்டர்சிலிருந்து போன் வந்தது. கரண் தேசாய் குடும்பத்தினரை சந்திக்க விரும்புவதாக. கரண் அப்பாவுடன், நானும், அண்ணனும் லாடாக்கிலிருந்து அந்த புகழ்பெற்ற இராணுவமருத்துவமனைக்கு விரைந்தோம். நாங்கள் பார்த்து எங்கள் கரண் தானா என்பதில் எனக்கு இப்போதும் சந்தேகம் இருக்கிறது. ஏனென்றால் கரண் கன்றி போய் கருப்பு நிறத்தில் இருந்தான். அவனது பால் நிற மேனியும், இயல்பி லேயே சிவந்த உதடுகளையும் கண்டுபிடிக்க முடிய வில்லை. கண்களை சுற்றி கட்டு போடப்பட்டிருந்தது. ஆரோக்கியமான நீண்ட கரங்களில் உள்ளங்கைக்கு கீழே விரல்கள் இன்றி மென்மையாக இருப்பதை பார்த்ததும் நான் மயங்கி விழுந்தேன். அருகிலிருந்த நர்ஸ்கள் என்னை மூர்ச்சை தெளிவிக்கும் முயற்சியில் இறங்கி னார்கள். அரை மயக்க நிலையில் இருந்த எனக்கு டாக்டர் அண்ணனிடம் பேசியது தெளிவாக கேட்டது.

''சியாச்சின் க்ளேசியர்ல தான் ட்யூட்டி. வருஷம் முழுக்க பனி உறைந்து கிடக்கும் இடம். உங்களுக்கு தெரியாததில்லை, என்ன தான் ஜாக்கிரதையாய் இருந்தாலும் அவ்வப்போது இது போல் நடக்கத்தான் செய்கிறது. கரண்தேசாய் ஸ்வெட்டர், கம்பளி, க்ளவுஸ் எல்லாம் அணிந்திருந்த போதும் பனியில் ஊறி நைந்து

போன க்ளவுஸ் வழியே குளிர் விரலை தாக்கியிருக்கிறது. க்ளவுஸ் கழட்டும் போது விரல்களும் கழன்று வந்து விட்டது. இன்னொரு கையை அசைத்ததும் காசுகள் சிதறுவது போல் ஐந்து விரல்களும் கீழே விழுந்து உருண்டன. கரண் தேசாய் பயந்து போனார். ஆனாலும் ட்யூட்டியில் அவரைத் தவிர யாரும் இல்லை. ஆள் வராமல் அங்கிருந்து கிளம்ப மனம் இன்றி மூன்று மணி நேரம் காத்திருந்து அடுத்த ட்யூட்டிக்கு ஆள் வந்த பிறகு கிளம்பி இருக்கிறார். அங்கிருந்து இரண்டு கிலோ மீட்டர் கேம்ப்பிற்கு நடந்து வந்து, கேம்ப்பிலிருந்து இங்கு கொண்டு வந்து சேர்ப்பதற்குள் உடல் நிலை மோசமாகி விட்டது.''

''இப்போது எப்படியிருக்கிறான்?'' என்றார் கரண்ணின் அப்பா. டாக்டர் வெறுமனே தலையை அசைத்தார். என் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வழிந்தது. ''ஓ, இவளை அழைத்து வந்திருக்கக் கூடாது'' அண்ணன் முணுமுணுத்தான். என்னைப் பார்த்ததும் கரண் முகத்தில் ஒரு பிரகாசம் தெரிந்தது. ஏதோ பேச முயற்சி செய்தான். அவன் உடலே அவனுக்கு பாரமாய் போனாற் போல கை கால்களை அசைக்கவும் முடியவில்லை. நான் குனிந்து அவன் தலையை வருடினேன். என் கண்ணீர் அவன் முகமெங்கும் சிதறியது. கரண் சிரமத்துடன் இதழ்களை அசைத்தான். ''ஸாரி.''

பாவமன்னிப்பு கேட்டாற் போன்ற அந்த குரல் என் ஆன்மாவை அசைத்துப் பார்த்தது. ''இல்லை கரண். நீ வருந்தாதே!'' நான் பேசிக் கொண்டிருக்கையிலேயே அவனது பஞ்சடைந்த கண்கள் என் முகத்தில் பதிந்து

அசைவற்று நின்றன. இப்போதும் அந்த கண் என் மீது நிலைத்திருப்பது போன்றே பிரேமை ஏற்படுகிறது எனக்கு. என்னால் முடியவில்லை ஜெயின். அழகான, துடிப்பான இருபத்தி நான்கு வயது இளைஞன், அகோரமாய் அநாதையாய் இறந்து போனான். அவனைப் போல தினமும் இங்கு யாராவது இறந்து கொண்டே தான் இருக்கிறார்கள். இராணுவ தளவாடங்கள் வாங்க இத்தனை செலவு செய்யும் அரசாங்கம் ஒரு இராணுவ வீரனுக்கு தரமான உடைகளைக் கூட வழங்காதது ஏன்?'' நிலஞ்சனா கட்டுபடுத்த முடியாத ஆவேசத்துடன் பேசிக் கொண்டே போக ஜெயின் கல்லாய் சமைந்து போனான்.

இரவு மணி இரண்டாகி விட்டிருந்தது. ஜெயின் அந்த ஓட்டு வீட்டின் தாழ்வாரத்தில் தூக்கமின்றி புரண்டான். நிலஞ்சனா திருமணமானதாக சொன்ன நாளிலிருந்து ஏமாற்றத்திலும் அதை நம்ப முடியாமலும் தவித்து வந்தான். ஆனால் கரண் தேசாய் பற்றி அவள் சொன்னதைக் கேட்ட பிறகு நிலஞ்சனாவின் வாழ்வில் இப்படி ஒரு சம்பவம் நடக்காமல் அவள் கணவனுடன் மகிழ்ச்சியாக இருந்திருக்கலாம் என்ற வேதனை மனதை அரித்தது. கரண் தேசாய் எப்படிப்பட்ட இளைஞன்! உடலிலிருந்து விரல்கள் கீழே விழுந்த பிறகும் மூன்று மணி நேரம் ட்யூட்டி பார்த்திருக்கிறான் என்றால் எத்தனை நெஞ்சுரம்! அநியாயமாய் இறந்து போனான் என்பது ஆதங்கமாக இருந்தது. சமீபத்தில் நடந்த உரி தாக்குதலில் பலியான ஹவில்தார் அசோக்குமாரின் தந்தை ஜக்நாராயண் சிங் இருபது வருடங்களுக்கு முன் இராணுவத்தில் பார்வை இழந்தவர். அசோக்கின்

அண்ணனும் பிகானீரில் நடந்த குண்டு வெடிப்பில் இறந்து போனான். அடுத்ததாக இறந்து போன அசோக்குமாரின் மகன் விகாஷ் சிங் இராணுவத்தில் சேர்ந்திருந்தான். வழையடி வாழையாக தேச சேவை செய்தவர்களின் குடும்பத்தினர் வாழ்க்கை விதியற்று கிடக்கிறது. உரியில் கொல்லப்பட்ட பதினெட்டு பேரில் இளையவனான பிஸ்வாஜித் கோராய் இருபத்திரண்டு வயது இளைஞன். அவனது இருபது வயது சகோதரி சொன்னது ஜெயின் காதுகளில் ஒலித்தது. ''மத்திய அரசு தரும் இழப்பீடு என் சகோதரன் உயிரை திருப்பித் தருமா? இந்த தாக்குதலுக்கு இந்தியா பதிலடி கொடுக்க வில்லை என்றால் என் வீட்டிலிருந்து இன்னொரு வீரன் உருவாகி வரமாட்டான்.''

சுயநலமும், பேராசையும் பரவிக் கிடக்கும் ஒரு தேசத்தில் தியாகங்களுக்கு மதிப்பில்லை என்ற எண்ணத்தில் ஜெயின் மனம் பாரமானது.

தனக்கு பிரியமானவற்றை பொக்கிஷமாய் பாது காக்கும் ஜெயின், நிலஞ்சனாவின் மகிழ்ச்சியை மீட்க என்ன வழி என்று யோசிக்கத் தொடங்கினான்.

மறுநாள் நிலஞ்சனாவின் சோர்ந்த முகத்தையும், வீங்கிய இமைகளையும் கண்டு கொள்ளாமல் சகஜமாக பேசினான். ''மைசூர் போய் அங்கிருந்து ஊர் சுற்றிப் பார்ப்பது தானே உன் ப்ளான்? அதை கெடுப்பானேன்? ப்ளான்படி சுற்றிப் பார்த்த பிறகு பெங்களூர் போகலாம்'' என்றான் அவளிடம்.

சிறிது யோசனைக்கு பின் நிலஞ்சனாவின் முகம் மலர்ந்தது. மறுபடி பார்க்க சந்தர்ப்பம் கிடைக்குமோ

என்னவோ? இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்வது தான் சரி என்றாள் தனக்குள்.

நிலஞ்சனா என்ன தான் கிளம்பத் துடித்தாலும் டாக்டர் அவளை பரிசோதித்து சம்மதம் அளித்த பிறகே ஜெயின் கிளம்பத் தயாரானான். ''குட் நிலஞ்சனா. தோள்பட்டை காயம் கூட ஆறி விட்டது. ஆனாலும் அதிகம் அசைவு வேண்டாம். ஜெயின் கூட வருகிறான் இல்லையா நீ கவலையின்றி சுற்றலாம்'' என்றார் டாக்டர் சித்தய்யா.

''உங்களுக்கு எப்படி நன்றி சொல்வதென்றே தெரியவில்லை டாக்டர். அன்று நீங்கள் மட்டும் இல்லாமலிருந்திருந்தால் நான் இன்று இப்படியிருந்திருக்க மாட்டேன். வீட்டில் தங்க வைத்த, அருமையாக உணவளித்து, கவனமாக சிகிச்சை அளித்து பார்த்துக் கொண்டீர்கள். மிக்க நன்றி'' என்றாள் நிலஞ்சனா.

''நன்றியை உன் நண்பனுக்குச் சொல். நான் இல்லாமல் இருந்திருந்தாலும் ஜெயின் உன்னை பெங்களூரு வரை சுமந்து கொண்டே ஓடியிருப்பான்'' என்றார் டாக்டர் சித்தய்யா கேலியாக. கேலியாக சொன்னாலும் டாக்டரின் உதவி பெரியது தான். வார விடுமுறை முடிந்ததும் பெங்களூரு கிளம்பி விடும் டாக்டர் தன் பொருட்டு மருத்துவமனையையும் வழக்கமான வேலைகளையும் விட்டுவிட்டு கிராமத்தில் தங்க நேர்ந்தது என்றதில் நிலஞ்சனாவின் மனம் நெகிழ்ந்தது.

''என்ன நிலஞ்சனா, உன் நண்பனுக்கு நன்றி சொல்லப் போவதில்லையா?'' என்றார் டாக்டர் விடாமல்.

''உதவி செய்வது ஜெயினுக்கு புதிதல்ல. அதற்காக அவனுக்கு நன்றி சொல்லப் போவதில்லை'' என்றாள் நிலஞ்சனா.

* * *

கார் சீரான வேகத்தில் போய்க் கொண்டிருந்தது. வழி எல்லாம் வயல்களும், சோளக்கதிர்களும், நிலகடலை செடிகளும் பசேல் என காட்சியளித்தன. வரிசையாய் மலைகள், கூழாங்கற்களை ஒன்றன் மீது ஒன்றாக அடுக்கி வைத்ததைப் போல் மலைகள் வித்தியாசமான தோற்றத்துடன் இருந்தன. 'குப்பி' யிலிருந்து மூவரும் அன்று விடியற்காலையில் கிளம்பினார்கள். டாக்டர் அவரது காரில் பெங்களூரு செல்ல, ஜெயின் காரில் அவர்கள் இருவரும் போய்க் கொண்டிருந்தார்கள். பயணம் என்பது பெரிய விடுபடல். இயற்கையான விசித்திரங்களை கண்டு கொள்ளவும், நிலப்பரப்பின் முடிவின்மையை உணர்ந்து கொள்ளவும் வழங்கப்படும் வாய்ப்பு. தனக்கு கிடைத்த வாய்ப்பை எண்ணி மகிழ்ந்து போன நிலஞ்சனா, ''ஜெயின் எங்கே போகிறோம்?'' என்றாள் அவனிடம்.

''நீ முக்கியமாக பார்க்க வேண்டிய இடம். கர்நாட கத்தின் சரித்திரத்தில் தவிர்க்க முடியாத இடம். கூகுள் தேடலில் கர்நாடகாவில் அதிகமாக தேடப்படும் இது தான். இராமாயண காலத்தில் இதன் பெயர் கிஷ்கிந்தா. சரித்திரத்தில் விஜயநகரம். தற்போதைய பெயர் ஹம்பி.''

''இஸிட்?'' என்றாள் நிலஞ்சனா ஆர்வத்துடன்.

ஹசபேட் வந்ததும் ஜெயின் சொன்னான், ''ஹம்பி போகிறவர்கள் வழக்கமாக இங்கு தான் தங்குவார்கள்.

ஏனென்றால் ஹம்பியில் தனியார், அரசு விடுதிகளோ, ஏ.டி.ம்களோ கிடையாது. ஆனால் ஹம்பியில் உள்ளூர் வாசிகள் தங்கள் வீட்டை வாடகைக்கு தருகிறார்கள். உனக்கு எங்கே உதவியாக இருக்கும்?''

''உன்னுடைய சாய்ஸ் தான். எனக்கு இந்த இடம்பற்றி தெரியாதே!'' என்றாள் நிலஞ்சனா.

அவர்கள் ஹம்பி போய் சேர்ந்த போது தட்பவெப்பம் இதமாக இருந்தது. அவர்கள் தங்குவதற்கு இடம் தேடினார்கள்.

வீடுகள் மிக நெருக்கமாக இருந்தன. ஒரு வீட்டின் உரிமையாளரிடம் பேசி அன்று தங்க ஏற்பாடு செய்து கொண்டு உள்ளே சென்ற நிலஞ்சனா அந்த ஹாலின் நேர்த்தியை கண்டு வியந்து போனாள். ''இங்கே ஒரு தளத்திற்கு மேல் மாடி எழுப்ப தடை உண்டு என்பதால் வீட்டு உரிமையாளர்கள் சிறிய அறையில் தங்கிக் கொண்டு மற்ற பகுதிகளை வெளிநாட்டு பயணிகள் தங்கும் தரத்தில் வடிவமைத்து வாடகைக்கு விடுகிறார் கள்'' என்றான் ஜெயின். வீட்டின் மொட்டை மாடியில் கீற்றுக் கூரை வேய்ந்த உணவு விடுதி ஏக அலங்காரத் துடன் ஜொலித்தது. வெளிநாட்டு பயணிகள் அதிகம் வருவதாலோ என்னவோ எல்லோரும் சரளமாக ஆங் கிலம் பேசினார்கள். காரை பார்க்கிங்கில் போட்டு விட்டு ஜெயின் வாடகை சைக்கிள்களை எடுத்து வந்தான்.

''சைக்கிள் எதற்கு ஜெயின்?''

''இங்கு சைக்கிள் அல்லது மொபெட்டில் சுற்றிப் பார்ப்பது தான் வசதி. உன்னால் சைக்கிள் ஓட்ட முடியுமா?'' என்றான் ஜெயின் சந்தேகமாய்.

''முடியுமா? ஜெய்ப்பூரில் என் சைக்கிள் ஓடாத தெருக்களே இல்லை தெரியுமா?'' என்றாள் நிலஞ்சனா உற்சாகத்துடன்.

தெருவில் சாரி சாரியாய் வெளிநாட்டு பயணிகளும், உள்நாட்டு டூரிஸ்ட்டுகளும் சென்று கொண்டிருந்தனர். அவர்களுக்கு நடுவே கவனமாய் சைக்கிளை ஓட்டியபடி ஜெயின் சொன்னான், ''மூன்று புறமும் மலைகளாலும், ஒரு புறம் துங்கபத்திரை நதியாலும் பாதுகாப்பாக அமைக்கப்பட்ட நகரம் தான் ஹம்பி. விஜயநகர பேரரசர்கள் தலைநகரமாக இருந்தாலும் அவர்கள் காலத்திற்கு முன்பே உருவான நகரம். இப்போது இருப்பவை வரலாற்று சிதைவுகள் தான்.''

பாறையால் ஆன மிகப் பெரிய நந்தி சிலையும், லஷ்மி நரசிம்மர் கோவிலையும், ஆஞ்சனேத்திரியும் பார்த்து விட்டார் விட்டலா ஆலயத்திற்கு வந்தார்கள். முகப்பில் இருந்த கல்லால் செதுக்கப்பட்ட தேரை நிலஞ்சனா ஆர்வத்துடன் ரசித்தாள்.

கர்நாடக அரசின் சுற்றுலா துறையின் சின்னம் இந்த தேர் தான் என்றான் ஜெயின்.

விருடாஷ்சா ஆலயத்தைப் பார்த்ததும் ''வாவ்!'' என்றாள் நிலஞ்சனா. அழகிய கோபுரங்களும், கருங்கல்லில் செதுக்கப்பட்ட வடிவான தூண்களும், நுண்ணிய வேலைப்பாடு கொண்ட சிற்பங்களையும், கோயிலை சுற்றி ஓடிக் கொண்டிருந்த துங்கபத்திரா வையும் பார்த்த நிலஞ்சனா அசந்து போனாள். கோவிலின் வாயிலிலிருந்து துவங்கும் ஹம்பி பஜார் வீதி போல

பெரிய வீதி உலகில் வேறு எங்கும் கிடையாது என் றான் ஜெயின். ''முன் காலத்தில் முத்தும், பட்டும், பவளமும், வைரமும், இரத்தினங்களும் விற்கப்பட்ட இடம் இது.''

''ஆமாம். அதோ, கிருஷ்ணதேவராயரும், தெனாலி ராமனும் கூட இந்த வீதி வழியே வந்து கொண்டிருக் கிறார்கள்'' என்றாள் நிலஞ்சனா.

இருவரும் சிரித்தபடியே நடந்தார்கள். விஜயநகர அரசர்கள் ஒவ்வொரு போரிலும் வென்ற உடன் அதை பதிவு செய்ய கோவில் கட்டுவது வழக்கம் போலும். திரும்பிய பக்கமெல்லாம் கோவில்களாக காட்சியளித் தாலும் மூலவர் இல்லாததாலும், சிதைவினாலும் பல கோவில்களில் வழிபாடு இல்லை என்ற போதும் விருபாக்ஷா கோவில் பூஜை நடைபெற்றது. பிரசாதம் பெற்றுக் கொண்டு வெளியே வந்து நதிக்கரையில் அமர்ந்தார்கள்.

அடர்ந்த மரங்கள் ஒருபுறம் நிற்க, நதியும், நடுவே கல்மண்டபமும், சாம்பல் நிற வானமும், நதிக்கரை தென்றலும், மெல்லிய இருளும் மனதை கொள்ளை கொண்டன. இந்த பின்னணியில் உள்ளே சிலையாய் நிற்கும் பெண்களும், இசைக் கலைஞர்களும் எழுந்து வந்து கச்சேரி செய்வது போன்ற கற்பனையில் புன்னகை விரிந்தது.

''ஏதோ புராதன நகரில் இருப்பது போலிருக்கிறது. பெங்களூருவிற்கு சம்பந்தமே இல்லாமல் இப்படி ஒரு நகரமா?'' என்றாள் நம்பமுடியாமல்.

''பெங்களூரு வணிக நகரம் நிலா. கர்நாடகம் மிக தொன்மையானது. இந்தியாவில் வரலாற்று சிறப்பு மிக்க இடங்கள் என ஆர்க்கியாலஜி டிபார்ட்மென்ட் பட்டிய லிட்டிருக்கும் இடங்களில் ஐந்தாவது இடம் கர்நாடகா விற்கு பழைய விஷயங்களை குறிப்பிடுவதற்கு 'சுத்த கர்நாடகம்' என தென்பகுதிகளில் பேச்சு வழக்கில் குறிப்பிடப்படுவதுண்டு. இதிலிருந்தே கர்நாடகாவின் தொன்மையை அறிந்து கொள்ளலாம். அதுவும் இந்த விருபாக்ஷா கோவில் கர்நாடக சங்கீதத்தில் வரும் புரந்தர தாஸரின் கீர்த்தனையில் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

''குந்த கௌர கௌரீவர மந்திராய

மானமகுட

ஹேம சட சிம்ஹாஸன விருடாஷ

கருணாகர...'' என ஜெயின் கம்பீரமான குரலில் புரந்தரதாஸரின் கீர்த்தனையைப் பாடவும் நிலஞ்சனா திகைத்துப் போனாள்.

''கலைக்கு மதம், ஜாதி எதுவும் கிடையாது தான். ஆனால் ஒரு இஸ்லாமிய இளைஞன் புரந்தரதாஸரின் கீர்த்தனைகள் பாடுவதையும், பிரசாதம் பெற்றுக் கொள்வதையும் நான் இப்போது தான் முதன் முறையாக பார்க்கிறேன்'' என்றாள் நிலஞ்சனா.

''உள்ளே இருப்பது கடவுள் என்பது உண்மையானால் தர்காவிற்கும், கோவிலுக்கும் என்ன வேறுபாடு இருக்கப் போகிறது?'' என்றான் ஜெயின்.

நிலஞ்சனா பதில் பேசாமல் இருக்கவும், ''உனக்கு வேறுபாடு தெரிகிறதா நிலா?'' என்றான் ஜெயின்.

''எதைப் பற்றி?''

''ஒரு பள்ளி வாசலையும், கோவிலையும் கடக்கும் போது எப்படி உணர்வாய்?''

''உண்மையை சொல்லட்டுமா?''

''சொல்.''

''நினைவு தெரிந்த நாளாய் நான் வணங்கும் கடவுள் மனிதனின் பிரதிபிம்பம். என் கடவுளுக்கு உருவம் உண்டு. அந்த உருவம் என் உணர்ச்சிகளை உள்வாங்கிக் கொண்டு என்னை ஆசீர்வதிக்கும் என நம்பி பழகியவள் நான். அந்த நம்பிக்கையை என் வீடும், மதமும் எனக்குள் வளர்த்தது. வெற்றிடத்தைத் தவிர வேறு எதையும் உணர முடியவில்லை.''

''இது இயற்கை தான்'' என்றான் ஜெயின். ''சாகசங்கள் நிறைந்த இந்த உலகில் அற்புதங்கள் நிகழ்த்தினால் மட்டுமே தன்னை நிரூபித்துக் கொள்ள முடியும். அது கடவுளாகவே இருந்தாலும் சரி. ஆனால் இந்த உலகில் எங்கு சென்றாலும் என்னால் கடவுளை உணர முடிகிறது. இந்த பூமி அவர் நமக்கு அளித்த பரிசாக தெரிகிறது. வயல்களில் இந்த நதியில், காடுகளில், பறவைகளில், சக மனிதனை நேசிக்கும் மனித மனங்களில் இறை சக்தி நிரம்பியிருக்கிறது நிலா. அதை உணர முடிந்தால் வாழ்க்கை அற்புதமானதாகி விடும்.''

ஜெயின் முகத்தையும், அதில் தெரிந்த பரவசத் தையும் பார்க்கையில், இவன் நமக்குத் தெரியாத வேறொரு ஜெயின் என்று தோன்றியது நிலஞ்சனா வுக்கு. இயற்கையையும், அதன் படைப்பையும்

நேசிப்பவன். வரை முறைகளற்ற அன்பு செலுத்துபவன். எல்லோருக்காகவும் உழைத்து, எல்லாவற்றையும் விரும்புபவன். இவனுடைய நட்பு கிடைத்தது தன்னுடைய அதிர்ஷ்டம் என்ற நினைவில் நிலஞ்சனா சொன்னாள். "ஜெயின் நீ மனதால் மிகவும் பெரியவன். உன் உயரம் வருவது எல்லோருக்கும் சாத்தியம் இல்லை."

ஜெயின் வாய்விட்டு சிரித்தான். வரிசைப் பற்கள் பளீரென்றன.

"ரொம்ப புகழ்ந்து விடாதே நிலா. இதெல்லாம் உன்னை இம்ரெஸ் செய்வதற்காகக் கூட இருக்கலாம்."

நிலஞ்சனா புன்னகைத்தாள். "அது தான் உண்மை எனில் நீ ரொம்ப மெனக்கெட வேண்டியதில்லை. நான் ஏற்கனவே இம்ரெஸ் ஆயாச்சு!"

"நிஜமாகவா?" என்றான் ஜெயின் உண்மையான வியப்புடன்.

"இதிலென்ன சந்தேகம் உனக்கு? நான் உன்னுடன் எந்த யோசனையுமின்றி கிளம்பி வந்திருக்கிறேன். இங்கே தங்க முடிவு செய்திருக்கிறேன் என்பதிலிருந்தே தெரியவில்லையா உனக்கு?"

"யே...!" ஜெயின் விரல்களை மடித்து கையை உயர்த்து கையில் நிலஞ்சனா சொன்னாள், "நீ என்னுடைய அற்புதமான நண்பன் ஜெயின். கண்ணியமானவன். உன்னிடம் இம்ரெஸ் ஆகாமல் இருந்தால் தான் அதிசயம்."

"ப்ப்பு..." ஜெயின் இழுத்த மூச்சுக் காற்றை மெதுவாக வெளியேற்றினான். "சரியான அழுகுணி ஆட்டம்.

நெகடிவ் க்ளைமாக்ஸ்தானா எப்பவும்? நான் என்னவோ நினைச்சேன்.''

''நேற்று நான் அத்தனை சொன்ன பிறகும் எதை யாவது நினைத்தால் அது உன்னுடைய முட்டாள்தனம்.''

''நேற்று நாம் பேசியவை இறந்த காலம் நிலா. இப்போது நான் பேசுவது எதிர்காலம் பற்றி.''

''எதிர்காலத்தை சமயங்களில் இறந்த காலமே முடிவு செய்யும் ஜெயின்.''

''நிலா நேரடியாக கேட்கிறேன். இந்த இருபத்தி ஐந்து வயதில் உன் வாழ்க்கை முடிந்து போய் விட்டதாக நினைக்கிறாயா? பதினைந்து நாள் திருமண வாழ்க்கை அளித்த நினைவுகளுடன் முழு வாழ்நாளையும் கழிக்க நினைப்பது அறியாமை இல்லையா? புராணங்களில் வரும் பெண்களைப் போல ஒரு வேளை உனக்கும் சிலை வைப்பார்கள் என்று எண்ணியிருக்கிறாயா?''

''போதும் ஜெயின்''என்றாள் நிலஞ்சனா கோபத் துடன். ''இது என் தனிப்பட்ட உணர்வு. வீட்டினரிடம் கூட நான் வெளிப்படையாக பேசியதில்லை. ஒரு கொடூர மரணம் தந்த அதிர்ச்சியிலிருந்து மீண்டு வரு வது அத்தனை சுலபம் அல்ல. உனக்கு அது புரியாது.''

''எனக்கா? எனக்கா புரியாது?'' என்றான் ஜெயின் ஒரு விதமான புன்னகையுடன்.

அந்த புன்னகை எதிர்பாராத விதமாய் நிலஞ்சனாவின் துக்கத்தை சீண்டியது. தன்னையறியாமல் கண்களில் நீர் நிறைந்தது. ''நாம் போகலாம் ஜெயின்'' என்றாள் எழுந்து நின்று.

இருவரும் சைக்கிளை வாடகை நிலையத்தில் விட்டு விட்டு அறைக்குச் சென்றனர். மழை லேசாக தூறத் தொடங்கியிருந்தது. நிலஞ்சனா அமைதியாக இருந் தாள். சூழ்நிலையின் இறுக்கத்தைக் குறைக்க ஜெயின் அங்கிருந்த சிடிப்ளேயரை ஆன் செய்தான். சமீபத்திய குத்தாட்ட பாடல் ஒன்று அதிரடியாய் முழங்க, நிலஞ்சனா அவசரமாக சிடியை நிறுத்தினாள்.

''இறுக்கமான சமயங்களில் அதற்கு நேர்மாறான இசையைக் கேட்கும் போது மனம் தளர்ந்து உற்சாகம் பிறக்கும்'' என்றான் ஜெயின்.

''இந்த இரைச்சல் உற்சாகம் வராது. தலைவலி தான் வரும்.''

''சரி இப்போது உற்சாகமாக இருக்க என்ன செய்வது? நீயே சொல்.''

''தனியாக எதுவும் செய்யத் தேவையில்லை. நீ பேசாமல் இருந்தாலே போதும்.''

''அது முடியாது. வேண்டுமானால் நீ ஒரு பாட்டு பாடு?''

''நோ.''

''ஒரே பாட்டு நிலா?''

''சான்ஸே இல்லை.''

''அப்படியானால் நீ இதை சகித்தே தீர வேண்டும்.''

''முடியாது'' நிலஞ்சனா சிடி ப்ளேயரை தன் பக்கமாய் இழுத்துக் கொள்ள, ஜெயின் உரத்த குரலில் பாட ஆரம்பித்தான். அது பாடல் தான் என்ற போதும்

எத்தனை கவனித்தும் வார்த்தைகள் புரியாததால் ''நீ இப்போது என்ன செய்கிறாய்?'' என்றாள் நிலஞ்சனா வியப்புடன்.

ஜெயின் தன் கட்டிலிருந்த தலையணையை தூக்கி சுவரில் எறிந்தான். ''இது எனக்குப் பெரிய அவமானம். உயிரை கொடுத்து பாவங்களை கண்டுபிடித்து பாடுபவனிடம் நீ என்ன செய்கிறாய் என்று கேட்பது எவ்வளவு பெரிய கொடுமை.''

''இது என்ன பாட்டு?''

''நைஜீரிய மொழி பாடல். தன்னை பிரிந்து போன கணவனுக்கு தூது செல்லும் ஒரு பெண்ணின் மனசை பற்றிய பாடல்.''

''உணர்வுகளுக்கு உலகம் முழுக்க ஒரே மொழி தான். இப்போது நான் பாடலை புரிந்து கொள்ள முயற்சிக் கிறேன். நீ பாடு ஜெயின்'' என்றாள் நிலஞ்சனா ஆர்வத் துடன்.

''பட் எனக்கு இப்போது மூட் இல்லை.''

''ப்ளீஸ் ஜெயின். எனக்காக ப்ளீஸ்.''

''ஓகே. நீ இத்தனை தூரம் சொல்வதால் பாடுகிறேன்'' என்ற ஜெயின் தலையை ஆட்டி, கைகளை அசைத்து பாடத் தொடங்கினான். அதில் ஒரு எழுத்து கூட புரியாத போதும் ஜெயினின் குரலும், அதில் தெரிந்த பாவமும் பாடலை இனிமையாக்கியது. ஜெயின் அவ்வப்போது அவளைப் பார்த்தபடியே பாட, நிலஞ்சனா தன்னை மறந்தவளாய் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். ஜெயினின் உடல் மொழி மிகவும் வசீகரமாக இருந்தது.

அத்துடன் அவனை இத்தனை ஆர்ப்பாட்டமாய் பார்ப்பது இது தான் முதல் முறை என்பதால் பாடல் முடிந்ததும் நிலா படபடவென கைகளைத் தட்டினாள்.

"தேங்க்யு" என்றான் ஜெயின் தலை சாய்த்து.

"நீ இவ்வளவு நன்றாக பாடுவாய் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை."

"நானே எதிர்பார்க்கவில்லை."

"என்னது?"

"நமக்கே தெரியாத எத்தனையோ திறமைகள் நமக்குள் புதைந்திருக்கும். இது இதைப் போல எதிர்பாராத சமயங்களில் வெளிவந்து நம்மையே திணறடிக்கும்."

"அடேயப்பா, அப்படி என்னென்ன திறமைகள் இருக்கிறது உனக்குள்?"

"இப்போது தானே பழக ஆரம்பித்திருக்கிறாய். இனி ஒவ்வொன்றாக புரிந்து கொள்வாய்?"

"சரி தான். ஆனால் எனக்கு ஒரு சந்தேகம் ஜெயின்."

"நான் இதை எதிர்பார்த்தேன்."

"எதை?"

"நான் திறமைசாலி என்பது புரிந்த உடன் நீ என்னிடம் யோசனை கேட்க தொடங்கி விடுவாய் என்பதை."

"அதீத கற்பனை ஆபத்தானது ஜெயின். கொஞ்சம் உடம்பையும் பார்த்துக் கொள்" என்றாள் நிலஞ்சனா கவலையுடன். ஜெயின் அடக்கமாட்டாமல் சிரிக்கத்

தொடங்கினான். ஒரு வழியாய் சிரித்து முடித்து பிறகு கேட்டான், ''சொல் நிலா என்ன சந்தேகம் உனக்கு?''

ஜெயினின் சிரிக்கும் கண்களையும், செதுக்கின முகத்தையும், இந்த சில மாத அலைச்சலினால் நிறம் மங்கி அந்த மங்கிய நிறத்தினாலேயே கவர்ச்சிகரமாய் தெரிந்த உடல் கட்டையும் பார்த்தபடியே நிலஞ்சனா கேட்டாள்.

''உனக்கு நைஜீரிய மொழி எப்படித் தெரியும்?''

''யாருக்குத் தெரியும்?''

''இப்போது பாடினாயே!''

''அப்படியா?''

''விளையாடாதே ஜெயின். நைஜீரிய மொழியில் தன்னை பிரிந்து சென்ற கணவனை பற்றி மனைவி பாடுவதாக...''

''நிலா யு வார் க்ரேட்'' என்றான் ஜெயின் மெச்சுதலாக ''நான் கத்தியதை எப்படி எல்லாம் கற்பனை செய்து கொள்கிறாய்?''

''ஏய். இப்போது நீ பாடவில்லை?''

''ஹி... ஹி... கன்னடத்திலும், ஹிந்தியிலும், தமிழிலும் வார்த்தைகளைப் போட்டுக் கத்திக் கொண்டிருந்தேன். நைஜீரியன் என்று நம்பி விட்டாயா? அடடா, ஆனாலும் பாவம் தான் நீ!''

''அடப்பாவி, தலையசைத்து இரசித்து பாடினாயே!'' என்றாள் நிலஞ்சனா நம்ப மாட்டாமல்.

ஜெயின் சிரிக்கவும், நிலஞ்சனாவுக்கு கோபம் வந்தது. ''இத்தனை நேரமாய் என்னை முட்டாளாக்கி விட்டு

சிரிக்கவா செய்கிறாய்?'' நிலஞ்சனா அவன் தோள் களிலும், முதுகிலும் அடிக்கத் தொடங்கினாள்.

''நிலா நான் சொல்வதைக் கேள்.''

............

''நிலா.''

.............

அவன் தடுத்தும் கேளாமல் அடித்துக் கொண்டிருந் தவள், ஜெயின் அவள் கைகளைப் பற்றியதும் ''என் னிடம் பேசாதே'' என்றாள்.

''சரி நீ பேசு.''

''இங்கு யாரும் பேசப் போவதில்லை.''

''நிலா உனக்குத் தெரியுமா? ஜெயின் மிகவும் நல்லவன். அன்பானவன். பண்பானவன். அவனை புரிந்து கொண்டால் அவனிடம் நீ கோபப்படவே மாட்டாய்... அவன்...''

''போதும்'' என்றாள் நிலஞ்சனா தாங்க முடியாமல் ''இதற்கு அந்த நைஜீரிய பாட்டே பரவாயில்லை.''

''பாடவா?''

''நீ என்னை நன்றாக ஏமாற்றி விட்டாய்'' என்றாள் நிலஞ்சனா குறையுடன்.

''நிலா, இங்கே பார். நான் உன்னை ஏமாற்றுவேனா?'' என்றான் ஜெயின் ஆழ்ந்த குரலில்.

அந்த குரலும் முகமும் எதையோ உணர்த்த நிலஞ் சனா ''இல்லை'' என்றாள் தன்னையறியாமல்.

''நன்றி நிலா'' என்றான் ஜெயின் தான் பற்றியிருந்த அவள் விரல்களில் முத்தமிட்டு.

அத்தனை நேரமும் ஜெயின் கைகளுக்குள் இருந்ததை அப்போது தான் உணர்ந்தவளாக நிலஞ்சனா கைகளை உருவிக் கொள்ள முயன்றாள். ஆனால் ஜெயின் அவள் கரங்களை இறுக பற்றியிருந்தான். தன் கரங்களுக்குள் புதைந்து போன விரல்களை மிருதுவாய் வருடினான். ''நிலா, மொழியே புரியாத போதும் நீ அந்த பாடலை இரசித்தாய். காரணம் என்ன தெரியுமா? என் குரலில் தெரிந்த காதல் உன்னை இரசிக்க வைத்தது. இந்த காதலும், நீயும் நானும் தான் நிஜம் நிலா. இதற்கு முன்னும் பின்னும் எதுவும் இல்லை. யாரும் இல்லை. இந்த நொடி நம்முடையது'' ஜெயினின் குரலும் ஸ்பரிசமும் நிலஞ்சனாவை கட்டிப் போட்டது. நகர கூட முயற்சிக்காமல் அப்படியே அமர்ந்திருந்தாள். வெளியே மழை பொழியத் தொடங்கியது. இடியும், மின்னலும் விட்டு விட்டு அடித்தது.

''நில ஐ லவ் யு'' என்றான் ஜெயின். ''உன்னை எனக்கு பிடிக்கிறது என்பதற்கு பிரத்யேக காரணங்கள் எதுவும் தேவையில்லை. உன்னை உனக்காகவே பிடிக்கிறது.''

சினிமா வசனம் போலிருந்தாலும் நிலஞ்சனாவுக்கு இப்போது வசனங்கள் தேவைப்பட்டது. காய்ந்த மண் நீரை உறிஞ்சுவது போல மனம் அவன் வார்த்தைகளை, அதில் தெறித்த காதலை உறிஞ்சிக் கொண்டது. உலகில் மிக அற்புதமான விஷயம் நேசிக்கப் படுவது தான் என்று தோன்றியது. நிலஞ்சனா நெகிழ்ச்சியுடன் கண்களை மூடினாள். ஜெயின் குனிந்து அவள் இமைகளின் மீது இதழ் பதித்தான். நிலஞ்சனாவின்

உடல் சிலிர்த்தது. கைககள் தன்னையறியாமல் ஜெயின் முதுகை வளைத்தன. அடுத்த நொடி ஜெயின் அணைப்பு இறுகியது. நெற்றியிலும், கன்னங்களிலும், உதட்டிலும் அவன் இதழ்கள் மாறி மாறி பதிந்தன. குளிர் காற்றிலும் நிலஞ்சனாவின் நெற்றியில் வியர்வை அரும்பியது. அவளிடம் நெகிழ்ச்சியை உணர்ந்த ஜெயின் கழுத்தில் முகம் புதைத்தான். ''மை டார்லிங்'' என காதோரமாய் முத்தமிட்டான். சூழ்நிலையை தனக்கு சாதகமாக்கிக் கொள்ள மனம் வராமல் மிருதுவாய் அவளை தன்னிடமிருந்து விடுவித்தான். படுக்கையில் தளர்வாய் படுக்க வைத்து போர்வையை கழுத்து வரை இழுத்து விட்டான். ''தூங்கு நிலா'' என அவன் அவள் தலையை வருடி விலகுகையில் தோள்பட்டை இடித்து சுரீலென்றது.

'அவள் இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறாள்? எப்படி தன்னையே மறந்து போனாள்? ஜெயினாக விடுவிக்கிற வரை எதுவும் தோன்றவில்லையே! அவனிடம் திருமணத்திற்கு மறுத்து விட்டு காதல் செய்ய அனுமதிக்கும் பெண்ணைப் பற்றி அவன் என்ன நினைப்பான்? அவமானமும், துக்கமும் தாங்க முடியாமல் நிலஞ்சனாவின் கண்களிலிருந்து நீர் வழிந்தது.

காலையில் ஜெயின் வழக்கமான ஜெயினாக இருந்தான். ''கெட் ரெடி நிலா. இவ்வளவு நேரமா தூங்குவாய்?'' என அவசரப்படுத்தி அவளை தயாராக வைத்தான். ''நேற்று சைக்கிள் பாரை பிடித்தது உனக்கு சிரமமாக இருக்கும்'' என மொபெட்டை வாடகைக்கு எடுத்து வந்தான். நிலஞ்சனாவுக்கு உண்மையில்

தோள்பட்டையில் வலிக்கத் தொடங்கியிருந்தது. அதை அவள் சொல்லாமலே புரிந்து கொண்டான் என்பது அவளை கலங்க வைத்தது. ஜெயின் அன்று ஆர்க்கியாலாஜி மியூஸியத்திற்கு அழைத்துப் போனான். சரித்திர பொருட்களை பார்வையிடுகையில் சொன்னான்.

''ஹம்பியில் இன்றும் அகழ்வாராய்ச்சி பணிகள் நடந்து கொண்டே இருக்கின்றன. தினமும் புதிதாக ஏதோ ஒரு பொருள் கிடைத்துக் கொண்டே இருக்கிறது என்பது இந்நகரின் முந்தைய சிறப்பையும், பிரமாண்டத் தையும் உரக்க சொல்வது போலிருக்கிறது.''

நிலஞ்சனா பதில் பேசாது தலையசைத்தாள். லோட்டஸ் மஹால். குயின் பேலஸ், ஹசாரே ராமா கோவில்களை பார்த்த பின் துங்கபத்திராவை படகில் கடந்து 'விருடாபூர்கட்டே' (தீவு) போனார்கள். அங்கு தெருவோர கடைகளில் பாசிமணி மாலைகள் வாங்கினார்கள். செடியுடன் இருந்த பச்சை கொண்டை கடலையை தோலுரித்து உண்டார்கள். ஜெயின் முதல் நாள் இரவு நடந்ததை எந்த விதத்திலும் நினைவு படுத்தாமல் நடந்து கொண்டது மனதுக்கு இதமாக இருந்தது. மாலையில் குண்ட் பங்கலாவும், மிர்ச்சியும் சாப்பிட்டபடி 'ஹேமகுட்டா' மலை மீது ஏறி சூரியன் சிவப்பு கோளமாய் மறைவதை கண்டு இரசித்தார்கள். மலையிலிருந்து இறங்குகையில் ஜெயின் சொன்னான், ''ஹம்பியில் பார்க்க வேண்டிய இடங்கள் ஐநூறு இருக்கின்றன. இந்த இரண்டு நாட்களில் பாதியைக் கூட பார்க்க முடியாது.''

''பட் இதற்கு மேல் தாமதித்தால் என் வீட்டிலிருந்து நேராய் கிளம்பி இங்கே வந்து விடுவார்கள்'' என்றாள் நிலஞ்சனா.

மறுநாள் காலையில் அவர்கள் ஹம்பியிலிருந்து கிளம்ப முடிவு செய்தார்கள். ''நவம்பர் முதல் வாரத்தில் ஹம்பி உற்சவம் நடக்கும். அப்போது நீ வந்தால் ஒளியிலும், ஒலியிலும், நடனத்திலும் ஹம்பியின் இன்னொரு முகத்தைப் பார்க்கலாம்'' என்றான் ஜெயின்.

''பார்க்கலாம்'' என்றாள் நிலஞ்சனா யோசனையுடன்.

திரும்பி அறைக்கு நடக்கையில் ஹம்பியின் நிலத்தடி நீர் பாதைகளையும், கால்வாய்களையும், பதிமூன்றாம் நூற்றாண்டிலேயே நம் மக்கள் சீர் மேலாண்மையில் தேர்ச்சி பெற்றிருந்ததையும் பார்க்கையில் இப்போதைய தண்ணீர் பிரச்சனை முகத்தில் அறைந்தது. பொக்கிஷங்களை பாதுகாத்து பின்பற்றத் தவறி விட்டோம் என்ற துக்கத்தில் ஜெயின் மௌனமானான்.

மொபெட் 'டுர்' என்ற இரைச்சலுடன் போய்க் கொண்டிருந்தது. வானம் இருண்டு மழைக்குத் தயாரானது. ''என்ன விஷயம் ஜெயின்?'' என்றாள் அவன் பின்னால் அமர்ந்திருந்த நிலஞ்சனா. ''என் சிறுவயதில் பார்த்த பெங்களூரு நினைவுக்கு வந்தது நிலா'' என்றான் ஜெயின் பெருமூச்சுடன். ''அது ஒரு கனவு பூமி. சாலைகளில் கட்டிடங்களே தெரியாத அளவு மரங்கள் அடர்ந்திருக்கும். இங்கு வசிப்பவர்கள் வேறு எங்கும் போய் இருக்க மாட்டார்கள் என்பார் அப்பா கர்வத்துடன். பெலந்தூர்ரில் எங்களுக்கு விவசாய நிலம் இருந்தது.

வீட்டிற்குத் தேவையான அரிசியும், வாழையும் அங்கிருந்து தான் வரும். பெலந்தூர் இன்று காவு கொடுக்கப்பட்டு விட்டது. மென் பொருள் நிறுவனங்கள் அதிகம் இருக்கும் ஒய்ட்பீல்ட்டிற்கு அருகே இருந்தது தான் காரணம். கான்கீரிட் காடாகி விட்டது. மரங்கள் வெட்டப்பட்டு அபார்ட்மென்ட்கள் முளைத்திருக் கின்றன. மின்விசிறியே இல்லாத பெங்களூருவில் இன்று ஏ.சி. இயந்திரம் இயங்குகிறது. சில இடங்களில் தண்ணீரை விலைக்கு வாங்குகையில், 'இங்கும் தண்ணீர் பஞ்சம் வரும் என்று நாங்கள் நினைக்கவே இல்லை' என பெங்களூர்வாசிகள் அதிர்ந்து போகிறார் கள். தினமும் நாலாயிரத்து ஐநூறு டன் கழிவுகள் பெங்களூருவில் கொட்டப்படுகின்றன. நீர்நிலைகள் சாக்கடைகளாகத் தொடங்கி விட்டன. நிலா இன்று பெங்களூருவின் அடையாளம் பூங்காக்களோ, மயக்கும் குளிரோ, மென்பொருள் நிறுவனங்களோ அல்ல. ரியல் எஸ்டேட்தான். பெங்களூருவில் ஏன் குளிர் குறைந்து விட்டது என்பதற்கும், காவிரி ஏன் அனலாக கொதிக் கிறது என்பதற்கும் தொடர்பிருக்கிறது நிலா.''

ஜெயினின் ஆதங்கம் அவளுக்கு புரிந்தது. எனவே நிலஞ்சனா அவனுக்கு ஏற்றாற் போல் பேச முற்பட்டாள். அன்று மழை சற்று முன்பே தொடங்கி விட்டதால் அவர்கள் தங்கியிருக்கும் வீட்டிற்கு வந்த போது இருவரும் நனைந்திருந்தனர்.

''அடடா! மழையில் நனைந்து விட்டீர்களா? சீக்கிர மாய் உடை மாற்றிக் கொண்டு உணவருந்த வாருங்கள்'' என்றாள் அந்த வீட்டின் உரிமையாளர் பெண்மணி.

ஜெயின் நிலஞ்சனாவை உடை மாற்றும் படியும், தான் உணவை அறைக்கே எடுத்து வருவதாகவும் கூறிச் சென்று விட, நிலஞ்சனா ஒரு நைட்டியை அணிந்து, தலையை துவட்டியபடி சேரில் அமர்ந்தாள். அந்த நைட்டி ஜெயின் தான் வாங்கி வந்தான். அவள் மாற்றுடை கூட இல்லாமல் தெருவில் கிடந்த போது தூக்கிப் போய் உயிரும், உணவும், உடையும் அளித் தவன். அவனுக்கு அவள் திருப்பி என்ன செய்யப் போகிறாள்? அறைக்குள் நுழைந்ததும் முதல் நாள் நிகழ்ச்சிகள் நினைவுக்கு வர, நிலஞ்சனா கலங்கிப் போனாள்.

உணவு ப்ளேட்களுடன் உள்ளே வந்த ஜெயின் நாற்காலியில் கைகளை ஊன்றி எங்கோ வெறித்தபடி அமர்ந்திருந்த நிலஞ்சனாவைப் பார்த்தான். ஜன்னல் வழியாக தெரிந்த மின்னலின் வெளிச்சத்தில் அவள் முகம் ஒளிர்வதும், மறைவதுமாக இருந்தது. இருளில் மோகினி ஒருத்தி தோன்றி மறைவதுதான் பிரேமையை ஏற்படுத்தியது. பார்த்த முதல் நாளிலிருந்தே தன் மனசை ஆக்ரமித்துக் கொண்ட அவளைப் பற்றி யோசித்தபடியே உணவை டேபிள் மீது வைத்தான். நிலஞ்சனா சலனமின்றி அமர்ந்திருந்தாள். ''நிலா சாப்பிட வா'' என்றான் ஜெயின்.

நிலஞ்சனா மறுப்புடன் தலையசைத்தாள்.

''நிலா வீணாக எதையும் நினைத்து குழப்பிக் கொள் ளாதே!' என்றான் ஜெயின்.

............

''நீயும் எல்லோரையும் போன்ற சாதாரண பெண் தான் என்பதை மறந்து போனதால் வந்த வேதனை இது. உன் மனதிலிருந்து நீயே தான் விடுபட வேண்டும்.''

''விடுபட்டு?''

..........

''சொல் ஜெயின். விடுபட்டு வெளியே வந்து என்ன செய்ய வேண்டும்? உன்னைக் காதலிக்க வேண்டும். மணந்து கொள்ள வேண்டும். அதைத் தானே சொல்ல வருகிறாய்?''

ஜெயின் அலட்சியத்துடன் தோள்களை குலுக்கி னான். ''மிக இயல்பான ஒரு விஷயத்தைக் கூட குதர்க் கமாக பார்க்கும் உன் மனநிலை மாற வேண்டும். உன்னை தியாகியாக கற்பனை செய்து கொண்டு அதி லேயே சுகம் தேடமுற்படுகிறாய். அந்த கற்பனை முட் டாள்களின் உலகம். அது ஒரு நாள் கலையும் போது தாங்க முடியாது உன்னால்.''

''நான் முட்டாளாகவே இருந்து விட்டுப் போகிறேன். அதைப் பற்றி நீ கவலைப்பட வேண்டியதில்லை?''

ஜெயின் அவள் அருகில் சென்றான். ''நிலா என்னைப் பார்'' என்றான் அவள் முகத்தைப் பற்றி.

தன்னையறியாமல் நிமிர்ந்த நிலஞ்சனாவின் கண்கள் ஜெயின் முகத்தில் நிலைத்தது. அவனது அசாத்திய உயரமும், கூர் மூக்கும், காரிய மீசையும், எப்போதும் கடினமும், சில சமயங்களில் குறும்பும் தென்படும் அவன் கண்களில் இப்போது கனிவு சொட்டியது. சிவந்த இதழ்களில் புன்னகை தவழ அவன் அவள் தலையை

வருடிய போது நிலஞ்சனா தன்னை மறந்து போனாள். ஜெயின் அவளை எழுப்பி மிருதுவாக அணைத்துக் கொண்ட போது அவனுக்கே உரிய வாசனை அவளை கிறங்கடித்தது. ஜெயினின் சூடான இதழ்கள் உச்சி மீது படிகையில் நிலஞ்சனா சொன்னாள் ''உண்மை தான் ஜெயின். உன் மீது ஏற்பட்ட பிரியத்தை தடுக்க முடிய வில்லை என்னால். நான் தோற்றுப் போனேன். மிக மோசமாக தோற்றுப் போனேன்.''

ஜெயின் அவள் முகத்தை தன் கைகளில் ஏந்தினான். ''காதலில் தோற்றவர்கள் தான் உண்மையில் வென்ற வர்கள். கேள்விப்பட்டதில்லையா நீ?''

ஜெயின் ஆசையுடன் அவள் கன்னங்களை வருடினான். ''நிலா நீ என் உயிர்'' என்றான் திரும்பத் திரும்ப.

சற்று நேரத்திற்கு பின் நிலஞ்சனா தன்னை சமா ளித்துக் கொண்டு அவனிடமிருந்து விலகி அமர்ந்தாள். ''கரண் தேசாயின் மரணத்தை என்னால் அவ்வளவு எளிதாக அலட்சியப்படுத்தி விட முடியாது ஜெயின்'' என்றாள் அவனிடம்.

''அலட்சியப் படுத்த வேண்டியதில்லை. உரிய மரியாதையுடன் நினைவு கூர்வோம்'' என்றான் ஜெயின்.

''என் பெற்றோரிடம் பேச வேண்டும் ஜெயின்.''

''நிச்சயமாய். இரு வீட்டிலும் பேசலாம்.''

''கடந்த ஒரு வருடமாய் என் வீட்டினருடன், கரண் தேசாய்யின் பெற்றோரும் கூட என்னை திருமணம் செய்து கொள்ள வற்புறுத்தி வருகின்றனர். அதற்காகவே

நான் ஜெய்ப்பூர் செல்வதை தவிர்த்தேன். இப்போதும் உடனடியாக என்னால் தயாராக முடியுமா என்று தெரிய வில்லை.''

''ரொம்ப யோசிக்காதே நிலா. இப்போதைக்கு சாப் பாட்டில் மட்டும் கவனம் செலுத்து'' என்றான் ஜெயின். தங்களுக்காக டேபிளில் காத்திருந்த உணவை காண்பித்து.



10

இராணுவ குடியிருப்பின் நுழைவாயிலில் ஜெயின் காரை நிறுத்தினான். ''பை'' என்ற படி காரை விட்டு இறங்கிய நிலஞ்சனாவின் கூடவே ஜெயின்னும் இறங்கினான். பின்சீட்டிலிருந்த அவள் பையை எடுத்துக் கொண்டு, அவளுடன் நடந்த ஜெயினைப் பார்த்த நிலஞ்சனா, ''நீ என் வீட்டிற்கு வருகிறாயா?'' என்றாள் வியப்புடன்.

''நீயாக கூப்பிடுவாய் என்று எத்தனை நாள் தான் காத்திருப்பது'' ஜெயின் அலுத்துக் கொண்டான்.

ஜெயின்னை இப்போது அண்ணாவுக்கும், அண் ணிக்கும் அறிமுகம் செய்ய வேண்டும். முன்னேறிவிப் பின்றி ஒரு வாலிபனுடன் தங்கை வந்து நின்றால் அவர்கள் என்ன நினைப்பார்கள்? முதலில் ஜெயின் பற்றி அவர்களிடம் பேசி விட்ட பிறகு அறிமுகம்

செய்வது தான் சரியாக இருக்கும் என அவள் யோசிக்கையில் லிப்ட் அவர்களது தளத்தில் நின்றது.

''ஜெயின்'' என்றாள் ஏதோ சொல்ல முயன்றவளாக.

''அட வாம்மா'' ஜெயின் நடந்து போய் காலிங் பெல்லை அழுத்தினான். நிலஞ்சனா ஓடிச் சென்று அவனுக்கு முன்னால் நின்றாள். கதவு திறந்ததும் தன் முன் நின்றிருந்தவரைப் பார்த்த நிலஞ்சனாவின் விழிகள் விரிந்தன. ''மம்மி, டாட் எப்போது வந்தீர்கள்?'' என்றாள் வியப்புடன். நிலஞ்சனாவின் அம்மா தன் கைகளை விரித்து அவளை அழைக்கவும், தாயின் அணைப்பில் அடங்கு கையில் தன்னையறியாமல் நிலஞ்சனாவின் உடல் சிலிர்த்தது.

''உன் டூர் முடிந்ததா? நீ எப்போது வருவாய் என காத்திருக்கிறோம்'' என்றார் நிலஞ்சனாவின் அப்பா.

''நீங்கள் வரப் போவது எனக்குத் தெரியாதே!'' என்றாள் நிலஞ்சனா ஆச்சரியம் மாறாமல்.

நிலஞ்சனாவின் அப்பா அவள் தலையை கோதி சரி செய்தார்.

''உன்னைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. கிளம்பி விட்டோம்.''

பேச்சுக் குரல் கேட்டு வெளியே வந்த ஹரிஹரன் னின் பார்வை கேள்வியுடன் ஜெயின் மீது படியவே நிலஞ்சனா நினைவு வந்தவளாக அறிமுகம் செய்தாள். ''இவன் ஜெயின் என் ப்ரெண்ட்.''

''ஹலோ'' நிலஞ்சனாவின் அப்பா ஜெயினின் கரங்களைப் பற்றி குலுக்கினார். ''நான் கேப்டன்

மகாதேவ். எக்ஸ் சர்வீஸ் மேன். சஞ்சனா ஐ மீன் நிலஞ்சனாவின் அப்பா. இவள் என் மனைவி மேனகா என சம்பிரதாயமாக அறிமுகம் செய்து கொண்டார்.

''இப்படி உட்கார்ந்து பேசலாமே. என்ன சாப் பிடுகிறீர்கள்?'' என்றார் மேனகா உபசரிக்கும் விதமாக.

''சாப்பிட எதுவும் வேண்டாம். உங்களுடன் ஒரு அறிமுகம் செய்து கொள்ள நினைத்தேன். அவ்வளவு தான்'' என்றான் ஜெயின் புன்னகையுடன்.

சிக்கனமான இரவிக்கையில், லிப்ஸ்டிக் உதடுகளில் புன்னகை மலர நின்றிருக்கும் அம்மாவையும், பாண்ட் பாக்கெட்டுகளில் கைகளை நுழைத்தபடி ஒரு நிதானத் துடன் பேசும் அப்பாவையும் பார்க்கையில் அன்னை எளிமையாக வெளிப்படுத்திய ஜெயினின் குடும்பம் நிலஞ்சனாவின் கண் முன் வந்து போனது. இப்போது அவன் தன் வீட்டைப் பற்றி என்ன நினைக்கக் கூடும் என்று அவள் யோசிக்கையில் சுனிதா ஜூஸ் டம்ளர்கள் அடங்கிய ட்ரேயுடன் வந்தாள். ஒரு ஆரஞ்சு ஜூஸை ஜெயினிடம் கொடுத்த ஹரிஹரன்.

''நிலஞ்சனாவை உங்களுக்கு எப்படித் தெரியும் மிஸ்டர் ஜெயின்?'' என்றான் அவனிடம். ''இதற்கு முன்பு உங்களை பார்த்த நினைவில்லை எனக்கு.''

நிலஞ்சனா குறுக்கிட்டாள். ''சரியான காரணம் இல்லாமல் இருவர் நண்பர்களாக இருக்க முடியாதா அண்ணா?''

''முடியும். அது வெறும் நட்பாக மட்டும் இருந்தால்.''

''நீங்கள் சொல்வது உண்மை தான்'' என்றான் ஜெயின். ''இது வெறும் நட்புடன் முடிந்து விடுகிற

விஷயம் இல்லை. எனக்கு நிலஞ்சனாவையும், நிலஞ்சனாவுக்கு என்னையும் பிடித்திருக்கிறது. இதை அன்பு, காதல், என என்ன பெயரிட்டு நீங்கள் அழைத் தாலும், நிலஞ்சனாவை நான் மணந்து கொள்ள விரும்புகிறேன் என்பது தான் நிஜம்.''

ஜெயின் சொல்லி முடித்ததும் ஒரு கணம் ஊசி விழுந்தால் கேட்கும்படியான அமைதி நிலவியது. சந்தேகம் சந்தோஷம், திகைப்பு என பல்வேறு உணர்ச்சி குவியலாய் வீட்டில் எல்லோர் பார்வையும் நிலஞ்சனா வின் மீது படிந்தது. தன்னை டிராப் பண்ண வீடு வரை வந்த ஜெயின் எதிர்பாராமல் வந்து நிற்கும் பெற் றோரிடம் திருமணத்திற்கு சம்மதம் கேட்பான் என எதிர்பாராத நிலஞ்சனாவுக்கு தூக்கி வாரிப் போட்டது. வீட்டிலிருப்பவர்கள் தன்னிடம் பதிலை எதிர்பார்த்து காத்திருப்பது புரிந்தது. ஜெயின் சொன்ன பிறகு வேறு எதற்கும் வழியில்லாமல் போகவே ''ஆமாம்'' என்றாள் நிலஞ்சனா. ''ஜெயின் சொல்வது உண்மை தான்.''

அதுவரை அவளையே பார்த்தபடி நின்றிருந்த ஜெயின் கண்களில் தெரிந்த குறும்பையும், இதழ்களில் நெளிந்த புன்னகையையும் பார்த்தவளுக்கு ஜெயின் வேண்டுமென்றே அவளுக்கு அவகாசம் இல்லாமல் செய்திருக்கிறான் என்பது புரிந்தது.

''என்னால் இன்னமும் நம்ப முடியவில்லை'' என்றாள் சுனிதா.

''நிலஞ்சனா சென்ற வாரம் வரைக்கும் திருமணம் என்ற வார்த்தையே வெறுத்தாள். உங்களை இப்போது பார்ப்பதற்கு முன்பு வரை வார்த்தை அளவில் கூட

நீங்கள் யார் என்றே தெரியாது. நீங்கள் இருவரும் மணந்து கொள்ளப் போவதாக சொல்கிறீர்கள். இதில் எத்தனை சதவீதம் நிஜம்?''

''நூறு சதவீதம்'' என்றான் ஜெயின். ''நிலஞ்சனா சென்ற வருடம் இங்கு வந்ததிலிருந்தே எனக்குத் தெரியும். என்றாலும் நாங்கள் இந்த முடிவு எடுக்க ஒன்னரை வருடங்கள் ஆனது. இந்த பரஸ்பர அன்பும், நம்பிக்கையும் வாழ்நாள் முழுமைக்குமானது என்பதை நாங்கள் உணர்ந்தே இருக்கிறோம்'' என்றான் ஜெயின்.

''உங்கள் வீட்டில் நிலஞ்சனா பற்றித் தெரியுமா?'' என்றான் ஹரிஹரன்.

''நிலஞ்சனாவைத் தெரியும். மற்றபடி என் வீட்டில் என் வார்த்தைக்கு மறுப்பு இருக்காது'' என்றான் ஜெயின்.

''நிலஞ்சனா ஒருவரை மணந்து கொள்ளும் அள விற்கு விரும்பியிருக்கிறாள் என்பது இப்போதும் புதி ராகத்தான் இருக்கிறது. எப்படியோ அவள் திருமணத் திற்கு சம்மதித்தது பெரிய சந்தோஷம்'' என்றாள் நிலஞ்சனாவின் அம்மா.

மலர்ந்திருந்த முகங்கள் அவள் கூறுவது உண்மை தான் என்பதை நிரூபித்தன, கேப்டன் மகாதேவ் அப்போது தான் ஜெயினை புதிதாக பார்க்கிற பார்வை பார்த்தார். அவனது ஆறடி உயரத்தை, கம்பீரத்தை, ஆண்மை நிறைந்த குரலை கவனித்தவர் திருப்தி யுடன் தலையசைத்தார். அவன் தொழில் பற்றி விசா ரித்தார். ''எங்கள் குடும்பத்தில் மூன்றாவது தலைமுறை யாக இராணுவத்தில் இருக்கிறோம். நான்காவதாக

ஹரிஹரனின் மகன்கள் தொடருவார்கள்'' என்றார் சற்றே பெருமையுடன்.

நிலஞ்சனாவின் முகத்திலும் அவ்வப்போது இத்தகைய பெருமிதத்தை ஜெயின் பார்த்திருக்கிறான். தேசபக்தி என்பது கூட ஒரு வகை போதை தான் என்று தோன்றியது. சாதாரணமாக ஒரு குழந்தை வளர்ந்து பெரியவனான பின் தன் வழியை தேர்ந்தெடுக்கும். ஆனால் இங்கு இராணுவத்திற்காகவே பிள்ளை வளர்க்கிறார்கள். அதிலுள்ள சிரமங்களையும், வலிகளையும் அறிந்த பின்னரும் கூட எந்த முணுமுணுப்பும் இன்றி ஒவ்வொரு தலைமுறையும் தயாராவது உண்மையிலேயே வியப்புக்குரியது.

''மிஸ்டர் ஜெயின்'' என்ற கேப்டனின் குரலில் கலைந்து ''எஸ்'' என்றான் ஜெயின்.

''உங்கள் பெற்றோர். குடும்பம் பற்றி சொல்லுங்கள்.''

''அப்பா ஹோல்சேல் கடை. அம்மா குடும்பத் தலைவி. தம்பியும் தங்கையும் படிக்கிறார்கள். தாதிமா அதாவது அப்பாவின் அம்மா இங்கேயும், கிராமத்திலுமாக மாறி மாறி இருப்பார்கள். சித்தி, சித்தப்பா இப்போது வெளிநாட்டில் இருக்கிறார்கள்.''

''குட் உங்கள் வீடு எங்கே?''

''மடிவாலா. ரொம்ப வருடங்களாக அங்கு தான் இருக்கிறோம். லேக் அருகே பஷீர் அப்துல்லா வீடு என்றால் எல்லோருக்கும் தெரியும்.''

''என்ன... என்ன சொன்னீர்கள்?'' என்றார் கேப்டன் திகைப்புடன்.

''பஷீர் அப்துல்லா வீடு என்றால் தெரியும் என்று...''

''உங்கள் முழுப் பெயர் என்ன?''

''ஜெயின் அப்துல்லா.''

கேப்டன் மகாதேவின் முகம் இறுகியது. ஹரிஹரன் உதட்டை கடித்தபடி அம்மாவைப் பார்த்தான். அவன் அம்மாவின் பார்வையில் தெரிந்த வருத்தம் ஹரிஹரனை சங்கடப்படுத்தியது. எனவே தயக்கத்துடன் கேட்டான், ''ஜெயின் நீங்கள்...''

''யெஸ். நான் ஒரு முஸ்லீம். அதில் ஏதாவது பிரச்சனை உங்களுக்கு?'' ஜெயின் குரல் கணீர் என்றது. சற்றுமுன் அங்கிருந்த உற்சாகம் சட்டென்று வடிந்து போனது. எல்லோர் முகமும் தொங்கிப் போனது. கேட்கக் கூடாத ஒரு விஷயத்தை கேட்க நேர்ந்தது போல் நின்றிருந்தவர்களை காண நிலஞ்சனாவின் மனம் கூசியது. மெத்த படித்தவர்களாகவும், அதீத நாகரிகம் உடைய வர்களாகவும் காட்டிக் கொள்ளும் தன் குடும்பத்தினரின் குறுகிய மனப்பான்மை அவளுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. ஜெயினும் இதே அதிர்ச்சி ஏற்பட்டிருக்கக் கூடும் என அவனைப் பார்த்த போது ஜெயின் இயல்பாக புன்கைத்தான். இத்தகைய அதிர்வுகள் எனக்கு பழக்கம் தான் என்ற ரீதியில் தொடர்ந்து பேசினான்.

''நான் சார்ந்திருக்கும் மதம் உங்கள் பெண்ணின் வாழ்க்கையில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாது. நிலஞ்சனா அவள் விருப்பப்படி தான் இருக்கப் போகிறாள். மதம் என்பது பயணத்திற்கான பாதை மட்டும் தான். பாதைகள் பல இருக்கலாம். போய் சேருகிற இடம்

ஒன்று தான். இந்தியாவில் பிறந்த ஒவ்வொருவனும் தன்னை முழுமையான இந்தியனாக உணர்வது இராணுவத்தில் தான். எல்லைகளை கடந்து நாட்டை காக்கும் நீங்கள் மதங்களைப் பற்றி யோசிக்கலாமா?''

''நீங்கள் சொல்வதெல்லாம் சரி தான்'' என்றார் நிலஞ்சனாவின் அப்பா. ''நிலஞ்சனா இராணுவத்தில் பணிபுரியும் ஒருவரை தேர்ந்தெடுத்திருந்தால் இப் போதும் மதம் பற்றி யோசிக்க மாட்டோம். ஆனால் சிவிலியன்களின் வாழ்க்கை முறையில் மதம் ஒருவனது மிகப் பெரிய அடையாளம். அடையாளத்தை துறந்து சமூகத்தில் இணைவது என்பது சாத்தியமற்றது. எனவே நாங்கள் உடனே இந்த விஷயத்தில் முடிவெடுக்க முடியாது.''

''டாட்...'' என்ற நிலஞ்சனாவை ஜெயின் கையமர்த் தினான்.

''நன்றாக யோசியுங்கள். எப்படியும் நீங்கள் எல் லோரும் சம்மதித்தால் தான் திருமணம். யாரையும் வருத்தப்படுத்தி மகிழ்ச்சியடைவதில் உடன்பாடு இல்லை எனக்கு?'' ஜெயின் அங்கிருந்து விடைபெற்று செல்கையில் நிலஞ்சனாவின் கண்கள் பனித்தன. ஜெயினை சந்தித்த நாளாய் அவனுடன் ஒட்டவும் முடியாமல், விலகவும் விடாமல் வாழ்க்கை விளை யாட்டு காட்டுவதாக தோன்றியது. ஹரிஹரன் மிகுந்த அனுதாபத்துடன் நிலஞ்சனாவின் கரங்களைப் பற்றி னான். ''ஜெயின் போன்ற அறிவான, வேகமான இளைஞனிடம் நீ மனதை பறி கொடுத்ததில் ஆச்சரியம் இல்லை சஞ்சனா. ஆனால் ஒரு விஷயம் யோசித்துப்

பார். நமக்கு பெங்களூரு அதிகம் அறிமுகம் இல்லாத இடம். இரண்டு வருடங்கள் மட்டும் பணி செய்யும் உத்திரவுடன் நான் இங்கே வந்திருக்கிறேன். இந்த நகரில் ஏற்கனவே சில குண்டு வெடிப்பு சம்பவங்களும், தீவிரவாத செயல்களும் நடைபெற்றிருக்கின்றன.

இப்போதும் தீவிரவாதிகளின் ஹிட்லிஸ்ட்டில் இருக்கும் ஒரு நகரில் பெரும்பான்மையோர் சந்தேகப் படும் ஒரு சமூகத்தைச் சேர்ந்த ஒருவனுடன் உன் வாழ்வை இணைத்துக் கொள்வது எந்த விதத்தில் சரி யாகும்? இதனால் வரும் பிரச்சனைகள் நம் குடும்பத் தையே பாதிக்கும். தலைமுறைகளாக நம் குடும்பம் செய்த சேவைகள் அர்த்தமற்றதாகி விடும். நம் தேசபக்தியே கேள்விக்குள்ளாக்கப்படும்'' ஹரிஹரன் தோள்களை குலுக்கினான். ''சஞ்சனா யுத்தத்தில் சாவு எத்தனை கோரமாய் நெருங்கினாலும் ஏற்றுக் கொள் வேன். எதிரிகள் கையில் சிக்கி சின்னாபின்னமாலும் சகித்துக் கொள்வேன். ஆனால் என் நேர்மையை சந் தேகிக்கும் நிலை வந்தால் அதை ஒரு போதும் சகித்துக் கொள்ள முடியாது.''

''அண்ணா இது உங்களுடைய அபத்தமான கற்பனை. எங்கோ யாரோ ஒருவர் செய்த தவறு களுக்காக, அதைப் பற்றியே தெரியாத அப்பாவிகளை வெறுப்பது சரியா?''

''யார் அப்பாவி, யார் போக்கிரி என கண்டு பிடிக்க முடியாத நிலையில் ஒதுங்கிப் போவது தான் புத்தி சாலித்தனம்'' என்றார் கேப்டன் மகாதேவ்.

''ஜெயின் போக்கிரி இல்லை. எனக்கு உறுதியாக தெரியும்'' என்றாள் நிலஞ்சனா.

''ஒரு வேளை அது உண்மையாகவும் இருக்கலாம். ஆனால் அவனது உறவினர், நண்பர்கள் என்று பின்புலம் தெரியாது நமக்கு. சஞ்சனா நீ இராணுவ குடியிருப்பக்குள் பாதுகாப்பாக வளர்ந்தவள். நாங்கள் சிக்கலான இடங் களில் பணிபுரியும் போது அரசு உங்களுக்கு செய்து தரும் அதிகப்படி வசதிகளையும், சௌகர்யங்களையும் அனுபவித்துப் பழகியவள். நம்முடன் சண்டையிடும் எதிரியைத்தான் உனக்குத் தெரியும். கண்ணுக்கே தெரியாமல் சமூகத்தில் கலைந்திருக்கும் எதிரிகளை உன்னால் அறிந்து கொள்ள முடியாது.''

''டாட் ஒரு விஷயம் சொல்லட்டுமா?''

''சொல் சஞ்சனா?''

''நம் நாடு சுதந்திரம் அடைந்ததிலிருந்து நம் நேரடி எதிரி பாகிஸ்தான் தான். சீனாவுடன் பிரச்சனைகள் ஏற்பட்ட போதும் நாம் பகையாக கருதுவது பாகிஸ் தானைத் தான். எல்லையில் நின்று வருடக் கணக்கில் ஒரே எதிரியுடன் போரிடுவதால் உங்கள் மனங்களில் அந்த எதிரியின் மதம் பற்றி தாக்கமும் அதிகம் இருக் கிறது.''

கேப்டன் வாய்விட்டு சிரித்தார். ''குட் ஜோக். சர் வீஸ்சில் இருந்த போது என்னுடைய பட்டீ ஒரு இஸ்லாமியன் தான். நான் யோசிப்பது சிவிலியன்களைப் பற்றி.''

''டாட் இது முழுக்க முழுக்க தவறான யோசனை.''

''போதும் நிறுத்துங்கள்'' என்றாள் மேனகா. ''ஊரிலிருந்து வந்திருப்பவளை இங்கேயே உட்கார வைத்து இன்னும் எத்தனை நேரம் பேசுவீர்கள்? சஞ்சனா, நீ குளித்து விட்டு சாப்பிட வா'' என்றாள் மகளிடம்.

''மாம்'' என்றவளிடம் ''போ சஞ்சனா. நாளைக்குள் இந்த உலகம் அழிந்து விடப் போவதில்லை. இது இந்த நிமிடத்தில் முடிவெடுக்கும் விஷயமும் இல்லை. நிதானமாக பேசலாம்'' என்றாள் கண்டிப்புடன்.

அடுத்து ஒரு வாரமாய் வீடு எப்போதும் போல் இயங்கினாலும் எல்லோரும் ஒருவித மன அழுத்தத்துடன் இருந்தனர். நிலஞ்சனா கல்லூரிக்கு செல்லும் மனமின்றி வீட்டிலேயே இருந்தாள். ஜெயின் அவளுக்கு போன் செய்த போது ''ஹலோ'' என்றாள் சுரத்தின்றி.

''நிலா உனக்கு உடம்பு எப்படியிருக்கிறது'' என்றான் ஜெயின் கவலையுடன்.

''உடல் வலி பெரிதாய் இல்லை. ஆனால் மனம் வருத்தமாக இருக்கிறது.''

''வருத்தத்தின் காரணம் நான் தான் என்பது புரிகிறது. ஆனால் இந்த வருத்தத்திற்கும், கவலைக்கும் பின்னால் நம் இருவரின் எதிர்காலமும், இருக்கிறது என்பதால் இதிலிருந்து நான் பின்வாங்கப் போவதில்லை. அம்மாவிடம் உன்னைப் பற்றி சொல்லியிருக்கிறேன். அவர்களுக்கு மகிழ்ச்சி தான். என் வீடு உனக்காக காத்திருக்கிறது நிலா.''

''ஆனால் என் குடும்பம் உன்னை விரும்பவில்லை ஜெயின். நாலு சுவர்களுக்குள் வாழ்ந்து பழகி விட்ட

உன் அம்மாவுக்கு இருக்கும் பெருந்தன்மை இவர்களுக்கில்லை என்பது என்னால் நம்ப முடியாததாக இருக்கிறது.''

''உன் வீட்டினர் வெறுப்பது என்னை அல்ல. என் மதத்தை. சமீப நாட்களாய் இது எனக்கு பழகி விட்ட ஒன்று தான். உன் மீது கொண்ட அன்பில் ஏற்படும் நியாயமான அக்கறை இது என்பதால் அதற்கு மதிப்பளித்து தான் ஆக வேண்டும்.''

''அப்படியானால் அவர்கள் சொல்கிற பையனை மணந்து கொண்டு பஞ்சாபிற்கோ, நாகலாந்திற்கோ பெட்டியை தூக்கட்டுமா?''

ஜெயின் பெரிதாய் சிரித்தான். சிரிக்கையில் பளீரிடும் வரிசை பற்களும், கூடவே சேர்ந்து சிரிக்கும் கண்களும், மனதில் தோன்றி மறைந்தது. ''இப்போது எதற்காகச் சிரிக்கிறாய்? நாம் ஸீரியசாக பேசிக் கொண்டிருக்கிறோம்'' என்றாள் நிலஞ்சனா எரிச்சலுடன்.

''இந்த எரிச்சலும், கோபமும் என் மீதுள்ள பிரியத்தால் என்கையில் சிரிப்பு வரத்தானே செய்யும்?''

''இங்கு யாருக்கும் யார் மீதும் பிரியம் இல்லை. சும்மா கனவு காணாதே'' என்றாள் நிலஞ்சனா புன்னகையுடன்.

''பிரியம் இல்லை என்பதை யாராவது சிரித்துக் கொண்டே சொல்வார்களா?''

''நான் சிரிக்கவில்லை.''

''நிஜமாகவா?''

''ம்.''

''அதை இப்படி திரும்பிப் பார்த்து சொல்.''

நிலஞ்சனா சட்டென்று திரும்பினாள். அவள் நின்றிருந்த பால்கனிக்கு அருகிலிருந்த காம்பவுண்ட் சுவருக்கு வெளியே ஜெயின் நின்றிருந்தான். அவளைப் பார்த்ததும் ''ஹாய்'' என்றான் கைகளை உயர்த்தி. இத்தனை நேரமும் அவளை பார்த்தபடியே பேசியிருக் கிறான் என்பது புரிய நிலஞ்சனா திகைத்தாள். செக்யூ ரிட்டி கார்ட்ஸ் யாராவது பார்த்தால் வீண் பிரச்சனையாகி விடக்கூடும். ''ஜெயின், நீ இங்கே அதிக நேரம் நிற்பது சரியல்ல. கிளம்பு'' என்றாள் அவனிடம்.

''நிலா உன்னைப் பார்க்கவென்று கிளம்பி வந்து, நீ எப்போது பால்கனிக்கு வருவாய் என்று கால்கடுக்க தெருவில் காத்திருக்கிறேன். என்னை உபசிரிக்காமல் திருப்பி அனுப்புவது கொஞ்சமும் சரியில்லை.''

''உபசரிக்க இது நேரம் இல்லை ஜெயின்.''

''புரிகிறது. அதனால் நேரில் கவனிக்க முடியாததை போனிலாவது கவனி.''

''என்ன கவனிக்க வேண்டும்?''

''உன்னை மறுபடி பார்க்கும் வரை நினைவிருக்கும் படி ஒரு முத்தம்.''

ஜெயின் இதுவரை இப்படி பேசியதில்லை என்பதால் நிலஞ்சனா தடுமாறினாள். அவளது விருப்பம் தெரிந் ததும் இயல்பாக சலுகை எடுத்துக் கொள்ள தோன்று கிறது போலும் ''நோ ஜெயின்'' என்றாள் நிலஞ்சனா.

''நிலா ப்ளீஸ்.''

''நீ கிளம்பு ஜெயின்.''

.............

பின்புறமிருந்து சருகுகள் மிதிபடும் ஓசை கேட்டது. ரவுண்ட்ஸ் வருகிறார்கள் போலும், நிலஞ்சனா பதட்டமானாள்.

''ஜெயின் விளையாடாதே. கார்ட்ஸ் வருகிறார்கள் இங்கிருந்து கிளம்பு ப்ளீஸ்.''

''முடியாது.''

தன் பெற்றோர் வீட்டில் இருக்கும் சமயம் ஜெயினை அவர்கள் பார்க்க நேர்ந்தால் வீண் இராசபாசமாகி விடக் கூடும். செக்யூரிட்டிகள் பிடித்து விசாரிக்க ஆரம்பித்தால், அவன் மதமே அவனுக்கு எதிரியாகி விடும். ஜெயின் இதை எல்லாம் அறிந்த பிறகும் விளையாடுகிறான். காதல் எத்தனை புத்திசாலியையும் முட்டாளாக்கி விடும் போலும்.''

கார்ட்டின் விசில் சத்தமும் ''ஹோஈன் கை'' என்ற குரலும் உரத்து கேட்டது. ஜெயின் சாலை போக்குவரத்தை கவனிக்கும் பாவனையில் நிற்க, நிலஞ்சனா வீட்டு வாயிலை பார்த்தபடி செல்போனை முத்தமிட்டாள்.

''தேங்க்யு டார்லிங்.''

கார்ட் காம்பவுண்ட் சுவரில் லத்தியால் தட்டுகையில் ஜெயின் பைக்கை ஸ்டார்ட் செய்து பறந்து போனான். நிம்மதியுடன் பால்கனி சுவரில் சரிந்த நிலஞ்சனாவுக்கு புன்னகையும், கண்ணீரும் ஒருங்கே தோன்றின.

இந்த முறை நிலஞ்சனாவின் பெற்றோர் தங்கள் பிள்ளைகளுடனேயே தங்கியிருக்கும் உத்தேசத்தில் வந்தவர்களாக தென்பட்டனர். நிலஞ்சனா கல்லூரிக்கு சென்று வரும் நேரம் தவிர மீதி பொழுதை எல்லாம் அவளுடனேயே செலவிட்டனர். விடுபட்டு போன அன்பை எல்லாம் மிச்சம் மீதியின்றி பேசினார்கள். மேனகா இரு குடும்பங்களுக்கும் இடையே உள்ள உணவு முறை, உடை, மொழி வேறுபாடுகளை பற்றி எல்லாம் விலாவரியாக விவரித்தாள். திருமணத்திற்கு பின் பிறக்கும் குழந்தைகள் அப்பாவின் மதத்தையே பின்பற்றும் என்கையில் அவை எப்படி என் பேரக் குழந்தைகள் ஆக முடியம் என்றாள். தீபாவளியும், நவராத்திரியும் சந்தீப், பிரதீப்புடன் சேர்ந்து அவர்களால் கொண்டாட முடியுமா என்று கேள்வி கேட்டாள். முடியும் என்று தோன்றியது நிலஞ்சனாவுக்கு. தன் வயிற்றில் பிறக்காத பிள்ளை மேல் அன்பை செலுத்த விக்ரம் சர்மாவின் அம்மாவின், புப்பூவால் முடிகிற போது எல்லோருக்கும் முடியும். தாய்மையின் சிறப்பே அர வணைத்து கொள்வது தான் என்பதை சொல்ல விரும்பாமல் நிலஞ்சனா மௌனமானாள். ஹரிஹரன் வேறொரு கதை சொன்னான். தடை செய்யப் பட்ட இயக்கத்தைச் சேர்ந்த ஒருவன் அவன் நண்பனின் மூத்த சகோதரியை காதலிப்பதாக கூறிக் கொண்டு, அவ ளுக்கே தெரியாமல் அவள் மூலமாய் இராணுவத்திற்குள் ஊடுருவ முயன்றதாக சொன்ன போது ''போதும்'' என்றாள் நிலஞ்சனா.

''ஜெயினிடம், பழகவோ, அவனைப் பற்றி அறிந்து கொள்ளவோ முயற்சிக்காமல் நீங்களாகவே ஒரு முடிவு

எடுத்த பிறகு இதைப் பற்றி நாம் பேசுவதில் அர்த்தம் இல்லை. எதிலும் பெரிதாய் விருப்பம் இல்லாது இருந்த என்னை நீங்கள் தான் திருமணம் செய்து கொள்ளும்படி விடாமல் வற்புறுத்தினீர்கள். ஜெயினைப் பார்க்கும் வரை எனக்கு அப்படி ஒரு எண்ணம் வரவே இல்லை. அவனுடன் பழக ஆரம்பித்த பிறகு என்னையும் அறியாமல் ஆசை துளிர் விட்டது. இப்போது எல்லோரும் சேர்ந்து வேண்டாம் என வற்புறுத்தத் தொடங்கி விட்டீர்கள். சரி வேண்டாம் இனி ஜெயின் பற்றியோ, திருமணம் பற்றியோ என்னிடம் யாரும் பேசக்கூடாது'' என்றாள் கண்டிப்புடன்.

அதன் பிறகு கல்லூரி, நண்பர்கள் எனநாட்கள் நகர்ந்த போதும் நிலஞ்சனாவின் வீட்டில் யாரும் திருமணம் பற்றிப் பேசவே இல்லை. அவள் ஜெயினுக்கு மேசேஜ் செய்தாள். ''என்னால் முடியவில்லை ஜெயின். நான் தோற்றுப் போனேன்.''

''இதில் வெற்றி, தோல்வி எதுவும் இல்லை. சில சமயம் வார்த்தைகள் உணர்த்த முடியாததை வாழ்க்கை உணர்த்தி விடும். நாம் காத்திருப்போம்'' என்றான் ஜெயின். அதிக நாள் காத்திருக்க முடியாது என்று தோன்றியது நிலஞ்சனாவுக்கு. ஹரிஹரனின் டிரான்ஸ்பர் ஆர்டர் கைக்கு வந்து விட்டது. இன்னும் இரண்டொரு மாதங்களில் அவர்கள் இங்கிருந்து கிளம்பியாக வேண்டும். நிலஞ்சனாவுக்கு தலை விண்ணென்று தெறித்தது.

''நிலஞ்சனா இங்கே என்ன செய்து கொண்டிருக் கிறாய்?'' ஷீத்தல் அவள் அருகே வந்து அமர்ந்தாள்.

''நத்திங்'' என்றாள் நிலஞ்சனா பவுண்டன்களை வெறித்தபடி.

''நோ சம்திங் இன் யுவர் மைன்ட் டியர். கொஞ்ச நாட்களாக நீ நீயாகவே இல்லை. நான் கவனித்துக் கொண்டு தான் இருக்கிறேன்.''

................

''உன் பாய்ப்ரெண்ட்டை நீ சந்திக்க வில்லையா?'' என்றாள் ஷீத்தல் அவளையே பார்த்தபடி.

''யாரை சொல்கிறாய்?'' என்றாள் நிலஞ்சனா வியப் புடன்.

''க்ரீன்வேலி ரெஸ்டாரண்ட் ஓனர். மணிப்பால் மருத்துவமனையில் நாம் வேலை பார்த்த சமயம் நீங்கள் இருவரும் பேசிக் கொண்டிருந்ததைப் பார்த்திருக் கிறேன். வெரி ஹேன்ட்சம் கை. உனக்கு பொருத்த மானவன் என பலமுறை நினைத்திருக்கிறேன்.''

''இரண்டொரு முறை பேசியதைப் பார்த்து பாய்ப் ரெண்ட் என முடிவு செய்து விட்டாயா?''

''நெவர், உங்கள் கண்களில் தெரிந்த மையல், சுற்றுபுறம் மறந்த பேச்சுக்கள், ஒருவர் இல்லாத சமயம் மற்றவரை தேடி அலைபாயும் பார்வைகள் என எனக்கு கிடைத்த செய்திகள் ஏராளம். நீயாக ஒரு நாள் சொல்லு வாய் என்று காத்திருந்தேன்.''

ஷீத்தல் நெருக்கமான தோழிகள் என்ற போதும் சட்டென்று மனதை திறக்க முடியாமல் ஒரு கூச்சம் ஏற்பட்டது.

''உனக்கு ஒரு நாள் சொல்லுவேன் ஷீத்தல்'' என்றாள் பொதுவாக.

''நீ எனக்கு எதுவும் சொல்ல வேண்டியதில்லை. ஆனால் நான் உன் பெஸ்ட் ப்ரண்ட். எப்போதும் உனக்கு உதவ தயாராய் இருக்கிறேன் என்பதை நினைவில் வை.''

''அது எனக்குத் தெரியுமே!'' என்றாள் நிலஞ்சனா அவள் கைகளை கோர்த்துக் கொண்டு.

''எனக்குப் பசிக்கிறது நிலஞ்சனா'' என்றாள் ஷீத்தல்.

இருவரும் கேண்டீன் போனார்கள். காராபாத்தும், இனிப்பு சாம்பாரும் வாங்கினார்கள். ''விக்ரம் சர்மாவை பார்க்கவே முடிவதில்லையே. க்ளாசுக்கு கூட சரியாக வருவதில்லை போலிருக்கிறதே!'' என்றாள் நிலஞ் சனா.

''சார் தொழிலில் பிஸியாகி விட்டார் நிலஞ்சனா. லோன் போட்டு சொந்தமாக தொழில் தொடங்கிருக் கிறான். டிகிரி சும்மா பாதுகாப்பிற்கு தான். எனக்கு ஒரு வேலை தேடிக் கொள்ள வேண்டும். அவன் கடனை அடைத்து முடிக்கும் வரை என் சம்பளம் கூட இருந்தால் பிரச்சனை இல்லாமல் இருக்கும். எப்படியோ எல்லாம் சரியாக நடக்க வேண்டும். இல்லை என்றால் என் வீட்டவர்களை சமாதானப்படுத்த முடியாது'' என்றாள் ஷீத்தல் கவலையுடன்.

''நிச்சயம் நன்றாக நடக்கும்'' என்றாள் நிலஞ்சனா ஆறுதலாக.

கேண்டீன் அன்று கூட்டம் அதிகம் இன்றி வெறிச் சோடியது. காராபாத்தில் இருந்த மிளகாயை... ஸ்பூனால்

ஒதுக்கிபடியே நிலஞ்சனா கேட்டாள், ''உன்னிடம் ஒரு விஷயம் கேட்கலாமா ஷீத்தல்?''

''ஷ்யூர்.''

''உங்கள் இருவருக்கும் சிறு வயது தான். இன்னும் சில வருடங்களில் உங்கள் பெற்றோரே உங்களுக்கு தொழில் அல்லது வேலை ஏற்பாடு செய்து கொடுத்து, வரன் பார்த்து செலவு செய்து திருமணமும் செய்து வைப்பார்கள். எல்லாமே சுலபமாக நடக்கும். நீங்களாக ஒரு வாழ்க்கையைத் துணையை தேர்ந்தெடுக்கையில் உங்களை நிரூபித்துக் கொள்ள அதிகம் போராட வேண்டி இருக்கும். பேசாமல் பெற்றோரிடம் எதிர்காலத்தை ஒப்படைத்து விட்டு நாம் ஜாலியாக வாழ்க்கையை அனுபவித்திருக்கலாம் என்று உனக்கு எப்போதாவது தோன்றியிருக்கிறதா ஷீத்தல்?''

''என்றேனும் அப்படி நினைத்தால் விக்ரம்மை இழக்க வேண்டியிருக்கும் என்பதும் சேர்ந்து தானே நினைவுக்கு வரும்! அதனால் அப்படிப்பட்ட எண்ணங்களே வராது. எத்தனை சிரமப்பட்டேனும் பிடித்த வாழ்க்கையை வாழ்வது தான் பெரிய சந்தோஷம். அதுவும் விக்ரம் உடன் இருக்கையில் எனக்கு உலகமே மறந்து போகும். நீ சிரமம் என்று குறிப்பிட்ட எதுவுமே நினைவில் இருக்காது.''

குப்பியிலும், ஹம்பியிலும் ஜெயினுடன் செல வழித்த நேரங்கள் நிலஞ்சனாவுக்கு நினைவு வந்தது. தன் குடும்பத்தையும், பாக்கியாவின் நிச்சயதார்த் தத்தையும் ஏன் அடிபட்ட வலியையும் கூட அப்போது

அவள் மறந்திருக்கிறாள். கரண்தேசாயின் மரணம் ஏற்படுத்திய வலி கூட இப்போது குறைந்து போயிருக் கிறது.

இருவரும் தங்கள் யோசனையில் மூழ்கியவர்களாய் வெகு நேரம் கேண்டீனில் அமர்ந்திருந்தனர்.

நிலஞ்சனா வெகுநாட்களுக்குப் பிறகு அன்று மாலை சுகாஷை சந்தித்தாள். தினமும் மாலையில் கேம்பஸ் மைதானத்தில் வாக்கிங் போகும் அம்மாவின் வற்புறுத் தலுக்கிணங்க நிலஞ்சனாவும் கூட வந்திருந்தாள். சிறுவர்களும், பெரியவர்களும் குழுவாக பிரிந்து விளை யாடிக் கொண்டிருக்க, சுகாஷ் எங்கிருந்தோ அவளைப் பார்த்து விட்டு ஓடி வந்தான்.

''அக்கா உங்களை பார்க்கவே முடியவில்லை. வீட்டிற்கு கூட இரண்டு முறை வந்திருந்தேன். எங்கள் பேஸ்கட் பால் டீம் மேட்ச் விளையாட கொல்கத்தா போகிறோம்'' என்றான் உற்சாகத்துடன்.

சுகாஷ் முகத்தில் தெரிந்த உற்சாகமும், துடிப்பும் நிலஞ்சனாவுக்கு மகிழ்ச்சியளித்தது. ''வெரி குட் சுகாஷ். நீ ரொம்ப ஸ்மார்ட்ன்னு எனக்குத் தெரியும்'' என்றாள் செல்லமாக அவன் தலையை கலைத்து.

''அம்மா வெளியூர் அனுப்ப மாட்டார்கள் என்று பயந்தேன். ஆனால் நான் விஷயத்தை சொன்னதும் 'சரி' என தலையாட்டி விட்டார்கள். இப்போதே ஸ்நாக்ஸ் எல்லாம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். என் தம்பி கூட இப்போது என்னுடன் ப்ரெண்ட் ஆகி விட்டான். கொல்கத்தாவிலிருந்து புது கிரிக்கெட் பேட் அவனுக்கு

வாங்கி வருவதாக சொல்லி இருக்கிறேன். அப்பாவிடம் மேட்ச் போக புது டிரஸ் கேட்டிருக்கிறேன். என் ப்ரெண்ட்ஸ் எல்லாம் நான் மேட்ச் போவதை பார்த்து பொறாமை படுகிறார்கள். அது எனக்குப் பெருமையாக இருக்கிறது. அக்கா, உங்களுக்கு கொல்கத்தாவிலிருந்து என்ன வாங்கி வரட்டும்?'' சுகாஷ் மூச்சு விடாமல் பேசி முடித்தான்.

''உனக்கு என்ன பிடிக்கிறதோ வாங்கி வா'' என்றாள் நிலஞ்சனா சிரிப்புடன்.

''ம்... ரசகுல்லா வாங்கி வருகிறேன். உங்களைப் போலவே ஸ்வீட்டாய்'' என்று சிரித்த சுகாஷைப் பார்க்கையில் நிலஞ்சனாவின் மனம் நிறைந்து போனது. சுகாஷ் அவளிடம் பேசியபடியே மைதானத்தை சுற்றினான். மேனகா வாக்கிங் முடித்ததும் அவர்களிடம் விடைபெற்றான்.

''பையன் யார்? உன்னிடம் பிரியமாய் இருக் கிறானே!'' என்றாள் நிலஞ்சனாவின் அம்மா வியப் புடன்.

''பத்மஜா ஆன்டியின் பையன் மம்மி. இருவருக்கும் சிறு முரண்பாடு இருந்தது. இப்போது ஒரு புரிதல் அவர்கள் வாழ்க்கையை அழகாக்கி விட்டது. ஈகோ இல்லாத மனிதர்கள் எத்தனை அழகாய் இருக்கிறார்கள்!'' என்றாள் நிலஞ்சனா அம்மாவின் பார்வை தன் மீது படிவதை உணராமல்.

அவர்கள் வீடு போன போது உபேந்திரா அவர் களுக்காக காத்திருந்தான். ''தீத் மேடம் ஸ்வீட் எடுத்துக்

கொள்ளுங்கள்'' பால்கோவா பாக்கெட்டை அவள் கைகளில் வைத்தான்.

''என்ன விசேஷம் உபேந்திரா?''

''நான் அப்பாவாகி விட்டேன் தீதி. என் மனைவிக்கு பெண் குழந்தை பிறந்திருக்கிறது.''

''ரொம்ப சந்தோஷம் உபேந்திரா. ஆனால் நீ ஏன் இங்கே இருக்கிறாய்? போய் குழந்தையைப் பார்த்து விட்டு வா'' என்றாள் நிலஞ்சனா.

உபேந்திராவின் முகம் வாடியது. ''அதிக நாள் விடுமுறை கிடைக்காது ஜி.''

''ஆமாம். உடனே எப்படி லீவ் கிடைக்கும்?'' என்றாள் மேனகா.

''அதிகம் வேண்டாம். மூன்று நாட்கள் விடுமுறை எடுத்துக் கொள்'' என்றாள் நிலஞ்சனா.

''பயண தூரம் இங்கிருந்து மூன்று நாட்கள் ஆகும். உடனடியாக இரயில் டிக்கெட்டும் கிடைக்காது. நின்று கொண்டே பயணம் செய்ய வேண்டும். நிறைய பிரச்சினைகள் இருக்கிறது தீதி.''

''ஒரு பிரச்சனையும் இல்லை. மூன்று நாட்கள் விடுமுறைக்கு அப்ளை செய். நான் ப்ளைட் டிக்கெட் எடுத்துத் தருகிறேன். போய் ஆசை தீர குழந்தையை கொஞ்சி விட்டு வா.''

உபேந்திராவின் முகம் கனிந்தது. ''உங்களுக்கு பெரிய மனசு ஜி. மிகவும் நன்றி. ஆனால் நான் பிறகு போய்க் கொள்வேன்.''

"ஓ! நீ கேட்க மாட்டாய்?" என்றாள் நிலஞ்சனா அலுப்புடன்.

நாட்கள் வேகமாக விரைந்தன. நிலஞ்சனாவுக்கு இறுதி ஆண்டு தேர்வு நெருங்கியது. "உனக்கு இறுதி வருட பரிட்சை. எனக்கு ஆண்டு இறுதி கணக்கு முடிக்க வேண்டிய வேலை. நேரமே இல்லை நிலா" என்றான் ஜெயின் பெருமூச்சுடன். அவளுடன் தினமுமே தொடர்பில் இருந்த போதும் அன்றைய பேச்சிற்கு பிறகு திருமணம் பற்றி பேசவே இல்லை. பெற்றோருக்கு எதிராக தன்னை தூண்டக் கூடாது என தன் உணர்ச்சிகளை கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறான் என்பது தெளிவாகத் தெரிந்தது. அவளாக ஒரு முறை பேசிய போது சொன்னான், "நீ என்னுடையவள் நிலா. மனதளவில் என்றோ என் மனைவியாகி விட்டவள். என் மனைவி என்னை விட்டு நீ போக விடமாட்டேன்."

எப்படியும் ஜெயின் தன் வீட்டினரை சம்மதிக்க வைத்து விடுவான் என்ற நினைவில் நிலஞ்சனா அமைதியானாள்.

## 11

வெகு நாட்களுக்குப் பிறகு வீடு அமைதியாக இருந்தது. அண்ணனும், அண்ணியும் தன்வீர் திரு மணத்தில் கலந்து கொள்ள ஜலந்தர் போயிருந்தார்கள்.

அப்பாவும் அம்மாவும் பேரக் குழந்தைகளுடன் குஷால் நகர் கிளம்பியிருந்தார்கள். அங்குள்ள 'பைலக்குப்பே'' திபெத்திய நகரம் பற்றி அவள் கேள்விப்பட்டிருந்தாள். எட்டாயிரத்திற்கு மேற்பட்ட புத்த துறவிகள் அங்கிருப்பதாகவும், தங்கத்தினால் ஆன புத்தர் சிலைகள் திபெத்திய தொழில் நுட்பத்துடன் கட்டப்பட்ட கோவில்களில் வீற்றிருப்பதாகவும் அவள் வகுப்பு மாணவர்கள் சொல்லியிருந்தனர். ''எதுவுமே வேண்டாம் என அரசையும், அரண்மனையையும் துறந்து போய் புத்தராக மாறி விட்டவருக்கு தங்கத்தில் சிலை வடிப்பது எப்படி சரியாகும்?'' என்றாள் நிலஞ்சனா.

''திபெத்திய மக்களிடையே இரு பிரிவுகள் உள்ளன. ஒன்று ஜெலுக்பா. மற்றொன்று டஷிலுன்போ. இவர்களுக்கென்று பைலக் குப்பேயில் தனித்தனியாக பல்கலை கழங்கள் உண்டு. அவை செராஜே, செராமே என்றழைக்கப்படும்'' என திபெத்தியர்களின் வாழ்க்கை முறை பற்றி நிறைய சொன்னார்கள். அப்போது வியந்து கேட்டுக் கொண்ட நிலஞ்சனா பெற்றோர் தங்களுடன் வரும்படி அழைத்த போது மறுப்புடன் தலையசைத்தாள்.

''எனக்கு இப்போது தான் பரிட்சைகள் முடிந்திருக்கின்றன. நான் சற்று ஓய்வெடுக்க வேண்டும்'' என்றாள். மறுத்து ஏதோ சொல்லத் தொடங்கிய மேனகாவிடம், ''அவளை வற்புறுத்தாதே! நிலஞ்சனா தூங்கி ஓய்வெடுக்கட்டும்'' என்றார் கேப்டன் மகாதேவ்.

அவர்கள் கிளம்பி போனதும் நிலவிய மௌனம் சஞ்சலத்தை ஏற்படுத்தியது. ஜெயினிடமிருந்து இரண்டு நாட்களாக தகவல் எதுவும் இல்லை. அவளுக்கு பரிட்சை முடிந்து விட்டதென்று அவனுக்குத் தெரியும். ஆனாலும் அவனிடமிருந்து போன் இல்லை. நிலஞ்சனா முயற்சித்த போது அவனது போன் ஸ்விட்ச் ஆப் என்றது. போன் ரிப்பேர் அல்லது தொலைந்து கூட போயிருக் கலாம் என அவள் தனக்குத்தானே சமாதானம் செய்து கொள்கையில் ஏதோ நெருடியது. என்னவென்று புரியாத தவிப்பில் அவள் செல்போனை எடுப்பதும், திரும்ப வைப்பதுமாக இருந்தாள்.

சற்று நேரத்தில் கதவைத் தட்டும் சத்தமும், உபேந் திராவின் குரலும் கேட்டது. வாயிற்கதவை திறந்த நிலஞ்சனா ''என்ன உபேந்திரா இந்த நேரத்தில்?'' என்றாள் வியப்புடன்.

உபேந்திரா நிற்காமல் ஓடிவந்தவனைப் போல மூச்சு வாங்க நின்றிருந்திருந்தான். ''தீதி'' என்றான் பேச வராமல்.

''என்ன விஷயம் உபேந்திரா. உனக்கு உடம்பு சரியில்லையா?'' என்றாள் நிலஞ்சனா யோசனையுடன்.

''இல்லை ஜி. நீங்கள் நியூஸ் பார்க்கவில்லையா?'' என்றான் உபேந்திரா பதட்டத்துடன்.

''இல்லையே! டிவியில் அப்படி என்ன முக்கிய விஷயம்?''என்றாள் நிலஞ்சனா டி.வி ஸ்விட்ச்சை ஆன் செய்தபடி.

''உங்கள் நண்பர் பற்றிய விசயம் தான்.''

''யாரை சொல்கிறாய் உபேந்திரா?''

''உயரமாய், சிவப்பாய், அடர்த்தியான மீசை. நீள...''

''ஜெயினை தெரியுமா உனக்கு?'' என்றாள் நிலஞ்சனா வியப்புடன்.

''ஒரு முறை உங்களுடன் பார்த்திருக்கிறேன். சமீபத்தில் கூட நம் கேம்பஸ் காம்பவுண்ட் சுவர் அருகில் பார்த்தேன்.''

நிலஞ்சனா அவனுக்கு என்ன பதில் சொல்வதென்று யோசிக்க, அதை கவனியாமல் உபேந்திரா சொன்னான். ''அவரை பற்றிய செய்தி தான் இப்போது நகரம் முழுக்க பரபரப்பாக இருக்கிறது.''

''ஜெயினுக்கு எதாவது பரிசு கிடைத்திருக்கிறதா உபேந்திரா? கிராமங்களில் பார்த்த போதே நினைத் தேன். அவன் உழைப்பிற்கான அங்கீகாரம் கட்டாயம் கிடைக்கும் என்று'' நிலஞ்சனா மகிழ்ச்சியுடன் பேசிக் கொண்டே போவதை பார்த்தபடி உபேந்திரா பேசாமல் நின்றிருந்தான். ரிமோட்டில் சேனல்கள் மாறிக் கொண்டே இருந்தன. ஹிந்தியிலும், ஆங்கிலத்திலும் சீரியல்களும், பாடல்களும், படமும் ஓடிக் கொண் டிருக்க, ''எந்த சேனல் உபேந்திரா?'' என்றாள் நிலஞ் சனா.

உபேந்திரா பதில் சொல்வதற்குள் நிலஞ்சனாவின் போன் அலறியது. ''நிலஞ்சனா நீ எங்கே இருக்கிறாய்?'' என்றாள் ஷீத்தல் படபடப்பாக.

''உனக்கு விஷயம் தெரிந்து விட்டதா?'' என்றாள் நிலஞ்சனா புன்னகையுடன்.

''எனக்கு மட்டுமா, ஊருக்கே தெரிந்து விட்டது.''

''ஜெயின் எனக்கு சொல்லவே இல்லை பாரேன்!'' என்றாள் நிலஞ்சனா குறையுடன்.

''சொல்லக் கூடிய காரியத்தையா செய்திருக் கிறான்?''

''நீ சொல்வது சரி தான்.''

''நிலஞ்சனா வருந்தாதே. உனக்கு இது எத்தகைய அதிர்ச்சியாய் இருக்கும் என்பது எனக்குப் புரிகிறது. நாம் யாருமே எதிர்பார்க்காத ஒன்று தான். இருந்தாலும் நீ தைரியமாய் இருக்க வேண்டும்.''

''ஷீத்தல் என்ன சொல்கிறாய்?'' என்றாள் நிலஞ்சனா குழப்பத்துடன். ரிமோட்டை அழுத்திக் கொண்டிருந்த நிலஞ்சனாவின் பார்வை செய்தி சேனலில் நிலைக்க. அவள் கையிலிருந்த போன் நழுவி கீழே விழுந்தது. அதிர்ச்சியில் தள்ளாடியவள் விழுந்து விடுமுன் உபேந்திரா பாய்ந்து சென்று அவளைப் பற்றி சோபாவில் அமர வைத்தான். அந்த ஆங்கில தொலைக்காட்சி பிரேக்கிங் நியூஸ் தொடர்ந்து திரையில் மின்னியது. நாசவேலை செய்யும் திட்டத்துடன் சில தீவிரவாதிகள் பெங்களூருவில் ஊடுருவி இருப்பதாகவும், உளவுத் துறைக்கு கிடைத்த தகவலின் பேரில் தீவிரவாதிகள் என சந்தேகிக்கிப்படும் மூன்று பேரை காவல் துறை கைது செய்திருப்பதாகவும் தெரிவித்த செய்தியின் கீழ் ஜெயின் மற்றும் இருவரின் படங்கள் பளிச்சிட்டன.

''நோ'' என்றாள் நிலஞ்சனா குரல் நடுங்க. ''இது உண்மையில்லை. இது எப்படி நடந்தது? மை காட்.

இருந்திருந்தும் ஜெயின் மீது இப்படி ஒரு பழியை எப்படி சுமத்தினார்கள்? இது அநியாயம்.''

''அதைரிய படாதீர்கள் தீதி. குற்றம் நிருபிக்கப் படவில்லை. சந்தேகத்தின் அடிப்படையில் தான் கைது செய்திருக்கிறார்கள்'' என்றான் உபேந்திரா.

''ஆனாலும் காரணம் இல்லாமல் எப்படி சந்தேகப்பட முடியும்? இதன் உள் நோக்கம் வேறாக இருக்கலாம்.''

''உண்மை தான் ஜி. உங்கள் நண்பருடன் கைதான இருவர் அவரது ரெஸ்டாரண்டில் வேலை செய்தவர்கள். அவர்கள் இருவரும் இதற்கு முன்பு தீவிரவாத செயல்களில் ஈடுபட்டதற்கான சான்று போலீஸிடம் இருக்கிறது.''

''அவர்களின் செயலுக்கு ஜெயின் எப்படி பொறுப் பாக முடியும்?''

''முடியும் தீதி. ஒரே இனத்தவர் என்பதால்.''

''என்ன சொல்கிறாய் உபேந்திரா?''

உபேந்திரா தலை குனிந்தான். ''கைது செய்யப்பட்ட மற்ற இருவரும் இஸ்லாமியர்கள்.''

''இது அநீதி. ஒரு சுதந்திர நாட்டில் எப்படி இவ்வாறு நடக்க முடியும்? எங்கோ, யாரோ செய்யும் தவறுகளுக்கு சம்பந்தமே இல்லாமல் ஒரு சமூகம் எப்படி பொறுப்பாக முடியும்?''

''சமீப நாட்களில் யார் நல்லவன், யார் அல்லாதவன் என்பது புரியாத நிலையில் ஒட்டு மொத்தமாக எல் லோரையும் சந்தேகப்படும் மனநிலை உருவாகி

விட்டிருக்கிறது. இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய சோகம் இது'' என்றான் உபேந்திரன் கவலையுடன்.

அன்று உபேந்திரா அதிகம் பேசினான். உயர் அதிகாரி வீட்டில் பணி செய்ய வந்திருப்பவன் என்பதை மறந்து போனான். அந்த குடியிருப்புக்கும், நகரில் நடக்கும் சம்பவங்களுக்கும் எந்த சம்பந்தமும் இருக்காது. எந்த ஊரிலும் இராணுவ குடியிருப்பு என்பது அந்த நகரத் துடன் ஒட்டாமல், நகரத்தின் எல்லா வசதிகளையும் தன்னுள் அடக்கிய தனி உலகமாய் தான் செயல்படும். ஜெயின் நிலஞ்சனாவுக்கு வேண்டியவன் என்பதா லேயே உபேந்திரா சிரத்தை எடுத்து ஜெயின் பற்றிய விஷயங்களை தெரிந்து கொண்டு வந்திருந்தான்.

''நான் ஜெயினைப் பார்க்க வேண்டும்'' என்றாள் நிலஞ்சனா.

''இது போன்ற கேஸ்களில் கைது செய்தவர்களை எளிதாக பார்க்க அனுமதிக்க மாட்டார்கள் ஜி. நீங்கள் விசாரித்துக் கொண்டு போவது நல்லது'' என்றான் உபேந்திரா. நிலஞ்சனா யோசனையில் ஆழ்ந்தாள். பிறகு ''ஜெயின் வீட்டிற்கு போகிறேன்'' என்றாள் அவனிடம்.

உபேந்திர பதில் பேசாது ஓடிப் போய் ஒரு ஆட் டோவை அழைத்து வந்தான்.

நிலஞ்சனா மடிவாலா போய் சேர்ந்த போது ஜெயின் வீட்டு வாயிலிருந்த பெரிய பூட்டு அவளை வர வேற்றது. வீட்டில் அனைவரும் எங்கே போயிருக்கக் கூடும் என்று யோசித்த நிலஞ்சனாவுக்கு திம்மப்பா நினைவு வந்தது. அவருக்கு தெரிந்திருக்கும்.

திம்மப்பாவின் வீட்டு கதவு உள்பக்கமாய் தாழிடப் பட்டிருந்தது. நிலஞ்சனா சற்று நேரம் வரை கதவை தட்டியும், குரல் கொடுத்தும் கதவு திறக்கவே இல்லை. ஒருவேளை பின்பக்கம் வழியிருக்கக் கூடும். அவர்கள் முன்புறம் கதவை தாழிட்டுக் கொண்டு பின்பக்கமாய் கிளம்பி எங்கேனும் போயிருக்கக்கூடும். ஆனால் திம்மப்பா வீட்டில் நிறைய ஆட்கள், பெரிய குடும்பம் என்று ஜெயின் சொல்லியிருக்கிறான். எல்லோருமா கிளம்பி போயிருப்பார்கள்! நிலஞ்சனா யோசனையுடன் திம்மப்பா வீட்டு வாயிலில் நின்றிருந்த போது ரேவண்ணா அங்கே வந்தான்.

''நிலஞ்சனா நீ இங்கே என்ன செய்கிறாய்?'' என்றான் அவனைப் பார்த்ததும்.

ரேவண்ணாவை சந்தித்தது சற்றே ஆறுதல் தர, ''ஜெயின் வீடு ஏன் பூட்டியிருக்கிறது ரேவண்ணா? அவர்கள் எங்கே போனார்கள்?''

''எங்கே போவார்கள் நிலஞ்சனா? பாதுகாப்பிற்காக, தங்கள் உறவினர் வீடுளில் தங்கியிருக்கிறார்கள்.''

''ஜெயின் தவறு செய்யாத போது பாதுகாப்பை தேட வேண்டிய அவசியம் ஏன் வந்தது? ஜெயின் இப்போது... இப்போது எப்படி இருக்கிறான்?'' நிலஞ்சனாவின் கண்களில் நீர் கோர்த்தது.

''இங்கே தெருவில் நின்று பேச வேண்டாம்'' என்றான் ரேவண்ணா. இருவரும் ஏரிக் கரைக்கு சென் றார்கள். மடிவாலா ஏரியின் கல்பெஞ்சில் அமர்ந்ததும் ''சொல்லு ரேவண்ணா'' என்றாள் நிலஞ்சனா.

''ஜெயின் அப்பா அவனை விடுவிக்க, நகரிலேயே பெரிய வக்கிலை பார்க்கப் போயிருக்கிறார். உமர்ருடன் உடன் இருக்கிறான்.''

''ரிலீஸ் கிடைக்குமா?''

''கிடைக்க வேண்டும். ரிலீஸ் அல்லது ஜாமீன்.''

''ஜெயினை விசாரிக்கப் போகும் ஜட்ஸ் யார் என்று தெரியுமா? அவர் இந்துவா, முஸ்லீமா?''

ரேவண்ணா புரியாமல் பார்த்தான், ''யாராய் இருந் தால் என்ன? சட்டத்திற்கு மதம் ஏது?''

''இன்னும் உனக்குப் புரியவில்லையா ரேவண்ணா? இன்று சட்டத்திற்கு ஜாதி, மதம் எல்லாமே இருக்கிறது. அது தான் சம்பந்தமே இல்லாத ஜெயினை இழுத்துப் போயிருக்கிறது.''

ரேவண்ணா அனுதாபத்துடன் தலையசைத்தான். ''கவலைப்படாதே நிலஞ்சனா. ஜெயின் பிறந்த மதம் அவன் வளர்ந்த மதத்தை தண்டிக்காது.''

''நீ என்ன சொல்கிறாய்?'' என்றாள் நிலஞ்சனா குழப்பத்துடன்.

''ஜெயின், அவனது சிறுவயது பற்றி உன்னிடம் சொல்லியிருக்கிறானா நிலஞ்சனா?''

''ம். ஆறாம் வகுப்பிலிருந்து உன்னுடன் படித்ததாக சொல்லியிருக்கிறான்.''

''அதற்கு முன்.''

நிலஞ்சனா இல்லை என தலையசைத்தாள்.

''இது என் நண்பனின் அந்தரங்கம் நிலஞ்சனா. ஆனால் அவனுடன் வாழ்க்கையைப் பகிர்ந்து கொள்ள எண்ணியிருக்கும் உன்னிடம் பகிர்ந்து கொள்வதில் தவறில்லை என்று நினைக்கிறேன்.''

நிலஞ்சனாவின் இதயம் வேகமாக துடித்தது. ரேவண்ணா பேசுவதை கவனமாகக் கேட்கத் தொடங்கினாள்.

''ஜெயின் ஆறாவது படிக்கையில் தான் இந்த ஊருக்கு வந்தான் நிலஞ்சனா.''

''அப்படியா? அதற்கு முன்பு பஷீர் அங்கிள் குடும்பம் எங்கே இருந்தது?''

''அவர்கள் இங்கே தான் இருந்தார்கள். ஜெயின் தான் பெற்றோருடன் இருந்தான்.''

''நான் ஏற்கனவே மிகவும் நொந்து போயிருக்கிறேன். என்னை சோதிக்காதே ரேவண்ணா'' என்றாள் நிலஞ்சனா களைப்புடன்.

''நேரடியாக சொல்வதென்றால் ஜெயின் பஷீர் அங்கிளின் பிள்ளை இல்லை.''

நிலஞ்சனாவுக்கு தூக்கி வாரிப் போட்டது. இன்று அடுத்தடுத்து ஏற்படும் அதிர்ச்சியில் நினைவை இழந்து விடாமலிருக்க பிரயத்தனப் பட்டவளாய் கல்பெஞ்சை இறுகமாகப் பற்றிக் கொண்டாள். இன்று தன்னைப் போலவே ரேவண்ணாவிற்கும் ஏதோ ஆகியிருக்க வேண்டும். இப்போதே இங்கிருந்து கிளம்பி விட வேண்டும். இல்லை எனில் பைத்தியம் பிடித்து விடும்.

நிலஞ்சனாவின் யோசனைகளைக் கவனிக்காதவனாய் ரேவண்ணா சொல்லிக் கொண்டு போனான். ''ஜெயினை பள்ளியில் பார்த்த அந்த முதல் நாள் இன்னும் என் நினைவில் இருக்கிறது. பூப்போட்ட வெள்ளை சட்டையும், நீல நிற கால்சட்டையும் அணிந்து புப்பூவின் கரங்களை பிடித்தபடி நின்றிருந்தான். அவனை பள்ளியில் சேர்க்க அவனது அப்பா, அம்மா, தாதிமா, சாச்சா என மொத்த குடும்பமும் வந்திருந்தது. ஜெயின் அப்போது நல்ல வெள்ளையாய் தொட்டால் சிவந்து விடும் நிறத்தில் இருப்பான். அவனிடம் நட்பு கொள்வதில் பெண்களுக்கு ஒரு போட்டியே இருந்தது. ஆனால் அவன் யாரிடமும் அதிகம் பேசமாட்டான்.

கூச்ச சுபாவம் என்ற போதும் மொழி தெரியாதது இன்னொரு காரணம் என்று பிறகு தான் தெரிந்தது. நான் சதா பேசிக் கொண்டே இருப்பேன். விடாமல் தொணதொணக்கவும் ஜெயினால் என்னைத் தவிர்க்க முடியவில்லை. நன்றாகப் படிப்பான். அழகன். கம்பீரமானவன் என்றாலும் அவ்னிடம் இயல்பாகவே ஒரு ஒதுக்கம் இருந்தது. யாரும் எளிதாக அணுக முடியாது அவனிடம்.''

முதல் சந்திப்பில் தனக்கும் ஜெயினை பிடிக்கவில்லை என்பது நினைவுக்கு வர ''உண்மை தான்'' என்றாள் நிலஞ்சனா.

''வெகுநாட்களுக்குப் பிறகு ஜெயின் பற்றி தெரிய வந்த போது எனக்கும் உன்னைப் போலவே நம்ப

முடியவில்லை. ஜெயின் கொல்கத்தாவில் ஒரு வங்காள இந்து குடும்பத்தில் பிறந்தவன். அவனது பத்தாவது வயதில் பெற்றோருடன் பயணம் செய்த போது ஏற்பட்ட விபத்தில் பெற்றோர் அதே இடத்திலேயே இறந்து விட இவன் காயங்களுடன் பிழைத்துக் கொண்டான். விபத்து நடந்த இடம் புப்பூவின் வீட்டிற்கு அருகில் என்பதால் அவர் தான் காருக்கு கீழே கிடந்த ஜெயின்னை கண்டுபிடித்து மருத்துவமனையில் கொண்டு போய் சேர்த்தார்கள். விபரம் அறிந்து ஓடி வந்த உறவினர்கள் சொத்துக்கு சொந்தம் கொண்டாடினார்களே தவிர ஜெயினை கண்டு கொள்ளவில்லை. மருத்துவமனை யிலிருந்து குணமாக்கி வீட்டிற்கு அனுப்பப்பட்ட ஜெயின் சொந்த வீட்டிலேயே வேலைக்காரனாய் நடத்தப்பட்டான். ஒரு நாள் இரவு ஓயாத வேலையிலும் பசியிலும் துவண்டு போய் தன் பெற்றோர் இறந்த இடத்தில் அமர்ந்து அழுது கொண்டிருந்தான். அவனைப் பார்த்த புப்பூ அவனை சமாதானம் செய்து தன் வீட்டிற்கு அழைத்துப் போய் உணவளித்து தூங்க செய்தார். ஜெயின் மூலமாய் சொத்தை அனுபவிக்கும் அவன் உறவினர்கள் அவனை கண்டு பிடித்து வற்புறுத்தி வீட்டிற்கு அழைத்துப் போனார்கள். வீட்டிற்கு போனதும் அதே கொடுமை தொடர்ந்ததுடன், வீட்டை விட்டு வெளியே செல்லக் கூடாதென அடிக்கவும் செய்தனர். ஜெயின் ஒரு நாள் யாரும் வீட்டிலில்லாத சமயம் புப்பூவிடம் ஓடி வந்தான். திரும்பி வீட்டிற்கு போக மாட்டேன் என்று அடம் பிடித்தான். 'எந்த சொந்தமும் இல்லாத ஒரு குழந்தையை நாம் எப்படி வீட்டில்

வைத்திருக்க முடியும்? அதுவும் இவன் உறவினர்களுக்கு நம் வீடு நன்றாகத் தெரியும். போலீஸ்சுடன் வந்து குழந்தையை அழைத்துப் போவதுடன் நம் மீதும் கம்ப்ளெய்ண்ட் கொடுப்பார்கள்'' என்றார் புப்பூவின் கணவர். அத்துடன் அவர் ஜெயினை சமாதானம் செய்து திருப்பி அனுப்ப முயற்சி செய்தார். ஜெயின் புப்பூவின் பின்னால் ஒளிந்து கொண்டான். ''நான் போகமாட்டேன். நீங்கள் வெளியே அனுப்பினால் என் அம்மா, அப்பாவிடமே போய் விடுவேன்'' என்றான். புப்பூ கண்ணீருடன் அவனை அணைத்துக் கொண்டார். ''இந்த குழந்தையை கட்டாயமாக அனுப்பி வைத்தால் பின்னால் அவர்கள் சொத்துக்காக இவனை ஏதாவது செய்து விட்டால் பிறகு அல்லா நம்மை மன்னிக்கவே மாட்டார்'' என்றாள். இரவு முழுக்க நடந்த விவாதத் திற்கு பிறகு புப்பூவின் கணவர் ஜெயினை கையில் பிடித்தபடி பெங்களூருவிற்கு இரயில் ஏறினார். இங்கு பஷீர் அங்கிள் குடும்பம் ஜெயினை இரு கரம் நீட்டி அணைத்துக் கொண்டது. ஜெயின் வீட்டில் எல் லோருக்கும் செல்லப் பிள்ளையானான்.''

''பிறகு ஜெயின் கொல்கத்தா போகவே இல் லையா?''

''ஏன் போகாமல்? வளர்ந்த பிறகு கொல்கத்தா போய் தன்னுடைய சொத்துக்களை மீட்டான். அரண்மனை போன்ற அந்த பங்களாவில் வசிக்கவோ, மிச்சம் மீதி இருக்கும் தன் உறவுகளை புதுப்பித்துக் கொள்ளவோ அவன் விரும்பவில்லை. பஷீர் அங்கிளைப்

பொறுத்தவரை அவனை எதற்கும் கட்டாயப் படுத்தவில்லை. தன்னுடைய மதத்தை வளர்ந்த பிறகு அவனே தான் முடிவு செய்ய வேண்டும் என்ற எண் ணத்தில் அவரது சடங்குகளை அவன் மீது திணிக்கவே இல்லை. இப்போதும் அவனது சொந்த ஊரில், பிறந்த மதத்தில், இருக்கும் வசதிகளை அனுபவித்துக் கொண்டு சுகமாய் வாழ விரும்பினால் அந்த குடும்பம் தடை சொல்லப் போவதில்லை. நிபந்தனைகளற்ற அன்பு செலுத்த சிலரால் தான் முடியும். அதில் பஷீர் அங்கிள் குடும்பமும் ஒன்று.''

''சிறு வயதில் பெற்றோரை இழந்தாலும் கூட இப்படி ஒரு குடும்பத்தில் வந்தது ஜெயினின் அதிர்ஷ்டம் தான்'' என்றாள் நிலஞ்சனா.

''நிச்சயமாய். ஜெயினுக்கு இது தன்னை சுவீகரித்த குடும்பம் என்று ஒரு கணம் கூட தோன்றியதில்லை. பேச்சளவில் கூட யாரும் குறிப்பிட்டதில்லை. ஆனால் இப்போது சொல்ல வேண்டிய நேரம் வந்திருக்கிறது.''

''நீ என்ன சொல்கிறாய் ரேவண்ணா?''

''ஜெயின் ஒரு இந்து தான் என்பதற்கான ஆதாரங் களை காட்டினால் இந்த கேசிலிருந்து எளிதாக வெளியே வர முடியும்.''

''பிரச்சினை வந்ததும் கழண்டு கொள்வது குடும் பத்திற்குள் சாத்தியமா? இப்போது சொல்வது இத்தனை நாள் அவர்களுக்குள் இருந்த உறவை அவமானப் படுத்துவது ஆகாதா?''

''இதே தான். ஜெயினும் இப்படித்தான் சொல் கிறான். பஷீர் அங்கிள்லும், வக்கீலும் எவ்வளவோ

சொல்லிப் பார்த்து விட்டார்கள். 'என் நேர்மையை நான் வணங்கும் கடவுளுடன் சம்பந்தப்படுத்தாதீர்கள். நான் தவறு செய்யவில்லை என்பதை நிரூபிக்க நிறைய ஆதாரங்கள் இருக்கிறது. அதை ஒப்படைத்தால் போதும். மதத்தை காரணம் காட்டி அரசாங்கம் கைது செய்தது. பிறப்பை காரணம் காட்டி விடுவிக்க சொல்லி கொச்சைப் படுத்தாதீர்கள்' என்கிறான்.''

''நேர்மை தரும் உறுதி பலமாக இருக்கும். ஜெயி னால் இப்படித்தான் பேச முடியும். இதில் ஆச்சரியப்பட எதுவும் இல்லை'' என்றாள் நிலஞ்சனா.

ரேவண்ணா பேசாமல் இருக்கவும், ''இப்போது ஜெயினைப் பார்க்க முடியுமா?'' என்றாள் அவனிடம். ரேவண்ணா உதட்டை பிதுக்கி தலையை அசைத் தான். எங்கோ ஒரு காவல் நிலையத்தில், இருளடைந்த லாக்கப் அறையில் ஜெயின் சுவரில் சரிந்து அமர்ந்து, எங்கோ வெறித்தபடி இருக்கும் காட்சி அவள் கண் முன் எழுந்தது. தன்னை ஆர்வத்துடன் பார்க்கும் அவன் விழிகளில் சோகம் தெரிந்தால்? என்ற எண்ணம் தாங்க முடியாததாக இருக்க நிலஞ்சனா விசும்பி அழுதாள்.

''இது நேர்ந்திருக்கக் கூடாது ரேவண்ணா. ஜெயின் போன்ற நல்லவர்கள் சிரமப்படுவதில் எந்த நியாயமும் இல்லை. தன் படிப்பையும், அதன் மூலம் கிடைத்த வசதி வாய்ப்புகளையும் உதறி விட்டு இந்த மண்ணை யும், மக்களையும் நேசித்தவன். அவனுக்கு இந்த நாடு தரும் பரிசு இது தானா?''

ரேவண்ணா தன் கண்களில் வழிந்த நீரை துடைத்த படி எழுந்து நின்றான் ''நீ கிளம்பு நிலஞ்சனா. இப்போது யாரிடமும் பதில்கள் இல்லை. ஜெயின் எப்படியும் நாளை அல்லது மறுநாள் வெளியே வந்து விடுவான். நான் உனக்கு தகவல் சொல்கிறேன்.''

நிலஞ்சனா கிளம்பி ஏரியின் நுழைவாயிலை கடந்து வெளியே வந்தவள், மீண்டும் உள்ளே ஓடி வந்தாள்.

''என்ன நிலஞ்சனா?'' என்றான் ரேவண்ணா.

''ரேவண்ணா தினமும் புதிதாக எதோ நடக்கிறது. நாளை என்பது எப்படியிருக்குமோ தெரியாது. இப்போது எனக்கும் ஜெயினுக்கும் இடையே உள்ள தொடர்பு நீ மட்டும் தான். நீ அவனை சந்திக்கையில் நான் சொன்னதாக ஒரு விஷயம் சொல்வாயா?''

''சொல் நிலஞ்சனா.''

''நான் அவனுக்காக காத்திருப்பதாக சொல். இப்போது மட்டுமல்ல எப்போதும்.''

ரேவண்ணா துக்கம் தொண்டையை அடைக்க தலையை அசைத்தான்.

நிலஞ்சனா கண்களை மூடி படுத்திருந்தாள். இரவு வந்ததும் பழக்கப்பட்டது போல கண்கள் மூடுகின்றனவே தவிர மனசு எப்போதும் விழித்திருக்கிறது. நினைவுகளை சேர்த்து வலை பின்னத் தொடங்கி விடுகிறது. வலையில் ஒவ்வொருவராக வந்து விழுகிறார்கள். விழுந்து அமிழ்ந்து போகிறார்கள். கரண் தேசாயும், ஜெயின் அப்துல்லாவும் நாங்கள் என்ன தவறு செய்தோம். எதற்காக இந்த தண்டனை என்கிறார்கள்.

''ஜெயின் வெளியே வந்து விட்டான் தெரியுமா?'' பாதி திறந்திருந்த கதவின் வழியே ஹரிஹரனின் குரல் கேட்டது.

''ஆமாம். அவன் மீது சந்தேகப்படுவதற்கு ஆதாரங்கள் இல்லை என விடுவித்து விட்டார்களாம்'' என்றார் கேப்டன் மகாதேவ்.

''ஆதாரம் இல்லாமலா அரஸ்ட் செய்தார்கள்?'' என்றாள் மேனகா.

''அதுவும் இவ்வளவு பெரிய குற்றத்தில் எந்த ஆதாரமும் இல்லாமல் ஒருவரை அரஸ்ட் செய்ய முடியுமா?'' சுனிதா சந்தேகத்துடன் கேள்வி கேட்டாள்.

''இப்போதெல்லாம் சந்தேகப் பட சாமி தான் காரணமாய் இருக்கிறது?'' என்றார் கேப்டன்.

''எப்படியோ நாம் தப்பித்தோம். அன்றைக்கு அவன் வார்த்தைகளை கேட்டு திருமணத்திற்கு ஒத்துக் கொண்டிருந்தால் இப்போது மிகவும் சிரமமாகி விட்டிருக்கும்'' என்றான் ஹரிஹரன்.

''சஞ்சனா பழைய சம்பவங்களிலிருந்து இப்போது தான் ஒரு வழியாய் மீண்டு வந்தாள். மறுபடி அவள் வருந்தும் படி நேராமல் அந்த கடவுள் தான் காப்பாற்றினார்'' என்றாள் மேனகா.

நிலஞ்சனா எழுந்து போய் அறைக் கதவை தாழிட்டாள். ஜெயின் கைது செய்யப்பட்ட நாளிலிருந்து இப்படிப்பட்ட உரையாடல்கள் நடந்து கொண்டு தான் இருக்கின்றன. ஜெயின் அரெஸ்ட் ஆன இருபத்தி நாலு

மணி நேரத்தில் போதிய ஆதாரங்கள் இல்லை என நீதிபதி முன் விடுவிக்கப்பட்டதாக ரேவண்ணா போன் செய்தான். எதிர்பார்த்த செய்தி தான் எனினும் தவறான செய்தியை ஒலிபரப்பி அவன் மீது சேற்றை வாரி இறைத்ததை எப்படி திரும்பப் பெற முடியும்? அதிலிருந்து ஜெயினை யார் விடுவிக்க முடியும்? அம்மா, அண்ணியும் கேட்டது போல் ஆதாரமில் லாமலா கைது செய்வார்கள் என எல்லோர் மனதிலும் எழும் கேள்விகளுக்கு எப்படி பதில் தருவது? நிலஞ்ச னாவுக்கு ஜெயினைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. 'வருத்தப்படாதே' என்று சொல்ல வேண்டும் போலி ருந்தது. ரேவண்ணாவிடம் சொன்ன போது ஜெயின் இன்னும் சில நாட்களில் தானே தொடர்பு கொள்வதாக சொல்லச் சொன்னான் என்றார். நிலஞ்சனா தினமும் ஜெயின் போனுக்காக காத்திருக்கத் தொடங்கினாள். கல்லூரியும் முடிந்து விட்டதால் யாரையும் சந்திக்க வழியில்லாமல் போனது. ஷீத்தல் மட்டும் அடிக்கடி வருவாள். ''எல்லாம் சரியாகி விடும். கவலைப்படாதே'' என்பாள்.

நிலஞ்சனாவின் அறைக்கதவு மெலிதாக தட்டப் பட்டது. ஷீத்தலாக இருக்கக் கூடும். நிலஞ்சனா எழுந்து போய் கதவைத் திறந்தாள். ''அத்தை தாத்தா வர சொன்னார்கள்'' என்றான் சந்தீப்.

''சரி வா போகலாம்'' சந்தீப்பை தூக்கிக் கொண்டு ஹாலுக்கு வந்த நிலஞ்சனா ஆணியறைந்தாற் போல் ஒரு நிமிடம் அசைவற்று நின்றாள். கைகளை கட்டியபடி நின்றிருந்த ஜெயின் ''ஹாய்'' என்றான் அவளைப்

பார்த்ததும். நிலஞ்சனா சுற்றியிருப்பவர்களை மறந்து அவனிடம் விரைந்தாள். ''ஜெயின் எப்படியிருக்கிறாய்? வருவதாக ஒரு போன் கூடப் பண்ணவில்லை. முதலில் அமர்ந்து கொள். சாப்பிட ஏதாவது...''

''இரு நிலஞ்சனா. உங்கள் எல்லோரிடமும் பேசத் தான் வந்திருக்கிறேன். முதலில் பேசலாம்'' என்றவனின் குரலில் தெரிந்த ஏதோ ஒன்று நிலஞ்சனாவை வருத்தியது.

ஜெயின் களைத்துப் போயிருந்தான். ஒரு வாரமாய் வழிக்கப்படாத தாடி அவனை பலவீனமாய் காண பித்தது. எல்லாவற்றிர்க்கும் மேலாக அவன் கண்களில் தெரிந்த வலி அவள் கண்களில் நீரை வரவழைத்தது. நிலஞ்சனா ஒரு நிமிடம் தன் குடும்பத்தவர்களை மறந்தாள் ''ஜெயின் நடந்தது எதுவானாலும், நடக்கப் போவது என்னவாக இருந்தாலும் நான் உன் கூட இருப்பேன்'' என்றாள் அவன் கைகளைப் பற்றி,

ஜெயின் முகத்தில் மெல்லிய சோகம் கலந்த முறுவல் வந்தது.

''எனக்குத் தெரியும். நீ இதைத்தான் சொல்லுவாய் என்று தெரிந்ததால் தான் இப்போது இங்கு வந்திருக் கிறேன்'' என்ற ஜெயின் சொன்னான்.''எல்லோரும் என்னை மன்னிக்க வேண்டும். சில நாட்களுக்கு முன்னால் என்னால் உங்கள் குடும்பத்தில் ஒரு சல சலப்பு ஏற்பட்டது. இப்போது அதை சரி செய்ய வேண் டிய கடமை எனக்கிருக்கிறது.''

''மிஸ்டர் ஜெயின் நீங்கள் என்ன சொல்ல வரு கிறீர்கள்?'' என்றான் ஹரிஹரன்.

சோபாவை பற்றியபடி நின்றிருந்த ஜெயினின் விரல்கள் இறுகின. கண்களை ஒரு கணம் மூடி திறந்தவன் நிலஞ்சனாவின் முகத்தைப் பார்த்து சொன்னான் ''நிலஞ்சனாவை மணந்து கொள்வது பற்றிய என் ப்ரபோஸலை வாபஸ் பெற்றுக் கொள் கிறேன். இப்போது நான் திருமணம் செய்து கொள்வதாய் இல்லை. அதுவும் ஒரு இந்துப் பெண்ணை?''

''ஜெயின்'' என்றாள் நிலஞ்சனா திடுக்கிட்டு. ''அவசரப்பட்டு எதையும் முடிவு செய்யாதே. இப் போதைய சூழ்நிலை நிரந்தமானது அல்ல. எல்லாமே ஒரு நாள் மாறும்.''

ஜெயின் மறுப்புடன் தலையசைத்தான். ''உலகம் முழுக்க பெரும்பான்மை சமூகத்தினர் வசிக்கும் இடங்களில் சிறுபான்மையினரின் நிலை கேள்விக் குறியாகத்தான் இருக்கிறது.

இந்தியாவும் அதற்கு விதிவிலக்கு அல்ல என்று இப்போது புரிந்து கொண்டேன். தெரிந்தோ, தெரியா மலோ எங்கள் சமூகத்தின் கழுத்தை சுற்றி ஒரு கயிறு பின்னப் பட்டிருக்கிறது. கயிறு கழுத்தை இறுக்குமா அல்லது தெறித்து விழுமா என புரியாத நிலையில் இன்னொரு கழுத்தையும் இதில் சிக்க வைக்க என்னால் முடியாது. என்னை துரத்தும் அவமானங்களை பங்கு போட்டுக் கொள்ள நான் தயாராக இல்லை.''

''சந்தோஷங்களை மட்டும் பகிர்ந்து கொள்வது தான் வாழ்க்கை என்று உனக்கு யார் சொன்னது? இத்தனை நாள் பழக்கத்தில் நீ என்னைப் புரிந்து கொண்டது இதுதானா ஜெயின்?''

''என்ன... என்ன சொன்னாய்? இத்தனை நாள் பழக்கமா?'' ஜெயின் வாய் விட்டு சிரித்தான். ''திம்மப்பா மாமாவுடன் என் குடும்பத்திற்கு மூன்று தலைமுறை நட்பு. என்னை போலீஸ் கைது செய்த போது நடந்த விசாரணையில் அவர்கள் குடும்பம் எங்களை யார் என்றே தெரியாது என்றார்கள்.'' நிலஞ்சனா அதிர்ந்து போனாள். பேச முடியாமல் நின்றிருந்தவளிடம் ஜெயின் சொன்னான், ''உண்மையில் நான் தவறிழைத்தது உனக்கு மட்டும் தான் நிலஞ்சனா. அதிர்ச்சியில் இருந்தவளை மீட்டு மகிழ்ச்சியடையும் சமயம் மீண்டும் வேதனையை கொடுத்து விட்டேன். இது உனக்கு எத்தகைய வருத்தத்தை கொடுக்கும் என்பது எனக்குத் தெரியும். ஆனால் என்னுடன் இருப்பதால் ஏற்படும் சிக்கல்களை விட இந்த வருத்தம் பெரிதல்ல என்பதை ஒரு நாள் உணர்ந்து கொள்வாய். அப்போது நீயே இதிலிருந்து மீண்டு விடுவாய்.''

''சோ. உன் காதல் இது தானா ஜெயின்?''

ஜெயின் நிலஞ்சனாவை ஒரு பார்வை பார்த்தான். ''சேர்ந்து வாழ்வது தான் காதல் என்பதில்லை பிரிந்து போவதும் காதல் தான்!''

நிலஞ்சனா சிலையாய் நின்று கொண்டிருக்க, ஜெயின் அவள் குடும்பத்தினரிடம் கைகூப்பி விடைபெற்றான். அவன் கண்ணிலிருந்து மறையும் வரை நிலஞ்சனா அவனையே பார்த்தபடி நின்றிருந் தாள். நிலஞ்சனாவின் அம்மா ஆறுதலாய் ஏதோ சொல்ல முயன்ற போது சொன்னாள், ''எனக்கு

ஆறுதலோ, அனுதாபமோ தேவையில்லை. ஜெயின் யாருடைய சிலுவையையோ முதுகில் சுமந்து கொண்டு அலைகிறான். ஒரு நாள் அதை இறக்கி வைப்பான். அதுவரை அவன் சுமையை பகிர்ந்து கொள்ள முடிய வில்லையே என்ற கவலை தான் எனக்கு.''

* * *

''உமர் இன்று இன்டர்வ்யூ எப்படியிருந்தது?'' என்றாள் வஹிதா.

உமர் உதட்டைப் பிதுக்கினான் ''பைலை திறந்ததும் உமர் அப்துல்லா என்ற பெயரைப் பார்த்ததும் பார்மா லிட்டிக்கு ஏதோ கேட்டுவிட்டு வெளியே அனுப்பி விட்டார்கள்.''

''அந்த டப்பா கம்பெனிக்கு நீ அப்ளை செய்யும் போதே வேண்டாம் என்று சொல்ல நினைத்தேன். நல்லதாயிற்று. அப்பாவுடன் கடைக்கு போ.''

''என்னால் முடியாது. காலையில் டைமுக்கு கிளம்பிப் போய் மாலையில் நேரத்திற்கு வீடு வந்து சேர வேண்டும்.''

''சோம்பேறி. உழைக்காமல் எப்படி சாப்பிட முடியும்.''

இருவரும் அரட்டையில் இருக்க, அதில் ஈடுபடாமல் எங்கோ கவனமாய் இருக்கும் மூத்த மகனை அழைத்தாள் ஷாகிரா.

''ஜெயின் கொஞ்ச நாட்களாய் உன்னிடம் ஒன்று கேட்க வேண்டும் என்றிருக்கிறேன்.''

''என்னிடம் கேட்க யோசனை எதற்கு? பணம் வேண் டுமா? வீட்டிற்கு சாமான் எதாவது வாங்க வேண்டுமா?''

''அதெல்லாம் இல்லை ஜெயின். நீ ஒரு நாள் என்னிடம் ஒரு நல்ல விஷயம் சொன்னாய். நான் ரொம்ப சந்தோஷப்பட்டேன். பிறகு அதைப் பற்றிய பேச்சே இல்லை. ஏன் ஜெயின்?''

ஜெயின் ஆதுரத்துடன் ஷாகிராவின் கரங்களைப் பற்றிக் கொண்டான். ''நான் சொன்னதை மறந்து விடுங்கள்ம்மா. இப்போது எல்லாம் முடிந்து போய் விட்டது.''

ஜெயின் கண்களில் தெரியும் வலி மட்டும் இல்லை என்றால் ஷாகீரா மறந்திருக்கவும் கூடும். இப்போது மகனின் வேதனை புரிந்ததாலேயே மீண்டும் கேட்டாள். ''அந்தப் பெண் வீட்டில் ஏதாவது சொன்னார்களா? நான் வேண்டுமானால் பேசிப் பார்க்கட்டுமா?''

''நானே போய் வேண்டாம் என்று சொல்லி விட்டேன் ம்மா.''

''ஜெயின் ஏன் அப்படி சொன்னாய்?'' என்றாள் ஷாகிரா திடுக்கிட்டு.

''ம்மா. வஹிதாவை நினைத்துப் பாருங்கள். என்னைப் போன்ற ஒருவனுக்கு தர நாம் யோசிக்க மாட்டோமா?''

''உனக்கு என்ன குறை ஜெயின்? விசாரணைக்கு அழைக்கப் பட்டதாலேயே நீ தவறானவன் ஆகி விடுவாயா?''

''விசாரணைக்கு சும்மா அழைக்கவில்லைம்மா. கைது செய்து அழைத்து போனார்கள். அன்றைக்கு நாம் பட்ட துன்பத்தை மறந்து விட்டீர்களா? இத்தனை வருடங்

களாய் இதே தெருவில் தாயாய் மகனாய் பழகியவர்கள் எல்லாம் ஒதுங்கிக் கொள்ள, நம் மதத்தை சேர்ந்த உறவினர்கள் தான் அடைக்கலம் அளித்தார்கள். குற்றவாளி இல்லை என விடுவித்த பிறகும் எல்லோரும் சற்று விலகி நின்றே பழகுகிறார்கள் என்பதை கவனித்தீர்களா?''

ஷாகீரா புடவை முந்தானையால் கண்களை துடைத்தாள். ''நமக்கு ஏன் இப்படி ஒரு நிலை ஏற்பட வேண்டும்?'' என்றாள் துக்கத்துடன்.

காரணமே இல்லாமல் பாதிக்கப்படும் அப்பாவிகளின் மனதில் எழும் முதல் கேள்வி இது தான் என்று எண்ணிய ஜெயின் ஷாகீராவை அணைத்துக் கொண்டான். ஷாகீரா தொடர்ந்து பேசிக் கொண்டே போனாள். ''நீ என் மூத்த மகன் ஜெயின் நீ இப்படியே இருப்பதை என்னால் பார்க்க முடியாது. உமர், வஹிதா எல்லோரும் வளர்ந்து விட்டார்கள். அடுத்தடுத்து திருமணம் செய்து கொண்டு குழந்தை, குடும்பம், என்றாகி விடுவார்கள். நீ எத்தனை நாள் தனி மரமாய் நிற்க முடியும்? இதற்காகவா உன்னை வளர்த்தேன். உன் மீது பாசத்தை கொட்டினேன். ஜெயின் நான் சொல்வதை கேட்பாயா? உன் எதிர்கால வாழ்க்கைக்கு இந்த மதம் தடையாக இருந்தால் அது உனக்கு வேண்டாம். நீ கொல்கத்தாவிற்கு போய் விடு. உனக்கு பிடித்த பெண்ணை மணந்து கொள்.''

''ம்மா'' ஜெயின் ஷாகீராவின் தோள்களை உலுக்கி னான்.

''என்ன பேசுகிறோம் என்பதை புரிந்து தான் பேசு கிறீர்களா? நான் உங்களை விட்டு போக வேண்டுமா? இதோ என் முகத்தைப் பார்த்து ஜெயின் நீ போ என்று சொல்லுங்கள் பார்க்கலாம். உமர்ருக்கு இதே நிலை ஏற்பட்டால் அவனை எங்கே அனுப்புவீர்கள்? சொல் லுங்கள் ம்மா.''

''என் பிள்ளையை நான் எப்படி போக சொல்லுவேன் ஜெயின்!'' ஷாகீரா கைகளால் முகத்தை மூடியபடி கதறினாள்.

''உன்னை பார்க்காமல் என்னால் எப்படி இருக்க முடியும்? நீ திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற ஆதங்கத்தில் பேசினேனே தவிர...''

தாயின் அழுகையை காண சகிக்காத ஜெயின். பலவிதமாய் பேசி ஆறுதல் படுத்தினான். ஷாகீரா சற்று அமைதியானதும் சொன்னான் ''ம்மா. நம்முடைய இனத்திலேயே ஒரு பெண்ணைப் பார். அது யாராக இருந்தாலும் சரி. உனக்குப் பிடித்திருந்தால் போதும். இந்த குடும்ப பழக்க வழக்கங்களுடன் ஒத்துப் போகிற பெண் தான் என் மனைவியாக இருக்க முடியும்.''

''நிஜமாகவா சொல்கிறாய்?'' என்றாள் ஷாகீரா வியப்புடன்.

''நிஜம் தான். எந்த காரணத்திற்காகவும் நீ துன்பப்பட நான் அனுமதிக்க மாட்டேன்.''

ஜெயின் அங்கிருந்து எழுந்து சென்றான். வியப்பும், கவலையுமாக நின்றிருந்த மனைவியை பார்த்தபடியே உள்ளே வந்த பஷீர் ''என்ன ஷாகீரா, உன் மகன் என்ன சொல்கிறான்?'' என்றார் அவளிடம்.

''என் மகன் தான் என்று சொல்லி விட்டுப் போகிறான்'' என்றாள் ஷாகீரா.

ரேவண்ணாவின் கடையில் அன்று கூட்டம் அதிகம் இருந்தது. அவனும், அவன் மனைவியும் சமாளிக்க முடியாமல் திணறிக் கொண்டிருந்த சமயம் ஜெயின் வந்து சேர்ந்தான். அவனும் சேர்ந்து உதவி செய்யத் தொடங்கவே சற்று நேரத்திற்கு பின் மூச்சு விட அவகாசம் கிடைத்தது. ''நல்ல நேரத்தில் நீ வந்து சேர்ந்தாய்'' என்றான் ரேவண்ணா ஒரு பெருமூச்சுடன்.

''நீங்கள் இருவர் மட்டுமே எப்படி சமாளிக்க முடியும்? நீங்களே தயாரித்து, விற்பனை செய்து, சுத்தம் செய்து என ஓடிக் கொண்டிருந்தால் கொஞ்ச நாளில் எதுவுமே செய்ய முடியாமல் களைத்துப் போவீர்கள். உதவிக்கு ஆள் சேர்த்துக் கொள் ரேவண்ணா. நானும் பல முறை சொல்லி விட்டேன்'' என்றான் ஜெயின்.

''புதிதாக வருபவர்களால் உதவியை விட உபத்திரவம் தான் அதிகம். உன் ரெஸ்டாரண்டில் நடந்த நிகழ்ச்சிக்கு பிறகு பெங்களூரில் வெளியூர் ஆட்களை வேலைக்கு எடுக்கவே பயப்படுகிறார்கள் தெரியுமா?''

''இந்த பயம் தற்காலிகமானது. எல்லா வேலைகளுக்கும் உள்ளூரில் ஆள் கிடைப்பது சிரமம். சம்பளம் குறைவு. கச்சிதமான வேலை. அதிகம் விடுமுறை எடுக்க மாட்டார்கள் என்பதால் வெளியூர் ஆட்களுக்கு டிமான்ட் இருக்கத்தான் செய்யும். என்னுடைய கடையிலேயே நேற்று மூன்று பேர் புதிதாக வேலைக்கு

சேர்ந்திருக்கிறார்கள். யாரோ ஏமாற்றினார்கள் என்பதற்காக எல்லோரையும் சந்தேகப்பட முடியுமா? நாம் உஷாராக இருக்க வேண்டியது தான்.''

''உன் மனப்பக்குவம் எனக்கில்லை. என்னை விட்டுவிடு'' மசாலா டீயை கண்ணாடி டம்ளரில் நிறைத்து ஜெயினிடம் கொடுத்தான் ரேவண்ணா. தம்பிட்டு கேட்ட கஸ்டமரை கவனிக்க சொல்லி மனைவியிடம் சொல்லி விட்டு ஜெயின் அருகில் வந்து அமர்ந்தான்.

''நிலஞ்சனா நாளை ஜம்மு போகிறாள்'' என்றான் ஜெயினிடம். ''அவள் அண்ணனுக்கு ஜம்முவில் போஸ்ட்டிங்காம். அண்ணனுடன் நிலஞ்சனா, அவள் பெற்றோர் எல்லோரும் போகிறார்களாம். என்னுடைய போன் அதே நம்பர் தான். என்றாவது ஜெயின் கேட்டால் சொல்'' என்றாள்.

''நான் கேட்கப் போவதில்லை'' என்றான் ஜெயின்.

''ஜெயின், உன் பர்சனல் தான் என்ற போதும் என்னால் சொல்லாமல் இருக்க முடியவில்லை. காரணம் எதுவாக இருந்தாலும் காதலித்த பெண்ணை கை விடுவது எப்படி சரியாகும்? உன்னை அரெஸ்ட் செய்த சமயம் நிலஞ்சனாவின் கவலையையும், கண்ணீரையும் அருகில் இருந்து பார்த்தவன் என்ற முறையில் சொல்கிறேன் உன்முடிவு தவறு ஜெயின்.''

''ரேவண்ணா, நிலஞ்சனாவை நான் எந்த அளவு நேசிக்கிறேன் என்பது அவளுக்கே முழுசாய் தெரியாது. ஒதுங்கிச் சென்றவளை விடாமல் துரத்தி அவள்

வாயாலேயே விருப்பத்தை சொல்ல வைத்து, அதி லிருந்து விலக அவகாசம் கொடுக்காமல் அதிரடியாக அவள் வீட்டிற்குள் நுழைந்து பெண் கேட்டவன் நான். அவள் பெற்றோருக்கு இதில் விருப்பமில்லை என்று புரிந்த போதும், நிலஞ்சனாவை விட்டு விட முடியாது என உறுதியாக இருந்தேன். இருந்தும் இப்போது அவளை நான் மறுப்பதற்கு ஒரே காரணம் தான். நீ பார்த்ததாக சொன்ன கவலையும், கண்ணீரும் நிலஞ்ச னாவுக்கு நிரந்தரமாகி விடக்கூடாது. தேசத்துக்கு சேவை செய்கிறோம் என்ற பெருமிதம் அவள் குடும்பத்தில் எல்லோருக்கும் இருக்கிறது. அது குலைந்து விடக் கூடாது. நேசிப்பவர்களின் கண்ணீரை துடைப்பதை விட கண்ணீர் விட வைக்காமல் இருப்பது தான் உண்மை யான நேசம் ரேவண்ணா.''

ரேவண்ணா பதில் பேச முடியாமல் அமைதியானான். ஜெயின் பேசிக் கொண்டிருந்து விட்டு கிளம்புகையில் ரேவண்ணா சொன்னான். ''நீ நல்லவன் ஜெயின். உனக்கு இது நேர்ந்திருக்கக் கூடாது.''

ரேவண்ணாவின் குரலில் தெரிந்த கண்ணீருக்கு ஜெயின் புன்னகையை பரிசளித்தான்.

## 12

வீட்டு சாமான்கள் ட்ரக்கில் ஏற்றப்பட்டு ட்ரக் கிளம்பி விட்டது. அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய

பையுடன் நிலஞ்சனா வீட்டை சுற்றி வந்தாள். பால்கனி தொட்டியில் லால் பாக்கில் அவள் தவற விட்டு பின் ஜெயின் கொண்டு வந்து கொடுத்த ரோஜா செடிகள் தலையசைத்தன. அங்கிருந்து பார்க்கையில் ஜெயின் காம்பவுண்ட் சுவருக்கு வெளியே நின்று கையசைப்பது போன்ற பிரேமை ஏற்பட்டது.

இந்த வீட்டில் அறையில் அமர்ந்தபடி, படுக்கையில் புரண்டபடி மணிக்கணக்காக ஜெயினுடன் அவள் பேசியிருக்கிறாள். பெங்களூருவின் தெருக்களில் ஒரு இரவு முழுக்க அவனுடன் சுற்றியிருக்கிறாள். கர்நாடகாவின் ஏதோ ஒரு கிராமத்து ஓட்டு வீட்டில் அவனுடன் சில நாட்களை கழித்திருக்கிறாள். இந்த நகரத்தின் சுவாரஸ்யங்களையும் உணவையும், திருவிழாக்களையும், பன்முக கலாச்சாரத்தையும் கூடவே காதலையும் அவளுக்கு அவன் அறிமுகம் செய்திருக்கிறான். இதில் எதை அவளுடன் எடுத்துச் செல்வது? எதை விட்டுச் செல்வது?

''சஞ்சனா எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டாயா? எதையும் மறந்து விடவில்லையே!'' என்றாள் சுனிதா.

ரோஜா தொட்டியை கைகளில் ஏந்தி நின்ற நிலஞ்சனா.

''இந்த ரோஜா செடியையும் நம்முடன் எடுத்துப் போகலாம்'' என்றாள் அண்ணியிடம்.

''டெல்லி வரை ப்ளைட். பிறகு தான் கார். ப்ளைட்டில் ரோஜா தொட்டியை எடுத்துப் போக முடியாது'' என்றாள் சுனிதா.

''காஷ்மீர் ரோஜாக்களுக்கு புகழ் பெற்ற இடம். இதை தூக்கிக் கொண்டு அங்கே போவானேன்! அங்கே போய் உனக்கு எத்தனை வேண்டுமோ வாங்கிக் கொள்'' என்றாள் மேனகா.

ரோஜா தொட்டியை கீழே வைத்த நிலஞ்சனா அதை விட்டு நகர மனமில்லாமல் தயங்கி நின்றாள். ''தீதி சற்று இருங்கள் வருகிறேன்'' என்ற உபேந்திரா, ரோஜா செடியை மண்ணுடன் சேர்த்து லாவகமாக பிடுங்கி, ஒரு கவரில் பேக் செய்து அவளிடம் கொடுத்தான். ''அங்கே போனதும்நட்டு விடுங்கள்.''

''ஓ. உபேந்திரா உனக்கு மிகவும் நன்றி'' என்றாள் நிலஞ்சனா மகிழ்ச்சியுடன்.

''நன்றி எல்லாம் வேண்டாம் தீதி. எங்கிருந்தாலும் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பதாக ஒரு தகவல் அனுப்புங்கள் போதும்'' என்றான் உபேந்திரா.

ஹரிஹரன் அங்கிருந்து செல்வதால், உபேந்திரா வாபஸ் பெறப்பட்டு புனே செல்கிறான். ஹரிஹரன் ஜம்மு போனதும் அவனுக்கு சர்வீஸ் செய்ய வேறு ஆள் வருவார்கள். அநேகமாக உபேந்திராவைப் பார்ப்பது இதுவே கடைசியாக இருக்கக்கூடும் என்ற எண்ணத்தில் நிலஞ்சனாவின் மனம் நெகிழ்ந்தது.

கண்கள் பனிக்க நின்றிருந்த உபேந்திராவின் முதுகில் தட்டினார் கேப்டன் மகாதேவ். ''இராணுவ பணியில் உணர்சிகளுக்கு இடமில்லை உபேந்திரா. உன் மேலதிகாரியிடம் இமோஷனல் பான்டிங் இருப்பது உன் எதிர்காலத்திற்கு நல்லதல்ல.''

''எஸ் பாஸ்'' என்றான் உபேந்திரா பெரிய சல் யூட்டுடன்.

சந்தீப்பும், பிரதீப்பும் தங்கள் பொம்மைகளை பைகளில் திணிக்க இடமின்றி திணறி கொண்டிருந் தார்கள். ''அத்தை இந்த பெரிய காரை உன்னுடன் வைத்துக் கொள்கிறாயா?'' என கார் பொம்மையை அவளிடம் கொடுத்தான் சந்தீப்.

''அத்தை காஷ்மீரில் சாப்பிட நிறைய ஐஸ் இருக்கும் என்று என் ப்ரெண்ட் சொன்னான்'' என்றான் பிரதீப்.

''போடா பூல். அது ஸ்நோ. சாப்பிடுகிற ஐஸ் இல்லை'' என்றான் சந்தீப்.

''எனக்குத் தெரியும். அது ஐஸ் தான்.''

''இல்லை ஸ்நோ தான்!'' சந்தீப் அவன் முதுகில் தட்டவும், ப்ரதீப் சுளிரென திருப்பி அடித்தான். பதிலுக்கு சந்தீப் எட்டி உதைக்க, இருவரும் கட்டிப் புரண்டு சண்டையிட்டனர். இந்த இரண்டு வருடங்களில் இருவரும் வளர்ந்திருந்ததுடன் முரட்டுத்தனமும் அதிகமாகி இருந்தது. இருவரையும் சிரமப்பட்டு பிரித்து சமாதானம் செய்யும் மகனைப் பார்க்கையில் கேப்டன் மகாதேவ்விற்கு வருத்தமாக இருந்தது. நிலஞ்சனா எப்போதும் போல் பேசி சிரித்து நடமாடினாலும் அவள் கண்களில் தெரிந்த வெறுமை அவர் மனதை கலக் கியது. அவளுக்கு அழகான உருவத்தையும், புத்திசாலித் தனத்தையும், நல்ல குணத்தையும் கொடுத்த கடவுள் அவள் மகிழ்ச்சியை மட்டும் பறித்துக் கொண்டது ஏன் என்று அவருக்கு புரியவேயில்லை.

''டாட் ரெடியா?'' என்றபடி அங்கு வந்த ஹரிஹரன் அவர் முகத்தைப் பார்த்ததும் கனிவுடன் புன்னகைத்தான். ''வருத்தப்படாதீர்கள் டாட். சஞ்சனா இங்கிருந்து போனதும் எல்லாவற்றையும் கொஞ்சம் கொஞ்சமாக மறந்து விடுவாள்'' இதே போன்ற எண்ணத்துடன் தான் அவர் ஜெய்ப்பூரிலிருந்து நிலஞ்சனாவை பெங்களூரு அனுப்பி வைத்தார். ஆனால் பெங்களூருவிலிருந்து ஜம்மு கிளம்புகையில் அவருக்கு அந்த எண்ணம் வரவில்லை. முதல் நாள் நிலஞ்சனாவைப் பார்க்க விக்ரம் சர்மாவும், ஷீத்தலும் வந்திருந்தார்கள். அவர்கள் பேசியது எதேச்சையாக அவர் காதில் விழுந்தது. ''நிலஞ்சனா ஜெயின் மீது தவறு இல்லை என்றான பிறகும் நீ ஏன் அவனைப் பிரிய வேண்டும்?'' என்றாள் ஷீத்தல் வருத்தத்துடன்.

''பிரிந்தது நாங்கள் இல்லை ஷீத்தல், அரசாங்கம், இராணுவம், மதம், தீவிரவாதம், மீடியா எல்லாமும் சேர்ந்து எங்களைப் பிரித்தது. இவை எல்லாம் சேர்ந்து கறையை பூசிய பின்னர் தனி அறையில் நீதிபதி தந்த தீர்ப்பால் மட்டும் அந்த கறையை கழுவி விட முடியவில்லை. அதுவும் சாதாரண கறை இல்லை ஷீத்தல். என் அன்பின் மீதும், அது தரும் நம்பிக்கையின் மீதும் படிந்த அசாதாரண கறை. அன்பின் பெயரால் அன்பை தள்ளி வைத்தப் பிறகு யாரிடம் எதை பேச முடியும்?''

''சஞ்சனா அப்பா நேரமாகிறது என்கிறார். வா போகலாம்'' என்றாள் மேனகா.

கேம்பஸ்சில் நேற்றே எல்லோரிடமும் விடைபெற்று விட்டதால் அவர்கள் அமர்ந்ததும் கார் ஏர்போர்ட்டை நோக்கி விரைந்தது. பெங்களூருவின் செடிகள் சூழ்ந்த வீடுகளும், சுத்தமான வீதிகளும், வீதிகளின் முனையில் விற்பனைக்கு காத்திருக்கும் மலர்களும் மப்ளர் சுற்றிய, உல்லன் ஜாக்கெட் அணிந்த ஜனங்களும் சிறிய, பெரிய கோவில்களும் கடந்து செல்கையில் 'கெம்பே கவுடா உனக்கு நன்றி' என்றாள் நிலஞ்சனா. விஜயநகர பேரரசின் குத்தகைகாரரான கெம்பே கவுடாவால் நிர்மாணிக்கப்பட்ட இந்த நகரம் அவள் வாழ்வில் மறக்க முடியாத இடமாகி விட்டது. இங்கு தான் அவள் ஜெயினை சந்தித்தாள். எப்படிப்பட்ட சந்திப்பு அது? எப்படிப்பட்ட மனிதன் அவன்! தான் உயிராய் பழகிய பெண்ணிடம் தன் இரகசியத்தை வெளியிடாதவன். அவளிடம் தான் வளர்ந்த குடும்பத்தை வேறுபடுத்தி காட்ட மனம் வராமல் ஜெயின் அப்துல்லாவாகவே பிரிந்து சென்றவன். முன்பை விட இப்போது தான் அவனை அதிகம் பிடித்தது அவளுக்கு.

கெம்பேகவுடா இன்டர்நேஷனல் ஏர்போர்ட்டின் உள்நாட்டு பயணிகளுக்கான நுழைவாயிலில் அவர்கள் இறங்கிக் கொண்ட போது ப்ளைட் கிளம்ப வெகுநேரம் இருந்தது. ''சீக்கிரமாய் கிளம்ப சொல்ல விரட்டினீர்கள். இப்போது காத்து கிடக்க வேண்டும்'' என்றாள் மேனகா கணவனிடம்.

''குழந்தைகளை கிளப்ப தாமதமாகும் அதனால் தான்'' என்றார் கேப்டன் மகாதேவ்.

சாக்லேட் ஷாப்பைப் பார்த்ததும் சந்தீப்பும், ப்ரதீப்பும் ஓடிப் போனார்கள். ''நான் அவர்களைப் பார்க்கிறேன்'' என நிலஞ்சனா குழந்தைகள் பின்னால் போகவும், மற்ற நால்வரும் லௌவுச்சில் அமர்ந்தார்கள்.

வெகு நேரம் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்த கேப்டன் மகாதேவ் திடீரென நினைவு வந்தவராக மனைவியிடம் கேட்டார். ''மேனகா, நிலஞ்சனாவை எதற்காக கரண்தேசாய்க்கு திருமணம் செய்து வைக்க ஒத்துக் கொண்டோம் என்றுநினைவிருக்கிறதா?''

''இப்போது அதைப்பற்றி பேசுவானேன்!'' என்றாள் மேனகா.

''சும்மா தான், சொல்லேன்!''

''நிலஞ்சனாவுடன் நன்றாக பழகியவன். அவளுக்கும் நண்பன். நன்றாக பார்த்துக் கொள்வான் என்று நினைத்தோம்.''

''இப்போதும் அதே காரணங்கள் தான் இருக்கின்றன மேனகா.''

''என்ன காரணம்?''

''ஜெயின் நிலஞ்சனாவுக்கு பழக்கமானவன். அவளுக்கு பிடித்தவன். அவளை நன்றாக பார்த்துக் கொள்வான். இத்தனை தகுதிகள் இருந்தும் நாம் ஏன் இந்த திருமணத்தை மறுத்தோம்?''

''மறந்து விட்டதா உங்களுக்கு? ஜெயின் வேறு மதத்தை சார்ந்தவன். சமீப காலமாய் நடக்கும் வன் முறைகளையும், அதில் யாருடன் யாருக்கு தொடர் பிருக்கிறது என்று புரியாத பயத்திலும் நாம்

திருமணத்தை தவிர்க்க முயற்சிக்கையில் எதிர்பாராத விதமாய் ஜெயின் கைதானான். அடுத்த நாள் அவ னுக்கும் இதற்கும் சம்பந்தமில்லை என விடுவிக்கப் படுகிறான். இதில் எது பொய்? எது மெய்? ஒரு வேளை அவன் கைது மெய்யானதாக இருந்தால் அதனால் ஏற்படும் விளைவுகளை நம்மால் தாங்க மடியுமா? அதனால் வேண்டாம் என்று நினைத்தோம்?''

''நம் முடிவை அறிவித்தோமா?''

''இல்லை, நாம் சொல்வதற்கு முன்பே ஜெயின் சொல்லி விட்டான்.''

''அப்படியானால் நிலஞ்சனா மீது நமக்கிருக்கும் அன்பும், அக்கறையும் அவனுக்கும் இருக்கிறது இல்லையா?''

''இருக்கலாம் டாட்'' என்றான் அதுவரை பேசாம லிருந்த ஹரிஹரன். ''ஜெயின் நல்லவனாக இருக்கலாம். அவன் நிலஞ்சனா மீது நிறைய அன்பு வைத்திருக்கலாம். ஆனால் அவன் பிறந்த மதத்தால் எப்போதும் சந் தேகத்துடனே பார்க்கப் படுவான்.''

''இல்லை ஹரி. அவன் பிறந்த மதம் இப்போதைய சூழலில் அவனை பாதுகாக்கவே செய்யும். ஆனால் அவன் அதை ஏற்கத் தயாராக இல்லை.''

''நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?'' என்றான் ஹரிஹரன் புரியாமல்.

''ஜெயின், சஞ்சனாவை மணந்து கொள்ள விரும் புவதாக சொன்னதும் உங்களைப் போலவே முதலில் எனக்கு மகிழ்ச்சியும், பிறகு அவன் மதம் பற்றி தெரிந்த

தால் தயக்கமும் ஏற்படவே செய்தது. ஜெயினை போலீஸ் அரெஸ்ட் செய்ததும் நிலஞ்சனா பயந்து போவாள் என்று நினைத்தேன். ஆனால் அவனை கைது செய்த போதும், பிறகு விடுவித்த போதும் நிலஞ்சனாவிடம் எந்த சலனமும் ஏற்படவில்லை. அவனது நேர்மை யிலும், அன்பிலும் அவள் உறுதியாக இருந்தது எனக்கு வியப்பாக இருந்தது. கரண்தேசாயை மணந்து கொண்ட போது அவன் அவளது நண்பன். நட்பு காதலாக மாறுவதற்குள் அவன் போய் சேர்ந்து விட்டான். ஆனால் ஜெயினை அவள் விரும்புகிறாள். அவனை இழந்தால் மீள்வது கடினம் என்று தோன்றவே, ஜெயின் பற்றி விசாரிக்க ஆரம்பித்தேன். அவன் ஆறாவது வகுப்பில் தான் பெங்களூருவுக்கு வந்திருக்கிறான். பள்ளியில் சேர்ந்த புதிதில் பெங்காலியில் பேசியதாகவும், பிறகு கன்னடம் கற்றுக் கொண்டதாகவும் அவன் வகுப்பில் படித்தவர்கள் சொன்னார்கள். பஷீர் அப்துல்லாவின் சகோதரி ஒருவர் கொல்கத்தாவில் வசித்ததாகவும், சமீபத்தில் இறந்து விட்டதாகவும் கேள்விப்பட்டேன். நம் நண்பர்கள் மூலம் அங்கு விசாரித்தவுடன் ஜெயின் பற்றிய தகவல்கள் அனைத்தும் கிடைத்தன.'' தொடர்ந்து கேப்டன் மகாதேவ் ஜெயின் பற்றிய விபரங்களை சொல்லவும் அனைவரும் அதிர்ச்சியில் உறைந்து போனார்கள்.

''நிலஞ்சனாவின் வருங்காலம் பொருட்டு நான் விசாரித்து தெரிந்து கொண்ட விஷயங்களை பகிரங் கப்படுத்த நமக்கு உரிமை இல்லை. ஜெயின் குடும் பத்திடமோ, நிலஞ்சனாவிடமோ கூட இதைப்பற்றி

பேசமாட்டீர்கள் என்று நம்புகிறேன்.'' மூவரும் ஒப்புதலாய் தலையசைத்தனர்.

''இப்போது சொல்லுங்கள். எல்லையில் நின்று நாட்டை காப்பது மட்டும் தான் வீரமா? நகரத்தில் இருந்து கொண்டு கண்ணுக்குத் தெரியாத எதிரி களிடமிருந்து தற்காத்துக் கொண்டு, நாட்டின் பொருளாதாரத்தையும், மக்களின் வாழ்வாதாரத்தையும் உயர்த்த பாடுபடும் ஜெயின் போன்றவர்களின் போராட்டம் நம்மை விட சளைத்ததல்ல'' என்றார் கேப்டன் மகாதேவ்.

அவர் வார்த்தைகளிலிருந்த உண்மை உறைக்க. பதில் பேச முடியாமல் அமர்ந்திருந்தவர்களை ''நமஸ் காரம்'' என்ற குரல் கலைத்தது. ''வாருங்கள் பஷீர் அப்துல்லா. சொன்ன நேரத்திற்கு வந்து விட்டீர்கள்'' என்றார் கேப்டன் பாராட்டாக.

''நான் உங்களுக்கு ஒரு கதை சொல்லவா?'' என்றாள் நிலஞ்சனா.

சக்லேட் மீதிருந்த கவனம் சற்றே விடுபட ''என்ன கதை?'' என்றான் பிரதீப்.

''டோரா... போக்கிமான்...''

''அதெல்லாம் பழசு.''

''காட்சிலா.''

''டிவியிலேயே பார்க்கிறோமே!''

''ம்... உண்மை கதை சொல்லட்டுமா?''

''என்ன உண்மை?''

''பெங்களூரு பெயர் வந்த கதை.''

''சொல்லு பார்க்கலாம்.'' சந்தீப் பெரிய மனதுடன் அனுமதி கொடுத்தான்.

''பதினொன்றாம் நூற்றாண்டில் ஹோய்சாலா அரசனான இரண்டாம் வீர வள்ளலார் வேட்டையாட சென்ற போது காட்டில் வழி தவறி விட்டார். பசியிலும், களைப்பிலும் சுற்றித் திரிந்த போது ஒரு ஏழை கிழவியை சந்தித்தார். அந்த கிழவி அவருக்கு அவித்த மொச்சை பயிறு சாப்பிடக் கொடுத்தாள். பின்நாளில் இராஜா நன்றியுடன் அந்த இடத்தை 'பென்ட் - கால் - உரு' என்று அழைத்தார். இதற்கு அவித்த பயிறுகளின் நகரம் என்று பொருள். அதுவே மருவி பெங்களூர் ஆயிற்று.''

''கதை போர். எனக்கு பிடிக்கவில்லை'' என்றான் ப்ரதீப்.

''எனக்கும் பிடிக்கவில்லை. சாக்லேட் வாங்கிக் கொடு'' என்றான் சந்தீப்.

''டெல்லி போனதும் நிறைய வாங்கித் தருகிறேன்'' என்றாள் நிலஞ்சனா.

இருவரும் கடையை விட்டு நகர மறுத்தார்கள் ''சரி அம்மாவிடம் போய் பணம் வாங்கி வந்து வாங்கலாம்'' என்றாள் நிலஞ்சனா.

''அங்கே போனால் திரும்பி வர விட மாட்டார்கள். நாங்கள் இங்கேயே நிற்கிறோம். நீ போய் வாங்கி வா'' என்றார்கள் புத்திசாலித்தனமாக.

நிலஞ்சனாவுக்கு சிரிப்பு வந்தது. இருவரையும் ஒன்றாக இழுத்துப் போக முடியாமல், தனியாக விட்டுப் போனால் ஓடி விடக் கூடும் என அவள் தடுமாறிய போது ''இதோ உங்கள் சாக்லேட்'' என குழந்தைகளிடம் நீட்டப் பட்ட சாக்லேட்டை கண்டு அவள் திடுக்கிட்டு திரும்பிப் பார்த்தாள். சந்தீப் யோசனையுடன் தன் எதிரே நின்றிருந்தவனை அளவெடுத்தான். ''அன்னிக்கு எங்க வீட்டிற்கு வந்தீங்க இல்லையா?'' என கேட்டு உறுதிப் படுத்திக் கொண்டு தேங்க்ஸ் என அவன் கையிலிருந்த சாக்லேட்களை பெற்றுக் கொண்டு ஓடினான். அவன் பின்னால் ப்ரதீப்பும் ஓடவும், குழந்தைகளின் பின்னால் செல்லத் தொடங்கிய நிலஞ்சனாவை வழி மறித்தான் ஜெயின்.

''நிலா ப்ளீஸ் போகாதே'' என்றான் அவளிடம்.

அந்தக் குரலும் நிலா என்ற அழைப்பும் மனதை என்னவோ செய்ய, நிலஞ்சனா முகத்தை திருப்பினாள். ''என்னை விட்டு விடு ஜெயின். நீ விரும்பினால் ஓடி வரவும், வேண்டாம் எனில் தூக்கி எறியவும் நான் பொம்மை இல்லை.''

''நிச்சயமாக இல்லை தான். தேவதைகள் பொம்மையாவதில்லை.''

''ஜெயின் விளையாடாதே'' என்றாள் நிலஞ்சனா கோபத்துடன்.

''நிலா உனக்கே தெரியும். நான் உன்னை விட்டு விலகிச் சென்றதன் காரணம் நீ தான்.''

''அப்படியானால் இப்போது ஏன் திரும்பி வந்திருக் கிறாய்?''

''என் அம்மாவிற்காகத் தான்.''

''என்னது?''

''தெரியாத்தனமாக என் அம்மாவிற்கு ஒரு வாக்கு கொடுத்தேன். நீங்கள் பார்க்கிற பெண்ணை மணந்து கொள்கிறேன் என்று. அவர்களும் உடனடியாக ஒரு பெண்ணை தேடிப் பிடித்து விட்டேன். பெண் பார்க்க வா என கட்டாயப்படுத்தி அழைத்து வந்து உன்னைக் காட்டுகிறார்கள். ஹூம். நான் தியாகி ஆகலாம் என்று முடிவு செய்த பின்பும் அம்மாவுக்கு கொடுத்த வாக்கு என்னை விட மாட்டேன் என்கிறது.''

''உன் வாக்கை காப்பாற்ற இங்கு எந்த கழுத்தும் காலியாக இல்லை. நீ வேறு இடம் பார்.''

''பார்க்கலாம் தான். ஆனால் என் அம்மாவிற்கு உன்னைத் தானே பிடித்திருக்கிறதாம்!''

நிலஞ்சனா பேசாமல் திரும்பி நடக்கவும், ஜெயின் அவள் கைகளைப் பற்றினான்.

''விடு ஜெயின்.''

''முடியாது.''

''என் அப்பாவைக் கூப்பிடுவேன்.''

''தாராளமாய். அத்துடன் என் அப்பா, அம்மா, தங்கை, தம்பி எல்லோரையும் கூப்பிடு. உன்னைப் பார்க்க அவர்களும் ஆவலாய் உன் அப்பாவுடன் அமர்ந்திருக்

கிறார்கள். ம்... சொல்ல மறந்துவிட்டேன். தாதிமா கூட வந்திருக்கிறார்கள்."

''ஜெயின் நீ ஒரு முட்டாள்'' நிலஞ்சனா தன் கைகளை உருவிக் கொண்டாள்.

''தேங்யு. இந்த முட்டாள் இப்ப என்ன செய்வான் தெரியுமா?'' ஜெயின் பொது இடம் என்றும் பாராமல் நிலஞ்சனாவை இறுக்கி கொள்ள, அவனிடமிருந்து விடுபட முடியாமல் ''விடு ஜெயின்'' என்ற போது அவள் குரல் தழைந்திருந்தது. ''நிலா எனக்கு எப்போதும் நீ தான். எல்லாமும் நீ தான். நாம் சேர்ந்திருந்தாலும், விலகிப் போனாலும் அதன் காரணம் உன் நலம் ஆகவே இருக்கும். நீ இதை நம்ப வேண்டாம்'' என்றான் ஜெயின் அவள் கன்னங்களைப் பற்றி. ஊடலும், கூடலுமான சில நிமிட உரையாடலுக்கு பிறகு இருவரும் லௌவுச்சிற்கு வந்தார்கள். ''ம்மாஜி இதோ நீ கேட்ட உன் மருமகள்'' என்றான் ஜெயின் ஷாகீராவிடம். ஷாகீரா பிரியமுடன் நிலஞ்சனாவின் கைகளைப் பற்றிக் கொள்ள, ஜெயின் குடும்பம் ஆசையுடன் அவளை அரவணைத்துக் கொண்டது.

''தன்னை வளர்த்த குடும்பத்தை இத்தனை நேசிக்கும் ஒருவனால் தான் மனைவியையும் அளவுக்கு அதிகமாக நேசிக்க முடியும்'' என்றாள் சுனிதா. ஆமோதிப்பாய் தலையசைத்த மேனகாவின் கண்கள் பனித்தன. அம்மாவையும், அண்ணியையும் பார்த்த நிலஞ்சனா வின் கண்களும் கலங்கவும் ''என்னடா?'' என்றான் ஜெயின் கனிவுடன்.

பெரியவர்கள் கவனம் தங்களிடம் இல்லை என்பதை உறுதிபடுத்திக் கொண்டு நிலஞ்சனா எட்டி அவன் கன்னத்தில் முத்தமிட்டாள்.

கையிலிருந்த சாக்லேட்டை ஒருவழியாய் தின்று முடித்த சந்தீப்பும், ப்ரதீப்பும் உரத்த குரலில் கத்தினார்கள். ''அப்பா... தாத்தா... அம்மா... இந்த அங்கிளும் அத்தையும் முத்தம் குடுத்துக்கிறாங்க.''


தமிழ்நி


வதா